
www.padippakam.com

# புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்பு மலர்



படிப்பகம்

www.padippakam.com

# பொன்னீசல்கள்

— தமயந்தி
(நோர்வே)

பொன் ஈசல்களாய்
மரங்களின் தலைகளை
மொய்த்துக் கிடந்தன
இலைகள்
தரையைச்சென்று
தஞ்சம் கோர
ஓர் காற்று மூச்சின்
வருகையைக் காத்தபடி.

புரட்டாதி வியாழனின்
கள்ளத் தனமான
நள்ளிரா வேளையில்
வந்தது காற்று
கறுப்புச் சாயம் பூசி.

மரங்களின்
எண்ணெய் தண்ணீர் காணாத
தலைகளை
ஊதியது ஒவ்வொன்றாய்.

பழுத்த ஈசல்கள்
பறந்தன பூமி நாடி.

ஒவ்வோர் இலையினதும்
விருப்புக்கள்மீதும்
பூசியது காற்று
தான் கொணர்ந்த
கறுப்புச் சாயத்தை.

எங்கு
சென்று சேர்வதென்ற
அவற்றின் விருப்புக்கள்
காற்றின் சட்டசபையில்
நிராகரிக்கப்பட்டன
புரட்டாதி வியாழனின்
நள்ளிரா வேளையில்.

இன பேதமற்று
கலந்து
சிந்திக் கிடந்தன இலைகள்.

காலையில்
அதிகாரிபோல்
பார்வையிட வந்தான்
நெருப்புத் தடிகளுடன் சூரியன்.

எல்லா நரம்புகளிலும்
தீக்கோலால்
சூடு போட்டபின்,
''இனி நீங்கள் அகதிகள்''
என்பதுபோல்
''நீங்களினி சருகுகள்'' என்றோர்
முத்திரையையிட்டுச் சென்றான்
அதிகாரச் சூரியன்.

கல கலவென்று
சிரித்தன சருகுகள்.
பனி விதைக்கப் படுவதற்காய்
காத்துக்கிடக்கும்
கோதுமைவயல்களின்
வேலிக் கோடுகளோடு
தொங்கிக் கிடந்த சில சருகுகள்
குடுகுடுப்பைக்காரன்போல்
குரலெழுப்பின.
''காலம் வருகுது
பனிக் காலம் வருகுது
சூரியனை
சபைக்கேற்காத
குளிர்
காலம் வருகுது'' என்று
கல கலவென்று
சிரித்தன சருகுகள்.



படிப்பகம்

www.padippakam.com

# மாநாடு மலர் குறித்து...

சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையின் விளைவாக இன்று ஈழத் தமிழர்கள் உலகெங்கிலும் நாடற்றவர்களாய், அனாதைகளாய் அலைந்து திரிகின்றனர். நமது தமிழ்நாடு உட்பட உலகெங்கிலும் இன்று அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவதற்கு யாருமில்லை. அய்ரோப்பா முழுவதும் கடந்த நான்காண்டுகளாக ஒரு அறிவிக்கப்படாத கதவடைப்புக் கொள்கை அமுலில் இருக்கிறது. ஆசிய, ஆப்ரிக்க, இசுலாமிய, கிழக்கு அய்ரோப்பிய நாட்டு அகதிகளை அய்ரோப்பாவிற்குள் நுழைய விடாமல் தடுப்பதும், ஏற்கனவே கடந்த பத்தாண்டுகளாக இருந்து வரும் அகதிகளை வெளியேற்றுவதும் நடந்து வருகிறது. ஸ்விட்சர்லாந்து அரசு இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆண்டுக்கு 2500 தமிழ் அகதிகளை வெளியேற்ற முடிவு செய்து முதல் கட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

அகதிகளாய்த் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு வேலை, கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. வேலைகள் கொடுத்தாலும் மிகவும் கடுமையான கீழ்நிலை வேலைகள் மட்டுமே கொடுக்கப்படுகின்றன. தொழில் சங்க உரிமைகள் கிடையாது. அகதிகள் முகாமில் இருக்கும் தமிழர்கள் நிலை கேட்கவே வேண்டியதில்லை. முகாமில் வாழும் பல தமிழர்கள் உள நிலை பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'சிறப்பு முகாம்கள்' நாஸிகள் யூதர்களுக்கு உருவாக்கிய சித்திரவதை முகாம்களுக்கு ஒப்பானவையாக விளங்குகின்றன. இவை எல்லாவற்றையும் விடக் கொடுமை மேலைநாடுகளில் இன்று பூதாகரமாய் வளர்ந்து வரும் இனவெறி, நிறவெறி, பாசிசம் முதலியனவற்றின் முதல் இலக்காக வெளிநாட்டு அகதிகளே உள்ளனர். தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு அகதிகள் தம் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பின்றி அல்லலுறுகின்றனர். ஒவ்வொரு கணமும் இரண்டாம் தரக் குடிமக்களாக உணர்ந்து கூனிப்போயுள்ளனர். அகதி வாழ்வில் பிறந்த தமிழ்க் குழந்தைகள் தாய் நாட்டைப் பார்க்கவும், தமிழைக் கற்கவும் வாய்ப்பின்றி அந்நியச் சூழலில் இரண்டாம் தரக் குடிமக்களாய் வாழ்வைத் தொடங்கியுள்ள அவலம் கொடுமையிலும் கொடுமை.

தமிழகத்திற்குள் நிலைமை சொல்ல வேண்டியதில்லை. ஈழத் தமிழர்கள் இன்று தமிழகத்தில் நடமாட இயலாத நிலை. அகதி முகாம்களில் சிறைச் சாலைகளைக் காட்டிலும் கொடுமைகள். ஈழத் தமிழன் என்றாலே 'பயங்கரவாதி' 'கொள்ளைக்காரன்' 'போதை மருந்து கடத்துபவன்' எனப் பத்திரிகைகள் படம் பிடித்துக் காட்டும் நிலை. ஈழத் தமிழர்களின் நலனில் தொடர்ந்து அக்கறை காட்டி வரும் ஒரு சில சிறிய அமைப்புகள் தவிர இதர பெரிய அரசியல் கட்சிகள் எதுவும் தமிழ் அகதிகள் பிரச்சினையைக் கண்டு கொள்வதில்லை.

உலகத் தமிழ் மாநாடு தஞ்சை நகரில் 1995 ஜனவரி முதல் கிழமையில் நடக்கயிருக்கும் சூழலில் உலகெங்கிலுமுள்ள ஈழத் தமிழ் அகதிகள் படுந்துன்பங்கள் மீது கவனத்தை ஈர்ப்பது தமிழர் நலனிலும் மனித உரிமையிலும் அக்கறையுள்ள நம்மனைவரின் கடமையாகின்றது. தமிழ்ப்பண்பாடு, தமிழிலக்கியம், கலை என்பனவற்றில் அக்கறை காட்டுவோரனைவரும் புலம் பெயர்ந்து அகதிகளாக வாழும் ஈழத் தமிழர்கள் தம் இன்னல்களுக்கிடையிலும் தன்னடையாளத்தைப் பாதுகாக்கச் செய்யும் முயற்சிகளையும் படைப்பிலக்கியங்களைப் புனைவதையும் கலைஇலக்கிய பண்பாட்டுத் துறைத்திறனாய்வுகளை மேற்கொள்வதையும் கருத்தில் கொண்டாக வேண்டும். ஏனெனில் இவை உலகத் தமிழ்ப்பண்பாட்டின் பிரிக்க முடியாத கூறுகள்.

உலகெங்குமுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் பிரச்சனைகளைத் தொகுத்துக் கொள்வதும் அவற்றினடிப்படையில் அவர்களின் நலன் கோரும் கோரிக்கைகளை எழுப்புவதும் இன்று இன்றியமையாததாகியுள்ளது. இந்தக் குறிக்கோளுடன்தான் 1994 டிசம்பர் 18 ஆம் நாள் திருச்சியில் 'புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு' நடைபெறுகிறது.



படிப்பகம்

இம்மாநாட்டை ஒட்டி இம்மலர் வெளியிடப்படுகிறது. இம்மலரில் தமிழ்நாடு உட்பட உலகெங்கிலும் தமிழ் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சனையைத் தொகுத்தளிக்க முயன்றுள்ளோம். அவர்கள் உள்ளங்களிலிருந்து பீறியெழுந்து இலக்கியவடிவத்தில் வெளிப்பட்டுள்ள உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் இம்மலரின் இலக்கியப்பகுதியிலுள்ள படைப்புகளில் காணலாம்.

பிறந்த பூமியை நீங்கி அகதிகளாக வாழநேரிடும் மக்களின் அவல நிலையைச் சித்தரிக்கும் அரிய இலக்கியப் படைப்புகளைப் பாலஸ்தினிய, அராபிய இலக்கியவாதிகள் உலகுக்கு அளித்துள்ளனர். அவற்றில் ஒன்று, எட்வர்டு சையது அண்மையில் வெளியிட்டுள்ள ''கடைசி வானம்'' அந்நூலிலிருக்கும் கருத்துக்களையும் புலம் பெயர்ந்த புகழ் பெற்ற அயர்லாந்து எழுத்தாளர் ஜேம்ஸ் ஜாய்ஸ், புலம்பெயர்ந்த ஈழக்கவிஞர் கி. பி. அரவிந்தன் ஆகியோர் கருத்துக்களையும் தொகுத்து அளிக்கும் வ. கீதாவின் கட்டுரை அகதிகள் பிரச்சினை குறித்து சரியானதொரு சிந்தனையைத் தூண்ட உதவும்.

ஈழஅகதிகள் பெரும் எண்ணிக்கையில் மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். அங்கு அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும் அவர்கள் தங்கள் சுய அடையாளத்தைக் காக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகளையும், இனவெறியும் நிறவெறியும் பாசிசமும் பூதாகரமாய் வளர்ந்து வரும் ஐரோப்பியச் சூழலில் அவர்கள் எடுக்கவேண்டிய நிலை பற்றியும் பல புலம் பெயர்ந்த தமிழர் எழுதிய கட்டுரைகள் இடம்பெறுன்றன.

ஈழத் தமிழ் அகதிகளில் இலட்சக்கணக்கானவர்கள் நம் தமிழ்தாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் இவர்களுடைய பிரச்சனைகள் குறித்தும், இவர்களைப் பற்றிய தவறான படிமத்தை உருவாக்கும் ஆட்சியாளர்கள் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியும் பல கட்டுரைகள் வரப்பெற்றோம். பல செய்திகள் எல்லாக்கட்டுரைகளிலும் இடம் பெற்றிருந்தமையால் பொதுவானதொரு கட்டுரை முதலிலும், மற்ற கட்டுரைகளில் இடம் பெற்றிருந்த கூடுதல் செய்திகளையும் பிரச்சனைகளையும் மட்டும் தனித்தனியே தொகுத்தும் வெளியிட்டுள்ளோம். தமிழகத்தில் ஈழ அகதிகள் படும் துன்பத்தை உணர இவை உதவும் என நம்புகிறோம். கட்டாயப்படுத்தப்பட்டு இலங்கை திரும்பிச்செல்லும் அகதிகளின் நிலை பற்றியும் ஒரு குறிப்பு இடம் பெறுகிறது.

இருண்டவானில் ஓர் ஒளிக்கீறல் போல், புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி கற்பிக்க ஆஸ்திரேலியாவில் கிடைக்கப்பெறும் வாய்ப்புகள் பற்றி ஒரு கட்டுரை இடம் பெறுகிறது. தமிழ்க் கல்விக்குத் தாயகத்தில் கூட இல்லாத சிறப்பு அக்கறை காட்டப்பெறுவது நம் உள்ளத்தை நெகிழவைக்கிறது.

இலக்கியப்பகுதியில் பெரும்பான்மையான கதைகளும் கட்டுரைகளும் மேலை நாடுகளிலுள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் படைப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை மேலை நாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர் பற்றிய தவறான பிம்பங்களைத் தகர்த்தெறிகின்றன. தமிழகத்திலுள்ள அகதிகளிடமிருந்து படைப்பிலக்கியங்கள் கிடைக்கப்பெறாமை ஒரு பெருங்குறை.

இம்மலரின் ஆக்கத்திற்கு உறுதுணையாக நின்ற தமிழக நண்பர்களுக்கும் இம்மலரில் இடம் பெறும் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், மொழியாக்கங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றை எழுதியனுப்பியுள்ள தமிழக எழுத்தாளர்களுக்கும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் மலர்க்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. மலர்க்குழுவினரின் வேண்டுகோளைப் பெரிதாய் மதித்து ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, சிறிலங்கா, ஆகியவற்றிலுள்ள எழுத்தாளர்கள், அறிஞர்கள், பத்திரிகையாசிரியர்கள் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு இம்மலருக்கான ஆங்கங்களைத் திரட்டிக் கொடுத்தும் நேரடியாக எங்களுக்கு அனுப்பச் செய்தும் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் விளம்பரம் செய்வித்தும் உதவிய இலண்டன் நண்பர் ஆர். பத்மநாப ஐயர் அவர்களுக்கு, நோர்வேயிலுள்ள 'சுவடுகள்' நண்பர்கள், ஸ்விஸ்ஸிலுள்ள 'மனிதம்' நண்பர்கள், ஜேர்மனியிலுள்ள 'தூண்டில்' மற்றும் 'புதுமை' நண்பர்கள் முதலியோர்க்கும் மாநாட்டின் வெற்றிக்காக வாழ்த்துகள் அனுப்பியுள்ள நண்பர்களுக்கும் எங்கள் நன்றி.

**ச. சீ. கண்ணன்**

www.padippakam.com

# தொடரும் இனவாதம்

*(சிறிலங்கா ராணுவவீரர்கள் மறுவாழ்வு ஆணையர் (Commissioner of Rehabilitation) பிரிகேடியர் ஆனந்த வீரசேகர, சிங்கள மக்கட்கு விடுத்த விண்ணப்பம் 'லங்காதீபா' நாளேட்டில் 17.11.1993 ஆம் தேதி பிரசுரமாகியுள்ளது. எண்ணற்ற ஈழத் தமிழர்கள் இடம் பெயரவும் புலம் பெயரவும் முதன்மைக் காரணமாக இருந்துவரும் சிறிலங்கா (சிங்கள) இராணுவத்தின் இனவாதத்தைப் புரிந்து கொள்ள இந்த விண்ணப்பம் மட்டுமே போதும். அதன் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.)*

- ☐ நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கையில் உங்களைப் பாதுகாப்பவன் எப்போதும் விழித்திருக்கும் படைவீரன்தான். உணவு உண்பதற்காக நீங்கள் மனைவியுடனும் குழந்தைகளுடனும் கீழே உட்காரும்போது, படைவீரனோ தன்னந்தனியாக இருப்பான் —பல சமயம் பசியால் துடித்துக் கொண்டு. படைவீரன் உங்களையும் நாட்டையும் தன் உயிரைக் கொடுத்துப் பாதுகாக்கிறான்.

- ☐ போர் அபாயகரமானது. அது கொடூரமானது. இந்த நாசகாரப் போரால் வரும் துன்பங்களை உங்களைக் காட்டிலும் மேலதிக உக்கிரத்துடன் உணர்பவன் படைவீரன்தான். சிலவேளை வெற்றியையும் சில வேளை தோல்வியையும் சந்திக்கும் இராணுவ நடவடிக்கைகளில் படைவீரன் ஒரு சமயம் முன்னேறுவதும பின்னொரு சமயம் பின்வாங்குவதும் இயல்பு. எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள நிலைமை தோல்விதான் என்று எண்ணாதிர்கள். படைவீரனின் உடலும் உள்ளமும் பகைவனை நிர்மூலமாக்குவதற்குத் தயாராக உள்ளன.

- ☐ சிங்களர்களுக்கும் அவர்களது நாட்டுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள பகைவர்களின் இரத்த ஓடைகளில் நீந்திச் சென்று அப்பகைவர்களிற் கடைசி ஆள் வரை அனைவரையும் அழித்தொழிக்கப் படைவீரன் தயாராக இருக்கிறான். எந்தப் பகைவர்கள் ஒரு சமயம் சிங்களர்களின் தோல்களிலிருந்து செய்த காலணிகளை அணிந்து கொள்வோம் என்று மார்தட்டிக் கொண்டனரோ, அதே பகைவர்களை நமது படைவீரன் முறியடித்து, அவர்களது தோலால் ஒரு முரசைச்செய்து அதை அவர்கள் தம் கால்களாய் கொட்டும்படி செய்வான்.

- ☐ பெற்றோர்களே, குழந்தைகளே, படைவீரர்களாகச் சேர்ந்து விட்ட நமது ஆண் பிள்ளைகளுக்கு நீங்கள் ஊக்கம் தரவேண்டும்.

- ☐ அவர்களை ஊக்குவித்து எழுதும் கடிதங்களை அனுப்பி செய்தித் தாள்களின் பக்கங்களை நிரப்புங்கள். உங்கள் மனத்தை வாட்டும் வேதனையை மிகவும் சிரமப்பட்டாவது கட்டுப்படுத்துங்கள்.

- ☐ உங்கள் கிராமத்தில் ஒரு படைவீரனின் வீடு இருக்குமானால் அதை உங்கள் உறவினரின் வீடாகக் கருதி அங்கு சென்று வாருங்கள். படைவீரர்களின் மனைவிகளையும்



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளையும் உங்கள் சொந்த சகோதரிகளாகவும் குழந்தைகளாகவும் கருதுங்கள். அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள். உங்களால் இயன்ற உதவியனைத்தையும் செய்யுங்கள்.

- ☐ படைவீரர்களின் வீரத் தந்தையரையும் வீரத்தாய்மாரையும் சந்தித்து அவர்களது நெஞ்சங்களுக்கு வலுவூட்டுங்கள்.
- ☐ ஆசிரியர்களே, உங்கள் பள்ளிகளில் படைவீரர்களின் குழந்தைகள் இருந்தால் அவர்களை முன்னுக்குக் கொண்டு வாருங்கள். அவர்களது தந்தையர்களைப் போற்றிப் புகழுங்கள். கடந்த காலத்தில் இந்த நாட்டைப் பாதுகாத்த மாபெரும் மன்னர்களையும் படைத்தளபதிகளையும் பற்றிப் பாடம் புகட்டுங்கள்.
- ☐ நாடு முழுவதிலும் இரத்த தான நடவடிக்கைகளை ஒழுங்கமையுங்கள்.
- ☐ எப்போது பார்த்தாலும் எதையாவது குறை சொல்லிக் கொண்டிருப்பவர்களைக் கட்டுப்படுத்திவையுங்கள். பயங்கரவாதத்தின் காரணமாக அச்சத்தால் வாய்பேச முடியாமலிருக்கும் தமிழர்களைச் சந்தியுங்கள். பயங்கரவாதத்திற்கெதிராகப் பேசும்படி அவர்களை இணங்க வையுங்கள். பயங்கரவாதத்திற்கெதிராக தமிழ் மக்களின் பொது அபிப்பிராயத்தை உருவாக்க உதவுங்கள்.
- ☐ சிங்களரல்லாதவர்களில் அப்பாவிகளைத் துன்புறுத்தாதீர்கள். நீங்கள் சந்திக்கும் சிங்களரல்லாதாரிடம் சொல்லுங்கள்— அவர்கள் சிங்கள எதிர்ப்பு இல்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் எந்தப் பகைமைக்கும் முகம் கொடுக்க வேண்டியிராது என்று.
- ☐ சிங்களருக்கு ஊறுவிளைவிப்பதற்காக வந்துள்ள ஏதேனுமொரு பகைவனை உங்கள் கிராமத்தில் பார்ப்பீர்களேயானால் அவனது கழுத்தில் கைபோட்டு தள்ளிக்கொண்டு போய் பாதுகாப்புப்படையினரிடம் ஒப்படைத்து விடுங்கள்.
- ☐ படைவீரர்களுக்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பதற்கான அமைப்புகளை உருவாக்குங்கள். நேர்மையானவர்களை அவற்றின் தலைவர்களாக்குங்கள். கையாடல் பேர்வழிகளைப் படைவீரர்களின் பகைவர்களாகக் கருதுங்கள். பொருட்களையும் நிதியையும் திரட்டும் போது, படைவீரனின் சுயமரியாதைக்குக் கேடு ஏற்படாதிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- ☐ அன்பார்ந்த தாய்மார்களே, உங்கள் தாலாட்டுப் பாடல்களுடன் போர்ப்பாடல்களையும் கலந்து பாடுங்கள்.
- ☐ பாதுகாப்புப் படைகளிடையே எதிர்ப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வதந்திகளைப பரப்புவோரைக் கட்டுப்படுத்தி வையுங்கள்.
- ☐ பள்ளிச் சிறார்களே, படைவீரராக இருக்கின்ற உங்கள் தந்தைமாருக்கும் அண்ணன் மாருக்கும் ஆபிரக்ககணக்கில் கடிதம் எழுதுங்கள். இராணுவம் அவற்றைப் போர் முனைக்கு அனுப்பிவைக்கும்.
- ☐ படைவீரர்களுக்கு என்ன தேவைப்படுகிறது என்பதை இராணுவத்திலுள்ள மூத்த அதிகாரிகளிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். படைவீரர்கள், படையதிகாரிகள் ஆகியோரிடையே கூட பயிற்சியில்லாத, ஊழல்பிடித்த, மோசடித்தனமான ஆட்கள் சிலர் இருக்கக் கூடும். அவர்களோடு சேராதபடி கவனமாக இருங்கள். அத்தகையவர்கள் யாரையேனும் நீங்கள் கண்டறிந்தால் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

- மீனவ சகோதரர்களே, உங்கள் படகுகளும் சேவைகளும் கப்பற் படையினருக்குத் தேவைப்படுகின்றனவா என்று அவர்களிடம் கேளுங்கள்.
- ஏழைச் சிங்களச் சகோதரர்களே, சிங்களரல்லாதோர்க்கு உங்கள் நிலங்களை விற்கா தீர்கள். பணத்திற்கோ, மதுவிற்கோ, பெண்களுக்கோ ஆசைப்பட்டு உங்கள் நாட்டிற்குத் துரோகமிழைக்காதீர்கள்.
- பிற சிங்களருடன் வேற்று மொழியில் பேசாதீர்கள். படைவீரர்களின் உருவப் படங்களைத் தெருக்களில் வைத்து அவ் உருவங்களின் காலடிகளில் பூக்களை வையுங்கள். ஒவ்வொரு கூட்டத்தின் போதும் அல்லது விழாவின் போதும் படைவீரர் களை ஊக்குவிக்கக் கூடிய சொற்பொழிவுகளை நிகழ்ச்சி நிரலில் சேர்த்து விடுங்கள்.
- கவிஞர்களே, போர்ப் பாடல்களை எழுதிப்பிரசுரியுங்கள். வீரத்தையும் வீர வெற்றி களையும் பற்றி செய்தித்தாள்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதுங்கள்.
- சக நாட்டவரே, மரணமடைந்த ஒரு படைவீரனின் வீட்டை ஒரு புனித இல்லமாகக் கருதுங்கள்.
- சக சிங்களரே, நமக்குள் பிரிவினை ஏதும் வேண்டாம். நமது நாட்டைத் துண்டு போடுவதற்குப் பகைவர்கள் முனைந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாம் நமது கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடுவோமாக.

நன்றி : INFORM - Sri Lanka
INFORMATION MONITOR, COLOMBO
Sitiuation Report - Nvember - 1993.

தமிழாக்கம் : **எஸ். வி. ராஜதுரை**

---

# ஒரு பாலையின் குரல்

கோடை தகிக்கிறது நெடுநாளாய்
ஆழக்கிணற்றிலும் நீர் வற்றிப் போச்சு
அள்ளப் போட்ட வாளி வெறுமனே
வருகிறது

கோடை தகிக்கிறது நெடுநாளாய்
வானில் ஒரு பொட்டு மேகம் கிடையாது
பாலை வெளியில் விரல் நீட்டி
பரிதவிக்கின்றன மொட்டை மரங்கள்
கனவுகள் உதிர்ந்த மனிதரைப் போல
கோடை தகிக்கிறது நெடுநாளாய்
நிழலற்று அலையும் மனிதர்கள்
இதோ, சுவடிழந்து செல்கிறார்
எனது இமைத் தெரு கடந்து
விழி எறியும் திசை எங்கும்
கானல் நீரள்ளி நீள்கின்றகைகள்
ஒரு கையும் இவர்க்கென்று
உயிர்த்தண்ணி ஏந்தவில்லை
கோடை தகிக்கிறது நெடுநாளாய்
சுற்றிலும் நெருப் பெரிவு
மானுடர்கள் திக்குளிப்பு
பச்சையாய் உடம்புகள்,
பச்சையாய் உணர்வுகள்
கனவுகள் பச்சையாய்
எரிகின்றன; கரிகின்றன.
கண்ணெதிரே கானலில்
இந்தப் பூமியே எரிகின்ற பிணமாகி
தீநிழல் விழுந்த
எதிர்காலம்—
பாம்புதிர்த்துப் போன செட்டை
மினுங்கலென...

கோடை தகிக்கிறது நெடுநாளாய்
தகிக்கிற கோடையில்
பறவையின் நிழலும் பரிதவிக்கும்
மொட்டை மரத்தடியில்
கூன் விழுந்த மானுடம் குந்தியிருக்கிறது
பூதாகாரமாய் நீளுகிற பாலையின்
நெடுமூச்சாம் அலைகாற்று அதன்
ஜீவனைச் சுடுகிறது
யாரேனும், யாரேனும்
இதயத்தைப் பிழிந்தெனினும்
உயிர்த்தண்ணி வார்க்கும் வரை
முதுகு பிளந்தெனினும்
முள்ளெலும்பை ஊன்று கோலாய்
வழங்கும் வரை
காத்திருக்கும்
இந்த நீண்ட நெடும் பாலை வழி
யாரேனும்...யாரேனும்...?

**சு. வில்வரத்தினம்**
(யாழ்ப்பாணம்)



படிப்பகம்

www.padippakam.com

## இடம் பெயர்ந்த தமிழர் எண்ணிக்கை (1994 ஆகஸ்ட் நிலவரம்)

| | | | |
|---|---|---|---|
| **வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ளே தமிழகதிகள்** | | | |
| யாழ்ப்பாணம் | 2, 44, 000 | | |
| மன்னார் | 54, 000 | | |
| கிளிநொச்சி | 41, 000 | | |
| வவுனியா | 11, 000 | | |
| முல்லைத் தீவு | 30, 000 | | |
| திருகோணமலை | 34, 000 | | |
| மட்டக் களப்பு | 77, 000 | | |
| அம்பாறை | 23, 000 | | |
| **மொத்தம்** | | | 5,14,000 |
| **புத்தளம்** | | | |
| வடக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்க்கப்பட்ட முஸ்லிம்கள் | | | 40,000 |
| **கொழும்பு** | | | |
| வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டு கொழும்புவிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் வசிக்கும் தமிழர்கள் | | | 1,00,000 |
| **தமிழ்நாடு** | | | |
| முகாமிலுள்ள அகதிகள் | | 70,000 | |
| முகாமுக்கு வெளியிலுள்ள அகதிகள் | | 1,00,000 | |
| மொத்தம் | | | 1,70,000 |
| **பிற நாடுகள்** | | | |
| ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் புகலிடம் தேடும் தமிழர்கள் | | | 4,00,000 |
| இடம் பெயர்க்கப்பட்ட தமிழர்களின் மொத்த எண்ணிக்கை | | | 12,24,000 |

**ஆதாரம் : Tamil Information Centre, London.**



படிப்பகம்

www.padippakam.com

**சிறீலங்கா அரசு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடத்தி வரும் போரில் பத்தாண்டுக் காலத்தில் (1983-1993) ஈழத் தமிழர்கட்கு ஏற்பட்ட உயிரிழப்புகளும் பொருட் சேதங்களும்**

| | |
|---|---|
| சேதப்படுத்தப்பட்ட அல்லது தகர்க்கப்பட்ட வீடுகள் | 1,5,000 |
| சேதப்படுத்தப்பட்ட அல்லது தகர்க்கப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் | 1,479 |
| கொல்லப்பட்ட தமிழ்க் குடிகள் | 35,000 |
| காணாமற் போன தமிழ்க் குடிகள் | 10,000 |
| மூன்றாண்டுகட்கு மேலாக விசாரணையின்றி சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் | 1,500 |
| இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் (மதிப்பிடப்பட்ட எண்) | 5,000 |

தகவல்களுக்கு ஆதாரம் : Tamil Information Centre,London; Ministry of Hindu Cultural Affairs, Sri Lanka, 1994; Sri Lanka Monitor (Publication of British Refugee Council)

**போரால் அனாதைகளாக்கப்பட்டவர்கள்**

| | |
|---|---|
| சிறிலங்கா முழுவதிலும் | 8,29,000 |
| வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் | 4,69,000 |

ஆதாரம் : Tamil information Centre, 10 92

**சிறிலங்கா அரசின் இராணுவச் செலவு**

(ரூபாய் கோடியில்)

| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த இராணுவச் செலவு | 819 | 844.50 | 1395.60 | 1639.40 | 1596 | 1499 |
| அரசின் மொத்தச் செலவில் இராணுவச் செலவின் விகிதம் | 17.8% | 14.8% | 19.4% | 20.2% | 18.9% | — |

ஆதாரம் : Tamil Information Centre, London.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ அகதிகளை நாடுகடத்தும் விவகாரத்தில் இந்திய ஆட்சியாளர்கள்

—சுரேஸ்

சிறீலங்கா சிங்கள இனவாத அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தால் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு, உடைமைகளை இழந்து, உற்றார் உறவினர் கூட இன்றி நிற்கதியாக நிற்கும் இலட்சணக்கான தமிழீழ அகதிகள் இலங்கையிலும், இந்தியாவிலும் அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் இருப்பது தெளிவு. '1983 தமிழின படுகொலை'க்குப் பின்' இந்தியாவில் இருந்து வரும் தமிழீழ மக்கள் இந்திய அரசால் 'அகதி அந்தஸ்து' கூட அளிக்கப்படாத நிலையில் 'அகதிகள்' என்ற புனை பெயருடன் இருக்கின்றனர். இவர்கள் அரசால் உருவாக்கப்பட்ட நிவாரண முகாம்களிலும், வெளியிலும் வாழ்கின்றனர். 1992-இல் இந்திய அரசு முகாமில் வாழ்ந்து வந்தவர்களை சிறீலங்கா அரசுடன் ஏற்படுத்திய தீட்டப்படாத ஒப்பந்தத்தின் 'நாடுகடத்தும்' திட்டம் ஒன்றை அமுல்படுத்த தொடங்கியது இதற்கு ''சுய விருப்பத்துடன் அனுப்புவது'' என பெயர் சூட்டப்பட்டது. சிறீலங்கா அரசின் படைகளின் எத்தகைய கொடுமைகளுக்கு விரட்டியடித்தலுக்கு பயந்து நாட்டை விட்டு வெளியேறி தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனரோ அதற்கான காரணங்கள் ஒன்றும் தீர்க்கப்படாத நிலையில் இந்திய அரசின் நிர்ப்பந்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இந்திய ஆட்சியாளர்களின் நாடுகடத்தும் திட்டத்துக்கு பலியாக்கப்பட்டுக் கொணடிருக்கிறார்கள்; இசைய வைக்கப்படுகிறார்கள். 29000 தமிழீழ மக்கள் கடந்த ஆண்டு திருப்பியனுப்பபட்டார்கள். இவர்களில் 5000 மக்கள் இன்னமும் சிறீலங்கா அரசின் அகதி முகாமில் இருக்கிறார்கள். 12000 மக்கள் சிறீலங்கா அரசின் முகாம்களில் அனுமதிக்கப்படாமலும் சொந்த வாழ்விடங்களுக்கு திரும்ப முடியாத யுத்த நிலமையில் நடுத்தெருவிலும் காட்டிலும் அலைந்து கொண்டு சொல்லொணாத் துன்பதுயரங்களுக்கு முகங் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்திய மத்திய, மாநில அரசுகள் மீண்டும் தமிழீழ மக்கள் மேல் இரண்டாம் கட்ட நாடுகடத்தும் தாக்குதலை தொடுத்துள்ளனர். இந்நாடு கடத்தும் திட்டத்துக்கு எந்தவித மனிதாபிமானமும் அற்ற முறையில் கொடுக்கப்பட்ட நேரடி, மறைமுக நிர்ப்பந்தங்கள் மூலம் 7000 மக்களை 'சுயவிருப்புடன் நாடு கடத்த' தொடங்கியுள்ளனர். அய்ந்து கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்ற தமிழ் நாட்டில், உலகத் தமிழர்களின் தாயகம் என்கின்ற தமிழ்நாட்டில் எந்தப் பெரிய எதிர்ப்பும் இன்றி ஜெயா—ராவ் ஆட்சியாளரால் நாடு கடத்தப்படுகிறார்கள். இதுவரை 3000 தமிழர்கள் தமிழர் அழிப்பு யுத்தத்தை நடத்தும் சிறீலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமை மனிதாபிமானம், மொழியுணர்வு, பண்பாட்டு உணர்வு, ஏன் மனிதநேயம் கொண்ட ஒவ்வொருவரையும் சிந்திக்கத்தூண்டுகிறது. இந்திய ஆட்சியாளர்களின் தமிழீழ விரோத நடவடிக்கைகளை பின் நோக்கி பார்க்க வைக்கிறது.

இலங்கையில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் மக்களை, போராளிகளை 83—87 க்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய ஆட்சியாளர்களும் அரசும் பிரச்சாரம், ஆயுதம், பயிற்சி, நிதி என ஆதரித்தார்கள். 1987 இந்திய—இலங்கை (துரோக) ஒப்பந்தத்தின் பின்னர் தொடர்ந்தும் தமிழீழ தேசிய விடுதலை விடுதலைக்காகப் போராடுபவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் அடக்கி ஒடுக்கத் தொடங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

1987-90 இடைப்பட்ட காலத்தில் நேரடியாக இந்திய அரசு தமிழீழ தேசத்தின் மேல் (எல்.டி.டி.ஈ. போராளிகள் மேல்) ஆக்கிரமிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது.

தமிழீழ ஆக்கிரமிப்பு யுத்தத்தில் தோல்வி கண்டு 90 இல் பின் வாங்கியது. போராளிகளை 'பயங்கரவாதிகளாக' 'தீவிரவாதிகளாக' தனது எல்லா தொடர்பு சாதனங்கள் மூலம் சித்திரிக்க தொடங்கியது. தமிழ் நாட்டிலிருந்த போராளிகளை மூர்க்கத்தனமாக ஒடுக்கியது. சிறப்பு முகாம்களில் பிடித்து போட்டது. தமிழீழ ஆதரவாளர்களை 'தடாவிலும்' 'தேசிய பாதுகாப்பு' சட்டத்திலும் சிறைகளில் தள்ளியது.

இந்திய ஆட்சியாளர்கள் 'பயங்கரவாதிகளை'. அவர்களது 'ஆதரவாளர்களை' அடக்குவதாகவும், அப்பாவி தமிழீழ மக்களை ஆதரிப்பதாகவும் கூறி போராளிகள் மீதான முதல் கட்ட தாக்குதலை நிறைவேற்றினர். போராளிகளை பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் ''ராஜீவ்'' கொலையைக் காட்டி தமிழ் நாட்டிலுள்ள அதே அப்பாவித் தமிழீழ மக்கள் மேல் தமது ஒடுக்குமுறையை தொடக்கினர்; 'மக்களை நாடு கடத்தும்' துரோகத்துள் நுழைந்தனர். தமிழர்களை ஒடுக்குவதில் சிறீலங்கா இனவாத அரசுக்கு இந்திய அரசு சளைத்ததல்ல என்பதை இன்று உலகுக்கு அறிவித்து செயல்படுகிறது.

## தமிழீழ அகதிகள் பின்னணி

கடந்த பத்தாண்டுகளாக சிறீலங்கா அரசும் முப்படைகளும் வடக்கு-கிழக்கு தமிழீழ மக்கள் மேல் திட்டமிட்டு நடத்தி வரும் இன ஒடுக்குமுறை யுத்தத்தால் தங்கள் உறைவிடங்களை, உடமைகளை, சொந்த பந்தங்களை இழந்து சொந்த நாட்டிலேயே 500000 மக்கள் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். 990 இல் மீண்டும் தொடங்கிய உள்நாட்டு யுத்தத்தால் வடகுகு கிழக்கை விட்டு வெளியேறிய தமிழீழ மக்களுக்காக (90 அக்டோபரில் 24 மணி நேர கெடுவில் யாழ்ப்பாணம் மன்னார் மாவட்டங்களில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட தமிழீழ முசுலீம் மக்களும் இதனுள் அடங்குவர்) சிறிலங்கா அரசாங்கமே 10 க்கும் மேற்பட்ட அகதி முகாம்களை திறந்து வைததுள்ளது. அப்போது அம்முகாம்கள் சிலவற்றை மூடி அங்குள்ள மக்களை பலாத்காரமாக மட்டகளப்பு, புத்தளம், அம்பாறை பகுதிக்கு 'புதிய முகாம்களுக்கு' அனுப்பிவருகிறது. அரசும் நிவாரண திணைக்களமும் இதறகாக வலிந்து முயற்சித்து வருகின்றன. இ. நிலையிலும் மாணிக்கப் பிள்ளையார் கோவில், விவேகானந்த சபை மண்டபம், முகத்துவாரம், பம்பலப்பிட்டி சரசுவதி மண்டமுகாம்கள் தமிழர்களுக்காகவும்,மாளிகாவத்தை, குப்பியாவத்கை, காக்கைத் திவு முகாம்கள் தமிழ் முசுலீம் மக்களுக்காகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சிறிய புள்ளி விபரம் இதோ!

| முகாம்கள் | குடும்பங்கள் | மொத்தம் | ஆண் | பெண் | மாணவர்கள் | 1-12 வயது |
|---|---|---|---|---|---|---|
| சரசுவதி | 211 | 515 | 292 | 223 | 56 | 139 |
| முகத்துவாரம் | 101 | 252 | 130 | 122 | 75 | 77 |
| பிள்ளையார் கோயில் | | 540 | | | 108 | |

விவேகானந்தசபை முகாம் மூடப்பட்டபோது மக்சள் போக மறுத்தனர். சிங்கள போலீசாரும் அதிகாரிகளும் அகதிகளின் உடைமைகளை தூக்கி விசிறியடித்தனர், தாக்கினர். வாய்மூலம் தமது துயரததை தெரிவித்து எதிர்ப்பு தெரிவித்தவர்களை பலமாக அடித்து நொறுக்கினர். உணணாவிரதம் இருந்த அகதிகளை கட்டிதூக்கி வண்டிகளில் ஏற்றி நாவலடி முகாமுக்கு அனுப்பி வைத்தனர். அகதிகள் கண்ணீரும் கம்பலையுமாக சட்டி பானைகளுடன் பலாத்காரமாக அரசின் 'கிழக்கு மீதான சதிதிட்டத்துக்கு' பலியாக்கப் படுகிறார்கள். இத்தகைய கொடுமைகளும் தமிழ்நாட்டு அகதிகளுக்கு இந்தியரசு செய்கிறது. அரசு சார்பு கருங்காலியான ஈ.பி.டி.பி இயக்கம் முகத்துவாரததின், மாணிக்கப் பிள்ளையார் கோயில் முகாமிலும் மேற்பார்வை செய்துவருகிறது. மக்களின் நடமாட்டம் கடுமையாக உளவு பார்க்கப்படுகிறது. இளைஞர்களும் யுவதிகளும் காலநேரம் இன்றி காரணம் இன்றி பிடித்துச் செல்லப்படுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பிடித்துச் செல்லப்படுபவர்கள் திரும்பிவருவது மிகக்குறைவு. பத்திரிகையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை, மாணவ மாணவியர்களின் கல்விக்கு உத்தரவாதம் இல்லை. உணவுக்கும் உடைக்கும் ஊட்டச்சத்துக்கும் சுகாதார வசதிக்கும் படும் திண்டாட்டம் சொல்லித் தீராது. எத்தனை கொடுமை எத்தனை கொடுமை...இங்கே.........

**''கிழக்கில் அரசின், அரசு சார்பு இயக்கங்களின் கண்மூடித்தனமான கைதுகள் தொடர் கின்றன, கூட்டிச் செல்லப்படுபவர்கள் வீடு திரும்புவதில்லை, நாங்கள் விதைத்த வயல்களில் விதைக்க முடிவதில்லை, நாங்கள் விதைக்க படையினர் அறுத்துக் கொண்டு போகிறார்கள். நிலங்களை விதைக்க விடாமல் பறித்திருக்கிறார்கள். நிலமும் இல்லாமல் தொழிலும் இல்லாமல் அங்கேபோய் என்ன செய்வது?''** கிழக்கின் அகதி குமுறுவது இது.

விவேகானந்தசபை முகாமை மூடியபோது மட்டகுளி முகாமுக்கு மாற்றுவதாகக் கூறிவிட்டு அதிகாரிகள் மட்டகளப்புக்கு கொண்டு சென்றனர். அகதிகளைக் கூட்டிச்சென்ற இராணுவத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆயுதபாணிகளும் கூடவே இருந்தனர். இங்கு ஒரு குடும்பத்துக்கு ரூ. 168 பெறுமதியான பொருள்களை நிவாரண திணைக்களம் வழங்கியுள் ளது. இதுவயிற்றின் எந்த மூலைக்குப்போதும்? இங்குள்ள வாழ்க்கையின் கொடூரம் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? **''இவை எல்லாவற்றையும் விட உயிருக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை, அதுதான் பிரதானம். இங்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லை.''** 1983 இல் மலையகத்திலிருந்து வடக்குக்கு சென்று மீண்டும் அகதியாக முகாமில் இருக்கும் மலையகப் பெண் **''எங்களுக்கு அங்கு போயும் வாழ முடியவில்லை; இங்கு அகதிமுகாமிலும் தொடர்ந்து இருக்க முடியாது. எங்கு போய் வாழமுடியும் என்றும் புரியவில்லை!''** என திகைக்கிறார். வடகக்கை விட்டு விடுதலைப்புலிகளால் விரட்டப்பட்டு காக்கைத் தீவு முகாமிலிருக்கும் ஒருவர் உறுதியாகச் சொல்கிறார் **''எங்களது முகாமை அரசு மூடுவதில் நியாயமில்லை. நாம் திரும்பிப் போகமுடியாது. வற்புறுத்தினால் எல்லா அகதிகளுக்காகவும் உண்ணாவிரதம் இருப் போம். வேண்டுமானால் எங்களையல்ல எங்கள் பிணங்களை இடம்பெயர்க்கட்டும் அரசு''** இது தான் இலங்கையிலுள்ள அகதிகளின் உண்மை நிலவரம்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் மேல் சிறிலங்கா இராணுவம் ஒரு பெரிய இராணுவ நடவடிக்கைக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டுள்ளது. மறுபக்கம் 'அரசியல் தீர்வு' 'பேச்சுவார்த்தை' என எல்லாரையும் ஏமாற்றுகிறது. அரசுபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் எங்கு எந்த நேரத்தில் நடக்கும் என்பது யாருக்கும் தெரி யாது. இன்றிருப்பார் நாளையில்லை என்ற நிலை வடக்கு கிழக்கு பூராவும் நிலவுகிறது.

## இந்தியாவிலுள்ள தமிழகதி மக்களின் நிலை

1983 ஆடிப்படுகொலையைத் தொடர்ந்து சிறிலங்காவில் அகதிகளாக்கப்பட்ட 1, 20 000 தமிழர்களில் 40 000 மக்கள் வடக்கு கிழக்கை நோக்கி வந்தனர். 80 000 பேர் அகதிகளாக தமிழ்நாட்டை சென்றடைந்தனர். அன்று தொடங்கி பத்தாண்டுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் சிறிலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டிலும், அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் தஞ்சம் அடைந்தனர். இன்று தமிழ் நாட்டு முகாம்களில்மட்டும் 92இல் நிர்ப்பந்தப்படுத்தித் திருப்பியனுப்பிய 29000 அகதிகள் போக 80000 மக்கள் முகாம்களில் உள்ளனர்.

## தமிழ் நாட்டு அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகளைக் காட்டும் புள்ளி விவரம்

| மாவட்டம் | முகாம்களின்தொகை | மக்கள்தொகை | மொத்தக்குடும்பங்கள் |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | 05 | 6435 | 1651 |
| வடஆற்காடு | 09 | 4852 | 1236 |
| தென்னாற்காடு | 06 | 3170 | 779 |
| சம்புவராயர் | 12 | 4286 | 1113 |
| செங்கை எம்.ஜி.ஆர். | 09 | 4296 | 1069 |
| சிதம்பரனார் | 03 | 2018 | 486 |



படிப்பகம்

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| காமராசர் | 07 | 4463 | 1105 |
| கன்னியாகுமரி | 05 | 1667 | 422 |
| நெல்லைகட்டபொம்மன் | 07 | 3686 | 939 |
| சேலம் | 12 | 4738 | 1307 |
| தர்மபுரி | 13 | 4778 | 1215 |
| பெரியார் | 07 | 5025 | 1285 |
| கோவை | 15 | 3842 | 979 |
| திண்டுக்கல் அண்ணா | 08 | 4653 | 1169 |
| பசும்பொன் தேவர் | 07 | 4367 | 1125 |
| மதுரை | 04 | 7010 | 1797 |
| புதுகை | 03 | 43/3 | 1175 |
| திருச்சி | 05 | 6526 | 1700 |

**முகாம்களுக்கு வெளியே 100000 ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளனர்.**

தமிழ் நாட்டிலுள்ள அகதிகளை வற்புறுத்தி 'சுயவிருப்பத்தின் பேரில் நாடுகடத்தும்' இந்திய ஆட்சியாளர்களின் கொடூர முகத்தை இனம், மொழி, சாதி, மதம், நாடு இவற்றை தாண்டி மனித நேயம்மிக்க ஜனநாயக உணர்வுள்ள ஒவ்வொருவரும் உலக நாடுகளிலுள்ள அகதிகளும் கண்டுகொள்ளவேண்டும். விசேடமாக தமிழ் நாட்டு மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளும்படி தங்கள் சகோதரர்கள் நாடு கடத்தப்படுவதை எதிர்த்து கிளர்ந்தெழுந்து போராடும்படி கோரவேண்டும்.

**இந்திய மத்திய, மாநில ஆட்சியாளர்கள் தமிழீழ அகதிகள் மேல் கொடுக்கும் அழுத்தங்கள்**

- ☐ தமிழ்நாட்டிலோ இந்தியாவின் வேறுபகுதிகளிலோ வாழும் தமிழீழ மக்களுக்கு 'அகதி' என்ற அந்தஸ்தோ அல்லது வேறு சட்டரீதியான அந்தஸ்தோ இந்திய மத்திய மாநில அரசால் வழங்கப்படவில்லை (தமிழீழ மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள், அடக்குமுறைகள் குறித்த சர்வதேசிய அகதிகள் உரிமை பற்றிய சாசனத்தை இந்திய அரசு மீறிவது பற்றி புகார் கூற முடியாவண்ணம் தாங்கள் 'அகதி' என்ற அந்தஸ்தே இன்றி இருக்கவைக்கப்பட்டுள்ளனர்.)
- ☐ தமிழ் நாட்டிலுள்ள தமிழீழ மக்கள் அய்நா அகதிகள் ஆணையரின் உதவியையோ வேறு சர்வதேச அமைப்புக்களின் உதவியையோ இந்திய அரசின் அனுமதியின்றி பெற முடியாது (இதனால்தான் நாடு கடத்தப்படும் அகதிகளில் இநதிய அரசு அனுமதிக்கும் மக்களை மட்டுமே, அதாவது 'பதப்படுத்தப்பட்ட' அகதிகளை மட்டும் யு.என்.எச்.சி.ஆர் பார்த்து திருப்திப்பட்டுக் கொள்கிறது)

தமிழ்நாட்டிலுள்ள 133 அகதி முகாம்களில் 15000 மேற்பட்ட விவசாயக் கூலிகள் இருக்கின்றார்கள். இவர்கள் பல்வேறுவிதமான உடலுழைப்பு வேலைகளின் ஈடுபட்டு வந்தவர்கள். சாலைபோடும், புகையிரத பாதை போடும் பழுது பார்க்கும் ஒப்பந்தக் காரர்களிடம் வேலை செய்து வந்தவர்கள். இவர்கள் வேலைக்கு செல்ல முடியாது இருப்பதுடன், தங்களின் பழைய உழைப்புக்கான ஊதியத்தையும் பெறமுடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார்கள். இவர்கள்தான் முகாம் வாழ்க்கையில் மிகவும் கடைநிலை வாழ்க்கையிலிருந்து வயிற்றுப்பாட்டுக்கே விழிபிதுங்கி நிற்கின்றவர்கள்.

அகதிவாழ்க்கை கூட வாழ முடியாத மேலேபார்த்த நிர்ப்பந்தங்கள் காரணமாக ''இங்கிருப்பதைவிட ஊரில் போய் சாகலாம்'' ''விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து போராடிச்சாகலாம்'' ''வேறு வழியில்லை போவம்'' ''தினம் தினம் சாவதைவிட ஒரு நாளில் சாவது நல்லது''-இப்படி உணர்ச்சி வசப்பட்ட நிர்ப்பந்த முடிவுகளுக்கு தள்ளப்பட்டு 7000 பேர் 'சுயவிருப்பத்துடன் நாடுகடத்தும்' இந்திய ஆட்சியாளர்களின் சதித்திட்டத்துக்கு பலியெடுக்கப்பட்டுள்ளார்கள். 2800 பேர் திருகோணமலையில் கொண்டுவந்து இறக்கப் பட்டுள்ளனர். இங்குள்ள அகதிகளை பராமரிக்கக்கத் திண்டாடும், தனது இராணுவ நடவடிக்கைகள் மூலம் புதிய அகதிகளை உருவாக்கி வரும் சிறீலங்கா அரசு தமிழ் நாட்டில் இருந்து வரும் அகதிகளுக்கு எந்த வகை நிவாரணங்களையும், தீர்வையும் கொடுக்கப் போவதில்லை என்பதுமட்டும் திண்ணம்.



படிப்பகம்

இப்படியாக ஒரு படுபயங்கரமான சூழ்நிலைமையால் நாளைய புலரும்பொழுது பற்றிய நூறுகேள்விகளைச் சுமந்த வண்ணம், எதிர்காலம் குறித்து நம்பிக்கையும் அற்று வாழும் அகதிகள் ஜெயா — ராவ் ஆட்சிகளின் நாடுகடத்தும் சதி திட்டத்தால் ஒடுக்குமுறையின் உச்சத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த சனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை இந்திய ஆட்சியாளர்களுக்கு பல்லவி பாடிவரும் தமிழ் துரோகத்தலைமைகள் ஒன்றும் கூட அகதிகளுக்காக குரல் கொடுக்க முன்வரவில்லை. அகதிகளுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களின் 'அறிக்கை கூட இல்லை. காரணம் இத்தலைமைகளுக்கு நல்ல பாதுகாப்பான இடம், அறுசுவை உணவு, மதுபானம் எல்லாம் கொடுத்து இந்திய அரசு பாதுகாத்து வருகின்றது.

- ☐ அகதிகளுக்குக் கொடுக்கப்படும் பண உதவி, பொருளுதவி அவர்களது குறைந்தபட்ச உயிர்வாழ்வுத்தேவைக்கே போதாது இருக்கும்படி அதிகாரிகளால் செய்யப்படுகிறது.
- ☐ அகதிகள் வெளியில் சென்று உழைப்பில் ஈடுபட்டுவந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. முகாமுக்கு வெளியில் இருக்கும் நேர அளவு நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் தூர இடங்களுக்கு சென்று வேலை செய்யமுடியாதுள்ளது. இரவு நேரவேலைக்கும் வழியில்லாமல் போய்விட்டது.
- ☐ அகதிகள் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. வெளியில் செல்வதற்கான அனுமதி பெற அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் இலஞ்சம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.
- ☐ எதுவித விசாரணை, முன்னறிவித்தல், உறுதிப்படுத்தல்கள் இன்றி திடீர்கைதுகள் பொலிசு நிலையத்தில் அடைப்பதும், சிறப்பு முகாம்களுக்கு மாற்றிக் கொள்வதும் கேட்டுக் கேள்வியின்றி நடக்கிறது.
- ☐ மிக அடிப்படையான மருத்துவ வசதிகள், உதவிகள் கொடுக்கப்படுவதில்லை. முகாமுக்கு அனுமதிக்கப்படும் கொஞ்ச நஞ்ச பொருள்களும் 'இடையில் பறிக்கும் பிசாசுகளின்' கைகளில் போய்விடுகிறது.
- ☐ அகதிகளின் குடிசைகள் பழுதுபார்த்துக் கொடுக்கப்படுவதில்லை, இயற்கை சூழலுக்கு இசைவற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன. தீக்கிரையான ஆத்தூர் முகாமை திருத்திகொடுக்க அதிகாரிகள் மறுக்கிறார்கள். முகாம்களில் மலசலக்கூட வசதி இல்லை. இதனால் நோய்த்தொற்று கடுமையாகவுள்ளது.
- ☐ கல்வி, சுகாதாரம் போன்றவற்றில், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் செய்த அனைத்து வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ☐ உள்ளூர் பொலிசார், முகாம் பொலிசார், உளவுப் பிரிவினர் இவர்களின் கையூட்டு தொந்தரவுக்கு எல்லையில்லை. மறுத்தால் புலிகளுடன் தொடர்புபடுத்தி விடுவர். சிறப்பு முகாமுக்கு அனுப்பிவிடுவர். சில இடங்களில் பொலிசு நிலைய வளாகம் சுத்திகரிக்க கட்டாயப்படுததி அகதிகள் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். பாலியல் பலாத்காரத்துக்கான நிர்ப்பந்தங்கள் இளம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படுத்தப்படுகிறது.
- ☐ இலங்கையில், உள்ள உண்மைநிலவரத்தை அறியவிடாது தடுக்கப்படுவதும் அதற்குத் தேவையான பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெறுகின்ற, படிக்கின்ற உரிமை இல்லை. ஏன் மற்றய முகாம்களில் என்னநடக்கின்றது என்பது கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை.
- ☐ பெரிய புலியூர், சொக்கரம்மன்நகர், தாப்பாத்தி, காளீஸ்வர நகர், பரமத்தி, பூலுவப்பட்டி, அவிநாசி, ஆழிரியார் நகர், குறிஞ்சிப்பாடி முகாம்களில் தமிழ்நாடு மறுவாழ்விப்பு அதிகாரிகள் நேரடியாக அகதிகளை திரும்பிச்செல்ல சம்மதக்கும்மாறு வற்புறுத் துகிறார்கள்.

www.padippakam.com

□ புரட்டாதி 9ஆம் தேதிக்கு முன் பணஉதவி பொருளுதவி நிறுத்தப்படும், முகாம்கள மூடப்படும் எனவும் நாடு திரும்ப சம்மதிக்காதவர்கள் சிறப்பு முகாமுக்கு மாற்றப் படுவார்கள் எனக்கூறி நேரடியாக பயமுறுத்தத்தப்படுகிறார்கள்.

அமெரிக்கா தலைமையில் பாலஸ்தீன இயக்கமும்-இசுரேல் அரசும் செய்த பாலஸ்தீன மக்களை ஏமாற்றும் ஒப்பந்தத்தை எதிர்த்து ஜோர்டான் நாட்டிலுள்ள "வக்காமில் பாலஸ்தீன அகதிமுகாமில்" 15000 பாலஸ்தீன அகதிமக்கள் ஒப்பந்தத்தை நிராகரித்து கிளர்ச்சி நடத்தியிருக்கிறார்கள். தமிழீழ அகதிகள் எந்த நாட்டு முகாமில்? எப்போது? எதற்காக? ஏது செய்வர்? □□

---

சிறகு விரித்து
விதையொன்று அலையும்
முளைக்க ஒரு பிடி
மண் தேடி

—இன்குலாப்

---

## ஓர் அகதிக் கவிஞன் நிலாவைப் பார்த்து...

நிலாவே! இன்று நான்
பாடல் எழுதமாட்டேன்
—
ஒரு தற்காலிக வீட்டில்
சொந்தமாய் வாசலில்லை.
உரிமையோடு பூப்பறித்து முகர
ஒரு மரமில்லை.
நீகூட எனக்கு ஓர் அந்நிய நிலவுதான்.
எனது வாசலில் விழுகின்ற உன்னுடைய
வெளிச்சமும்
இந்த அந்நிய வாசல் ஒளியும்
எனக்குள்ளே பேதத்தைக் கிளப்பி
மனநிலையைக் கெடுக்கிறது.
நான் மூன்று தினங்களாய் அகதி.
இந்த உயிரையும், அதுக்குள்ளே ஊறுகின்ற
கவிதையையும்
காப்பாற்றி வெற்றி கண்ட ஒருவன்.
என் வீட்டைப் பார்த்தவர்கள்
கூறுகிறார்கள்
அது மூக்குடைந்து விட்டதாய்
நான் நேசித்து வளர்த்த பூ மரங்கள்
எல்லாம்
மாட்டின் மலக் குடலில்
தங்கிப் பின்னர் வெளியேறி விட்டதென்றும்
அறிகிறேன்.
இங்கே—
சொந்த வானமில்லை.
நான் சுவாசிக்கின்ற காற்றுக்கூட
இன்னொரு வீட்டாரின் உடைமைபோல்
இருக்கிறது.
எப்படிப் பாடல் எழுதுவேன் நிலவே?
தொண்ணூறாயிரம் வெள்ளிகளையும்,
உன்னையும், வானத்தையும்
தொலைத்த நிலையில்,
என் வண்ணத்துப் பூச்சியையும்
கட்டிலின் இடவில் வாழ்ந்த பல்லியையும்
இழந்த நிலையில்?
நீ மேகத்தை எடுத்து முகத்தை மூடிக்கொள்.
கவிஞன் பெருமூச்சு விட்டால்
குளிர் தென்றலும் கருகும்.

சோலைக்கிளி
(கல்முனை, மட்டக்களப்பு)



படிப்பகம்

www.padippakam.com

# சிறப்பு (சித்தரவதை) முகாம்கள்

—தமிழரசன்

ஐரோப்பிய நாடுகளில் அனுமதிக்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு உதவிகள் வழங்குவதுடன், காலப் போக்கில் குடியுரிமையும் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அனுமதிக்கப்பட்ட அகதிகளின் நிலையோ மிகமிக மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது. வழங்கப்படும் உதவிகளோ மிகவும் குறைவு. அது கூட ஒழுங்காக அகதிகளின் கைக்குச் சேராமல் இடையில் வழங்கல் அதிகாரிகளினால் கொள்ளையடிக்கப்படுகிறது. இது குறித்து தனது அதிர்ப்தியைத் தெரிவித்த அய்.நா அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனம், தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்வதாகக் கூறியது. இந்திய அரசு அதற்கு மறுப்புரை கூறிவிட்டது. ஆனால் அகதிகளை இங்கிருந்து பலிக்கடாவாகத் திருப்பி அனுப்புவதிலேயே மத்திய/மாநில அரசுகள் குறியாக இருக்கின்றன. இந்திய, தமிழ்நாடு, அரசுகள் ஈழஅகதிகளுக்கு அகதி என்ற அந்தஸ்து கொடுக்கவில்லை. ஏனெனில் அகதி அந்தஸ்து கொடுத்தால் சர்வதேச அகதி சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்என்பதால் அவ்வாறு செய்யாதுள்ளன.

''தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைகளுக்கு அகதிகளாக தங்கியிருக்கும் ஈழத்தமிழர்களே காரணம்; எனவே அகதிகள் யாவரும் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்'' என்று தமிழக முதல்வர் சட்டசபையில் பொறுப்பற்ற முறையில் பேசியதையடுத்து இன்று ஈழத் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய/மாநில அரசுகள் கமக்கிடையேயான மோதல்களில் ஈழத்தமிழ் அகதிகள் பிரச்சனையை சுயநல அரசியல் நோக்கில் அணுகுவது இவ்அகதிகளின் நிலமையை மேலும் மேலும் மோசமாக்குவதாவே அமைகின்றது. ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உலகின் பல நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால் தமிழக அரசைத் தவிர வேறு எந்தவொரு அரசும் இதுவரை ஈழத் தமிழ் அகதிகளை குற்றவாளிகளாகவோ அல்லது பயங்கரவாதிகளாகவோ சித்தரிக்கவில்லை. அதுமட்டுமல்ல, திரும்பிச் செல்லும்படி வற்புறுத்தவுமில்லை.

ஆனால் தமிழக அரசு மட்டும் அனைத்து அகதிகளையும் பயங்கரவாதிகளாகக் காட்டும் சுபாவம் தொடர்கிறது. ஒரு சில அகதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். அவர்கள் சட்டப்படித் தண்டிப்படுவதை யாரும் குறை கூறவில்லை. ஆனால அதைவிடுத்து ஒருசிலர் செய்வதை அனைத்து அகதிகளும் செய்வதாகவும், பயங்கரவாதிகளாக சித்திரிப்பது. தவறாகும். இவ்வாறு சித்திரித்து அதன் மூலம் அனைத்து அகதிகளும் வெளியேறும்படி நிர்ப்பந்திப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை.

தமிழக முதல்வரின் பொறுப்பற்ற பேச்சு, தமிழகப் பொலிகாரரின் அராஜகத்தை ஊக்கப்படுத்துவதாகவே உள்ளது மாதக் கடைசியில் வழக்கு எதுவுமே கிடைக்கவில்லையெனில் உயர் அதிகாரிகளுக்கு கணக்கு காட்டுவதற்காக அருகில் இருக்கும் அகதிமுகாமில் இருந்து அப்பாவி அகதிகளைப் பிடித்துச் சென்று பொய் வழக்குப் போடுவதை தமிழகப் பொலிகாரர்கள் ஒரு வாழ்க்கையாகவே கொண்டுள்ளனர். இதனால் மாதக்கடைசியென்றால் தமிழகத்தின் முகாம்களிலுள்ள அகதிகள் வெளியில் வருவதற்கே அஞ்சுகின்றனர். அதுமட்டுமல்ல முகாமில் காவல்புரியும் பொலிசார் தமது இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அகதிப்பெண்களைப் பாலியல் நடவடிக்கைகளுக்கு கட்டாயப் படுத்துகின்றனர். அகதிப் பெண்ணை யார் அனுபவிப்பது என்ற மோதலில் ஒரு பொலிஸால் ஒரு ஏட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் யாவரும் அறிந்ததே மதுரைமுகாமில் நடைபெற்ற இச்சம்பவம் அனைத்து முகாம்களுக்கு ஒரு உதாரணமாகும். நான்கு வருடங்களாக பதிவு செய்யப்பட்டு முகாமில் தங்கியுள்ளவர்களைக் கூட ''பாஸ்போர்ட்'' வழக்குத் தொடுத்து சிறையில் போடுகின்றனர். இது கூட பரவாயில்லை யென்றால் இதைவிட மோசம் என்னவெனில் ஒரே நபருக்கு பல முறை ''பாஸ்போர்ட் கேஸ்'' போடப்பட்டுள்ளது. இதனை அவதானித்த நீதிபதி பொலிஸாரை எச்சரித்தும் கூட இவ்வா



படிப்பகம்

www.padippakam.com

றான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பஸ் கொள்ளை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட ஷோபன் என்ற அகதிக்கு 21.03.94 அன்று நீதிமன்றத்தில் ஜாமின் வழங்கப்பட்டது. ஜாமின் வழங்கப்பட்டும் அவரை விடுதலை செய்யாமல் சிறை நிர்வாக பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்ட இவ்வகதி அடுத்த நாளே கஞ்சா ''கேஸ்'' போடப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து இப்பகுதி நீதிபதி மற்றும் உயர் அதிகாரிகள் அனைவருக்கும் மனு கொடுத்தும் இதுவரை எவ்வித பலனுமின்றி சிறையில் வாழ்கிறார்.

வேலூர் சிறப்புமுகாமில் ஹைதர் மகாலில் காவலுக்கு நின்ற ஒரு பொலிஸ் அங்கு அடைத்துவைக்கப்பட்ட ஒரு அகதிப் பெண்ணை பாலியல் நடவடிக்கைக்கு கட்டாயப் படுத்தினார். ஆனால் அப்பெண் அதற்கு இணங்காததால் அப்பெண்ணின் மீது கஞ்சாகேஸ் போடப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு பொய் கேஸ் போடப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதால், பயந்த அகதிப் பெண்கள் வேறுவழியின்றி காம இச்சைக்கு உடன்படுகின்றனர் (10.6.92 இல் இச்சம்பவம் நடைபெற்றது)

மணப்பாறை என்னுமிடத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த இளம்பெண் ஒருவரை அம்முகாம் பொறுப்பதிகாரியான தாசில்தார் அடிக்கடி அழைத்துச் சென்று லாட்ஜில் தங்கி இன்பம் அனுபவிப்பதுண்டு. இவ்வாறு ஒரு அதிகாரி ஒரு அகதிப் பெண்ணுடன் தகாத உறவு கொள்ளவதைக் கண்டித்த 85வயது கந்தையா என்ற அகதியை புலி எனக் குற்றம் சுமத்தி சிறப்பு முகாமில் அடைத்துள்ளனர்.

பணம் பெற்றுக்கொண்டு சிலரை விடுதலை செய்வது, பணம் கொடுக்க முடியாத அப்பாவி அகதிகள் மீது பொய் வழக்குப் போடுவது- போலிஸாரின் இவ்வாறான அராகஜங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

ஈழத்தமிழர்கள் மீது தமிழக அரசினால் இழைக்கப்படும் கொடுமைகளில் மிகக் கொடுமையானதும் வெளி உலகிற்கு அதிகம் தெரியாததுமான இன்னொன்று 'சிறப்பு முகாம்' என்பதாகும். சிறப்புமுகாம் எனும் பெயரில் சிறையை விடகொடிய சித்திரவதை முகாம்களாக தமிழகத்தில் பல பகுதிகளில் உள்ளக் கிளைச்சிறைகளில் (Subjails) நூற்றுக்கான அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அடிப்படைவசதிகள் ஏதுமில்லாத நிலையில், மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வருடக்கணக்கில் எவ்வித விசாரணையுமின்றி இவ்அகதிகள் வைக்கப்பட்டிருப்பது சர்வாதிகாரி ஹிட்லரின் சித்திரவதை முகாம்களை நினைவூட்டுவதாக இருக்கிறது.

கலக்டரின் நிர்வாகத்தின் கீழ்தான் சிறப்பு முகாம் இருக்கும் என்று தெரிவித்தாலும், நடை முறையில் Q-Branch போலிசு அதிகாரிகளே சிறப்பு முகாம் பொறுப்பாளராக இருக்கின்றனர்; இதனால் இங்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்ல, மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது 1997ஆம் ஆண்டு வெளிநாட்டவர்க்கான சட்டப்படியே தமிழ் அகதிகள் சிறப்பு முகாம்களில் காவலில் வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு சட்டத்தைக் கண்டுபிடித்து தமிழ் அகதிகளை முதன்முதலில் சிறப்பு முகாமில் அடைத்த பெருமை கலைஞர் கருணாநிதி அவர்களையே சேரும். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அப்பாவி அகதிகளைப் பிடித்து சிறப்பு முகாமில் அடைத்துவிட்டு புலிகளை அடைத்துவிட்டேன் என்றுமத்தியஅரசுக்கு கணக்கு காட்டினார். அப்போது எதிர்க்கட்சியில் வீற்றிருந்த ஜெயலலிதா அவர்கள்''பிடிக்கப்பட்டவர்கள் புலிகளல்ல; அவர்கள் அப்பாவி அகதிகள், பதவிக்கு வந்தால் அவர்களை உடனடியாக விடுதலை செய்வேன்'' என்றார். ஆனால் பதவிக்கு வந்து இவர்களை விடுதலை செய்திருந்தாலும் பரவாயில்லை. தமிழ்நாட்டில் மேலும் பல சிறப்பு முகாம்களைத் திறந்து அதில் நூற்றுக்கணக்கான அகதிகளை அடைத்து, ஈழத்தமிழ் அகதிகளைக் கொடுமைப் படுத்துவதில் கலைஞர் கருணாநிதிக்கு தானும் சளைத்தவர் அல்ல என்பதை காட்டியிருக்கின்றார்.

சிறப்பு முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் அகதிகள் எவ்வளவு கொடுமையை அனுபவிக்கின்றனர் என்பதை விளக்க சில உதாரணங்களைக் கீழே குறிப்பிட விரும்புகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

1) விசாரணைக் கைதிகளைக் கூட நீண்ட நாட்கள் அடைத்து வைக்கக் கூடாது எனக்கூறப்படும் கிளைச்சிறைச்சாலை களிலேயே வருடக்கணக்காக சிறப்பு முகாம் எனும் பெயரில் தமிழ்அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவற்றில் நடமாடக் கூட வசதிகள் இல்லை. இந்நிலையில் நூற்றுக்கணக்கானவர்கள் நீண்ட நாட்கள் எப்படித் தங்கியிருக்க முடியும்?

2) பல சிறப்பு முகாம்களில் பாதுகாப்பைக் காரணங்காட்டி 24 மணிநேரமும் அறை களிலேயே (Cell) அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். அச்சிறிய அறைக்குள் ளேயே உண்ணவேண்டும், காற் றோட்டமற்ற சுகாதாரமற்ற அச்சிறிய அறைகளில் எவ்வித பொழுது போக்கு மின்றி தனிமையில் வைக்கப்பட்டிருப் பதால் அகதிகளுக்கு மனநோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

3) தமக்கிழைக்கப்பட்டிருக்கும் கொடுமை கள் குறித்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட அகதிகள் எவ்வளவோ மனுக்கள் அனுப்பியும் போராட்டங்கள் நடத்தியும் இதுவரை எவ்விதபயனும் கிடைக்கவில்லை. விரக்தியடைந்த அகதிகள் சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபட்டுள்ளதாக அறியவருகிறது.

4) சிறப்பு முகாமில் ஒரு அகதிக்கு 5 ரூபாய் வீதம் பணம் வழங்கப்படுகிறது, இதில் அரிசியைத் தவிர வேறு எந்தப் பொருளும் ரேசனில் கொடுப்பதில்லை. சமையலுக்கு விறகு மட்டுமே அனுமதிக் கப் படுகிறது. ஒரு கட்டு விறகே 3ரூபாய் விற்கும் போது 5 ரூபாவால் அனைத்துப் பொருட்களும் வாங்கி எப்படிச் சமாளிக்க முடியும்? இதனைச் சுட்டிக் காட்டி பணத்தைக் கூட்டிக் கொடுங்கள் அல்லது ஏதாவது வேலை வழங்குங்கள் அல்லது வெளியில் இருக்கும் உறவினர் களுடன் தொடர்பு கொண்டு உதவி பெற அனுமதியுங்கள் என சம்பந்தப் பட்ட ஈழஅகதிகள் கோரிக்கை வைத் தனர். ஆனால் இவை எதையுமே அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் விரக்தியடைந்து வேறு வழியின்றி தங்க வேலாயுதம் என்ற அகதியும் அவரது மனைவியும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இச்சம்பவம் 10.4.93 அன்று வேலூர் சிறப்பு முகாமில் நடை பெற்றது. தற்கொலை முயற்சியில் ஈடு பட்டவர்களுக்கு மருத்துவ மனையில் சிகிச்சையளித்த பின்பும், அரசு இரக்கம் கொள்ளவில்லை. ஆனால் வைத்தியம் பார்த்த மருத்துவ அதிகாரி இவர்களின் சோகக் கதையைக் கேட்டு இரக்கம் கொண்டு மனிதாபிமான ரீதியில் சிறு உதவிகளைச் செய்துள்ளார்.

5) சிறப்பு முகாம்களின் உள்ளே வைத்திய வசதிகள் எதுவுமே கிடையாது. யாருக் காவது உடல் நிலை சரியில்லையின். தாசில்தார் தொடக்கம் Q-Branch அதிகாரிகளுக்கு மனுக்கொடுத்து அனும திப்பெற்றால் போலிஸ் காவலுடன் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். யாருக்காவது இரவிலோ அல்லது திடீரெனவோ ஆபத் தான நிலை ஏற்பட்டால் உடன் மருத் துவமனைக்கு அழைத்துச் செல்லப்படு வதற்கு எந்த வழியும் கிடையாது. இதனால் சிறப்பு முகாமில் ஒரு சிறு குழந்தை இறக்க வேண்டி நேரிட் டுள்ளது. இன்னும் எத்தனையோ... இதன் பின்னருங்கூட அரசு எவ்வித முன்னேற்பாடும் செய்யாதது ஆச்சரிய மாக உள்ளது. அத்துடன் தனியார் மருத் துவ மனைகளில் சிகிச்சை பெறவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

6) சிறப்பு முகாம்களில் பொழுது போக்கு வசதிகிடையாது. அத்துடன் வெளித் தொடர்புகளும்துண்டிக்கப்பட்டுள்ளன. பத்திரிகை, T.V, ரேடியோ, எதுவுமே கிடையாது. அகதிகள் யாராவது தமது சொந்த செலவில் இவற்றை வாங்க விரும்பினாலும் அதற்கு அனுமதி மறுக் கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களைப் பார்வையிட நெருங்கிய உறவினர் களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படு கிறது. வேறு எவரும் பார்வையிட அனுமதியில்லை. நெருங்கிய உறவினர் களும் இவர்களைப் பார்வையிடுவதற் காக தமது படம் ஒட்டித் தாசில்தார் மற்றும் Q Branch அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். அப்போது அந்த நெருங்கிய உறவினர்கள் மீது அதிகாரிகள் நீண்ட விசாரணை நடத்து வர். இத்தகைய கெடுபிடிகளினால் ஒரு முறை பார்க்க வந்தவர் அடுத்தமுறை வருவதற்கு அஞ்சும் நிலை ஏற்படுகிறது. சிறைச்சாலைகளில் கூடவழக்கில் கைது செய்யப்பட்டவர்களை யாரும் பார்க் கலாம் என்று உயர் நீதிமன்றம்உத்தர விட்டிருக்கும் போது, சிறப்பு முகாம்



படிப்பகம்

www.padippakam.com

களில் இவ்வாறு கடுமையான சட்டங்களை கடைப்பிடிப்பது எந்த விதத்தில் நியாயம் என்று புரிந்து கொள்ள முடிய வில்லை.

7) இவ்வாறான அடக்கு முறையினால் விரக்தியடைந்த அகதிகள் தங்களைத் திருப்பி நாட்டிற்கே அனுப்பி வைக்கும் படி கேட்டுள்ளனர். இன்னும் சிலர் தமது சொந்த செலவிலேயே நாடு திரும்ப தயாராக இருப்பதாகவும் அதற்கு அனுமதியளிக்கும்படியும் தமிழக அரசைக் கேட்டுள்ளனர். ஆனால் அரசு அவை எதற்கும் இணங்கவில்லை. அதே வேளை சிறப்பு முகாமில் உள்ள சில அகதிகள் மீது வழக்குகள் உள்ளன. இவர்களை நீதிமன்றம் ஜாமினில் விடுதலை செய்தும் வெளியில் விடாமல் கொண்டுவநது சிறப்பு முகாம்களிலேயே வைத்துள்ளனர். இவர்களை வழக்கு வாய்தாக்களுக்கு, நீதி மன்றத்திற்கு அனுப்புவதில்லை. இதனால் இவர்கள் மீது ''வாரண்ட்'' பிறப்பிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கும் நிலை ஏற்படுகிறது. அதிகாரிகளின் இத்தவறினால் இவ் அகதிகள் சிறையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கொடைக்கானல் ''T.V. டவர்'' வெடிகுண்டு வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட பாலசந்திரன் என்பவருக்கு 20.6.92 அன்று உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியது. ஆனால் அரசு அவரை விடுதலை செய்யாமல் வேலூர் சிறப்பு முகாமில் காவலில் வைத்துள்ளது. அங்கிருந்து அவர் கொடைக்கானல் நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு அனுப்பப்படாததால் நீதிமன்றம் இவருக்கு ''வாரண்ட்'' பிறப்பித்ததை அடுத்து இவரை மீண்டும் மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இவ்வாறு அடைக்கப்பட்டது தவறு என்று சிறப்பு முகாமுக்குத் திருப்பி அனுப்பும்படியும் உயர்நீதி மன்றம் 6-11-93 அன்று உத்தரவு இட்டும் அவ்வுத்தரவு இன்னும் நிறைவேற்றப் படாமல் வைக்கப்பட்டுள்ளது.

8) சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் குடும்பத்தவர்களை பிரித்தே அடைத்து வைத்திருக்கின்றனர். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவதற்கு 15 நாட்களுக்கு ஒரு முறையே அனுமதி வழங்கப்படுகிறது. வேலூர் சிறப்பு முகாமில் அவ்வாறு பிரித்துவைக்கப்பட்ட 8 குடும்பங்கள் தங்களை ஒன்றாக வைக்கும்படி கூறி சாகும்வரை உண்ணா விரதம் மேற்கொண்டும் அவர்களின் கோரிக்கையை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை.

பொதுவாக சிறைச்சாலைகளிலேயே கொடுமைகள் நிகழ்வதாகவும் வசதிக் குறைபாடுகள் இருப்பதாகவும் அறியப்படுவதுண்டு. ஆனால் சிறப்பு முகாம் என்னும் பெயரில் சிறையில் அளிக்கப்படும் வசதிகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் வசதிகள் கொடுமைப்படுத்துவதுவதற்காகவே இருக்கின்றது. சிறைச்சாலைகளில் உணவுடன், சோப்பு, எண்ணெய், சீயக்காய்த்தூள் தபால் கார்டு, உடை என்பன வழங்கப்படுகின்றன. அத்துடன் பத்திரிகை, சஞ்சிகை, ரேடியோ, T.V. சினிமா வசதிகளும் உண்டு. மேலும் முடிவெட்ட, துணி துவைத்து தேய்க்க டீ குடிக்க, கேன்டீன் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல வாரம் ஒரு தடவை உயர் அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், பாாவையிட்டு குறை தீர்க்கும் முறை உண்டு. அதைவிட நியாயம் பெற இலவச சட்ட உதவியும் உண்டு. ஆனால் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கு வசதிகள் எதுவுமே வழங்கப்படாததுடன் இவற்றைத் தமது சொந்த செலவில் பெற்றுக் கொள்வதற்கும் அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வேதனை தரும் இந்நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இது குறித்து இவ்வப்பாவி அகதிகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க எதிர்க் கட்சிகளோ அல்லது மனித உரிமை அமைப்புகளோ இதுவரை முன்வாராதது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகவேயுள்ளது.

### சாதாரண முகாம்கள்

**உதவித் தொகை வழங்கல்**

1) இது வீட்டின் தலைவருக்கு ரூ 5ம் பிற உறுப்பினர்களுக்கு வயது எல்லைப்படி ரூ 4 தொடக்கம் ரூ 3 வரை குறைந்த வீதத்திலேயே உண்டு. அரசின் சலுகை மட்டும் 57 பைசா/1kg அரிசி விலையைப் பார்த்தால் அரிசியின் தரம் எவ்வளவு



படிப்பகம்

www.padippakam.com

கீழ்த்தன்மையுள்ளது என்பதை கூற வேண்டியது அவசியமில்லை. சுத்தமற்ற அரிசியும் ஆகும்.

இங்கு குறிப்பிட வேண்டியது என்னவென்றால் வழங்கப்படுகின்ற உதவித் தொகையும் சரி, அரிசியும் சரி, அதில் எந்த மாற்றமுமில்லாது வழங்குவதுதான் பெருங் கொடுமை. அகதியாக வரும்போது பதியப் பட்டப் பெயர் மற்றும் வயது இதில் வயது மட்டும் மாறாமல் தொடர்ந்து வருடங் களைக் கடந்து வருகிறது. அரிசி வழங்கும் ரேசன் அட்டையிலும் (Ration Card) உதவித்தொகை கொடுக்கும் பதிவு புத்தகத்திலும் வயதுகள் 4 வருடம் முடிகிற நிலையிலும் மாற்றப்படாமல் மக்களின் உதவித் தொகையும், ரேசன் அரிசியும் கொள்ளை அடிக்கப்பட்டே வருகிறது! மனுப் போட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டும் தங்களுக்கு மேலிடத்திலிருந்து ஆணை வரவில்லை என்று சாக்கு போக்கு செய்கின்றனர்.

மேலும் இன்றைய இந்திய நாட்டின் பொருட்களின் விலையேற்றப் எல்லாம் பேசுகிற ஒரு விடயமாகப் உள்ளது. ஈழ அகதிகளுக்கு தினம் கொடுக்கின்ற ரூபாய் ரூ 4, ரூ 5ஐ வைத்து வாழ்வை நடத்து என்று சொன்னால் நீங்களே சொல்லுங்கள் அவர்களால் வாழ முடியுமா?

2) சாதாரண முகாமில் மக்கள் முகாமை விட்டு வெளியே செல்வதானால் காலையில் 6 மணிக்கு மேல் முகாம் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டுவிட்டு மாலை 6 மணிக்குள் வந்து கையெழுத்து வைக்க வேண்டும். மறந்தால் கொடுக்கப்படும் உதவித்தொகையும் நிறுத்தப் படும். தொடர்ந்து எழுதாமல் சென்றால் காவல் துறையினராலும் Q-Branch துறையினராலும் பெருத்த பாதிப்புக்களை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். உதவித்தொகை வழங்கும் நாட்களில், யாரும் எங்கும் செல்லக் கூடாது. பிறந்த குழந்தை முதல் 90 வயது பாட்டிவரை நடந்து சென்று அதிகாரிகளுக்கு முகம் காட்ட வேண்டும். அதிகாரிகள் வயது போனவர்களை யாவது வீடுசென்று பார்ப்பார்களா என்றால் அதுவுமில்லை. உதவித் தொகை வழங்கப்படாத நாட்களிலும் இந்தத் தொல்லை தொடர்ந்து வருகிறதென்பது குறிப்பாகும். வருவாய் ஆய்வாளர் தொடக்கம் உயர் தாசில்தார் வரையும், காவல் போலிஸ் தொடக்கம் பெரிய உயர் அதிகாரிகள் வரை லஞ்சத்திற்கு கட்டுப்பட்டவர்களாக அகதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3) மேலும் இம் முகாம்களில் சுகாதார வசதிகள் பெரும் வேதனைக்குரிய தாகவே உள்ளது. ஈழ அகதிகள் முகாம் களில் கொலரா, மூளைக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களில் இறந்துள்ளனர். தமிழக அரசின் கிராமங்களிலும், நகரங்களிலும் தங்களுக்கு தடுப்பூசிபோட்டுக் கொள்கிறார்கள் அவர்கள் எல்லோரும் போட்டு முடியும் தருவாயில் எத்தனை பேர் இறந்தார்கள் என்று பதிவு எடுத்துக் கொண்டு தடுப்பூசி போட வருகிறார்கள். தடுப்பூசியானாலும் சரி, வேறு நோய்களுக்கு போடுகின்ற ஊசியானாலும் சரி ஒரே ஊசி மூலமும், கொதிக்காத நீரில் கழுவிய ஊசி மூலமே மருந்து ஏற்றப்படுகிறது. மேலும் சாதாரண முகாம்களில் வாழும் தொழிலாளர் அகதிகள் வறுமை மற்றும் பணம் இன்மை காரணங்களால் அரசு மருத்துவ மனையை விட்டால் அவர்கள் வாழ்வுக்கு வழியில்லை. மேலும் முகாம் சுற்றாடல் கழிவு நீர்களாலும் அழுகிய குப்பைகளாலும் நிரம்பி நோய்களின் உற்பத்திச் சாலைகளாக மாறிவருகின்றது.

4) அகதி மாணவர்கள் தங்கள் கல்வியின் பாதிப்புக்கள் கண்டு மனம் நொந்து நடமாடும் உருவங்களாக மாறி வருகின்றனர். முகாம்களை ஆளும் அரசும் ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு அடிக்கடி மாற்றுவதால் மாறும் இடத்திலிருந்து மாற்றப்படும் இடத்திற்கு பள்ளியின் நிர்வாகம் மாற்றுச் சான்றிதழ் கிடைக் காமல் பள்ளியில் சேர முடியாமல் தமிழக அரசு மாணவர்களைத் தண்டித்து வருகின்றது. அகதி மாணவர்களுக்கு ஆரம்பம் முதல் உயர்கல்விவரை வழங்கி வந்த சலுகைகள், ஆதரவுகள் (+2) பன்னிரண்டாம் வகுப்புடன் நிறுத் தப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேருவதற்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் தமிழ் நாட்டின் பள்ளி அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மைகளால் சேர்க்க முடியாமல் ஏங்கும் மாணவர்களின் பெற்றோர் நிலை மிகவும் பரிதாபமாக



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது. பெரும் பான்மையான தொழிலாள அகதிகளின் மாணவர்கள் பெரும் பணத் தட்டுப்பாட்டின் மத்தியில் படிக்க வைக்க முடியாமல் உள்ளனர். பள்ளியில் மாணவர்கள் கட்டும் தொகைக்கு பெற்றோர்கள் உழைக்கும் பணம் போதவில்லை. இதனால் பெரும் பான்மையான சிறுவயது மாணவர்கள் மதுக்கடைகளுக்கும் மற்றும் கடைகளுக்கும் குறைந்த கூலியில் வேலைக்குச் செல்கின்றனர். மிட்டாய் தின்னும் பருவத்தில், காலை யெழுந்து படிக்கும் வயதில், ஏன் உழைக்கிறோம் என்ற தெரியாத வயதில் கூலியின் மதிப்பு தெரியாத மயக்கத்தில் இவர்கள் வாழ்க்கை ஓட்டப்படுகிறது. தமிழக அரசின் லாட்டரி மயக்கத்தில் இருக்கும் பெற்றோர்களையும் அதை விற்றுக்கொண்டு திரிகின்ற எமது மாணவர் சிறுவர்களையும் பார்க்கும் போது மிகுந்த வேதனையாக உள்ளது. அரசின் இந்த அக்கறையற்றத் தனங்கள் ஈழ அகதி மாணவர்களை எந்த அளவு பாதித்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

மேலும் பன்னிரண்டாவது படித்த மாணவர்கள் உயர்கல்வி கற்க முடியாது தவிக்கின்றனர். பணம் இருந்தால் உயர்கல்வி இல்லையேல் பாதியிலேயே கண்ணைக் கட்டி காட்டில் விட்ட கதையாகவே உள்ளனர். கல்லூரிகளில் உதவிக்கரமின்றியிருக்கும் தொழிலாளர் மாணவர்கள் நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது சில மாணவர்கள் பணத்தை காட்டி உயர்கல்வி கற்றுவருகின்றனர். அவர்களுக்கு வெளி நாடுகளிலிருந்து வருகின்ற உறவினர்களின் பணமே வழிகாட்டியாக உள்ளது. இப்படி பார்க்கும் போது 1000 மாணவர்களுக்கு ஒரு மாணவன் மட்டுமே உயர்கல்வி கற்கக் கூடியதாக உள்ளது. ஈழத் தமிழர் கல்வி இங்கும் ஒடுக்கப்பட்டு வருகிறது. படிக்கும் மாணவர்களின் சதவிகிதமும் முகாமில் குறைந்த வண்ணமாகிக் கொண்டிருக்கிறது.

5) அகதி முகாம்களில் பெண்கள் பிரச்சனை மிகுந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆண் துணையின்றி வந்த பெண்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் கூலி வேலைக்கு செல்ல வேண்டியுள்ளது. அங்கு முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடிமையான கோலத்தோடு அவர்களின் இச்சைகளுக்கும், வக்கிரப் பார்வையின் பிடிக்குள்ளும் மாட்டித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத் தொழிலாளர்களுக்கும் ஈழத் தொழிலாளர்களுக்கும் கூலி வழங்கும் ஏற்றத்தாழ்வுகளில், தாழ்வில் ஈழத் தொழிலாளர்களே என்பது தெளிவான உண்மை. அதிலும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி வரலாறு அறிந்த காலந் தொட்டு குறைந்த வீதத்திலேயே வழங்கப்பட்டுவருகிறது அதில் ஈழத் தொழிலாள பெண்களும் விதிவிலக்கல்ல குறைந்த கூலியில் வாழ்வை ஓட்ட முடியாத நிலை. இந்த நிலையில் அவள் விபச்சாரத் தொழிலுக்குட்பட்டுவிடும் நிலை தோன்றியுள்ளது. பெண்ணின் இந்த நிலைப்பாடுகளால் மொத்த ஈழப் பெண்களும் சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பெண்கள் தங்களுடைய வாழ்வை ஓட்டுவதற்கு வேலைக்குச் சென்றால்தான் முடியும் என்பதால் குறைந்த கூலியிலும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளனர்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஈழப் பெண்ணின் கல்வி, பார்க்கும் பார்வைகளாலும் பேசும் வார்த்தைகளாலும் வாழ்வை, கல்வியைக் கட்டிப் போட்டுத் தொடர முடியாதுள்ளது. மேலும் முகாம் பெண்கள் இந்தியத் திரைப்படங்களாலும், சிறந்த வாழ்க்கை வழிகாட்டுதல்கள் இல்லாததாலும் இளம் வயதுகளிலேயே தாயார்களாக மாறிவிட்டுள்ளனர். இவர்களுடைய கல்வி மற்றும் சரியான தொழில் வழிகாட்டுதல்கள் இருப்பின் இப்பிரச்சனைகளை சந்தித்திருக்க மாட்டார்கள். தன்னையே அறிய முடியாத பருவத்தில் தன் குழந்தையை அதன் எதிர்காலததை எப்படி அந்தப் பெண்ணால் நிர்ணயிக்க முடியும்?

முகாம்களில் இருக்கும் காவல் துறை தொட்டு அரசு அனைத்து அதிகாரிகள் வரை அகதிப்பெண்கள் விபச்சாரத்திற்குட்படுகிறார்கள். எதிர்த்தால் அல்லது யாரேனும் மறுத்தால் அவளுடைய தந்தையானாலும் சரி, கணவன்ஆனாலும் சரி, அதை எதிர்த்த சமூக சேவகனாக இருந்தாலும் சரி சிறப்பு முகாமுக்குள் தண்டனையை வாழ்நாள் முழுக்க அனுபவிக்கும் சூழ்நிலை ஏற்படுத்தி விடுகின்றது. கற்புக்குக் கறைபடக்கூடாத வரலாறுகளை, அதையே பாடங்களாய்



படிப்பகம்

www.padippakam.com

சுமந்திருக்கும் தமிழ் நாட்டின் பெண்கள் பட்டுக் கொண்டிருக்கும் ரணங்களை எழுத்தில் கூறமுடியவில்லை.

6) அகதிகள் காவல்துறையினரோடு இருக்கும் முரண்பாடுகள் பற்றி தனியாக ஆராய வேண்டிய நிலைக்கு அகதிகள் இலக்காகியுள்ளனர். தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூக குற்றங்களுக்கு ஈழ அகதிகளே காரணம் என கூறிவிட்டிருக்கிறார். தமிழக காவல்துறையினரின் கற்பழிப்புத் தொட்டு கொள்ளை வரை பத்திரிகைகளும், பிற செய்தி அறிக்கைகளும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை யாரும் அறியாமலில்லை. காவல் துறை தொட்டு உயர் அதிகாரிகள் வரை அனுபவிக்கும் ஈழப்பெண்கள், இலஞ்சமாய் கறந்து கொண்டிருக்கும் கொள்ளைகள் என்று தொடர்ந்து கொண்டே போகலாம். ஆனால் தமிழ் நாட்டின் சீர்குலைவிற்கு ஈழத் தமிழர் காரணமாம். உடனே இலங்கை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமாம். கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் நடக்கும் போது மட்டும் ஈழஅகதிகள் இருப்பது தமிழக அரசுக்குத் தெரிகிறது. முகாம்களில் மக்களுக்குள் ஏற்படும் சில குடும்ப மற்றும் குடித்துவிட்டு ஏற்படும் அடிதடி சண்டைகள் வந்தால் போலீஸார் வாய்க்கு ருசி தான். அடிபடும் மக்களுக்கு தண்டனை வழங்குவதை விட்டு அவர்களிடம் லஞ்சங்களாய் ஒரு தொகைப் பெறப்பட்டு விடுகிறது. காசுகொடுக்க முடியாத வர்கள் படும் அவஸ்தைகள் சொல்லி முடியாது. ''கேஸ் கேஸ்'' என்று அவர்களை இழுத்தடித்து பாரிய தொகைகளைப்பெற்று விடுகிறது காவல் துறை. இந்த முகாம் சூழ் நிலை சம்பவங்கள் நடைபெறக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கச் செய்கிறது. அதற்கான தீர்வை சரியான முறையில் தீர்த்துவிடுவதில்லை.

மேலும் முகாமில் வாழும் அகதிகள் பொய்யான கேஸ்களில் தள்ளப்பட்டு வருடக்கணக்கில் சிறைவாசம் புரிகின்றார்கள். மாதக் கடைசியில் கேஸ் ஏது கிடைக்கவில்லையென்றால் அகதியில் யாரும் பிடிபட்டு உள்ளேதள்ளப்படுவர். இன்றைய இந்தியாவில் நடைபெறும் குற்றச் செயல்கள் எத்தனை எத்தனை. ஆனால் அவைகள் நீதிதேவனைப்போல் இவர்களுக்கும் கண்தெரிவதில்லை. மாதத்திற்காகவும், காவல்நிலையம் இருப்பதற்காகவும் கைதிகளாய் மக்கள் பிடிபடுகிறார்கள். இதில் தற்போதைய நடைமுறையில் ஈழத்தமிழர்கள் உள்ளனர். □

---

## உன்னை மறுப்பது....

—இன்குலாப்

துருவம் வரைக்கும்
உனது சிறகுகள்!
சொந்த மண்ணிலோ
சிதையும் கூடுகள்...
உறவுக் கிளைகளில்
நகங்கள் முளைத்ததால்
வானப்பரப்பிலோ
திசைகள் தொலைந்தன.
முடப்பட்ட கதவுகளுக்கு வெளியே
வாடிக்கிடக்கும்
அனிச்ச மலர்கள்!
மறுக்கும் கரைகளில்
அலைகளில் மிதக்கும்
அடைக்கலம் தேடும்
என்
குருதிக் கொடிகள்.
முடக்கப்பட்ட
உன்
முகாம்களில் கேட்டேன்.
துரத்தப்பட்ட
உன்
சுவடுகளில் உணர்ந்தேன்.
எனக்கும் வேர்விட
இடமில்லை என்பதை
என்சொல் பழகிய
செவிகள் கேட்கட்டும்
'உன்னை மறுப்பது
என்னை மறுப்பது'



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளித்துவச் சுரண்டலும் ஈழ அகதிகளும்

—ஜெயசக்தி

தமிழகத்தில் ஈழ அகதிகள் முகாம்கள் பெரிய பெரிய தொற்சாலைகளுக்குப் பக்கத்திலும், தொழில் விவசாயப் பகுதியிலும் இப்படி இன்னொரென்ன பாரிய தொழில் அமை விடங்களுக்குப் பக்கத்திலேயே நிறுவப் பட்டுள்ளன. இங்கு எம்மீழத் தமிழ்மக் களின் உடலும்இரத்தமும் வியர்வைகளாய்ச் சிந்திப்படுகிறது. கூலிமட்டும் பிச்சையா கவே அமைந்து விடுகிறது. எம்மீழத் தொழிலாளர்க்கும் இன்று உலகம் எங்கிலும் கூலி பிச்சையாக நிர்ணயிக்கப் ட்டுள் ளதோ?

முதலாளிகளின் திடீர் வளர்ச்சிக்கு இன்று ஈழத்தமிழர்கள் கிடைத்துள்ளார்கள். தமிழ கத்தில் தர்மபுரி மாவட்டம் சிப்கொட் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் விவசாயப் பகுதிகள், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களின் பாரிய நெசவுத் தொழில்கள், இதர தொழிற்சாலைகள், சேலம்மாவட்டம்கோழிப்பண்ணை தொழிற் சாலைகள், மற்றும் பண்ணைகள், தென்னந் தும்பு மற்றும் விவசாயநிலப் பகுதிகள், மதுரை மற்றும் இதர மாவட்டங்களின் கைத்தறி, பாரிய டெக்ஸ்டைல் தொழிற் சாலைகள், காஞ்சிப்பட்டு முதல் சிவாகாசி பட்டாசுத் தொழிற்சாலை வரை ஈழ தொழிலாளர் கரங்கள் தேய்ப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

நாளும் நாயாய், மாடாய் உழைத்து மனதில் ஒரு சில ஆசைகள் நிறைத்து மாய்கின்ற ஈழத்தொழிலார்களுக்கு மிச்சம் பிச்சை கூலி மட்டும் தான். அவர்கள் உவழப்பு பெரும் இலாபமீட்டும் முதலாளியத்தால் சுரண்டப் படுகிறது. இவர்கள் (ஈழத்தொழிலாளர்) நிலைமட்டும் சில ஆசைவைத்தும் அதுவும் நிறைவேறாது. தன் பாலகனுக்கு காக்கா காட்டித் தூங்க வைக்கும் நிலையில்தான் இவர்கள் வாழவேண்டிய நிலையா?

இப்படியான சூழ்நிலை ஏற்படுப்போது முதலாளி—தொழிலாளி என்ற முக்கிய பிரச்சனை எழுவதற்கு வாய்ப்புத் தோன்றும் என்பதை முதலாளிய அரசு நினைக்காமலா இருக்கும்?

இதற்காக அரசு அகதிகளை கண்காணிக்கும் அரசு அதிகாரிகளுக்கும், அகதிகளுக்கு மிடையே முரண்பாடுகளை உருவாக்குகிறது ''யாரும் வேலைக்கு செல்லக் கூடாது'' இது அரசின் ஆணை என அதிகாரிகள் ஈழத் தமிழர்களிடம் சொல்வதும், அதேசமயம் வேலைக்கு செல்ல பொருளாதார நெருக்கு தல் கொடுதது வேலைக்கு விடுவதும் அரசின் இன்றைய திட்டமாகும். இங்கு தொழிலாளர் களுக்கும் அரசின் அதிகாரிகளுக்குமிடையே உள்முரண்பாடுகள் முக்கியத்துவம் பெறு வதால், முதலாளி—தொழிலாளி முரண்பாடு பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

ஆக, தமிழகத்தில் ஈழ அகதிகள் உண்மை யான முரண்பாட்டைப்பற்றி தெளிவு பெறு தல் மிக அவசியம் அதன் அடிப்படையில் புதிய பாதையை அமைத்துக் கொள்ள வேண்டும். உழைக்கும் மக்களின் கரங்களால் மட்டுமே இப்புதிய பாதையில் வெற்றி கண்டு விடுதலை பெறமுடியும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். □



படிப்பகம்

www.padippakam.com

# தொண்டு நிறுவனங்களும் மறுவாழ்வுப் பணிகளும்

—P. தேவதாஸ்

அகதிகள் என்ற பதம் இன்று எவ்வித காரணமுமின்றி வாயில் உச்சரித்தாலே பெரும அபத்தம் என்றாகிவிட்டது. அகதிகள் என்றால் அர்த்தம்தான் என்ன? ஒரு நாட்டின் வன்முறைப் பாதிப்புக்களால் அல்லது அரசு ஒடுக்கு முறைகளால் தாங்க முடியாமல் உயிர் பாதுகாப்புத் தேடி அணடைய நாட்டில் தஞ்சம் புகுபவர்களே அகதிகள். அவ்வாறு தஞ்சம் புகும் அகதிகளுக்கு அநத நாட்டின் குடிமகனுக்கு (அரசியல் அல்லாத) உள்ள உரிமைகள் போல் வழங்க வேணடும். அதுதான் மாநத நேயக் கோட்பாடாகும். ஏனைய நாடுகளில் எல்லாம் அவ்வாறுதான் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில் குறிப்பாக தமிழ் நாட்டில் ஜீம் மாதிரியான மனித நேயம் எல்லால என்னவிலை, அப்படி ஒன்று உலகில் உண்டா? என ஆளும் கட்சியினரும், அரசியல் வாதிகளும் கேட்பார்கள். கடந்த காலங்களில் அவரவர்களின் அரசியல் நிலைபாடுகளுக்கு ஏற்ப ஈழப்பிரச்சினையை கையாண்ட விதத்தில் இருந்து நாம் அப்படித் தான் நினைப்பில் கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக தமிழ் நாட்டில் அகதிகள் என்ற பதம் 1964ம் ஆண்டு - சம்பந்தப்பட்ட மக்களைக் கூட கேடகாமல் இலங்கை இந்திய நாட்டு தலைவர்கள் இருவரும் தங்கள் அரசியல நலன் கருதி செய்துக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் (சுமார் 5 லட்சம் பேர்கள் இன்று இயற்கை அதிகரிப்புடன் 20 லட்சம் பேர்கள்) நாடு திரும்பியவர்களுக்கு இங்குள்ள தமிழக அரசும் அரசுத்துறை நிறுவனங்களும் பெயரிட்டு அழைத்து வந்தன.

ஒரு சில இடங்களில் நிலங்களை பிரிப்பது, ஆடு மாடுகள் பிரித்துக் கொடுப்பது வீடுகளை பிரித்துக் கொடுப்பது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதை நாம் பார்க்க முடியும். ஆனால் மனிதர்களை பிரித்து நாடு கடத்திய வரலாறு வேறு எந்த நாட்டிலும் நடைபெறாத ஒரு கொடூரமான அரசியல் நாடகமாகும். அன்று முதல் அகதிகள் என அழைக்கப்பட்டு வந்த இந்த மக்கள் இன்று வரை அகதிகளாகவே அனாதைகளாக்கப் பட்டு, அலைக்கழிக்கப்பட்டு, இருக்க வீடு இல்லாமலும் பிழைக்க வேலை இல்லாமலும் சிலோன் காரன் என்ற பட்டத்துடன் உலவி வருகின்ற காட்சி மிக வேதனை அளிக்கும் ஒன்றாகும். இது குறித்து இங்குள்ள எந்த இடது சாரி அமைப்புகளும், அரசியல் வாதிகளும், கவனத்தில் கொள்வதில்லை. காரணம் இவர்களை வைத்து அரசியல் நடத்த முடியாத நிலை. இவர்களுக்கும் 1983க்குப் பிறகு வந்த அகதிகளுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அதே வேளையில் 1983க்குப் பிறகு இவர்களுக்கு அகதிகள் என்ற பதம் நழுவி தாயகம் திரும்பியோர்கள் அல்லது குடிபெயர்ந்தோர்கள் என்ற பதத்தில் இன்று வரை அழைக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கும் அகதிகளுககு உள்ள வேறுபாடுகளை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

1) இவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறத் தேவையில்லை.

2) அகதிகள் முகாம்களில் வாழ வேண்டியதில்லை.

3) இவர்களுக்கு இந்த நாட்டின் ஏனைய குடிமக்களைப் போல் பணம் இருந்தால் எல்லாம் வாங்கவும் வாக்கு செலுத்தவும் உரிமை உண்டு.

4) அகதிகளுக்கு வழங்கப்படும் சில விசேட சலுகைகள் இவர்களுக்கு கிடையாது.

5) ஒரு வருடத்தில் இருந்து மூன்று வருட காலங்களுக்குள் அரசினால் வழங்கப்படும் சலுகை எல்லாம் பெற்று விட வேண்டும், இல்லைபோல் அந்த சலுகைகள் எழுத்து மூலம் பறிபோய் விடும்.

இவர்கள்தான் இலங்கையிலிருந்து வந்த மலைத் தமிழ் மக்கள். இவர்களைப்பற்றி நிறையவே எழுதலாம். ஆனால் நான் ஏற்றுக் கொண்ட விடயங்கள் ஈழ அகதிகளைப் பற்றியதால் அவர்களின் இடர்பாடுகளைப்பற்றி எழுதுவது தான் நலம் பயக்கும் எனவே 983க்குப் பிறகு இங்கு வந்து தஞ்சம் அடைந்த அகதிகளைப்பற்றி இனி பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

இங்கே ஒன்றை நாம் முக்கிய அம்சமாகக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தவர்களில் அதிகமானவர்கள் மீனவர்கள், கமக்காரர்கள், மற்றும் கடைநிலைத் தொழிலாளர்கள். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் எல்லாம் மேல் நாடுகளில் அகதிகளாகச்சென்று அங்கே பல்வேறு தொழில் செய்து வாழ்ந்து வருகிறார்கள். மற்றும் இங்கே உள்ள அரசியல் கட்சிகளும், ஏனையவர்களும் அகதிகள் வேறு, போராளிகள்வேறுஎனப்பகிர்ந்து பார்க்கத் தவறியமை அகதிப்பணிகளில் பெரிய தடைக் கல்லாக இருந்தது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

அகதிகள் உயிர்ப் பாதுகாப்புத் தேடி வந்தவர்கள். அவர்கள் மீண்டும் நாடு திரும்பும் வரை நல்ல முறையில் பராமரித்து அந்த நாட்டில் பழைய சிதைந்துபோன தங்களின் வாழ்க்கை உறவு முறைகளை மேம்படுத்துவதை தமிழ் நெஞ்சங்களும், ஏன் மனித நேயம் கொண்டவர்களும் தன் கடமையாகக் கொள்ளவேண்டும்.

**ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும் அதன் பணிகளும்.**

இப்பொழுது அகதிகள் பணிகளை மேற்கொள்ளவும், அவர்களுக்கு உதவவும் எந்த நிறுவனங்களும் முன் வராத நிலையில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் தொடர்ந்து கடந்த 10 ஆண்டுகளாக அப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. எவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அந்த நிறுவனம் மாவட்ட வாரியாக தொண்டர்களை நியமித்து, மண்டல வாரியாக கிளை அலுவலகங்களைத் திறந்து தனது சேவைகளை செப்பனிட்டு வருகிறது. தற்போது 120முகாம்களில் உள்ள சுமார் 76000 அகதிகளுக்கும் வெளியே தங்கியுள்ளவர்களுக்கும் பல்வேறு பணிகளை செய்து வருகின்றது. அரசுத்துறைகளானாலும் சரி, தொண்டு நிறுவனங்களானாலும் சரி திரு சந்திரகாசன் அவர்கள் தனது சாதுர்யத்தால் கணிசமான உதவிகள் பெற்று அகதிகளுக்கு வழங்கி வருகிறார்; இவர் இலங்கையில் ஒரு புகழ் பெற்ற சட்டத்தரணியும் கூட. இவருடன் செல்வி சூரியகுமாரி இந்நிறுவனத்திற்கு செயலாளராக இரவு பகல் பாராது உழைத்து வருகின்றார். இவர்கள் வாழ்க்கையையே அகதிகளுக்கே அர்ப்பணித்தவர் என்பதை நாம் மறுக்க முடியாது.

**1) பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது**

இடத்திட்டத்தின் கீழ் அகதிகளாக வந்தவர்களை உறவினர்களை விட்டுப் பிரிந்து பல் வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். அவர்களை ஒன்று சேர்க்கும் முகமாக, தொண்டர்கள் மூலம் பிரிந்து இருப்பவர்களின் விபரங்களைப் பெற்று, எந்த உறவினர்கள் யாரைத் தேடுகிறார்கள் அவர்கள் எங்கே தங்கியுள்ளார்கள், அவர்கள் இலங்கையில் இருந்த இடம் போன்ற விபரங்களைக் கொண்ட ஒரு சுற்றறிக்கை தயார் செய்து முகாம்களில் உள்ள அகதிகளுக்கு விநியோகம் செய்தார்கள். இதில் தேடக் கிடைக்காத உறவினர்கள், கணவன் மனைவிமார்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து தங்கள் மனக்குறைகளைப் பகிர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது. இத்திட்டத்தை ஆதரித்து இக்கழகத்தைப் பாராட்டி பலரும் கடிதம் எழுதினார்கள்.

**2) வருவாய் ஊக்குவிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் அகதிகள் தங்கள் நாளாந்த வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடனும் சுய வேலை வாய்ப்பு பெருக்கும் நோக்கத்துடனும் அகதிகளுக்கு தையல் இயந்திரம் வழங்குவது, துவிச்சக்கர வண்டிகள், கட்டிடம் கட்டும் உபகரணங்கள், தச்சுத் தொழில் உபகரணங்கள், ஓவியத்துறை உபகரணங்கள், பாய் பின்னும் உபகரணங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் திருத்த உபகரணங்கள், ரொட்டிக்கடை வைக்க உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

**3) பத்திரிகைகள் விநியோகத் திட்டம்**

முகாம்களில் வாழும் அகதிகள் நாளாந்த செய்திகளையும் வெளி உலக செய்திகளையும் அறிந்துக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு முகாம்களிலும் தினசரி செய்தித் தாள்கள், வாரப்பத்திரிக்கைகள், மாத வெளியீடுகள் தொண்டர்கள் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இக்கழகத் தொண்டர்கள் முகாம்களுக்கு அருகேயுள்ள பத்திரிகை முகவர்களிடம் மாதந்தோறும் பணத்தை செலுத்தி விடுவார்கள். முகவர்கள் தினசரி முகாம்களுக்கு பத்திரிக்கைகளை வழங்கி விடுவார்கள். இத்திட்டமும் அகதிகள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

**4) சத்துமா வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் முகாம்களில் வாழும் தாய்மார்கள், கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்கு சத்துமா ஊட்டச்சத்து உணவாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினை ஆய்வு செய்த அடிப்படையில் முகாம் களில் பிறக்கும் குழந்தைகள் மிகவும் தேக ஆரோக்கியம் குன்றி பிறப்பதை அவ



படிப்பகம்

www.padippakam.com

தானித்த இக்கழகம் வெளிநாட்டு உதவியுடன், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகளுச்கு சத்துமா வழங்குவதும் 2 முதல் 5வயது சிறார்களுக்கு கடலை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 3 வருடங்களாக நிறைவேற்றி வரும் இத்திட்டத்திற்கு தொண்டு நிறுவனங்கள் மற்றும் அகதிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**5) மருத்துவச் சேவை**

சென்னையில் உள்ள இக்கழகத்தின் தலைமை நிலையத்திலும், மண்டல அலுவலகங்களிலும் இ ல வ ச மருத்துவமனை தொடங்கி அகதிகளுக்கு மருத்துவ சேவை செய்து வருகின்றது மருத்துவ வசதி பெற முடியாத முகாம்களில் நல்ல திறமையான மருத்துவர்களைக் கொண்டு, மருந்துகளும் மருத்துவ ஆலோசனை களும் வழங்கப்பட்டு வருகின்றது. முகாம்களில் வாழும் அகதிகளுக்கு அவர்களிடையே படித்த இளைஞர் யுவதிகளுக்கு மருத்துவ பயிற்சி அளித்து அவர்களூடாக மருத்தவ சேவைகளை இக்கழகம் செய்து வருகின்றது. இத்திட்டத்திற்கு UNCHR, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இங்கிலாந்தில் உள்ள மியோட் இன்னும் பல்வேறு நாட்டு சுகாதார நிறுவனங்கள் இணைந்து செயல்பட தங்கள் ஆதரவினை நல்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

**தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழு**

பல்வேறு தொண்டு நிறுவனங்கள் இணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைக்க திரு சந்திரகாசன் அவர்கள் மிகவும் சிரமத்துடன் முயற்சிகள் மேற்கொண்டதின் பேரில் சென்னையில் ஒருங்கிணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கீழ்வரும் பிரச்சினைகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. அகதிகள் வெளியே சென்று வேலை செய்து வருவாய் பெருக்கிக் கொள்ள முடியாத நிலை.
2. பாடசாலை பிள்ளைகளுக்கான அனுமதி மறுப்பு.
3. தொண்டு நிறுவனங்கள் முகாம்களில் சேவை யாற்றிட தடை
4. அகதிகள் வெளியில் சென்றுவர அனுமதி மறுப்பு.

இந்த ஒருங்கிணைப்புக் குழு மூலம் அகதிகளுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை உலகளாவிய தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாக வெளிக்கொணரச் செய்து தீர்வு காண்பது அகதிகளுக்கு ஏனைய தொண்டு நிறுவனங்கள் என்னபணிகளை செய்கின்றன அப்பணிகளை எவ்வாறு முறைப்படுத்தி செய்ய முடியும் என்பதை ஆராய்வது, ஒவ்வொருபணிகளும் செய்து முடித்த பிறகு அப்பணிகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டன என்பதை ஏனைய தொண்டு நிறுவனங்கள் அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவது போன்ற அம்சங்களைக்கொண்டுசெயல்பட்டு வருகின்றது. இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் 14 தொண்டு நிறுவனங்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளன.

---

**மலர்க் குழுவினர் குறிப்பு :**

தொண்டு நிறுவனமொன்றில் பணியாற்றுபவரால் தனது அமைப்பு செய்யும் பணிகள் பற்றி உற்சாக மிகுதியால் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை, அத்தகைய நிறுவனங்களின் மூலம் முகாம்களில் உள்ள அகதிகளின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு விடுகின்றன என்ற அபிப்பிராயம் ஏற்படும் அபாயத்திற்கு நம்மை இட்டுச் செல்லக்கூடும். முகாம் அனுபவம் பெற்றவர்களால் எழுதப்பட்டுள்ள முதல் மூன்று கட்டுரைகளுடன் இணைத்தே இக்கட்டுரை படிக்கப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அகதிகள் - தமிழ் நாடு - எதிர்நிற்கும் படிப்பினைகள்

—முனைவர் அரு. கோபாலன்

பிரிட்டீஷ்[1] இந்தியாவின் முதலாவது தலைநகர் சென்னையாக இருந்த காரணத்தாலும், நாடு பிடிக்கும் நோக்கத்துடன் போட்டி போட்டுக் கொண்டுவநத ஆங்கிலேயரும், பிரஞ்சுக் காரர்களும் முதலில் காலுன்றியது தமிழ் நாடாக இருநதாலும் பிரிட்டீஷ்—பிரான்ஸ் ஏகாதிபததியங்களின் காலனிகள் உலகில் எங்கெங்கெலலாம் ஏற்பட்டனவோ அங்கங்கெல்லாம்,தமிழர்களை அவர்கள் தோட்டத் தொழிலுக்காகவும், சுரங்கத் தொழிலுக்காகவும் கூட்டிச் சென்றனர். நாடு பிடிக்கும் படையிலும் சேர்த்துக் களப்பலி கொடுத்தனர்.

ஆட்சி; மாற்றார் கையிலும், ஆலயங்கவ பாராமணர்கள் கையிலும், விளை நிலங்கள் வேற்று மொழியாளர்கள கையிலும் இருக்க, பெரும்பாலான தமிழர்கள் சொந்த நிலமோ, வீடோ, தொழிலோ இல்லாத கூலிகளாக—தாழ்த்தப்பட்டவர்களாக,ஒதுக்கப்பட்டவர்களாக தமிழ் நாட்டில் அலறிருந்த காரணத்தால், ஓட இடம் தேடிக் கொண்டிருந்த அவர்களுக்கு, ஐரோப்பியர்கள் 'புலம் பெயர்ந்தால புனர்வாழ்வுண்டு' என்று ஆசை காட்டியதும் கண்ணை மூடிக் கொண்டு கப்பலேறினா.

ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாடா? கரீபியன் கடலுக்கு அப்பாலா? எங்கு கூட்டிச் சென்றாலும் வரத்தயார். எந்தத் தொழில் என்றாலும் செய்யத் தயார். சொந்த மண்ணில் அந்நியப் படுத்தப்பட்டு, சுயமரியாதை இழந்து வாழ்வதை விட, அந்நிய மண்ணில் இழிவுக்காளாகாமல் வாழலாம் என்று மந்தை மந்தையாகப் புறப்பட்டனர். ஆம்; மேய்ப்பாளர்களைக் கொண்டு மந்தைகளை ஓட்டிச் செல்வதைப் போலத்தான் வெள்ளைக்காரர்கள் கங்காணிகளைக் கொண்டு தமிழ் நாட்டுக் கூலிகளை கடல் கடந்த நாடுகளுக்கு ஓட்டிச் சென்றனர்.

தென்னாப்பிரிக்கா, காங்கோ போன்ற ஆபபிரிக்க நாடுகள்' குயானா, சூரினாம் போன்ற தென்னகமரிக்க நாடுகள், பாபுவா நியூகினி போன்ற கரீபயன் கடல் தீவுகள், பீஜி போன்ற மேற்கத்தியத் தீவுகள், பர்மா (மியான்மர்), மலேசியா, சிங்கப்பூர்,இநதோசீனா, இந்தோனேசியா, இலஙகை போன்ற ஆசிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாநது பகுதிகளிலும் இப்படித்தான் தமிழர்கள் குடியேறறப் பட்டாாகள் அலலது குடியேறினாார்கள். (பாணடிய-சோழ-பலலவப்பேரரசுகளின் காலத்தில கறபறபடை மூலம்சென்றதும், வென்றதும், கொணடதும் வேறு வரலாறு.) மநதைகள் போனால் அவைகளை உறிஞ்சிக் கொழுக்க ஒட்டுண்ணிகளும் போகும் தானே! உழைக்கும் தமிழர்கள் இவ்விதம் போனதால, அவாகளை வைத்துப் பிழைக்கும் தமிழர்களும் பின்னால் போனார்கள். ஆனால், இநதிய விடுதலைப் போராட்டமும் முதல், இரணடாம உலகப் போர்களும் மேறகண்டவாறு பலவேறு நாடுகளில் காலூன்றிய தமிழாகளை மணடும் தாயகத்தை நாடி ஓடிவரசசெய்தன. கூலிகளாக இருநத தமிழாகள் இப்போது அகதிகளாகவும ஆனாாகள். ஆனால் தமிழகத்தில் தோன்றிய அரசியல் இயககங்கள் தமிழ் மக்களின் இந்த கூலி நிலை பறறியோ, அகதி நிலை பறறியோ கொஞ்சமும் கவலைப்படவில்லை.

பேராயக் (காங்கிரஸ்) கட்சியினர் ''இந்தியா விடுதலையடைந்தால- வெள்ளையர் வெளியேறினால் எல்லா இழிநிலையும் இல்லாதொழிந்து விடும்; பாலாறும் தேனாறும் பெருக்கெடுத்தோடும்'' என்று, இங்கு மட்டுமல்ல, கடல் கடந்த நாடுகளில இருந்தவர்களிடமும் கனவுக்கோட்டைகளை எழுப்பினர். இதனால தாங்கள் கட்டியெழுப்பிய நாடுகளிலேயே தங்களையும் கட்டியெழுப்பிக் கொளளும் கருத்துன்றி, ஒட்டி வேரோடி உரிமையாக்கிக் கொள்ளும் சுரத்தின்றி,



படிப்பகம்

www.padippakam.com

விட்டுவிட்டு ஓடிவரும் விதேசிகளாகி விட்டார்கள் அவர்கள்.

இந்திய சுதந்திரம் செந்தமிழ் மக்களை இப்படிப் பல நாடுகளில் வேரறுந்த சமுதாயம் ஆக்கிய வேதனையைச் சொன்ன திராவிட இயக்கத்தினரும் இன்னொரு கனவுக்கோட்டையைக் காட்டி அவர்களைப் பின்னும் வேரறுந்து போக வைத்தார்களேயொழிய, பன்னாட்டுத் தேசிய இனமாகிவிட்ட இந்த மக்களுக்கு, பன்னாட்டு நோக்கில் எதிர்காலத் திட்டங்களை முன்வைத்து, நன்நிலைக்கு வழி காட்ட முன்வரவில்லை.

இதனால் கொத்தடிமைகளாகியும் அதன் கொடுமை பற்றியோ, அகதிகளாகியும் அதன் அவலம் பற்றியோ உணர்ந்துகொள்ளவும், அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளைத் தெரிந்து கொள்ளவும் இயலா நிலைக்குத் தமிழ்நாட்டு மக்கள் ஆளாகிவிட்டனர். அதனால்தான் ஈழ விடுதலைப் போராட்டத்தைத் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஆதரித்த போது, அதன் ஏனையப் பரிமாணங்களைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பாராமல், நாளையே தமிழீழம் பிறந்துவிடும்; தமிழனுக்கென ஒரு கொடி ஐ. நா. (உலக நாடுகளவை) வில் பறந்துவிடும் என நினைத்துத் தமிழ்நாட்டு மக்கள் ஓகோவென்று ஆதரித்தனர். தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் ஈழ விடுதலை பிந்தினால் ஏற்படும் பரிமாணங்களைப் பற்றியும், அதற்கேற்பத் தமிழ்நாட்டு மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் இம்மியளவும் எண்ணிப் பார்க்கவில்லை.

விளைவு?

ஈழ விடுதலைப் போராளிகள் தமிழ்நாட்டிலேயே பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டனர். ஈழத் தமிழ் மக்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

இடையில் ஏற்பட்டுவிட்ட ஒரு கொலையின் நிமித்தம் போராளிகளுக்கும் அகதிகளுக்கும் வித்தியாசம் காண முடியாத நிலையும், இலங்கைத் தமிழர்களே ஆகாதவர்கள் என்பதைப் போல நினைக்கும் நிலையும் தமிழகத்தில் எளிதில் உண்டாக்கப்பட்டுவிட்டது. இன்னும் சொன்னால் இந்தியாவில் வளாந்துவிட்ட வன்முறைக் கலாச்சாரத்திற்கும், கொலை - கொள்ளை - வழிப்பறி போன்ற கொடுஞ்செயல்களுக்கும் இலங்கைத் தமிழர்களை இங்கு தங்கவிட்டதே காரணம் என்பது போன்ற கருத்தோட்டம் திட்டமிட்டே இங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. எப்போதுமே தமிழின உணர்வுகளுக்கு எதிராக நிற்பவர்களும், தங்கள் கையாலாகாத்தனத்திற்கு சாட்டுத்தேடி அதில் ஒளிந்து தப்பிக்க முனையும் சில நீதி-நிர்வாக-காவல் துறைச் சக்திகளும் இதைப் பயன்படுத்திக் கொள்வதில் குறியாக இருக்கிறார்கள்.

ஈழ விடுதலையை ஆதரித்த தமிழ் நாட்டு இயக்கங்கள் இதையெல்லாம் எதிர்பார்த்து, முகம் கொடுத்து முறியடிக்க முனையாமையும், சோதனையான கட்டத்தில் நழுவிக் கொள்வதே சாதனை என்று கடைப்பிடித்தமையுமே இதற்கெல்லாம் காரணமாகும் அதே வேளை தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்படக்கூடிய துன்ப துயரங்களையும், அகதி நிலை தமிழினம் முழுவதற்குமே பரவி விடக்கூடிய அபாயத்தையும் இந்தச் சிக்கல் பூதாகாரமாக்கிக் காட்டியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

ஆமாம்; இரண்டாம் உலகப் போரின் போது பர்மாவிலிருந்து மட்டுமே 20 லட்சம் தமிழர்கள் அகதிகளாக ஓடிவந்தனர். என்றாலும் அவர்கள் சொந்த மண்ணுக்கு திருப்பியவர்களாகத்தான் கருதப்பட்டார்களேயொழிய, அகதிகளாகக் கணிக்கப்படவில்லை. 1950 தொட்டு 1960 வரை மலாயாவிலிருந்து (இன்றைய மலேசியா-சிங்கப்பூர்) 20 லட்சம் தமிழர்கள் வெளியேறி அல்லது வெளியேற்றப்பட்டு வந்தபோதும் அப்படித்தான் கருதப்பட்டனர். 1964-ல் மீண்டும் பர்மாவிலிருந்து (இராணுவப்புரட்சியின் காரணமாக) 10 லட்சம் தமிழர்கள் ஓடிவந்த போதும், சிறிமா-லால்பகதூர் ஒப்பந்தம் காரணமாக இலங்கையிலிருந்து 6 லட்சம் தமிழர்கள் (இநதிய வம்சாவளியினர்) ஆடு மாடுகளைப் போல ஓட்டப்பட்ட போதும் அவர்கள் 'தாயகம் திரும்பியோராகக்' கணிக்கப்பட்டார்களேயொழிய, அகதிகளாகக் கணிக்கப்படவில்லை.

சொல்லப்போனால், ஐ. நா. அகதிகள் உயர் ஆணையக(யு. என். எச். சி. ஆர்.) உதவிகள் தமிழ் நாட்டு மக்களுக்குத்தான் அதிகம் கிடைத்திருக்க வேண்டும். ஏனென்றால், முதல் உலகப்போர் நாளிலிருந்தே தமிழ் நாட்டு மக்கள் உலகம் முழுவதிலும் அகதிகளாக அல்லாடத் தொடங்கிவிட்டனர். இருப்பினும் இப்போது ஈழத்தமிழர்கள் மூலம் தான் தமிழ் அகதிகள் பிரச்சினை உலகத்திற்குத் தெரியவந்திருக்கிறது. ஐ. நா. உயர் ஆணையகமும் (யு. என். எச். சி. ஆர்.) அவர்களுக்கு உதவ முன்வந்திருக்கிறது. உலகம் முழுவதும் தமிழ் அகதிகளுக்கு அனுதாபம்



படிப்பகம்

www.padippakam.com

காட்டும் அதே நேரத்தில் தமிழ் நாட்டில் அந்த அனுதாபம் அகதிகள் பால் இல்லாமல் இருப்பதும், அவர்கள் வேண்டாத விருந்தாளிகளைப் போல-விரோதிகளைப் போல கொடுமையாக நடத்தப்படுவதும் பரிதாபத்துக்குரியதாகும்,

இங்கே இன்னொன்றைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. ஈழத் தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தால் அகதிகளாகியிருக்கிறார்கள். பாலஸ்தீன மக்களோ அகதிகளாக இருந்துதான் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ஆமாம்; 1918-ல் தொடங்கி இஸ்ரேல் உருவான 1948 வரை பாலஸ்தீனத்திலிருந்து பாலஸ்தீன அரபு மக்கள் அகதிகளாக வெளியேறிவிட்டார்கள். (யூத சியோனிஸ்ட் இன வெறிப் பயங்கரவாதிகளால் அடித்துத் துரத்தப்பட்டார்கள்.) இந்த ஆண்டுதான் (1994) யூத ஆக்கிரமிப்பு இஸ்ரேலில் அவர்களுக்கு ஒரு சுயாட்சிப் பகுதி கிடைத்திருக்கிறது. இதுவரை அகதிகளாகவே வாழ்ந்த அவர்கள் இப்போதுதான் குடியுரிமை கொண்டவர்களாக நாடு திரும்பியுள்ளனர்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் ஒரு இனம் நாடு திரும்புகிறதென்றால். வெளியேறிய அதே ஆட்களாகவா அவர்கள் இருக்க முடியும்? மிஞ்சி மிஞ்சிப் போனால் 10 விழுக்காட்டினர்தான் அவர்களில் உயிரோடு இருக்க முடியும். மீதி 90 விழுக்காட்டினரும் அவர்கள் சந்ததியில் வந்த புதியவர்களாகத்தான் இருக்க முடியும்.

இது, ஒரு இனம் எத்தனை காலம் உரிய நாட்டுக்கு வெளியே இருந்தாலும், இப்போது முழுக்க முழுக்க அவ்வினத்தின் புதிய சந்ததியினர்தான் உண்டு என்றாலும், மீண்டும் அந்த நாட்டின் குடியுரிமை பெற அவ்வினத்திற்கு உரிமையிருப்பதை உலகம் ஒப்புக்கொள்வதாகும். இதை வைத்துப் பார்த்தால் பர்மாவிலிருந்து, மலேசியாவிலிருந்து, சிங்கப்பூரிலிருந்து இன்னும் பிற நாடுகளிலிருந்து ஓடிவந்த தமிழர்கள் அல்லது அவர்களின் சந்ததியினர் மீண்டும் விரும்பினால் அந்த நாடுகளின் குடியுரிமை பெற உரித்துடையவர்கள் என்பது தெளிவாகிறது.

ஆனால், அப்படி வந்தவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் முகவரிகளைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள் என்பதுதான் துரதிர்ஷ்டவசமாகும். அப்படித் தங்கள் முகவரிகளைத் தொலைத்துவிடாமல், அதாவது தமிழ் நாட்டு மக்களோடு மக்களாகத் தங்களையும் கரைத்துக்கொள்ளாமல் ஈழத் தமிழ் அகதிகள் வாழ்ந்து வருகிறார்கள் என்பது பாராட்டுக்குரியதாகும். இந்தப் பட்டியலில் தாயகம் திரும்பியோராகக் (Repatriates) கொள்ளப்படும் இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர்களையும் சேர்த்துக்கொள்வது தவறல்ல.

இந்த வகையில் இலங்கைத் தமிழர்களிடமிருந்து தமிழ்நாட்டுத் தமிழர்கள் பாடம் கற்றுக்கொள்வது நல்லது. மாறாக, தமிழ் நாட்டு அரசும் அதிகாரிகளும் அவர்கள் பால் காழ்ப்புக் கொள்வதும், கடுமை காட்டுவதும் கொடுமையிலும் கொடுமையாகும். ஆம்; மற்ற நாடுகளில் மக்கள் நலத்திட்டங்களில் தொண்டு நிறுவனங்களைப் பங்கு கொள்ளும்படி அரசுகள் விரும்பி விரும்பி அழைக்கின்றன. தமிழ் நாட்டு அரசோ, இலங்கை அகதிகளுக்கு அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எந்த உதவிகளும் அளிக்கக் கூடாது; அகதி முகாம்களின் பக்கமே போகக்கூடாது என்று தடை போட்டிருக்கிறது. அதற்கு தமிழக அரசு சொல்லும் காரணம், தொண்டு நிறுவனங்களின் உதவிகிடைத்தால் அகதிகள நாடு திரும்பமாட்டார்கள் என்பதாகும்.

ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒவ்வொருவரும் சொநத வீடு, தோட்டம், துரவு, மாடு, மனை என்று தமிழ்நாட்டுத் தமிழர்களைவிட அங்குவசதியாக வாழ்நதவாகளாவர். அங்கே உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அறற நிலையில், சிங்களப பேரினவாத அரசின் திட்டமிட்ட இனப்படுகொலை தொடரும் போரின் விளைவாகவே இங்கு அகதிகளாகத் தங்கியுள்ளனர். அங்கு இனப்பிரச்சினைக்கு நியாயத்தீர்வு காணப்பட்டு, அமைதி திரும்புமானால் அரசு அனுப்பிவைக்கத் தேவையில்லை. அவர்களாகவே உடன் நாடு திரும்பிவிடுவர். இது தெளிவாகத் தெரிந்திருந்தும் அரசியல் நோக்குடன் இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருபபியனுப்பிவிட அரசு துடிக்கிறது. அவர்கள் நாடு திரும்பச் சம்மதிகக வேணடுமென்பதற்காக அதிகாரிகள் அப்பாவி அகதிகளிடம அடாவடித்தனமாக நடந்துகொள்கிறார்கள்.

தமிழ்நாட்டு அரசும், அரசியல் கட்சிகளும் இங்கே ஒன்றை எண்ணிபபார்க்க வேண்டும். நமது தமிழ் நாட்டு வம்சாவளி மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

இன்று மலேசியா, சிங்கப்பூர், மொரிசு, பீஜி, பர்மா, இந்தோனேசியா, மடகாஸ்கர், சூரிநாம், குயானா போன்ற நாடுகளில் தேசியச் சிறுபான்மையினராக உள்ளனர். தமிழ் நாட்டிலிருந்தே தமிழ் பேசுகிற மக்கள்-இலங்கை அகதிகள் - தமிழ்நாட்டு அரசாங்கத்தாலேயே வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகிறார்கள் என்ற இந்தச் செய்தி தெரியவந்தால் நாளை அவர்களும் அந்த நாடுகளிலிருந்து தமிழர்களை வெளியேறறத் தொடங்கினால் என்ன செய்வது? ஆம்; ''தமிழ் நாட்டிலிருந்தே தமிழர்கள் வெளியேறறப்படுகிற போது நாங்கள் வெளியேறினால் என்ன தவறு?'' என்று அந்த நாடுகள் கேட்டால் அதறகு விடையளிக்க நமக்கு முகம் இருக்காதே! அது மட்டுமின்றி, இலங்கை அகதிகள் இங்கே இருப்பது தமிழர் பிரச்சினையில் சிறீலங்கா அரசை சீக்கிரம் ஒரு நியாயத்தீர்வுக்கு வரச்செய்யும்படி நிர்ப்பந்தம் கொடுப்பதற்கு தமிழக அரசுக்கும், இந்திய அரசுக்கும் துணைசெய்வதாகும்.

பாலஸ்தீன அரபுகளை, இஸ்ரேல் இணங்கி வரும் வரை இருபதுக்கும் மேற்பட்ட சுதந்திர அரபு நாடுகள் இருந்தும் அவர்களை அகதிகளாகவே பராமரித்ததன் மூலம் தான் வழியேற்பட்டது. எப்படியோ அவர்கள் நாடு திரும்பினால் போதும் என்று அவை நினைத்திருந்தால் பாலஸ்தீனர் உரிமையை ஒப்புக்கொள்ள இஸ்ரேல் ஒருக்காலும் முன்வந்திருக்கவே மாட்டாது. இனப்படுகொலை மூலம் அவர்களை ஒழித்துக்கட்டவே முனைந்திருக்கும்.

ஆகவே, கட்சி அரசியலை மறந்து, ஓட்டு வேட்டை அரசியலுக்கு ஓய்வு கொடுத்து, தமிழ்நாட்டின்— தமிழினத்தின் எதிர்காலத்தை எண்ணிப்பார்த்து அகதிகள் பிரச்சினையை மனிதாபிமானத்துடனும், வரலாற்றுப் பின்னணி கருதியும் அணுக, தீர்வு காண முன்வரவேண்டியது அனைவரது கடமையாகும். ○

# வெறுமை

நிலவு விழாத தேசம்.
துண்டு துண்டாகப்போன தொலைவு.
பனிப்பூக்களில் மகரந்தம் கொள்ளும்
விஞ்ஞானம்.
கன்னிப் பெண்கள் நீராடுவதை
சூரியக்கிழவன் ஒழிந்தொழிந்து பார்ப்பது
போல்
யன்னல் கழுக்குள்ளால்
உறையணிந்த விரல்களைத் துலாவவிடும்
நான்.

எங்கோ தூரத்தில் புள்ளியளவு பூச்சி
தெரிகிறது.
புயற்காற்று அதை தூக்கிவந்து நிறுத்தியது.
பூச்சி பூப்படைந்த பெண்ணாக என முன்
தோன்றுற்று!
மாபெரும் வெள்ளை அழகியாய் அவள்
தெரிந்தாள்.
ஆசியனான எனக்கு அவளுடன் கை
குலுக்கும் பாக்கியம்.

மீளவும் புயற்காற்று பூச்சியாக்கி
அவளை அடித்துச் சென்றது.

இப்படி, இன்னும் இன்னும் எத்தனை
கறுப்பருக்கு?

பசுமை செத்துப் பனிப்படர்ந்த தேசமெங்
கிலும்
நிறத்திலே நியாயம் பிறக்கும் வாழ்விலும்
வெள்ளைத் தோலின் எச்சில விழுந்தயிலை
பணமாய் மிளிரும் மெனின்
எடுத்து பக்குவப் படுத்தும் மூன்றாம்
மண்டலம் இருக்கும் வரை.

உறைகளை உருவி விரல்களை நீவும்
போதெல்லாம்

வெறுமையாய் இருக்கும்.
தொட்டும் தொடுபடாமல்...
துண்டு துண்டாகப்போன தொலைவு
தெரியும்.

—செல்வமதீந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

# தொலைவும் நினைவும்

—வ. கீதா

பாலஸ்தீனிய அறிவாளிகளில் தலைசிறந்தவரும் இலக்கிய, தத்துவ, வரலாற்றுத் துறைகளில் நன்கு கற்றவரும், பாலஸ்தீனியத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து ஆதரித்து வருபவருமான எட்வர்டு சயீத் பாலஸ்தீனிய மக்களின் அகதி வாழ்க்கையைப் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். 'கடைசி வானத்துக்குப்பின்: பாலஸ்தீனிய வாழ்க்கைகள்' என்ற தலைப்பிட்ட அந்நூல் நினைவைப் பற்றியது; புலம் பெயர்ந்தோரின் மனநிலையைப் பற்றியது; சுக்குநூறாக சிதறடிக்கப்பட்ட ஒரு கொன்மையான சமுதாயம் தனது கூட்டு வாழ்வையும் கூட்டு நினைவையும் எவ்வாறு பாதுகாத்து வருகிறது என்பதைப் பற்றியது.

பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் பாலஸ்தீனக் குடும்பங்களை, அவை யாவும் பின்பற்றும் சில பொதுவான சடங்குகளும், பழக்க வழக்கங்களும், நடத்தை முறைகளும் ஒன்றிணைக்கின்றன என்கிறார் சயீத்[1] பாலஸ்தீனர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவராயினும் தமது இல்லங்களை ஒரே மாதிரியாக அலங்கரிப்பராம்: மேசைகளிலும் மூலை முடுக்குகளிலும் சிறு பாலஸ்தீனியக் கொடிகள்; உணவு மேசையில் ஒலிவ மரத்தின் சித்திரம் பொறிக்கப்பட்டத் தட்டுகள்; ஆங்காங்கே, சுவர்களில் பாலஸ்தீனத்தில் எடுக்கப்பட்டப் புகைப்படங்கள்: கடற்கரைக் காட்சிகள், பள்ளிவாசல்கள், வீடுகளின் முகப்புகள்; பாலஸ்தீனர்கள் தமக்கேயுரிய விருந்தோம்பல் முறைகளை அந்நிய மண்ணிலும் பின்பற்றுகின்றனராம்: ஒவ்வொரு வீட்டிலும் தேவைக்கு மீறிய உணவு சமைக்கப்பட்டிருக்கும். எதிர்பாராத விருந்தாளியை வரவேற்று உபசரிக்க உணவு எப்போதும் தயாராகவே இருக்கும். யார் எப்பொழுது வருவார்கள். எங்கிருந்து வருவார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அரபுப்பாணியில் வட்டமாக அமர்ந்து உணவு உண்ணும் பழக்கத்தை பாலஸ்தீனர்கள் கைவிடவில்லை. எல்லா வீடுகளிலும் அவ்வாறு அமர்ந்து உண்ணத் தோதுவாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

சயீத் மேலும் கூறுவார்: இழந்த தாயகத்தின் நினைவைத் தக்கவைத்துக் கொள்ளவே பாலஸ்தீனர்கள் பழைய; பழகிப் போன பழக்கவழக்கங்களை அவ்வாறே பின்பற்றுகின்றனர். இவ்வாறு பழைய வாழ்வு முறையைப் பின்பற்றுவதன் மூலம், இழந்த நாட்டைத் தம்முடன் கையிலெடுத்து வந்து விட்டது போன்று உணர்கின்றனர். வரலாற்றில், நினைவில், நெஞ்சில் உண்டாக்கப்பட்டுள்ள விரிசல்களையும் இடைவெளிகளையும் தமது செய்கைகளின் மூலம் அழித்துவிடப் பார்க்கின்றனர். அது மட்டுமல்ல—உலகம் எங்கே தம்மை மறந்து விடுமோ, நிராகரித்து விடுமோ, தமது வரலாற்றை அழித்து வேறொரு வரலாற்றைப் புனைந்து விடுமோ, தமது அடையாளத்தை மறுத்து அழித்துவிடுமோ என்ற பீதி இவர்களை ஆட்கொண்டுள்ளது. எனவேதான், "நாங்கள் பாலஸ்தீனர்கள். எங்கள் நடையில், உடையில் சைகையில் எங்களை அடையாளங் காணுங்கள். எங்களது உடைமைகளையும், உறவுமுறைகளையும் பார்த்து நாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள்" என்று அவர்கள் சொல்லாமல் சொல்கின்றனர் தமது நினைவத் துகள்களைக் கொண்டு வேற்று நாடுகளில் ஒரு பாலஸ்தீனத்தை அமைக்க முனைகின்றனர்.

□

பாலஸ்தீனருக்கு மட்டுமல்ல, நாடிழந்த மக்கள் அனைவருக்கும் நினைவு என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு அரிய பொருளாகி விட்டது. புலம் பெயர்ந்து வாழும் மக்கள் யாவருக்கும் முதல் எதிரி மறதி. ஒரு புறம் தஞ்சம் புகுந்த நாட்டில் அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவேற்ற, உயிர்வாழ உழைத்தாக வேண்டும். "அவசரமாகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தினூடே...கற்றுக்கொண்ட இரவல் மொழி"[2] பழகி "ஊரினில் தீண்டாத 'இழிசனப்' பணிகளை/ஆலாய்ப் பறந்து தலைகளிற் சுமக்க"[3] வேண்டிய நிர்ப்பந்தம். மறுபுறமோ வெள்ளை அந்நியத்தை எதிர்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வாழ வேண்டும். இனவெறி, இன இறுமாப்பு ஆகியவற்றின் தன்மையுணர்ந்து சமயத்துக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளப் பழகும் ஒவ்வொரு கணத்திலும் புலம் பெயர்ந்தோரது ஆளுமைகுன்றி மனம் வெதும்பி அவதியுறும். ''சாதிய வெக்கையிலும் வேகாத உயிர்''[4] தான் என்றாலும் அந்நியன் மண்ணில் அந்நியனாக்கப்பட்ட உணர்வு எப்போதும் நெஞ்சை வாட்டும். உயிரை உறிஞ்சும். இந்நிலையில் இழந்த வீடும், நாடும், இன்பங்களும் நினைவுச் சுமைகளாகவே உணரப்படும். மனம் மறதியில் லயித்திருக்கவே விரும்பும். ஆனால் நினைவோ, எதையும் மறக்காது, மறக்க விரும்பாது. பூர்வீக சூழல் பற்றிய கற்பனையில் தன்னை அழ்த்திக் கொள்ளும். ஏனெனில் நினைவு தப்பினால், புலம் பெயர்ந்தோரது கதையையும் வரலாற்றையும் அந்நியர் அபகரித்து விடுவர். தமது ''பூனைக்கண்'' கொண்டு புலம் பெயர்ந்தோரை நோக்குவர்;[5] நாடிழந்தவர்களை இழிமக்களாக, வெறியர்களாக அடையாளங் காண்பர். ''எலும்பு மச்சைக்குள்ளும் 'துழாவும்'' அந்த ஆதிக்க நோக்கு எந்தவொரு தொன்மையான பண்பாட்டையும் சுட்டெரிக்க வல்லதாயிற்றே!

ஆனால் நினைவுங்கூட வெகுளியல்ல. அது புலம் பெயர்ந்தோரை வஞ்சிக்கப் பார்க்கும். விட்டுவிட்டு வந்ததை அப்படியே படம் பிடித்துக் காட்டாது; தனது கிடப்பில் காணப்படும் படிமங்களையும் காட்சிகளையும் இழப்பு என்பதனூடாக சலித்து எடுத்த பிறகுதான் நினைவு அவற்றை வெளிக் கொணரும். இதனால் நாடும் வீடும் புதிய பரிமாணங்களைப் பெறும். வழமையான காட்சிகளுக்குப் புதிய மெருகு கிட்டும். அதே நேரம் பழைய பெருமைகள் ஒளிவட்டம் இழந்து அம்பலமாகி நிற்கும். கடந்த காலத்தில் விளைந்த கனவுகளும் இலட்சியங்களும் இதுவரையிலும் அறிவை நெருடாத தர்க்கத்துக்குக் கட்டுப்பட்டு நெஞ்சைக் கலக்கும். முன்னாட்களில் ''பனங்காட்டிடை ஊடி உரசியும்/தென்னங்கீற்றிடை வழுக்கி ஒழுகியும்''[6] தீண்டிய நிலவொளியின் நினைவு நெஞ்சை அள்ளும் அதே வேளையில் ''துருவம் தப்பி''[7] வந்தவர்க்கு வேறொன்றும் சிந்தனையை உறுத்தும் இக்கரையினின்று காண்கையில் கண்ணுக்குப் பழக்கமான ''நீலம் சூழ் மணித்திரள்/இரத்தினதுவீப''மாக ஒளிரும். ''புத்தன் வந்த தேசம்''[8] தனது அழ்மனப் படிவுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தும். ''தேசத்தின் ஆழ் மனப் படிவுகள் குரோதங்கள் தானென்றால் புத்தனாவது சித்தனாவது...''[9] என்று மனஞ் சலிக்கவே தோன்றும்.

□

ஆனால், நினைவு வஞ்சித்தாலும், மறக்கவிடாது. தாயகம் பற்றிய நினைவு என்பது, விளாடிமிர் நபகோவ் கூறியுள்ளது போல, ''கண்களில், இரத்தத்தில்'' வாழும் ஒன்று. அது ஒருவரது ''ஒவ்வொரு நம்பிக்கையின் பின்னணிக்கும் அதற்குரிய பரிமாணத்தை'' வழங்கவல்லது. சில சமயங்களில் இழந்த தாயகத்தை ஈடுகட்ட என்றோ நிகழக்கூடிய (?) வீடு திரும்புதல் வைபவத்தை அது நடித்துக் காட்டும் :

துயரங்களின் மாளிகையிலிருந்து
எடுக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னமாக
என்னை எடுத்துச் செல்லுங்கள்
ஏதோவொரு துன்பியல் நாடகத்திலிருந்து
எடுக்கப்பட்ட ஒரு கவிதையாக என்னை
எடுத்துச் செல்லுங்கள்
ஒரு பொம்மையாக, வீட்டிலிருந்து
எடுக்கப்பட்ட ஒரு செங்கல்லாக என்னை
எடுத்துச் சொல்லுங்கள்.
அப்போதுதான் நமது குழந்தைகள்
நாடு திரும்ப ஞாபகம் கொள்வர். [10]

வீடு திரும்புதலை சாத்தியப்படுத்த ஒரு சிறு நினைவுத்துகள் போதும். நாடோடி வாழ்க்கைக் குரிய கற்பனை இதுவாகத்தான் இருக்க முடியும். திட்டவட்டமான, திண்மையான, வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு என்பது கண்ணுக்குள்ளும் நினைவின் அடியாழத்திலும் புதைந்து கிடக்க, வருங்காலத்துக்கெனப் பாதுகாக்கப்பட்டுள்ளவை சிறு துகள்களாகத்தான் இருக்க முடியும்:

''நாம் எங்கு செல்வது
கடைசி எல்லையைக் கடந்து
பறவைகள் எங்கு செல்லும்
கடைசி வானத்திற்குப் பின்?
பரந்த கடைசிக் காற்று வெளிக்கு அப்பால்
செடி கொடிகள் எங்கு வேர் கொள்ளும்?
செந்நிற ஆவியில் நாம்
நமது பெயர்களை எழுதுவோம்
நமது பாடலின் கரத்தை வெட்டி
எறிவோம்—
நமது உடல் அப்பாடலை எழுதி
முடிப்பதற்கு
இங்கு நாம் மடிவோம்
இந்த குறுகலான பாதையில்.
அல்லது நமது ரத்தம் இங்கு நட்டு வைக்கும்
தனது ஒலிவ் மரங்களை.[11]



படிப்பகம்

www.padippakam.com

முகமிழந்த அகதியாய் வாழும் வாழ்க்கை சுயத்தை அழித்து சுயவுணர்வைக் குலைக்கப் பார்க்கையிலே, நினைவின் கருவறையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தவற்றை பறித்துக் கொண்டு நினைவின் முழுமை அழிந்து போக சம்மதிக்க வேண்டியதாகிறது. புலம் பெயர்ந்தோருக்கு தான்/பிறத்தியான் என்ற திட்டவட்டமான வரையறைக்குள் தமது அடையாளத்தைக் கட்டமைக்க முடியாமல் போய்விடுகிறது. ''நான் ஒரு அராபியன்,'' 'யுகங்களுக்கு அப்பால், காலத்துக்கு அப்பால் எனது வேர்கள் ஆழப் புதைந்துள்ளன''[12] என்று மஹமுத் தார்விஷ் நெஞ்சுருகக் கூறினும், யூத அரசு பாலஸ்தீன அடையாளத்தை மறுக்கிறது. அத்தகைய அடையாளம் இருந்ததே இல்லை இனியும் இருக்க முடியாது என்கிறது. தனது ஆளுமை அழிக்கப்பட்டுநிற்கும் கவிஞனுக்கு, ஒரு ''யூதன் அல்லாதவன்'' என்று ஆக்கப்பட்டவனுக்கு, அவனது உடலும் ஒரு சுமையாகிறது. அச்சுமையைக் குறைக்க அவ்வுடலின் ஒரு பகுதியை அவனாகவே வெட்டி எறிகிறான். எட்வர்டு சயீத் கூறுவது போல், பகுதிகளாவது எஞ்சுகின்றனவே! இழந்தவற்றின் முழுமையை மீட்டெடுக்க முடியாத நிலையில் துகள்களுக்குத்தான் எத்தனை மகிமை!

ப

அயர்லாந்து நாட்டின் தலைசிறந்த நாவலாசிரியரான ஜேம்ஸ் ஜாய்ஸ் புலம் பெயர்ந்து வாழ்வோர் தமது அனுபவங்களையும் வரலாற்றையும் இலக்கியமாகவோ தத்துவமாகவோ படைக்க விரும்புவராயின் தந்திரமாகவும் மௌனமாகவும் செயல்பட வேண்டியிருக்கும் என்றார். அவரது ''ஸ்டீஃபன் ஹீரோ'' என்ற நாவலின் நாயகன் தாயகத்தை விட்டு நீங்குவதென்று முடிவு செய்கிறான். தாய் நாட்டுச் சூழலில், அத்தாயகத்தைப் பற்றிப் புனையப்படும் கட்டுக்கதைகளையும் தொன்மைகளையும் கேட்டுக் கேட்டு சலித்துப் போன அவனுக்குத் தாயகம் ஒரு ராட்சதப் பன்றியாகத் தெரிகிறது. தனது குட்டிகளைத் தின்று தீர்க்கும் பாதகப் பன்றியின் பிடியிலிருந்து விடுபட்டால்தான் தன்னால் சுதந்திரமாக உயிர்வாழ முடியும் என்று முடிவு செய்து புலம் பெயர்ந்து வாழத் தன்னை ஆயத்தப் படுத்திக் கொள்கிறான்.

புலம் பெயர்தல் என்பது தாயகத்தை மறுயடைப்பு செய்யத் தூண்டுவதுடன் தாயகத்துடனும், அதன் சமுதாய, பண்பாட்டுச் சூழலுடன் ஒருவருக்குள்ள உறவையும் அதன் நுணுக்கங்களையும் ஆராய அனுமதிக்கிறது. போலி நாட்டுப்பற்றுணர்வு நீங்கி விமர்சனவுணர்வு மேலோங்கவும் அந்த அனுபவம் உதவுகிறது. பற்றும் பந்தமும் உணர்ச்சிப் பெருக்கு என்ற நிலையிலிருந்து சரிந்து பகுத்தாய்ந்து பார்க்கும் மனநிலைக்குரிய சுட்டுப் பொருட்களாகின்றன. மரபு, வரலாறு, பாலியல் பிரிவினைகள் கேள்விக்குரியவையாகின்றன. நாட்டின் அடையாளமும் பண்பு நலன்களும் விமர்சனத்துக்கு உட்பட்டு நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

அண்மையில் படிக்க நேர்ந்த குரேஷிய குட்டிக்கதையொன்றை இங்கு நினைவு கூர்வது பொருத்தமெனத் தோன்றுகிறது[13] அக்கதையின் நாயகன் தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்துக்கே தான் அந்நியனாகிப் போய்விட்ட நிலையில் தனது நாட்டைத் துறந்து இத்தாலிக்குச் செல்கிறான். அவனது 'மேற்கு ஐரோப்பிய' நண்பர்கள் ''ஐரோப்பா முழுவதும் நமது/உனது தாயகம் தானே. நீயும் இந்த ஐரோப்பியப் பண்பாட்டை சுவீகரித்துள்ளவன் தானே'' என்று கூறி அவனது இழப்பை ஈடுகட்ட முயற்சி செய்கின்றனர். ஆனால் அவனுக்கு அச்சமாதானம் போதுமானதாக இருப்பதில்லை. ஐரோப்பியப் பண்பாட்டுக்கு ஆக்கம் அளிக்கும் பண்புகளிற் பல தமது தேசம் ஈன்றவைதான் என்றாலும், தற்சமயம் அப்பண்புகளை மறுத்து, ஆனால் அப்பண்புக்குரிய அப்பண்பாட்டின் பெயரால் இனவெறிப் போரில் தமது நாட்டவர் இறங்கியுள்ளனர்; எனவே தன்னால் ஐரோப்பிய அடையாளத்துக்கு உரிமை கொண்டாட இயலாது என்கிறான். உண்மையில், தனது நாட்டின் பண்பாடுதான் என்ன என்ற கேள்வி அவனை வாட்டுகிறது. இனப்படுகொலையைச் செய்வதன் மூலம்தான் தமது பண்பாட்டுத் தூய்மையைக் காத்துக் கொள்ள முடியும் என்று சாற்றும் குரோஷியர்களுக்கு 'துரோகம்' செய்வதில் தவறில்லை என்ற முடிவுக்கு வருகிறான். தனது 'துரோகத்தனத்தினூடாக' நசிந்து வரும் ஒரு உன்னதப் பண்பாட்டை வெளிப்படுத்த முடியும்என்றும் நம்புகிறான். இதனாலேயே ஒரு பொதுவான அருவமான 'ஐரோப்பிய'ப் பண்பாட்டு எல்லைகளுக்குள் சிக்கிக் கொள்ளாது தனது நினைவில், அது சார்ந்து நிற்கும் விமர்சன அறிவில், அவ்விமர்சன அறிவுக்கு ஆதாரமாய் விளங்கும்



படிப்பகம்

www.padippakam.com

மனச்சாட்சியில் ஆறுதல் பெறுகிறான். 'தூய்மை'யை நிராகரிக்கிறான். 'கூட்டுக் கலாச்சாரத்'தையும் மறுக்கிறான் ஒரு மெல்லிய ஆனால் மிக நுட்பமான நினை விழையைக் கொண்டு ஒரு பிரத்யேகப் பண்பாட்டு வலையைப் பின்னத் தயாரா கிறான்.

□

நினைவுகளுக்கும் பாலியல் தன்மையுண்டு. தாய் நாடு, மரபு, பண்பாடு ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டதுதான் 'பெண்மை' என்ற கருத்தியல். புலம் பெயர்ந்த நாட்டிலும் கணவர், குடும்பம், தாய்மை என்பவற்றைச் சுற்றியே அவளது வாழ்க்கை நடைபெறுகிறது. தனிமனுஷி யாகபுலம் பெயர்ந்தவளை அவளுடைய இன ஆண்கள் ஒரு பாலியல் பதுமையாகக் காண் கின்றனர்; அவளுக்கு இங்கு கிட்டியுள்ள சுதந்திரத்தை தமக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கின்றனர். இது தவிர வெள்ளையர்களின் இனவெறி, அந்நிய நாட்டில் வேலை தேடிச் செல்வதிலுள்ள பிரச்சனைகள்; அந்நிய மொழியைப் பயில வேண்டிய கட்டாயம்; அந்நியப் பண்பாட் டோடு ஒத்துப் போக வேண்டிய நிர்பந்தம்.

எனினும் புலம் பெயர்ந்து புதிய நாடுகளுக்கு குடியேறியுள்ள பெண்களுக்கு முன்பு இல் லாத ஒருவகை சுதந்திரமும் இங்கு உருவாகத் தான் செய்கிறது; படிப்பு, பணி, தடையின்றி வெளியே போய் வர சுதந்திரம், ஆண்மை, பெண்மை என்ற பாகுபாடுகளைப் பற்றிய புதிய பார்வை கிட்டவும் அவளுக்கு இங்கு வாய்ப்புண்டு. மூன்றாம் உலக நாடுகளிலி ருந்து, குறிப்பாக, அடிப்படைவாத அரசுகள் ஆட்சி புரியும் நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்துள்ள பெண்களின் அனுபவங்கள் இதற்குச் சான்று பகரும்.

தேசம், தேச அடையாளம் ஆகியவற் றின் பண்புகளாகச் சொல்லப்படுபவை ஏன் பெண்ணின் பாலியல் தூய்மையுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றன? தேச விடுதலைப் போராட்டத்தின் போது தம்மை தோழியராகக் கொண்டவர், புதிய சமுதா யத்தில் தமக்கு என்ன தகுதியை அளிப்பர்? புலம் பெயர்ந்து வந்தும் நாட்டைப் பற்றிக் கனவு கண்டும், நாளைய சமுதாயம் எப்படி உருவாகும் என்று புரட்சி பேசியும் வாழும் கணவர்களும், காதலரும் ஏன் 'பெண்மை' என்பதை தாம் தஞ்சம்புகக் கூடிய 'கடைசி வானம்'ஆகக் காண்கின்றனர்?— 'இத்த கைய கேள்விகளை எழுப்பவும் அவற்றுக் கான விடையை பெறவும் அந்நிய மண் இடம் தரும். பெண்ணுக்கு எது அந்நியம் ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்து விடுபட விடுபட கேள்விகள் தான் எஞ்சி நிற்கின்றன. துரோகத்தனத்தினூடாக விரியும் நாட்டுப் பற்று போல், பெண்களின் கேள்விகள், விமர்சனங்கள் ஆகியவற்றினூடாகத்தான் இழந்த தாயகம் தனது களையை மீண்டும் பெறும்.

□□


1. Edward Said, ''After the Last sky: Palestirnian Lives'', New york, ப. 58
2. மரியா யூஜெனியா ப்ரேவோ கால் டெராரா ''புலம் பெயர்ந்து வாழ்தல் பற்றியும் தோல்விகள் பற்றியும்'', **அவ்வப்போது பறித்த அக்கரைப்பூக்கள்,** கனகம் பதிப்பகம், சென்னை, 1993 ப. 48.
3. கி. பி. அரவிந்தன், ''துருவங்கள் மாறி...'', **முகம்கொள்,** கிதாஞ்சலி வெளி யீடு, சென்னை, 1992. ப 58.
4. கி.பி. அரவிந்தன், ''உறைதலாய்'', அதே நூல், ப. 56.
5. கி. பி. அரவிந்தன், ''உறைதலாய்'', அதே நூல், ப. 55.
6. கி. பி. அரவிந்தன், ''போ...அங்கிரு'', அதே நூல், ப. 75
7. கி. பி. அரவிந்தன், ''துருவங்கள் மாறி...'', அதே நூல், ப. 58.
8. கி. பி. அரவிந்தன், ''துருவங்கள் மாறி...'', அதே நூல், ப. 57.
9. கி. பி. அரவிந்தன் ''துருவங்கள் மாறி'', அதே நூல், ப. 57.
10. Edward Said, ''After the Last sky: Palestinian Lives' New york, 991. ப 150.
11. மஹ்மூத் தார்விஷ், 'கடைசி வானத் திற்குப்பின்...' **மண்ணும் சொல்லும்: மூன்றாம் உலகக் கவிதைகள்,** அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை, 1991. ப.84-85.
12. மஹ்மூத் தார்விஷ், ''அடையாள அட்டை'', அதே நூல் ப. 82.
13. Bora Cosic, ''Reading Hamsun'', INDEX ON CENSORSHIP 4/5, 1994. pp.104-106.


□□



படிப்பகம்

www.padippakam.com

# மாறுபட்ட சூழலிற் சுய அடையாளத்துக்கான தேடல்

—சி. சிவசேகரன்
(பிரித்தானியா)

எல்லாமே காலத்துடன் மாறுகின்றன என்று அறிவோம். ஆனாலும் சில விஷயங்களுக்கு மாற்றமில்லாத நிரந்தரத் தன்மையை வழங்குகிறோம். மதம், மொழி, பண்பாடு தொடர்பான விஷயங்களில் மாற்றங்களைப் பலர் விரும்புவதில்லை. விஞ்ஞானமும் பிற அறிவுத் துறைகளுங் கூட மாற்றங்களை எப்போதுமே மனமுவந்து ஏற்றதில்லை. ஆயினும் மனித சமுதாயத்தில் மாற்றம் தவிர்க்க முடியாதது. மனித விருப்பத்தின் காரணமாக ஏற்படும் மாற்றம் அவ்விருப்பத்தை அனுசரித்தே ஏற்பட அவசியமில்லை. மனித சமுதாயத்தின் விருத்தி மனிதருக்கும் அவர்களது சூழலுக்குமுடையிலான முரண்பாட்டினூடு நடைபெறுகிறது. தனிமனிதருக்கும் சமுதாயத்திற்கு மிடையிலான உறவு முரண்பாடுகளையுடையது. சமுதாயத்தில் மாற்றத்தை நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் வேண்டுகிறோம். நாம் வேண்டும் மாறுதல்கள் நமக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவின் தன்மையாலும் சமுதாயத்தின் முரண்பட்ட கூறுகளில் நாம் எங்கு நிற்கிறோம் என்பதாலும் முடிவாகின்றன.

**மாற்றம் பற்றிய நிச்சயமின்மை**

அடிப்படையான மாற்றத்தை விரும்புவோர் கூடச் சமுதாயத்தை முற்றாக அடையாளந் தெரியாத விதமாக மாற்ற முனைவதில்லை. சமுதாயத்தின் சில பண்புகளைப் பேணவும் மேலும் வளர்த்தெடுக்கவுமான தேவையை அவர்கள் ஏற்கிறார்கள். பேண வேண்டிய பண்புகள் எவை என்பது பற்றிக் கருத்துக்கள் வேறுபடலாம். மாற்றம் அவசியம் என்று உணரப்படும் விஷயங்களில் மாற்றத்தால் நன்மையடையக் கூடியவர்கள் தயக்கங் காட்டும் நிலைமைகளை நாம் காணலாம். சில சமயம், புரட்சிகரமான மாற்றங்கள் பற்றிய பிரகடனங்களை முன் வைப்பவர்கள்கூடப் பெண்ணுரிமை, பண்பாடு, குழந்தைகளது உரிமை, மனிதச் சுற்றாடல் போன்ற விஷயங்களின் பழமை பேணுவோராகக் காணப்படலாம். பெண் விடுதலைப் பற்றிப் பெண்கள் மத்தியில் உள்ள எதிர்ப்புணர்வும் இடதுசாரிகள் சிலர் மத்தியில் உள்ள மனத்தடைகளும் வெவ்வேறு அடிப்படைகளினின்றும் பிறந்தவை யானாலும் மாற்றம் பற்றிய நிச்சயமின்மை ஒரு பொதுவான அம்சம். ஒரு ஆங்கிலப் பழமொழியைச் சிறிது திரித்துச் சொன்னால் ''தெரியாத தெய்வத்தை விடத் தெரிந்த பிசாசு பிழையில்லை'' என்ற மனப்பாங்கையே நாம் இங்கு காண்கிறோம்.

மாற்றம் பற்றிய நமது பயங்களையும் மனத்தடைகளையும் நாம் பலவிதமாக நியாயப்படுத்த முயல்வதுண்டு. எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட மாற்றம் சமுதாயத்துறகு நல்லதா, இல்லையா என்ற வாதத்துக்கு நாம் தயாராக இல்லாதபோது மரபும் வழக்கங்களும் கலாச்சாரமும் நமது அளவுகோல்களாகின்றன. சில சமயம் நியாயமான வாதங்கட்கெதிரான ஆயுதங்களாக எழுகின்றன. நமது வாழ்க்கை முறையில் ஏறபடும் மாற்றம் சமுதாயச் சூழலில் ஏற்படும் மாற்றங்களையொட்டி நடக்கும் போதே, நம்மாற் புதிய நிலைமைகட்கு முகங்கொடுக்கச் சிரமாக இருக்கிறது. சுய விருப்பத்துடன் கிராமத்தினின்று நகரத்துக்குப் போகிறவர்கள் கூட, மொழி, மதம் போன்ற பிரச்னைகள் இல்லாமலே, புதிய சூழலிற் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளத் திணறுவதுண்டு. முற்றிலும் ஆயத்தமற்றநிலைமையில் தன் எணணங்கட்கும் எதிர்பார்ப்புகட்கும் மாறாக ஒருவர் இடப்பெயர்ச்சிக்கு ஆளாகும் போது அவர் முகங்கொடுக்கும் பிரச்னைகள் பல.

ஒரு அயல் நாட்டின் சமுதாயம் அந்நியர்களது வருகையைச் சகித்துக் கொள்ளககூடும். அந்நியர் தனிமனிதர்களாக வந்து சமுதாயத்தின் ஒரு பகுதியாக நாளடைவில் மாறும் வாய்ப்புகளும் இருக்கலாம். மொழியாலும் மதத்தாலும் பண்பாட்டாலும் இனத்தாலும் வேறுபட்ட மக்கள் கணிசமான தொகையினராக வரும்போது, அவர்களது



படிப்பகம்

அயற்தன்மை சில பிரச்னைகட்கு வழிகோல முடியும். ஒரு நாட்டின் அரசியற் சமுதாயப் பாரம்பரியங்களும் பொருளாதார நிலையும் உற்பத்தி உறவுகளின் தன்மையும் அகதிக ளாகவோ உழைப்புத் தேடியோ உழைப்புக் கான தேவை காரணமாக வரவழைக்கப் பட்டோ வரும் அயலவர் பற்றிய கண்ணோட்டத்தைத் தீர்மானிக்கின்றன.

**சுய அடையாளத்துக்கான நிர்ப்பந்தம்**

வெள்ளை இன மேம்பாடு பற்றிய உணர்வு மிக்க ஐரோப்பிய சமுதாயங்கள் பலநூறு வருட காலமாக வாழ்ந்த யூத இனத்தவர் பற்றிய குரோத உணர்வை இன்னமும் ஒழிக்க வில்லை. நாடோடிகள் (ஜிப்ஸி) பற்றிய தவ றான கருத்துக்களும் பகைமை உணர்வும் இன்னமும் பரவலாக உள்ளன. பிற ஐரோப் பிய நாட்டு அகதிகள் மீதும் 'அதிதி உழைப் பாளர்' மீதும் இச்சமுதாயங்களில் பொருளா தார நெருக்கடி ஏற்படும் போது தொடுக்கப் படும் தாக்குதல்களை நாம் அறிவோம். இவற்றுக்கான காரணங்களையோ தீர்வு களையோ நான் இங்கு காணவோ காட்ட வோ முனையவில்லை. இந்த யதார்த்தமான சூழல் நம்மீது ஒரு சுய அடையாளத்தைத் திணிக்கிறது. கறுப்பன், அந்நியன், அகதி என்றே நாம் காணப்படுகிறோம்.

மேற்கூறிய விதமாகத் திணிக்கப்படும் சுய அடையாளத்தை ஒரு அரசியல்ரீதியான சுய அடையாளமாக்கிச் சகல ஒடுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்களையும் இணைக்கும் முனைப்பு இருந்தாலும், அயலிலிருந்து வந்த சமுதாயங்கள் போன்று தமிழர்களும் தமது தாய் மொழி, பிறந்த மண், மதம் என்ற அடிப்படையிலே தமது சுய அடையாளத் தைப் பேண முற்படுகின்றனர். இவ்வாறு சுய அடையாளத்தைப் பேணும் தேவை இரண்டு வேறுபட்ட காரணங்களால் ஏற்படு கிறது. அந்த நாட்டின் மக்களுடன் ஒரு பகுதியாகக் கலக்க முடியாத நிர்ப்பந்தம், குறிப்பாகச் சொன்னால் நிராகரிப்பு, ஒரு காரணம். மறுநது, நாடு பெயர்நதாலும் நீக்கிவிட முடியாதபடி மனிதரின் ஒரு பகுதி யாக அமைந்துள்ள பழைய சுய அடையா ளத்தின் பல் வேறு அம்சங்கள்.

அயல் நாட்டிற் குடியேறி அதில் ஒரு பகுதி யாகி விடுவதாகத் தீர்மானித்தவர்களும் தமது சுய அடையாளம் பற்றிய பிரச்ச னையை எளிதாகத் தீர்க்க இயலாதவர்களா கின்றனர். அகதிகளாக வந்தவர்களது பிரச்னை சங்கடமானது. எதிர் காலம் பற்றிய நிச்சயமின்மையால் ஒரு புறம் தமது பழைய சுய அடையாளத்தைப் பேணும் நிர்ப்பந்தத்தாலும் மறுபுறம் புதிய சூழலின் யதார்த்தத்துக்கு ஈடுகொடுக்க வேண்டிய தேவையாலும் ஒரு கலாச்சார இழுபறிக்கு உள்ளாகின்றனர்.

பழக்கப்பட்ட குடும்ப உறவுகளும் தொழில் உறவுகளும் சமுதாய உறவுகளும் புதிய சூழ லில் உள்ளவற்றினின்று வேறுபட்டவை என்பதை அறிந்தாலும் நமது அணுகுமுறை களை மாற்றுவது எளிதல்ல. ஒரு பெண்ணும் குழந்தைகளும் எவ்வாறு குடும்பத் தலைவனு டைய ஆணைக்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டும் என்பது பற்றிய நமது ஆணாதிக் கக் கோட்பாடுகளைப் புதிய சூழலிலும் குருட்டுத்தனமாகப் பிரயோகிக்கிறோம். சாதி வேறுபாடுகளும் சமுதாய அந்தஸ்து பற்றிய பம்மாத்துக்களும் நம்முடனே கூட இருக்கின்றன. நமது உணவுப் பழக்க வழக் கங்களையும் மாற்றிக் கொள்வதும் நமக்கு எளியதாக இல்லை.

**சூழலின் பிரச்சனைகள்**

நம்மைச் சூழவுள்ள சமுதாயத்தில் நாம் ஒரு பகுதியாகுவது பற்றிய அச்சமும் நிச்சயமின் மையும் நமது சுய அடையாளத்தைப் பழைய சூழலில் இருந்தவாறே பேணுமாறு நிர்ப்பந் தித்தாலும், அன்றாடத் தேவைகள் சில மாற் றங்களைப் புகுத்துகின்றன. பெண்கள் வேலைக்குப் போவதும் தனித்து வாழ்வோர் (முக்கியமாக ஆண்கள்) தொகையின் பெருக் கமும் பிள்ளைப் பராமரிப்பின் பிரச்சனை களும் ஏற்படுத்தும் சிக்கல்கட்கு நமது மரபின் அடிப்படையிற் தீர்வுகளைக் காண முடியாது.

பெண்களே சமையல் முதல் குழந்தை வளர்ப்பு வரை சகல வீட்டுப் பொறுப்புக் களையும் ஏற்க வேண்டும் என்ற எதிர் பார்ப்பு வேலைக்குப் போகும் பெண்கள் மீதும் சுமத்தப்படுகிறது. பிள்ளைப் பராம ரிப்பு, சமையல், வீட்டு வேலைகள் போன்ற அலுவல்களில் ஆண்கள் பங்குபற்றுவது அவர்களது ஆண்மைக்கு இழுக்கு என்ற மனோபாவம் இதற்கு ஒரு முக்கிய காரணம். பிள்ளைப் பராமரிப்புப் பற்றிய கருத்துக் களும் குழந்தைகளது உரிமைகள் பற்றிய கருத்துக்களும் மிகவும் பின்தங்கிய நிலையி லேயே உள்ளன. குழந்தைகளை அடிப்பது அவசியம் என்ற கருத்து ஏறத்தாழ விதி விலக்கின்றிக் கடைப்பிடிக்கப் படுவதாகவே தெரிகிறது. அதே வேளை, குழந்தைகளின் நச்சரிப்புத் தாங்காமற் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பழக்கமும் பரவலாக

www.padippakam.com

உள்ளது. பெற்றோருக்கும் பிள்ளைகட்கு மிடையிலான உறவின் தன்மை நமது மரபுக் கொத்தாக இருப்பதை நாம் விரும்பு கிறோம். திருமண வயது வரையும் (சில வேளை அதன் பின்னரும்) பெற்றோர் சொற்படிவைப் பிள்ளைகளிடம் எதிர்பார்க் கிற நாம், அந்தவிதமான உறவைச் சாத்திய மாக்கிய சூழல் இங்கே இல்லை என்பதை மறந்து விடுகிறோம். அதுமட்டுமல்லாமல் இலங்கையிற் கூட நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டதை நாம் நினைப்பதில்லை.

**பொழுது போக்கும் கலை முயற்சிகளும்**

பொழுதுபோக்கு என்பது புலம் பெயர்ந்த சூழலிற் பிரச்னைக்குரிய விஷயமாகி விட் டது. அயல், அண்டை என்ற பழைய சுற்றா டல் இல்லாத நிலையிற் குடும்பங்கள் தனித்தே இயங்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, நமது கலையுணர்வின தும் பண்பாட்டினதும் மேம்பாட்டுக்கோ நமது உலக அறிவினதும் சமுதாய உணர் வினதும் மேம்பாட்டுக்கோ நமது உலக அறி னதும் சமுதாய உணர்வினதும் வளர்ச் சிக்கோ உதவாத பொழுதுபோக்குச் சாத னங்களையே நாம் பெரும்பாலும் நாடுகி றோம். நாம் படிக்கும் பெருவாரியான பத்திரிகைகள் நம் வாழ்வுக்கு அயலான வாயும் தரத்திற் தாழ்ந்தனவாகவும் இருப் பதும் கவனிக்கத்தக்கது.

நம்மிடையே, உயரிய தரமுள்ள பொழுது போக்குகள், கலை முயற்சிகள் என்ற பாங்கில் அமைவன அதிகம் இல்லை. ஆயினும் கருநாடக இசை, இந்திய நடனம் ஆகிய துறைகளில் ஓரளவு வசதி படைத்த நடுத்தர வகுப்பினரது அக்கறை குறிப்பிடத் தக்கது. இங்கும், ஆக்கரீதியான கலை வளர்ச்சி என்ற நோக்கை விட, எல்லாரை யும் போல எங்கள் பிள்ளைகளும் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தாலும் நமது பண்பாடு என்பது எப்போதைக்கும் மாறாத மரபு சார்ந்த ஒரு வஸ்து என்ற மனோ பாவத்தாலும் வழி நடத்தப்படுகிறோம். தரமான கலை முயற்சிகள், புதிய ஆக்கங்கள், நவீனத்துவம் நோக்கிய நகர்வுகள் என்று குறிப்பிடத்தக்கவை மிகச் சிறுபான்மை யோரது கவனத்தையே ஈர்க்கின்றன.

நமது கலை முயற்சிகள் மட்டுமன்றிச் சடங் குகள், விழாக்கள், வைபவங்கள் யாவுமே 'சாதனைகள்' பற்றிய நமது வக்கிரமான ஆர்வத்தால் உந்தப்படுவதை நாம் உணர் கிறோம். அரங்கேற்றங்களும், திருமண விழாக்களும், கோயில் உற்சவங்களும் மேலும் மேலும் ஆடம்பரமாகவே நடைபெறு கின்றன. ஆயினும் இவற்றின் சாராம்சம் நமது அன்றாட வாழ்வுடனும் சமுதாயச் சூழலுடனும் உறவற்ற இறுகிப் போன ஒரு இறந்த காலத்திலேயே பொதிந்திருக்கிறது. நமது மரபின் மேன்மை பற்றி எந்த ஒரு வெள்ளையனேனும் புகழ்ந்து பேசினால் நாம் அது பற்றிக் குதூகலிப்பதும் நமது மொழி கலைகள், மதம் என்பனவற்றின் மேம்பாடு பற்றித் திரும்பத் திரும்ப நமக்குள் ளேயே பேசிக்கொள்கிற அரை உண்மை களும் நமது தாழ்வு மனப்பான்மையின் தோற்றப் பாடுகளே.

நமது மரபு பேணல் சடங்குத் தனமாகவே நடைபெறுகிறது. நம் மரபு என்ன என்ற தெளிவோ அதன் சாராம்சமோ அது புதிய சூழலுக்கேற்ப மாற வேண்டிய தேவையோ பற்றிய அக்கறை நம்மிடம் இல்லை. அது மட்டுமின்றி நமது பழைய சமுதாய வழக்கின் இழிவான சில அம்சங்களை இன்னமும் பேணுகிறோம். சாதி மதவேறு பாடுகள், சீதனமுறை என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. சோதிடம், புதிதாக முளைத்துள்ள எண் சோதிடம் என்பன போன்ற குருட்டு நம்பிக்கைகளும் மூடநம் பிக்கைகளும் நமது வாழ்வில் இன்னமும் ஆதிக்கஞ் செல்கின்றன. நிசவாழ்வின் தேவைகள் அவற்றுக்கு எதிராகச் செல்லும் போது நாம் அவற்றை விட்டுக் கொடுத் தாலும் அவற்றின் மீதுள்ள பிடிப்பு நம்மை விட்டு விலகுவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

வசதியின்மை போன்ற தாக்கங்களும் சேர இந்த முதல் தலைமுறையினர் அல்லாடிப் போனார்கள். இவர்களது அனுபவங்கள் தனித்துவமானவை. இவற்றிலிருந்து விடுபட இவர்கள் உடனடியாக வேலைகளில் சேர்ந்தார்கள். அக்காலத்தில் வேலை பெறுதல் இலகுவாக இருந்தது. பெரும்பாலும் எம்மவர்கள் பெற்ற வேலைகள் 1) உணவுக் கூடங்களில் எடுபிடியாளர் 2) துப்பரவாளர் 3) விளம்பரப் பத்திரிகைகள் விநியோகிப்பவர்-ஆக இருந்தன. தசாப்தம் தாண்டிய அனுபவம் கிடைத்த தற்போதைய வேலையிலும் எம்மவர்களில் பெரும்பாலானோர் செய்யும் வேலைகள் இவையாகவேயுள்ளன.

தவிர, குறுக்கு வழிகளில் நிறையப் பணம் சம்பாதிக்க சிலர் விரைந்திருக்கின்றனர். 1) போதைவஸ்து கடத்தல் (இதனால் கணிசமான அளவில் உலகின் சகல சிறைகளிலும் எம்மவர்கள் வருடங்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் தற்போது இவ்வகைச் செயல்கள் இல்லையென்று சொல்லலாம்.) 2) புதிய அகதிகளுக்கு வழிகாட்டியாகச் செயல்படுதல். (வெவ்வேறு நாடுகள் வழியாக ஆட்கடத்தல் அகதி விண்ணப்பம் தயாரித்துக் கொடுத்தல் போன்ற தரகு வேலைகள்-இன்றும் இத்துறையில் ஈடுபடுபவரே நிறையச் சம்பாதிக்கின்றார்.)

காலம் கரையத் தொடங்க தாம் தெரிவு செய்த வேலைகளூடாக அனுபவம் பெருகியது. நடைமுறைப் பேச்சு மொழியைக் கற்றுக் கொண்டனர். உணவுக் கூடங்களில் தயாரிப்பு முறைகளில் நடக்கும் தில்லு முல்லுகளும்; ஊதியம் வழங்கல்களில் முதலாளிமார்களின் ஏமாற்றுகளும்; விளம்பரப் பத்திரிகைகள் போடலில் வீதிவீதியாகப் பெற்ற அனுபவங்களும் ஐரோப்பியக் கனவைச் சிதறடித்தன. ஐரோப்பியர்களின் உள்ளக வேலைகளில் (மனித உணவு தயாரிப்பு, சுத்திகரிப்பு) ஈடுபட்ட நம்மவர்களை நாற்றம் அடித்துத் தாக்கியது. நிஜ ஐரோப்பாவின் உட்சாரம் புலப்பட்டது எனலாம்.

இதே வேளை, வேறு பல நாடுகளில் தங்க நேரிட்ட தம் உறவினர், நண்பர்கள் வாயிலாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் சூழல், பழக்க வழக்கங்கள், பண்பு-கலாச்சாரம், மொழிப்புலன், நாணயமாற்று, வேலைவாய்ப்பு, குடியேற்ற வாய்ப்பு போன்ற பல அறிவு வளர்ச்சியடைந்தது. ஐரோப்பிய நாடுகளெல்லாம் நகரங்களாகி, நகரங்களெல்லாம் பக்கத்தூர்களாக எம்மவருக்கு எண்ணப் பதிவைக் கொடுத்தன. தாம் கற்ற பூமிசாத்திரம் மிக மிக இலகுவானதாக நிஜவாழ்வில் புரியப்பட்டது.

இவ்வகை அனுபவ அறிவால் முதல் தலைமுறையினர் 80 களின் கடைசியில் ஒரு விழிப்புணர்வை பெற்றுக் கொண்டனர்.

1) ஐரோப்பிய நாடுகளில் எங்கே யென்றாலும் வதிவிட உரிமத்தைப் பெறல்—அந்த நாட்டு மொழியைக் கற்றுக் கொள்ளல்

2) கிடைக்கும் வேலைகளைச் செய்தல்-பணச் சேமிப்பைப் பெருக்குதல்.

3) தொழில் கல்வி பெறல்-அதிக ஊதியம் கிடைக்கும் தொழிலைப் பெறல்.

இவ்வகைச் செயல்கள் இன்று அடுத்த தலைமுறையினராலும், 2ம் தலை முறையினராலும் தொடரப்படத் தொடங்கிவிட்டன. இங்கு வாழும் 2ம் தலை முறையினர் இலகுவில் மொழியறிவைப் பெற்று விடுகின்றனர். இங்கு பலரின் குடும்பங்களில் அவர்களின் (குழந்தைகளே) 2ம் தலைமுறையினரே மொழி பெயர்ப்பாளராக இருக்கின்றனர். இந்த 2ம் தலைமுறையினர் ஆங்கிலம் கற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல கணிசமான பகுதியினர் திடீர் திடீரென கனடா,அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

[1. முதல் தலை முறையினர் : ஐரோப்பிய நாடொன்றில் தம் உறவினரோ,நண்பர்களோ வின்றி குடியேறியவர்.

2. அடுத்த தலைமுறையினர் : ஐரோப்பிய நாடொன்றில் உறவினர், நண்பர்கள், உதவிகள், ஒத்தாசைகளுடன் குடியேறியவர். இங்கு குடிபெயர்ந்த முதல் தலை முறையினரின் மனைவி மற்றும் 13 வயதின் மேல் பிராயம் உள்ள வாரிசுகளும்.

3. 2ம் தலை முறையினர் : முதல் அல்லது அடுத்த தலைமுறையினரின் இங்கே பிறந்த அல்லது 12 வயதுக்குட்பட்ட குடியேறிய வாரிசுகள்.]

முகிழ்ந்து போன முதலாளியக் கலாச்சாரப் பூமியின் பண்பு அளவுகோலுக்கிணங்க, ஒருவர் தன் வங்கியிருப்பைக்கொண்டே மதிப்பிடப்படுகிறார். இதை அவர் எப்படிப் பெறுகிறார் என்பது அலசப்படுவதில்லை,



படிப்பகம்

www.padippakam.com

இதற்கமைய நம்மவர்களும் தம் வங்கியிருப்பை அதாவது சேமிப்பை வளப்படுத்தும் கைங்கரியங்களில் போட்டிபோட்டுக்கொண்டிருக்கின்றனர். தம் இருப்பின் உயர்வைப் பறை சாற்றிடும் கோரிக்கை நிகழ்ச்சிகளும், விருந்து உபசாரங்களும்,விளம்பரப்படுத்தும் பாங்கும் இன்றைய நிகழ்ச்சிப் போக்குகளாகி விட்டன. இவ்வகையில் இங்கு கணிசமானவர்கள் மேல்மட்ட நடுத்தரவர்க்க உணர்வைப் பெற்றுவிட்டனர். பிரான்சில் சொந்த வீடு வாங்கவும், வாடகைக்கு விடவும், சிறுவியாபாரங்கள் - வியாபார நிலையங்கள் நிறுவவும், ஏற்றுமதி—இறக்குமதி செய்யவும் தொடங்கி விட்டனர்.

பிரான்சில் தனி நபர் ஒருவரின் வறுமைக் கோட்டு எல்லை 2,250/FF எனவும், ஒரு குடும்பமொன்றின் மிகக் குறைந்த வருமானம் 5,100/-FF எனவும் இருக்க வேண்டுமென மதிப்பிடப்படுகிறது. அகதியாகக் காலடி பதிக்கும் எவரும்ம இந்த வறுமைக் கோட்டின் கீழ் இருந்தே மேல் எழும்புகின்றனர். கம்யூனிச உலகம் தொடர்பான பனிப் போர் காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட சமூக உத்தரவாதங்கள் பலவும் இன்று அரசால் கைவிடப்பட்டு வருகின்றன. எகிறி வரும் வேலையில்லாப் பிரச்சனைகளும், பிச்சைக்காரர்களின் பிரச்சனைகளும் நாட்டில் மனித நேய விரும்பிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதனால் மிகக் குறைந்த அளவில் தற்போது அங்கீகரிக்கப் படும் அகதிகள் பிரச்சனைகள் பாராமுகமாகி அல்லாடுகின்றன. தீவிரமாக வளர்ந்துவரும் வலதுசாரிகளின் போக்கு அந்நிய நாட்டார் வருகையின் மீது கோரமாக பார்க்கிறது.

அகதியாக விண்ணப்பிக்கும் ஒருவரிடம் என்ன தனித்துவமான திறன்கள் இருந்திருப்பினும் அவர்களுக்கு மொழியறிவு இல்லாத பட்சத்தில் 'பே...பேப் பே...' என்றே இங்கு வேலை தேடிக்கொடுக்கும் முகவர் நிலையங்களால் பார்க்கப்படுகின்றன. இங்கே எந்த வேலை என்றாலும் அதற்குச் சான்றிதழ் கோரப்படும். இச்சான்றிதழ்கள் பிரஞ்சுப் புலன் சார்ந்தவையாயின் முன்னுரிமை பெறும். ஆக இங்கே அகதியாகக் குடியேறியவர்கள் 1) பிரஞ்சு மொழிப் புலன் நாடுகளில் இருந்து வந்தவர்கள் 2) ஐரோப்பிய மொழிப் புலன் நாடுகளில் இருந்து வந்தவர்கள் 3) ஏனையவர்கள் என்ற பாகுபாட்டுடன் வேலை தேடிப் போகையில் பிரிக்கப்படுகின்றனர்.

இங்கே, முதல் தரப்பினர் மொழியறிவு பெற்றுள்ளவர்கள். ஆனால் சில வேளைகளில் எழுதத்தெரியாமல் இருக்கலாம் 2ம் தலை முறையினர் விரைவில் (ஐரோப்பிய மொழியறிவின் திறனால்) பிரஞ்சு கற்று வருகின்றார்கள். 3 ம் தரப்பில் அமைந்த எம்மவர்கள் கடும் சிரமத்தின் மத்தியிலேயே மொழியறிவைப் பெறுகின்றனர்.

பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தம் பணத்தை வங்கிகளிலேயே வைப்பிலிடுகின்றனர். உலகப்போர் கொடுத்த அனர்த்தங்களின் விளைவால்பெரும்பாலான மக்கள் அரசையும், வங்கிகளையும் நம்புகின்றனர். இங்கு அரசிடம் பணமுண்டு. மக்களிடம் செக் புத்தகங்களும், வங்கிகளின் தானியங்கிப் பொறிகளில் பணமெடுக்க உதவும் நீல, மாஸ்டர், வின அட்டைகளுமே உண்டு. இங்கே ஒருவர் பணம் பெறவேண்டுமாயின் முன்கூட்டியே வங்கியில் இருப்பிலிட்டிருக்க வேண்டும். இந்த நவ முதலாளிய கலாச்சார உலகின் பண்புகளுக்கமைய பல்வேறு விளம்பர உத்திகளின் வியாபார நுகர்வுகளில் சிக்கியவாறு ஒவ்வொருவரும் இயந்திர மனிதர்களாகத் தவிக்கின்றனர். இதை ஒரு அழகு நிலைச் செயலாக (Style) மூன்றாம் உலக நாட்டு தொலைக்காட்சிப் பெட்டிகளில் நம்மவர்கள் மருண்டு போய்ப் பார்க்கின்றனர்.

நம்மூர் வங்கிகள் போல் இங்கே அதிகவட்டி கிடைக்காது. மில்லியன், மில்லியாட் பிராங்குகளில் வைப்பிலிட்டால்தான் சாதாரண செலவுகளுக்கான வருவாய் கிடைக்கும். பிரான்சில் எத்தனை மில்லியனர்கள் இருக்கிறார்கள்? பிரான்சில் மாதாந்த வருமானம் 5100/-FF இனைப் பெறமுடியாத குடும்பங் 37.7%, வேலை இல்லாதிருப்போர் 25% என புள்ளிவிபரத் தகவல்கள் சொல்கின்றன. பிரான்சில் குடியேறிய நம்மவர்கள் தசாப்தம் தாண்டிய அனுபவங்களைக் கண்டிருந்தாலும், 'ஒரு மூடிய தனித்துவமான வாழ்வோட்டத்திலேயே' இருப்பதாகச் சுட்டப்படுகின்றது. இங்கே பிரஞ்சுப் பிரஜைகளுடன் இரண்டறக் கலத்தலில் பின்வாங்குகின்றனர். குடியேறிய நம்மவர்களது மதிப்பீட்டில் மட்டுமே ஒரு மேல்மட்ட நடுத்தர வர்க்கம் உருவாகியுள்ளது. பிரான்சின் பொருளாதார அளவுகோட்டில் பார்த்தால் கீழ் நடுத்தரவர்க்க நிலையிலேயே கணிக்க முடியும். உணவு முறைகளில் அதிக மாற்றம் கொள்ளவில்லை. இலங்கைத்தீவுடனான தொடர்புகளை தொடர்ந்தும் பேணுவதனூடாக இலங்கைக் காசின் மதிப்பில் (பல்கிப் பெருகும் நாணய மாற்று வீதததால்) உயர்வாகி இருப்பதை மனத்திருப்தியுடன் நுகர்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அதிக சேமிப்பை நோக்கமாகக் கொண்டு மிகவும் சிக்கனமாக வாழ்கிறார்கள். சேமிப்பைவலுப்படுத்த முறைசாரா சேமிப்பு முறைகளில் அமைந்த 'சீட்டு' முறைகள் நம்மவர்களுக்கு பொருளாதாரக் கூட்டு வாழ்வை அமைத்துள்ளது. மிகக்குறைந்த வட்டிகள் வழங்கும் வங்கிச் சேமிப்புகளில் வைப்பிலிடுவதை பெரிதும் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால் முறைசார வட்டி முறைகளில் 'அடகுவைத்தல் முறை' நிறைய சம்பாதிக்கின்றனர். இங்கே மாதவட்டியா 5% முதல் 7½% வீதம் வரை பெறப்படுகிறது (அதாவது வருட வட்டி 60% முதல் 90% வரை). மாதாந்த வருவாயில் சேமிப்பைப் பெறவேண்டி கூட்டு வாழ்வில் ஈடுபடுகின்றனர். சாதாரண 8' × 8' அறையொன்றை 4 பேர் பகிர்ந்து கொள்கின்றனர். தனியான வீட்டு வாடகையின் பெறுமதியின் தாக்கத்தை ஈடு செய்ய ஒரு குடும்பத்தினர், ஒன்று அல்லது இரண்டு தனிநபர்களை தங்க அனுமதிக்கின்றனர் இதனால் நம்மவர்களுக்கு ஒரு மூடிய தனித்துவமான மனோநிலை உருவாகின்றது.

இங்கே தகுந்த சான்றிதழ் இல்லாத ஒருவரால்8 மணித்தியால வேலை செய்தால் 4,500/FFமுதல் 5,500/-FFவரையிலேயே ஊதியம் பெறமுடியும் இதனைத் தவிர இவரால் மேலதிகமாக 3 மணித்தியால பகுதிநேர வேலை செய்யமுடியும் இதனால் இவரால் 2,000/FF பெறமுடியும். இவ்வேலைகளுக்காக இவர் நாளாந்தம் 2மணித்தியாலம்அல்லது 3 மணித்தியாலம் பயணிக்கிறார். மீதியாகக் கிடைக்கும் 10 முதல் 11 மணித்தியாலங்களில் தூக்கம் மற்றும் தன் சுய தேவைகளில் ஈடுபடுகிறார் ஆக இங்கே நேரம் மிகவும் மதிப்பானது (வேலை கிடைத்தால் மட்டும்.) உணவுக் கூடங்களில் வேலைகிடைத்தவர்கள் (முழுநேர வேலை) நாளந்தம் 11 முதல் 13 மணிநேரம் வேலை செய்கிறார்கள். இவர்களின் வேதனம் 5500/ FF முதல் 6500/-FF வரையில் அமைகிறது.

பாரீஸின் வாழ்வோட்டத்திற்கு மேற்படி வருமானம் போதுமானதல்ல தனி நபர்களாயின் ஓரளவு திருப்தியாக இருக்கும் ஆனால் குடும்பஸ்தர்கள் ஆயின் திண்டாட்டம்தான். இதனால் குடும்பஸ்தர்களின் வாழ்வுத்துணைவியும் வேலை தேடிச் செல்கிறார்.

'பாரீஸில் காலூன்றியவர்களை மெத்ரோ, வேலை, தூக்கம் (Metro, boulot, dodo) என்ற முப்பழக்கச் சுழற்சியில் சிக்குண்டவர்கள்' எனக் கிண்டலாகச் சுட்டப்படுவதில் நிறையவே அர்த்தம் உண்டுதானே.

இலங்கைத் தமிழருக்கு பூர்வீகமாக கூட்டு வாழ்வு அனுபவம் பொதுவாக இருந்ததில்லை. ஆனால் பணச்சேமிப்பின் அவசியத்தால் புகலிட வாழ்வில் கூட்டுவாழ்வின் அனுபவம் தரப்படுகின்றது. இந்தக்கூட்டு வாழ்வும் எழுந்தமானமாக அமைவதில்லை. இலங்கையில் எம்மவர்களது பூர்வீகப் பிரிவுப்பண்புகளுடன் சேர்ந்ததாக புலம் பெயர்கிறது. உறவினர் சேர்க்கை, சாதீய மனோபாவம், பிரதேச மனோபாவம் என்பன மீள்படைப்பாக்கம் பெறுகின்றன. இப்பண்புகள் சாம்பல் பூத்த தணல்களாக வெந்து கொண்டிருக்கின்றன.

அகதிவாழ்வின் பொருள்தேடும், உழைப்பை விற்கும் போட்டியில் இருவகைப் பிரிவினரின் செயல்களைக் காணமுடிகிறது. 1) ஊரில் உழைப்பை விற்று பிழைத்தவர்கள் 2) ஊரில் மூலதனச் செருக்கிலும், சொகுசு வேலை செய்தலிலும் வாழ்ந்தவர்கள்.

இங்கே முதல் தரப்பினருக்கு புலம்பெயர் விடங்களில் உழைப்பை விற்றலில் அதிக சிரமம் இருக்க வில்லை. தம் அனுபவ முதிர்ச்சியான வேலைத்திறனால் இவர்கள் வருவாய் பெறும் திறனில் உயர்ந்தார்கள். ஆனால் இரண்டாம் தரப்பினருக்கு உழைப்பு விற்றல் இலகுவானதாக இருக்கவில்லை. கடின உழைப்புக்கு ஈடு கொடுக்காத உடல், மனோ நிலைகள் பலவிதங்களில் தாழ்வுச்சிக்கல்களை உண்டு பண்ணுகின்றன. ஊரில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்கள் தம் கண் முன்னால் இங்கே வருவாய் தேடலில் உயர்வடைவதை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இந்தத் திறனல்களும் போராட்ட வெட்கையால் அடங்கியுள்ளனவாய் பாசாங்கு செய்கின்றன.

மேல்நாட்டுப் பண வருவாயின் தாக்கத்தின் பின் புகலிட இருப்பு எம்மவர்களுக்கு கௌரவப்பட்டங்களாகி விட்டன. இங்கே பணந்தேடல் பிரதானமாக அமைவதால் சடங்குகளில் நிதிசேகரிப்பு என்பது கட்டாயவருகிலாவிட்டது. பிறந்தநினம், மணநாள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பணச்சடங்கு முக்கியமாகிவிட்டது. இவ்வகையான கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் ஒருவர் 200/FF முதல் 500/FF அன்பளிப்பாகச் செலுத்த வற்புறுத்தப்படுகிறார் இத்தொகைகளைக் கொடுக்க குடும்பஸ்தர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய கொண்டாட்டங்களை விளம்பரப்படுத்தவும், உறவினர் நண்பர்கள் விரவிக்கிடக்கும் பூமிப்பந்தின் திசை யெங்கும் மரணச் செய்திகளை அறிவிக்கவும் பத்திரிகைகள் இன்று அத்தியாவசியமாகிவிட்டன. பாரீஸில் இருந்து 'ஈழநாடு', 'தமிழன்' ஆகிய வாரப் பத்திரிகைகளும் கொழும்பிலிருந்து வெளிவரும் வீரகேசரி வாரவெளியீடும் இங்கே பரவலாகக் கிடைக்கின்றன. தவிர இந்தியா டுடே முதல் காமக்கேளிக்கை வரையிலான சகல இந்திய வெளியீடுகளும் உடனுக்குடன் கிடைக்கின்றன. தமிழ் நூல்கள் விற்பனைக்கு 'தமிழாலயம்' என்ற தனிப்புத்தகக் கடை இயங்குகிறது. இதிலிருந்து தமிழ்வாசிக்கப்படுவதை உணரமுடியும். ஆனால் எத்தகைய தமிழ்? இங்கே முற்போக்கு எழுத்துகளும், வெளியீடுகளும், சஞ்சிகைகளும், முயற்சிகளும் இல்லாமல் இல்லை. ஆனால் சிறு குழுக்கள் கையில் சிறுமையாகவே அக்கரைக்கு இக்கரைப் பச்சையாகவுள்ளன.

தவிர, நடிகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், சினிமா, இசைக்கச்சேரிகள, நாடகங்கள், இலக்கிய மாநாடுகள், இந்து மாநாடு, விளையாட்டுப் போட்டிகள், போராட்ட தினங்கள் என்ற பல சந்திப்புகள் தொடர்கின்றன. ஆனால் அகதி வாழ்வு பற்றிய ஆழமான பரிசீலனைகளும், எதிர்காலவாழ்வை வழிகாட்டும் ஆய்வுகளும், மாநாடுகளும் ஏனோ இன்னமும் தொடங்குப்படவில்லை.

பாரீஸில் இன்று வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு இடத்தில் இந்துக்களின் ஆலயம் அமைந்துள்ளது. புதிதாக ஒரு கோயில் கட்டப்பட்டும் வருகின்றது. தவிர எம்மவர்கள் பிரான்சிலுள்ள இரு மாதா கோயில்களுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். சார்ட் மாதா கோவில், லூர்து மாதா கோவில். கோவில் இல்லா ஊரில குடியிருக்க வேண்டாம் என்ற மரபின் தாக்கத்தாலோ என்னவோ, கத்தோலிக்கர் பெருமளவில் வாழும் இந்நாடுகளில் அவர்களின் வழிபாட்டுதலங்களில் ஒன்றாக அமைந்த 'மாதா'-வை அம்மனாக சிருஷ்டித்துக் கொண்டு சமசரப் (Compromise) படுத்திக் கொண்டுவிட்டனர். ஆனால் பிரான்சின் அரசு பாடசாலைகளில் மதம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுவதில்லை; வருடாந்த விடுமுறை தினங்களில் கிறிஸ்தவ முக்கிய தினங்கள் மட டும் இடம் பெறுகின்றன. தவிர, அகதிவாழ்வின் அநாதரவுத் தாக்கத்தினால் கணிசமானவர்கள புதிய மதக் குழுக்களில் இணைந்து வருகின்றனர். யகோபாவா, பெந்திக்கோஸ் போன்றவை இவற்றுள் சில. இக்குழுக்களில் இணைவதால் இருப்பிட வசதியும், அடிப்படைத் தேவைகளும் கிடைக்கின்றன. நகரின் மத்தியில் இவர்களால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் கவனத்திற்குரியனவாகின்றன. யாழ்பகுதியில் 20ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிறிஸ்தவ மத மாற்றத் தாக்கத்தால் விழிப்புற்ற உயர் குடியினரின் எழுச்சியாக ஆறுமுக நாவலரின் இந்துத்வ மறுமலர்ச்சி கருதப்படுவதுண்டு. இவ்வகையான மீள் மறுமலர்ச்சி தற்போது மேலத்தேய நாடுகளில் அகதிகளான எம்மவர்களை நோக்கி 20 ஆம்நூற்றாண்டின் கடைசியில்தோன்றும் சமிக்ஞைகள் பதிவாகிவருகின்றன.

மேல் நாடுகளில் கோயில்கள் கட்டப்பட்டு அல்லது கோயில்களாக சிருஷ்டிக்கப்பட்டு விட்டன. அதிகமானோர் மதவழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். 2ம் தலைமுறையினரின் கலாச்சார வழிகாட்டலுக்கு மதவழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இந்துத்துவ மாநாடுகள் பெரிய அளவில் விளம்பரப் படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றன. 'இந்து' என்ற மத சஞ்சிகை வெளிவரும் முயற்சியும் நடக்கிறது. பாரீஸில் நடைபெற்ற இந்து மாநாடொன்றில் கலந்து கொள்ள வருகைதந்த இலங்கைஅரசு அதிகாரியும், அறிவுஜீவியும், முற்போக்கு எண்ணமுடையவருமான திரு. சண்முகலிங்கம், ''இங்கே பெரும்பாலான அகதிகள் விரக்தி நிலையிலுள்ளார்கள் — ஆனால் தமது நிர்கதியான தன்மையை வெளிப்படையாகச் சொல்லமுடியாமல் திணறுகிறார்கள்'' எனக்குறிப்பிடுவது கவனத்திற்குரியதாகும்.

இந்தப் புலம் பெயர் வாழ்வில் அதிகளவில் இடம் பெறுபவர் ஆண்களே இதனால் சமூக சமனிலை குலைந்துள்ளது. இங்கே குடியேறிய பெண்கள் பெரும் மதிப்பை அடைகிறார்கள். இந்தப் பெருமித உணர்வால் இங்கு பெண்கள அதிக மகிழ்சசியோடும், சுதந்திர உணர்வோடும காணப்படுகின்றனர் எனலாம். இங்கே மூத்த தலைமுறையினரின் அடக்கு முறையன்மையால் குடும்பமாகும் பெண்கள் சுதந்திரத்தன்மை அதிகம் கொண்டுள்ளார்கள். ஐரோப்பிய வாழ்வின் நுகர்வினால் பல்வேறு புதிய அறிவினைப் பெறுகின்றனர். மூடிய கட்டுப்பட்டித்தனமாக வளர்க்கப் படும் எம் சமூகச் சூழலிலிருந்து விடுபட்ட புகலடப் பெண் பாலியல் முதல் அரசியல் வரையில் விரிவான



படிப்பகம்

www.padippakam.com

அறிவைப் பெறும் வாய்ப்பினைப் பெறுகிறாள்.

இங்கே பெண்களின் எண்ணச் செயல்கள் பற்றி தனியாக ஆராய்வதே பொருத்தமானதாக அமையும். ஆனாலும் அனேக குடும்பங்களில் தம் வாரிசுகள் தமிழ் மொழி கற்பதைத் தவிர்ப்பதற்கும், மீண்டும் ஊர் திரும்பும் எண்ணம் (சுற்றுலா எண்ணத்தில் சென்று திரும்பத் தயார்) அற்றதாகவும் இருப்பவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர். இது குற்றச்சாட்டல்ல. ஒரு பார்வையாகும். பணந்தேடும் நேரச் செலவழிப்பில் பெரும்பாலான ஆண்கள் ஏதோ வொன்றைஇழந்ததாக ஒப்புக்கொள்கின்றனர்.

இங்கே கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளவர்கள் 2ம் தலைமுறையினரே பெற்றோரின் பணந்தேடும் வாழ்வோட்டத்தில் திருந்த வழிகாட்டுதல்களின்றி இவர்கள் வளர்க்கப்படுகிறார்கள். வேண்டுமென்றோ அல்லது வசதியினத்தாலோ தமிழ் மொழி அறிவின் தொடர்பினை இழந்து விடுகின்றனர். தாம் கல்விகற்கும் சக மாணவர்களின் செயல்கள் பழக்கவழங்கங்களால் கவரப்பட்டு திசைதெரியாத பயணத்தில் செல்கின்றனர். பெற்றோரின் போதிய பிரஞ்சு மொழித் தெளிவில்லாமையால் விளக்கம் புரியாமல் திணறுகின்றனர். பிரான்சு நாட்டில் 19வயது வந்ததும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் வாலிப உணர்வு அங்கீகாரம் இங்கே பலரைக் கவர்கின்றது. இவர்கள் தங்கள் மனப்பிரச்சனைகளை தம் நண்பர்களுடனும் தம் ஆசிரியர்களுடனும் பகிரும்போது இந்த பிரான்சு மண்வாசனைக்கேற்ற வழி காட்டல்களையே பெறுகின்றனர். இதனால் பணம் சேகரித்தும் பல பெற்றோர் விரக்தி நிலையை அடைந்துள்ளனர்.

புதிய கலாச்சாரப் பாதையில் சுதந்திரமாகப் போக முடியாமலும், பழகிப்போன கலாச்சாரத்தை விடமுடியாமலும் தவிக்கும் இரண்டும் கெட்டான்களாக முதல் தலைமுறையினரும், அடுத்த தலைமுறையினரும் படும் இன்னல்கள் பரிசீலனைக் குரியவை.

லண்டனில் குடியேறிய எம்மவர்களின் மூத்த குடியேற்ற வழிகாட்டிகளான 'டமில்ஸ்' (TAMILS)* பல விடயங்களை விட்டுக் கொடுத்து சமரச வாழ்வொன்றினை எய்திவிட்டார்கள். இவர்களில் பலர் எக் காரணம் கொண்டும் ஊர் செல்லும் எண்ணம் அற்றவர்களாகி விட்டனர். இவர்களிடம் இருக்கும் இன்றைய அச்சம் 'உலகப் போர்'. வதந்திகள் உலகெங்கும் உள்ளவை. எல்லாவிதச் சிக்கல்களில் இருந்தும் சமயோசிதமாகத் தப்பிக் கொண்டவர்கள் என்ற எண்ணம் இவர்களிடம் இருப்பதை பலரும் அறிவர். இந்த உயர் குடிப் பெருந்தகை ஒருவர் என்னிடம் கூறினார், ''மச்சான் ஐரோப்பியர் வாழ்வின் உச்சத்தை நுகர்ந்து விட்டார்கள். இனி இதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். எதிர்காலம் பூமியில் இவர்களின் நலனைச் சார்ந்ததாகவே முன்னெடுப்புக் குள்ளாகும்.'' நண்பரின் கருத்து என்னை பலமாக பாதித்துள்ளது. ஐரோப்பிய சமூகத்துடன் அவரும் ஒருவராகிவிட்டார். ஆனால் அகதிகள் அனைவரும் நுழைவார்களா?

சைரன் ஒலி-மாதத்தின் முதல் புதன் நண்பகல் 12 மணி-பாரீஸ் மாநகரின் தியணைப்பு மையத்தின் மரபின்படி ஒலிக்கிறது. இன்று நேற்றல்ல சுமார் 50 வருட காலமாக 2ம் உலகயுத்த முடிவின் பின் தொடரப்படும் பழக்கம்-தசாப்தம் தாண்டிய யுத்தச் சூழலில் பழகிப் போன என் செவிக்கு வரப் போகும் ஆகாயத் தாக்குதலை எச்சரிக்கும் ஒலியாக ஒரு பிரமை...

---

* 'டமில்ஸ்' : காலனித்துவ காலத்தின் போதும் அதன் பின்னும் காலனித்துவ ஆட்சியாளருக்குச் சேவை செய்தலை பெருமையாக எண்ணியவரும், தமிழ் மொழியை மறந்து ஆங்கில மொழிக்கு மாறியவர்கள். இலங்கை சுதந்தரம் பெற்ற பின், கொழும்பிற்கும் அதன் பின் இங்கிலாந்து, ஹாங்காங், அவுஸ்ரேலியா நோக்கியும் புலம் பெயர்ந்தவர்கள். தமிழ் இழக்காரமான மொழி என்ற கருத்துடையவர்கள்-தமிழ் பற்றி ஆங்கிலத்தில் உரையாடுபவர்கள்-ஆனாலும் தங்களை 'டமில்ஸ்' எனக் குறிப்பிடவும், தாங்கள் வாழும் வீடுகளுக்கு தனித் தமிழ் பெயரை ஆங்கிலத்தில் சூட்டிப் பெருமிதம் கொள்பவர்களாவும் உள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# சரியும் தொழில் வாய்ப்பை சமன்படுத்த புகலிடக் கூலிகளை வெளியேற்ற முனையும் ஐரோப்பா!

—செல்வமதீந்திரன்—

(ஸ்விட்சர்லாந்து)

உலகின் சுபீட்சத்தின் சொர்க்க வாசல்களை திறந்து வைத்த ஐரோப்பாவின் இன்றைய நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. இதன் அடிப்படையே வேலையில்லாப் பிரச்னையேதான். எனினும் ஐரோப்பாவுக்கு தஞ்சமடைந்துள்ள அகதிகளின் நிலையும் இதனை மேலும் சிக்கலாக்கி உள்ளதாக ஐரோப்பிய மக்கள் கருதுகிறார்கள் என அரசாங்கங்கள் கருத்து வெளியிடுகின்றன. இதனால் அகதிகள் மீது நிறவெறி போன்ற பாசிசத்தின் கீழ்த்தனமான தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

எனினும் ஐரோப்பாவில் இராணுவ பொருளாதாரரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளாக கருதப்படும் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்திருக்கும் தமிழ் அகதிகள் தமது எதிர்காலத்தை தொலைத்துக் கொண்டு நிற்கிறார்கள். இந்த நாடுகள் தமது உள்நாட்டு யதார்த்தப் பிரச்னைகளை எதிர்கொள்ளத் தயங்குவதால், அவற்றைத் திசைதிருப்பி அகதிகளை வெளியேற்றினால் எல்லாப் பிரச்னைகளும் சரியாகிவிடும் என்று உண்மைக்குப் புறம்பாக பிரச்னைகளைக் குழப்பிவிட்டுள்ளன. உண்மையில் தேசியவாதம் அல்லது இனவாதம் ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும். எனினும் இந்தப் பிரச்னையை தூண்டிவிடுவதுமிகவும் சுலபமானது.

ஜேர்மனியில் 1932யிலே தலைவிரித்தாடிய பாசிசம் இன்றும் பேய் உருக்கொண்டு வளர்ந்துள்ளது. இது ஒரு மோசமான யதார்த்தத்தின் ஆரம்பமாகவே கொள்ள வேண்டியுள்ளது. இங்கு நாசிகள் பல அகதிகளினை கொன்றும் கொளுத்தியும், உடைமைகளைச் சூறையாடியும் இருப்பது, உலகின் கவனத்தை ஈர்த்தும் கூட ஜேர்மனியின் நிலமையை மாற்றி அமைக்க இயலவில்லை. ஆயினும் ஜேர்மனியில் 8 வீதத்தினர் வேலையிழந்து அல்லது வேலையற்று உள்ளனர். புதிய வேலை வாய்ப்புக்களையோ அன்றி அதற்கான மாற்று வழியையோ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்த முடியவில்லை.

இதைவிட 1990யில் பெல்ஜியத்தில் 70 வீதம் மக்கள் வேலையை இழந்து நின்றனர். அந் நாடே செய்வதறியாது திகைத்தது. அரசாட்சியும் ஆட்டங்காணுமளவு தடுமாறியது. மக்கள் அடுத்த வேளை உணவுக்காக சிந்தித்தனர். அதனால் பெல்ஜியம், அகதிகள் நாடுகடத்தலை ஆரம்பித்தது. அடுத்து ஸ்பெயினில் 1994 வரை 3 மில்லியன் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இது ஸ்பெயினின் மக்கள் தொகையில் 48 வீதமாகும். அந்த நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான தொழில் நிலையங்களின் மூடுவிழா இதுதான். எனினும் 50-60 வயதுக்கு உட்பட்டவர்களும், ஓய்வூதியம் பெறுபவர்களும் கூடுதலான இன்னல்களுக்கு உட்பட்டதுடன், பட்டினி வாழ்க்கைக்கும் பழக்கப்படத் தயாரானார்கள். அயர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளிலும் 66 வீதமானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்தனர். இன்றைய ஐரோப்பாவின் வேலையிழப்புப் பிரச்னைகள் பற்றி ஆராய்ந்த ஐரோப்பிய நலன் காக்கும் கூட்டமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கைகள் திடுக்கிட வைக்கின்றன. "மூன்றாம் மண்டலம் போல் பட்டினிச்சாவை" எதிர்நோக்க இருக்கும் ஐரோப்பிய மக்களின் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வுகள் காணப்பட வேண்டும் என அறிவித்துள்ளது.

பிரான்ஸிலும் இப்போது 27 வீதமானவர்கள் வேலையிழந்துள்ளனர். அரசின் எந்த விதமான உதவிகளும் கிடைக்காத நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் கொலை கொள்ளை போன்ற நாசகார நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். உலகின் தொழில் பகுப்பு வல்லுனர்கள் எனத் தங்களை அழைத்துக் கொண்ட அமெரிக்காவிலும் ஜப்பானிலும் 10 வீதமும் 4 வீதமுமாக வேலையிழப்பு உள்ளது. அதனைச் சீர் செய்யவே இந்த நாடுகள் கடுமையாகப் போராடியும் வெற்றி பெற்றன என்று சொல்ல முடியவில்லை இந்தப் பிரச்னைகளுக்கு ஒரு சரியான தீர்வு காணப்படாத வரையிலும் ஐரோப்பா தனது சுபீட்சத்தை இழந்து கொண்டே இருக்கும் எனலாம்.

எனினும் இவ்வளவு காலமும் மூடி மறைத்துக் கொண்டிருந்த பிரித்தானியாவிலும் வேலையில்லாதவர்களின் பிரச்னையும் அம்பலத்துக்கு வந்து அரசையே நகைப்பிற்கிடமாக்கியுள்ளது. மகாராணியாரின் குடும்பம் வரி செலுத்துவதுடன், பக்கிங்ஹாம் மாளிகையை உல்லாசப் பிரயாணிகளின் பார்வைக்கும் விட்டால் நாட்டை சீர்ப்படுத்தலாம் என்று சில அரசியல்வாதிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் பிரித்தானியாவில் :4,000 தமிழர்கள் வதிகிறார்கள். இவர்களில் 16,500 பேர்தான் அரசியல் தஞ்சம் கோரினார்கள். அதிலும் 130 பேருக்கே அகதி அந்தஸ்து கிடைத்துள்ளது. இங்கு நிறவாதமே அரசோச்சுகிறது ஒரு காலத்தில் உலகையே கட்டியாண்ட இவர்களுக்கு பல சமூக, இன, கலாசார, நிற மக்களுடன் தொடர்பிருந்தது. அத்தகைய தொடர்புடையவர்களும் பிரித்தானியாவில் இன்று வாழ்கிறார்கள் எனினும் பிரித்தானியாவின் குற்றச் செயல்களை அவதானித்தால் அதில் வெளிநாட்டவர்களுக்கு எதிரானதும், நிறவாதத்துடன் கூடிய தாக்குதல்களுமே முன்னணி வகிக்கின்றன.

அடுத்து சுவிஸ் (சுவிட்சர்லாந்து) ஒரு வித்தியாசமாக,பொருளாதாரத் தளர்வை விட்டுக் கொடுக்காமல் இறுக்கிப் பிடித்துக் கொள்ள முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் சுவிஸில் பல விசித்திரமான நகர்வுகள் ஏற்பட்டன.ஐரோப்பியப் பொருளாதார கூட்டமைப்புடன் இணைவதா? இல்லையா? என்பதை தேர்தல் மூலம் தீர்மானிக்கப் போய் தோல்வியைத் தழுவியது. 78 வீதம் மக்கள் கலந்து கொண்ட இத்தேர்தலில் ஆதரவாக 49.7 வீதமும், எதிராக 50 3 வீதமும் கிடைத்தன. இணையக் கூடாது என்பதில் இம்மக்கள் கவனம் செலுத்துகின்றனர். ஏனெனில் இணைவின் போது சுவிஸிற்கு கூடுதலான மக்கள் வேலைவாய்புத் தேடி வருவார்கள். இதனால் ஏற்கனவே அரசையே வங்குரோத்து * நிலைக்கு தள்ளியிருக்கும் வேலையில்லாப் பிரச்னை மேலும் சிக்கலாகும். அத்தோடு உள்ளூர் உற்பத்தியும் பாதிக்கப்படும் நாடும் சீரழிவை நோக்கி தடம்பதிக்கும் என ஐயப்படுகின்றனர். ஆயினும் ஐ.பொ.கூவில் இணையாவிட்டால் சுவிஸ் பாரதூரமாக எதிர்நோக்க இருக்கும் பொருளாதாரப் பிரச்னையை இந்த மக்கள் எந்தளவு புரிந்துள்ளார்கள் என்பது தெரியவில்லை.

1993யின் இறுதியில் சுவிஸில் 1,80,000 தொழிலாளாகள் வேலையை இழந்தனர். இதனால் அரசாங்கம் அகதிகள் மீது நெருக்குதலைத் திணித்தது எனினும் 1994யில் நிலமை மாறி சுவிஸ் பொருளாதாரம் கொஞ்சம் புத்துயிர்க்கத் தொடங்கியுள்ளது. இதற்கு அரசாங்கம் சொல்கிறதுலெபனான், பழைய யூக்கொஸ்லாவிய தவிர்ந்த ஏனைய நாட்டு அகதிகளை ஈவிரக்கமின்றி பலவந்தமாக வெளியேற்றியதாகுமாம். ஆனால் உண்மை அடுத்தபக்கம். அதாவது நாய், பேய்களுடன் எல்லாம் ஒப்பந்தம் செய்து தரகுக் கூலிகள் வழங்கி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தமையாகும். அதனால் தறபோது இலங்கையர்களையும் திருப்பி அனுப்பினால் நல்லது என சுவிஸ் துடிக்கிறது. சர்வதேசத்தின் பார்வையில் தன்னை சமாதான விரும்பியாகக் காட்டிக் கொள்ளும் சுவிஸ், மறுமுனையில் மனித உரிமை மீறல்களையும், சித்ரவதைகளையும் கூடுதலாக நடத்தும் ஒரு மிருகத்தனமான பொலிஸ் நிர்வாகத்தைக் கொண்டுள்ளது என்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் (ஏ.ஐ) அறிக்கையில் சுவிஸ் கடுமையாக கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. எனினும் அண்மையில் நடைபெற்ற 'நிறவாதம் தேவையா?' என்ற தேர்தலில் மிகவும் சொறப பெரும்பான்மையால் தேவையில்லை என தீர்ப்பு கிடைத்ததை சுவிஸ் அகதிகளுக்கு சாதகமாக பிரச்சாரப் படுத்துகிறது. ஆனால் கிட்டத்தட்ட சுவிஸின் அரைவாசிக்கு சொற்பம் குறைவான மக்கள் இனத் துவேஷத்தையும் நிறவாதத்தையும் ஆதரிப்பது வேதனைக்குரிய விடயமாகத் தோன்றுகிறது.

ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களையே மாற்றியமைத்த வல்லமை தமிழ் அகதிகளுக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. டென்மார்கில் தமிழ் அகதி ஒருவரின் குடும்பத்தை

---

* ba krupt



படிப்பகம்

www.padippakam.com

அழைப்பதற்கு நீதியமைச்சர் அனுமதி வழங்காததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை ஆட்டிப்படைத்து இறுதியில் பிரதமர் போல்-ஸஹுற்றரை ராஜினாமா செய்யவைத்தனர். ஐரோப்பாவின் பொது நிறமான வெள்ளைக்கு நேர்மாறான கறுப்பைக் கொண்ட தமிழர்களை இலகுவாக அடையாளங்காணவும் முடிவதால் பிரித்துப் பார்த்தல் தொடர்கிறது. அத்தோடு தமிழர்கள் எந்த நாட்டுக்குக் குடிபெயர்ந்தாலும் தமது பைத்தியக்காரத்தனத்தை பறைசாற்றுவதற்காக முதலில் ஏதோவொரு வெங்காயக் கடவுளுக்கு ஒரு கோயில் கட்டி, உடனே கலாச்சாரக் காப்பாளர்களாகி விடுவார்கள். இப்படியானவற்றால் தமிழர்கள் மீதான தாக்குதல்களும், அவர்கள் பற்றிய கணிப்புகளும் நடைபெறுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

ஐரோப்பாவில் கணிசமான தொகையில் தமிழர்கள் வதியும் நாடுகளில் அந்தந்த நாடுகளில் ஒவ்வொரு 100.000 மக்களுக்கும் எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணிக்கும் ஒரு புள்ளிவிபரம் வெளிவந்துள்ளது. இதனைப் பார்க்கும் ஒரு ஐரோப்பியனுக்கு முதலில் தோன்றுவது நிறவாதந்தானே எனினும் இத்தகையபுள்ளிவிபரங்களின் பார்வை நிறவாதத்தைத் தூண்டுவதாக அமைவது பாதகமான காரணியாகும். டென்மார்க்கில் 114 பேரும், ஜேர்மனியில் 81 பேரும், பிரான்ஸில் 58 பேரும், நெதர்லாந்தில் 87பேரும், நோர்வேயில் 96 பேரும், ஒஸ்ரியாவில் 10 பேரும், சுவிஸில் 447 பேரும், பிரித்தானியாவில் 34 பேருமாக இப்புள்ளி விபரம் செல்கிறது.

கூடுதலாக விகிதத்தைக் கொண்டுள்ள சுவிஸில் 24,739 தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 250 பேர் மட்டுமே தொடர்ந்து வாழும் தகுதி பெற்றுள்ளனர். ஏனையோர் எந்த வேளையிலும் திருப்பி அனுப்பப்படலாம். ஏற்கெனவே வேலையில்லாப் பிரச்னைகளுடன் திண்டாடும் நாடுகளுக்கு புதிய அகதிகளின் வருகை நிலமையை சீர்கேடாக்கலாம் எனக்கருதிய ஐரோப்பிய நாடுகள் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கான சட்டங்களை இறுக்கிக் கொண்டுள்ளன. இதனை பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், சுவிஸ் போன்ற நாடுகள் நடைமுறைப்படுத்தின. அத்தோடு இந்த புதிய சட்ட நிபந்தனைகள் ஐ.நாவின் அகதிகள் கொள்கைக்கு முற்றிலும் மாறுபாடு உடையதால் சர்வதேசக் கண்டனத்துக்கும் ஆளாகியுள்ளன.

ஜேர்மனியில் 1994இல் (யூலையில்) அகதி அந்தஸ்து கோருபவர்கள் 8.730 பேராக குறைந்துள்ளது. எனினும் 1993இல் இதைவிட இரண்டு மடங்கு பெரிய அகதிகள் தொகையினர் அகதி அந்தஸ்து கோரினார்கள். இவ்வருடம் செப்டம்பர் வரை 71,532 பேர் தஞ்சமனு கொடுத்துள்ளனர். இவர்களில் 27,681 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1937 பேர்களுக்கு மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது ஒரு கொடிய நிகழ்வுதான். எனினும் 1993க்கு முன்னர் ஜேர்மனியில் 30,000க்கு அதிகமான தமிழர்கள் அகதி அந்தஸ்து கோரினார்கள். அவர்களில் 12,000 பேர் நிரந்தர வதிவிட உரிமை பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் அன்றிருந்த ஜேர்மனி இன்றில்லை. இனத்துவேஷத்தின் ஒலித்தட்டுகளும், பத்திரிகைகளும் காளானைப் போல் பெருகிக்குவிந்து வருகின்றமை ஒரு வரப்பிரசாதமற்ற நிலமையாகும். இத்துடன் பிரான்ஸில் வதியும் 29.500 தமிழர்களில 22,100 பேர் தொடர்ந்தும் அங்கு வாழ்வதற்கு அரச அனுமதி இருந்தாலும் அகதிகளுக்கான நிதியுதவி வறுமைக் கோட்டிற்கு கீழே நடைபெறுகின்றது.

ஐரோப்பாவுக்குத் தமிழ் அகதிகளின் வருகையும் அதற்கான காரணங்களும் பெரிதாக ஆராயப்படுமளவுக்கு ஐரோப்பாவை ஒன்றும் குழிதோண்டிப் புதைக்கப் போவதில்லைத்தான். இருந்தாலும் சாதாமின் குவைத் மீதான பாசிசக் கெடுபிடியுத்தத்தால் ஐரோப்பா மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது தமிழ் அகதிகள் ஐரோப்பாவில் ஒன்றும் சும்மா வாழ்ந்திடவில்லை. தங்கள் இரத்த வியர்வையைச் சொரிந்து இரவு பகலாக உழைத்துத்தான் தங்களைப் பார்த்துக் கொள்கின்றனர். எனினும் அவர்களுக்குக் கொடுக்கும் அடிமை ஊதியத்திலும் அரசும், குட்டிபூர்ஷ்வாக்களும் உறிஞ்சிக் குடித்துவிட்டுக் கொடுக்கும் சொற்ப தொகையில்தான் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு வாழ்கிறார்கள். இப்படியானவர்களையும் திருப்பி அனுப்புவது தொடர்பாக காட்டுமிராண்டித்தனமாக நடவடிக்கை எடுப்பது கண்டனத்துக்குரியதும் மானிடத்தின் சுய கௌரவத்துக்கு இழுக்கானதுமான கறைபடிந்த செயலாகவே அமையும். இந்தச் சந்தர்ப்பத்திலே ஐரோப்பாவின் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காண்



படிப்பகம்

www.padippakam.com

பதற்கு பதிலாக தமிழ் அகதிகளின் விண்ணப் பங்களுக்கு எதிர்மறையான முடிவுரை வழங்குவது மனிதநேயத்துக்கு விரோத மானது.

தற்போது சுவிஸ்தான் முதல்முதலாக அராஜகமான முறையில் வேலையில்லாப் பிரச்னையை மறைத்து, இலங்கையில் தமிழர்கள் கொழும்புப் பகுதியில் சென்று வாழலாம் என்பதால் அவர்களை வெளி யேற்றுகிறோம் என்று அறிக்கை விட்டுள் ளது இதனை நோர்வேயும் தொடர்கிறது. உள்நாடுகளில் ஏதாவது பிரச்னை நடந்தால் அதற்கெல்லாம் முடிவாக தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் அறிக்கை விடுவது ''சுத்தமான இனவாதமாகும்'' என்று சுவிஸின் பிரத்தி யேக செய்திப் பத்திரிக்கையான ''பிளிக்'' அரசைக் கண்டித்துள்ளது. இந்த நட வடிக்கை இன்று ஐரோப்பா எங்கும் நீக்கமற வியாபித்துள்ளது

ஐரோப்பிய நெருக்கடிகள் தொடரும்போது ஏற்கனவே நெருக்கடிக்கு உள்ளான தமிழ் மக்களைத் திருப்பி அனுப்புவதைத் தவிர்த்து மாற்று வழிமுறை ஒன்றை உருவாக்குவது பற்றி ஆராய்வது மிகவும் பொருத்தமான தாக அமையும் எனலாம். வேலையில்லாப் பிரச்னையுடன் அகதிகள் நிலையும் இணைந் துள்ளமைக்கு காரணம் பொருளாதாரந் தான். இதைத்தான் மார்க்சும் சொன்னார் ''பொருளாதாரந்தான் உலகத்தின் பொதுப் பிரச்னையின் அடிப்படை என்று. இதனால் தான் வர்க்க விடுதலை தவிர்க்க முடியாத தொரு யதார்த்த வடிவமாக நோக்கப்படு கிறது. இலங்கையின் இனப்பிரச்னை சுமுக மான ஜனநாயக வழிக்குத் திரும்பாத வரை திருப்பி அனுப்பப்படும் எந்தவொருஅரசியல் அகதியின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். சுவிஸ் போன்ற ஏனைய ஐரோப்பிய நாடு களுக்கு தமிழ் அகதிகளின் உயிரும், உரிமை களும் மயிராயிற்றுப் போலுள்ளது. எனினும் ஐரோப்பாவில் வாழும் தமிழ் அகதிகள் பலவிதமான நிற, மொழி, கலாசார, பாலியல் ரீதியான போராட்டங்களுக்கு உட்பட்டு சிதைவுகளும் ஏற்பட்டு ஒரு சிக்க லான பரிமாணத்தில் ஆறாத ரணமாக இருக்கிறது. எனினும் இந்த இரு பிரச்னை களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர் பில்லாவிட்டாலும் தொடர்புள்ளதாக சர்வ தேசரீதியில் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது ஆகவே எதிர்காலத்தில் ஐரோப்பாவில் மனிதத் தன்மை மிகவும் மோசமான நிலை யில் இருக்கும் சாத்தியம் உள்ளது எனலாம். □

## புலம் பெயர்ந்த சாதியம்!

—குணா கலைதாஸ்

திரை அரங்கொன்றில் தமிழ் சினிமா பார்க் கலாம் என சென்றிருந்தேன் சனிக்கிழமை யின் மாலை நேரம். சுமார் 10 வருட இடை வெளியின்பின் நண்பனைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது 83 இல் இந்தியாவில் அகதியாக சந்தித்துப் பிரிந்தவர்கள் நாங்கள்

பழைய நினைவுகள் எல்லாம் அலசி முடிந்த பின் யாழ்ப்பாணத்துச் சம்பவங்களில் வந்தடைந்தது கதை. ''அவர்கள் உயிரைக் கொடுத்து போராடுறாங்கப்பா. நாங்கள் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கி றோம்'' என்றார் பெருமூச்சுடன். அவர் வெளிநாடு வந்து 10 வருடமாயிற்று. எனக்கு வெறும் இரண்டு வருடங்கள் தான்.

''என்ன செய்யலாம்'' என்றேன் அமைதி யாக...

''நாங்கள் இனித் திரும்பிப் போக முடியு மென்று நினைக்கிறாயா'' என்றார் ஆதங் கத்துடன்,

''ஏன்?'' என்றேன். ஒன்றும் புரியவில்லை.

''சும்மா கதையாதை...கண்ட கண்ட சாதிக ளெல்லாம் நிண்டு உயிர் கொடுத்துப் போராடுதுகள். நாங்க ஓடி வந்திட்டம். அவங்க விடுதலை பெற்றாப் பிறகு நாங்க வந்து அங்கு இருக்க விடுவினமே. நல்ல கதை தான். அப்படி விட்டாலும் ஊருக்குப் புறத்தே ஒதுங்கியிருக்கத்தான் சம்மதிப் பாங்கள்''.

விக்கித்துப் போனேன். இப்படி ஒரு பிரச்ச னையா?

நன்றி : 'மௌனம்' (பாரீஸ்) நவ. டிச. ஜன. 93/94.



படிப்பகம்

www.padippakam.com

# எமது எதிர்காலம்?

—ராகவன்
(ஜேர்மனி)

தள்ளாடியபடியே நான் வீடு
வருகையில்
யாரது வீட்டு வாசலில் நிற்பது?
வீடு தேடும் கள்ள அகதித்
தமிழனொருவன்!

—சென்ற வருடக் கடைசியில் ''ஒரு ஜேர்மனியனின் அனுபவம்'' எனும் தலைப்பில் புதிய நாஸிகளின் ஒரு குழுவான Die Republikaner (குடியரசுக்கட்சி)வினால் வெளியிடப்பட்ட தேர்தல் பிரச்சாரக் கவிதையிலிருந்த சில வரிகள் இவை.

இலங்கையில் உயிர் வாழவும், வாய் திறக்கவும் முடியாத சூழ்நிலையில் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்து பல கஷ்டங்கள் மத்தியில் பல நாடுகளினூடு-நம் பிக்கையோடு - ஐரோப்பாவை வந்தடைந்த தமிழர்களினதும் மற்றும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த அகதிகளினதும் கதி மீண்டும் கேள்விக்குறியாகிறது. குறிப்பாக ஜேர்மனியில் இவ் வருட நடுப் பகுதியில் பலர் திருப்பியனுப்பப்படப் போவதாகப் பயந்திருந்தனர். இது பின்னர் 31.12.1988க்குப் பின்னர் வந்து அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் திருப்பியனுப்பப் படுவர் என மாற்றப்பட்டுள்ளது. அதாவது அகதிகள் 1 நிமிடம் முந்தி வந்தவர்கள். 1 நிமிடம் பிந்தி வந்தவர்கள் எனப் பிரிக்கப் பட்டுள்ளது.

**ஜேர்மனியில் இன்று**

''அகதிகள் வெள்ளம்''
''பொருளாதார அகதிகள்''
''வள்ளம் நிறைந்துவிட்டது''

போன்ற வார்த்தைகளை இப்போது சாதாரணமாகவே அரசியல் வாதிகளிடமிருந்து, தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலியிலும், சாதாரண ஜேர்மன் மக்களிடையேயும் கேட்கக் கூடியதாகவுள்ளது.

ஜேர்மன் மக்கள் வெளிநாட்டவராலும், அகதிகளாலும் நமது வேலை, வீடுகள் பறி போவதாகவும், தமது நாட்டின் சுத்தமும், சட்டங்கள் - ஒழுங்குகளும், கலாச்சாரமும் அழிவதாகவும் கருதுகின்றனர். முக்கியமாகத் தமது வரிப் பணத்தில் வாழும் ஒட்டுண்ணிகளாகவே அகதிகளை இவர்கள் எண்ணுகின்றனர். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வரும் குடியேற்ற வாசிகள் மீதும், அகதிகள் மீதும், நாடுகளற்ற ஐரோப்பிய நாடோடி வாழ்க்கை நடத்தும் சிந்தி, றோமா* இன மக்கள் மீதும் அதிக எதிர்ப்புணர்வும், வெறுப்புணர்வும் வளர்ந்தும், வளர்க்கப்பட்டும் வருகிறது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷிலிருந்து வருபவர்கள் பயங்கரவாதிகள், தொற்று வியாதிக்காரர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள, காட்டு மிராண்டிகள் என்ற அபிப்பிராயமும் வேரூன்றப் பட்டுள்ளது.

**குடியேற்றவாசிகளும், அகதிகளும்.**

இரண்டாம் உலகப் போரின் பெரும் இழப் பினையடுத்து வெளி நாடுகளிலிருந்து பலர் வந்து மேற்கு ஜேர்மனியில் குடியேறத் தொடங்கினார்கள். முக்கியமான கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து (கிழக்கு ஜேர்மனி உட்பட) 945-1949 காலப்பகுதியில் மட்டும் 120 இலட்சம் ஜேர்மனியர் வந்து குடியேறினர். 1961 இல் கிழக்கு மேற்கு ஜேர்மனியைப் பிரித்து பேர்லின் மதில் கட்டப்பட்டவுடன் கிழக்கு ஜேர்மனியிலிருந்து வருபவர் தொகை வெகுவாகக் குறைந்தது. எனினும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தவர்களினால் மேற்கு ஜேர்மனிக்குத் தேவைப்பட்ட உழைப்புச் சக்திப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டதுடன், ஜேர்மனிய மக்கள் தொகையும் அதிகரித்தது.

தொழில் வளர்ச்சியினால் தொழிலாளர் பற்றாக்குறை பெருமளவு ஏற்படவே 1955-

---

* ஜிப்ஸிகள் எனப் பொதுவாக மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அழைக்கப்படும் நாடோடி மக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

1973 வரையான காலப் பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் மத்திய தரைக் கடலையண்டிய நாடுகளான கிறீக், இத்தாலி, போர்த்துக்கல், யுகோஸ்லாவியா, ஸ்பெயின், துருக்கி, மொறாக்கோ, துனேசியஸ் நாடுகளிலிருந்து பல இலட்சக்கணக்கானோர் தொழிலாளிகளாக மேற்கு ஜேர்மனிக்குத் தருவிக்கப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் அழிந்த மேற்கு ஜேர்மனியை மீண்டும் கட்டியெழுப்பிட - பொருளாதார அதிசயத்தை நிகழ்ந்த — வெளி நாட்டுத் தொழிலாளரின் (Gastarbeiter) பங்கு முக்கியமானது. இவர்கள் இன்றும் கூடகுடியேற்றவாசிகள் (Immigranten) அல்லது வெளிநாட்டவர் (Auslander) என்றே அழைக்கப்படுகின்றனர்.

இன்று ஜேர்மனியில் அகதிகள் தவிர்ந்த வெளிநாட்டவரில் பெரும் பகுதியினர் சுமார் 20 வருடங்களுக்கு மேல் இங்கு வாழ்ந்து வருபவர்கள். இவர்களின் குழந்தைகளில் 100க்கு 80 பேர் இங்கேயே பிறந்து வளர்ந்து வருகிறார்கள். எனினும் இவர்கள் அனைவரும் இரண்டாந்தரப் பிரசைகளாகவே நடாத்தப்பட்டு வருகின்றனர்.

ஜேர்மனியில் சுமார் 50 இலட்சம் வெளிநாட்டவர்கள் இருப்பதாக மார்ச் 91 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இது இணைந்த ஜேர்மனியின் மொத்தசனத் தொகையில் 6.5% ஆகும். அரசு தெரிவிக்கும் இத் தகவல் பிழையானதென்றும், வேண்டுமென்றே மிகைப்படுத்தப்பட்ட தொகையைக் கூறி ஜேர்மன் மக்களை அரசு பயப்படுத்துவதாகவும் அண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார். அரசினால் தெரிவிக்கப்படும் தொகையைவிட மிகவும் குறைவாகவே வெளிநாட்டவர் இங்கிருப்பதாகவும், அரசு அடுத்தமுறை கணக்கெடுக்கும்போது பொது நிறுவனங்களின் முன்னிலையில் நடாத்தினால் இந்த உண்மை தெரியவரும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பிரான்ஸில் 8% பெல்ஜியத்தில் 9% சுவிஸில் 16% லக்ஸம்பேர்க்கில் 23% ஆக வெளிநாட்டவர் தொகை இருக்கின்றதெனக் அவ்வவ் நாடடு அரசுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் பொருளாதாரத்தை வளப்படுத்த தொழிலாளிகளாகத் தருவிக்கப்பட்டவர்களே.

வேலைக்காக மேற்கு ஜேர்மனிக்கு வரவேற்கப்பட்டவர்கள் மேல் திட்டமிட்ட முறையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தங்களின் உழைப்புச் சக்தியை இங்கு பறி கொடுத்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வெறும் சக்கையாகத் தமது நாட்டுக்குத் திரும்பிப் போக விரும்பவில்லை. எனினும் இரண்டாம் உலகப் போரின் பின்பு ஜேர்மனியில் தோன்றிய முதலாளியப் பொருளாதார நெருக்கடியில் 1967-68 காலப் பகுதியில் பல வெளிநாட்டவர்கள் தாமாகவே தம் சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். ஆனால் எண்ணெய் விலையேற்றத்தின்போது ஏற்பட்ட இரண்டாவது நெருக்கடியின்போது 1972-1973 காலப் பகுதியில் தம் விருப்பினாலான வெளியேற்றம் பெருமளவில் நடக்கவில்லை.

கால ஓட்டத்தில் வெளிநாட்டுத் தொழிலாளரின் பாத்திரம் ஜேர்மனியப் பொருளாதாரத்தில் இணைந்து விட்டது. தொழிற்சாலைகளில் கனிசமானளவிலும், கட்டிட வேலை மற்றும் ஜேர்மனியர் அதிகம் விரும்பாத கடினமான, அழுக்கான வேலைகளிலும், ஆபத்தான வேலைகளிலும் வெளிநாட்டவரே அன்றிலிருந்து இன்றுவரை ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளராக வந்த வெளிநாட்டவரை விட அகதிகள் பலரும் ஹோட்டல்கள், விடுதிகள், தோட்டங்கள், பன்றி மாட்டுத் தொழுவங்கள் மற்றும் ஆபத்தை உண்டு பண்ணும் இரசாயனக் கூடங்களிலும் எந்தவித பாதுகாப்புமின்றி வேலை செய்து வருகின்றனர். பலருக்கு வேலை அனுமதிப் பத்திரம் மறுக்கப்பட்டுள்ளதால் ''களவாக'' மிகவும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்கள் தமது சம்பளத்தை தமது சொந்த நாட்டுச் செலாவணியில் கணக்குப் பார்த்து சந்தோசமும் ( ) அடைந்து கொள்கின்றனர்.

இக் குறைந்த சம்பள விகிதத்தால் ஜேர்மனியின் செல்வம் மேலும் மேலும் செழிக்கிறது. வெளிநாட்டவர் உற்பத்திகளில் ஈடுபடும் அதே நேரம் நுகர் பொருட்களையும் வாங்குவதால் மூலதனத்தையும் அதிகரிக்கச் செய்கின்றனர்.

ஜேர்மனியில் ஓய்வூதியம் பெறுபவர் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் சமமின்மையை வெளிநாட்டவரே நிரப்புகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவரில் அகதிகள் சிறுதொகையினரே எனினும் அகதிகளில் பெருந்தொகையினர் ''பொரு



படிப்பகம்

www.padippakam.com

ளாதார அகதிகளே'' என்றும், இவர்களை விரட்டும் வகையில் அகதிகள் சட்டம் மாற்றப்பட வேண்டும் எனவும் கோஷங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன.

ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் ஆணையகம் (UNHCR) தெரிவிக்கும் கணக்கின்படி 150 இலட்சம் மக்கள் அகதிகளாக தம் சொந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதில் பெரும் பகுதியினர்-125 இலட்சம் பேருக்கு மேல்-ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க பகுதிகளில் தமது அண்டை நாடுகளான வறிய நாடுகளிலேயே தஞ்சமடைந்துள்ளனர். மிகுதி 25 இலட்சத்திற்கும் குறைவானவரே அகதிகளாக மேற்கு ஐரோப்பா, கனடா, வட அமெரிக்கா நாடுகளிற்கு வந்துள்ளனர்.

மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக வந்த இலங்கையைச் சேர்ந்த தமிழரின் தொகையைவிட, அயல் நாடான இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களின் தொகை அதிகமானதாகும். இந்தியாவுக்கு அகதிகளாகப் போனவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. இவர்களும் இன்று இலங்கைக்கு நாடுகடத்தப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

இதைவிட தங்களின் சொந்த நாடுகளிலேயே பெருந்தொகையான மக்கள் அகதிகளாக முகாம்களிலும், காடுகளிலும், பதுங்கு குழிகளிலும் வாழ்கின்றனர். இலங்கையில் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**அகதிச் சட்டங்கள்**

''எந்தவகையான அரசியல் துன்புறுத்தல்களிற்கு உள்ளாகவரும் இங்கு அகதி உரிமை பெறத் தகுதியுடையவர்'' என்கிறது ஜேர்மனிய அகதிகள் அடிப்படைச் சட்டம். 1949 இல் இயற்றப்பட்ட இச் சட்டத்திற்கு கடந்தகால ஜேர்மனிய நாஸி-பாஸிஸஆட்சி ஏற்படுத்திய அழிவையும் இழிபெயரையும் சரிக்கட்ட வேண்டியிருந்ததாலும் இரண்டாம் உலகப்போரில் தாம் அகதிகளாக வெளிநாடுகளில் பட்ட அனுபவங்களினாலும் ஆதரவு கிடைத்தது. அத்துடன் ஐ.நா. அகதிகள் சபையின் ''ஜெனிவா உடன்படிக்கை'' 1958ல் முக்கியமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளைக் கருத்திலெடுத்தே செய்யப்பட்டது. மற்றும் இரண்டாம் உலகப் போரின் படிப்பினை இவ்வாறின ஒரு உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் தேவையை மேற்கு நாடுகளுக்கு ஏற்படுத்தியது.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த அகதிகளை மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் குடியமர்த்துவது பெரும் பிரச்சினையாக இருக்கவில்லை. அதில் அந்தந்த நாடுகளின் அரசியல் பொருளாதார நலனும் மக்களிடையே நிற, மத, கலாச்சார வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு இன்மையும் இதற்குக் காரணமாயிருந்தன. ஆனால் 60 களின் கடைசியில் ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்காவிலிருந்து (அதாவது மூன்றாம் உலக நாடுகளிலிருந்து) அகதிகள் வரத் தொடங்கினர். இதனால் ஜெனிவா உடன்படிக்கை யானது இவர்களைக் கவனத்திலெடுக்க வேண்டியதாயிருந்தது. இவ்வுடன்படிக்கை இதற்கேற்ப 1967 இல் மீண்டும் விரிவுபடுத்தி எழுதப்பட்டது.

இங்கு வந்து தஞ்சம் கேட்கும் அகதிகளில் 90% ஆனோரின் விண்ணப்பங்கள் ''ஜேர்மனிய அகதிகள் சட்டத்தின் படி'' நிராகரிக்கப்படுகின்றன! போதிய காரணங்கள் இருப்பின் நிராகரிக்கப்பட்டவர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்! திரும்பவும் அதே சட்டப் பிரகாரம் அவர் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்!! விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோர் நாடு திருப்பியனுப்பப் பட்டால் உயிர், உடல் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவோர்களாயின் (?) ஜெனிவா உடன்படிக்கையின் படி ''மனிதாபிமான' காரணங்களால் தற்காலிகமாக இங்கு தங்க சில அகதிக் குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் துருக்கியிலும், ஈராக்கிலும் குர்திஷ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் இங்கிருந்து தஞ்சம் நிராகரிக்கப்பட்ட குர்திஷ் அகதிகள் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதிகளுக்கு பலவந்தமாக நாடுகடத்தப்பட்டார்கள். இதே போல் யூகோஸ்லாவியாவில் இனங்களுக்கிடையிலான மோதல்கள் உக்கிரமடைந்திருக்கும் போது யூகோஸ்லாவிய அகதிகள் அப்பகுதிகளுக்கு பலாதகாரமாக நாடு கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**அகதிகள் முகங்கொடுக்கும் பிரச்னைகள்**

1) பெரும்பாலானோர் தனியான முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவை நகரை விட்டு ஒதுக்குப் புறமாகவே அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம்களில் பெரும்பாலானவை ப ல கை க ளா ல் அ டை க் க ப் ப ட்ட அறைகளாகும்! இன்று வளர்ந்து வரும் வெளிநாட்டவர் விரோதத்தால் இப்படியான முகாம்கள்



படிப்பகம்

www.padippakam.com

நாஸிகளால் தாக்கப்படும் போது உடனடி உதவிகள் இம் முகாம்களுக்குக் கிடைக்காமல் போவதுடன் பாதிப்புகள் பற்றிய செய்திகளும் வெளியில் வரும் சந்தர்ப்பங்களும் மிகவும் குறைவாகும்.

2) அகதிகள் தாங்கள் வாழும் இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல முடியாது.

3) இன நிறவாத பாகுபாட்டிற்கு உள்ளாவதால் அகதிகள் பலரின் மன நிலை பாதிக்கப்பட்டு வருகிறது. சிலர் மனநோய் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

4) பொலிஸாரின் மறைமுக ஒத்துழைப்புடன் அகதிகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

5) ஏராளமான அகதிகள் இன்னமும் நாடு கடத்தப்படும் அபாயத்திலேயே உள்ளனர்.

**ஜேர்மனிய அரசியலும் வெளிநாட்டவரும்**

வெளிநாட்டவர் பிரச்சினை இரண்டாம் உலகப் போரினையடுத்து ஜேர்மனிய அரசியல் வரவாற்றில் முக்கிய இடம் பிடித்தே வந்துள்ளது. 1973·இல் CUD ஆட்சி செய்த மாநிலங்களில் ஒப்பந்தம் முடிந்த வெளிநாட்டுத் தொழிலாளரை வெளியேற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அது அவ்வளவாகக் கைகூடவில்லை. பின் 80 களில் தேர்தல் காலத்தில் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த CDU/CSU கூட்டணி அகதிகள் பிரச்சினையே பிரச்சாரம் செய்தன. இக் காலப் பகுதியில் 2 வியட்நாமியர்கள் கொல்லப்பட்டனர். 986 களில் நடந்த பல்வேறு தேர்தல்களில் SPDயின் பிரச்சாரத்திலும் அகதிகளின் பிரச்சினையே முக்கிய இடம் பிடித்தது. தற்போது பெரும்பாலும் எல்லாக் கட்சிகளும் அகதிகளின் பிரச்சினையைத்தான் தூக்கிப்பிடித்துள்ளன.

1989 யூனில் நடந்த ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் வெளிநாட்டவர் மற்றும் அகதிகள் பிரச்சினைளை முக்கியமாக வைத்து வெளிநாட்டவரே வெளியேறு என்ற கோஷத்துடன் போட்டியிட்ட நாஸிக் கட்சியான Republikaner 20 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளை ஜேர்மனியில் பெற்றது. இது ஆளும் வலதுசாரிக் கூட்டணிக்கு (CDU/CSU) பெரும் தலையிடியைக் கொடுத்தது ஆனால் 1991 டிசம்பரில் நடைபெற்று இணைந்த ஜேர்மனிக்கான முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் ஜேர்மனிய தேசியவாதமும் பொருளாதாரக் கற்பனையும் மிகை எதிர்பார்ப்புகளும் வலதுசாரிக் கூட்டணியை மீண்டும் பெரு வெற்றியீட்டச் செய்தது.

இணைந்த ஜேர்மனியின் செலவு, வளைகுடா யுத்தத்திற்கான கூலி, ரஷ்யாவுக்கான பொருளாதார உதவிகள், தலைநகரை Bonn லிருந்து Berlinக்கு மாற்றியதால் ஏற்பட்ட செலவு போன்ற பல காரணங்களினால் வரிச்சுமை சாதாரண மக்கள் மேல்தான் சுமத்தப்பட்டுள்ளது.

முக்கியமாக முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் வாழும் ஜேர்மனியருக்கு மேற்கு ஜேர்மனி ஆளும் கூட்டணிக் கட்சியினால் தேர்தலுக்கு முன் கொடுக்கப்பட்ட ஆசை வாக்குறுதிகளுக்கு எதிரான முறையில் வேலையில்லாத திண்டாட்டம், வீட்டு வாடகை உயர்ச்சி, பொருட்கள் விலையேற்றம், வீடில்லா திண்டாட்டம் என்பனவே திணிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அம் மக்களின் கோபத்தை முதலாளித்துவத்தின் மீதும், அரசாங்கத்தின் மீதும் திருப்புவதற்குப் பதிலாக அங்கு வாழ்ந்திடும் மூன்றாந்தரப் பிரஜைகளான அகதிகளுக்கும் வெளிநாட்டுத் தொழிலாளருக்கும் எதிராகத் திருப்புவது இலகுவாகவேயுள்ளது. இவ் வெறுப்புணர்வு அகதிகளைப் பாதையில் வைத்துக் சொல்லுமளவிற்கு வெறியூட்டப்பட்டுள்ளது. இந்த கொலை வெறியினால் கிழக்கு ஜேர்மன் பகுதிகளுக்குப் பலவந்தமாக அனுப்பப்பட்ட அகதிகள் மேற்கு ஜேர்மனிக்குத் தப்பியோடி வருகிறார்கள்.

இந்நிலையில் ''அகதிகள் · வெளிநாட்டவர் பிரச்சினை'' ஒன்றே ஆளும் கூட்டணிக்கு தன்னை மக்களின் வெறுப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ள கைகொடுத்து வருகிறது. எதிர்க்கட்சிகளும் சமரசங்களுடன் இதற்கு ஒத்துப் போகின்றன.

அகதிகள் அடிப்படைச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்றும், புதிய வெளிநாட்டவர் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பது பற்றியும் பாராளுமன்றத்தில் தொடர்ந்து விவாதங்களும், சர்வகட்சி மகாநாடுகளும் நடைபெறும் வருகின்றன. ஏற்கெனவே அகதிகள் மீது மக்கள் கொண்டிருக்கும் நிற, இன வெறியிலான வெறுப்புக்கு இவ் விவாதங்கள் மேலும் எண்ணெய் ஊற்றுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றின் ஒரு பகுதியாக ருமேனியா. யூகோஸ்லாவியாவிலிருந்து வரும் அகதிகளை இனிமேல் ஏற்றுக்கொள்வதில்லை என்றும் மாதாந்தம் ஆகக் கூடியது 300 அகதிகளுக்கு மேல் ஏற்றுக் கொள்வதில்லை என்றும் அகதிகளுக்கான உதவிப் பணத்திற்குப் பதிலாக குறிப்பிட்ட பொருட்களை வாங்கக்கூடிய வவுச்சர்களை கொடுப்பதென்றும் வெவ்வேறு மாநிலங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**ஐரோப்பாவும், அகதிகளும்**

மேற்கைரோப்பிய நாடுகளில் அகதிகள், வெளிநாட்டவர் மீது கடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பிரான்ஸில் ''உத்தியோக பூர்வமில்லாமல்'' குடியேறியுள்ளவர்களென கருதப்படும் சுமார் 1 இலட்சம் அகதிகளை நாடுகடத்த முயற்சி நடக்கிறது. சுவிஸில் குற்றங்களை இழைத்ததாகக் கருதப்படும் அகதிகள் தொடர்ந்து நாடு கடத்தப்பட்டு வருகின்றனர்.

''மூன்றாம் உலக'' மக்கள் பெருமளவில் வருவது தமது நாட்டின் எதிர்கால நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என மேற்கைரோப்பிய அரசியல்வாதிகள் கருதுவதால் இம்மக்களின் வருகையைக் கட்டுப்படுத்தக் கூடிய பல்வேறு தடைகளைக் கொண்டுவருகின்றனர். குறிப்பாக மேற்கைரோப்பிய நாடுகளிடையே கூட்டாகச் செய்யப்பட்டுள்ள Trevi Group, Schengen உடன்படிக்கைகளின் முக்கிய நோக்கம் ''மூன்றாம் உலகினின்றும்'' வருபவர்களை எல்லையில் வைத்தே திருப்பியனுப்புதல், விஸாஇல்லாமல் உள்ளே வரத் தடைவிதித்தல், தங்கள் நாடுகளில் வாழும் வெளிநாட்டவர் பற்றிய அனைத்து விபரங்களையும் தமதுதேச நாடுகளுக்கும் பகிரங்கப்படுத்துவது, கொம்பியூட்டர் வலைப்பின்னல் பரிவர்த்தனை, 'பயங்கரவாதற்கு' எதிரான கூட்டு நடவடிக்கை'' என்பவற்றை அடிப்படையாகக் கொண்டயையாகும். மூன்றாம் உலகநாட்டினருக்கும்,முதலாளித்துவஎதிர்ப்பாளருக்கும், புரட்சியாளருக்கும் எதிராகக் கூட்டாக அடக்குமுறையைப் பிரயோகிப்பதும் ஐரோப்பியக் கூட்டின் நோக்கமாகும். அத்துடன் அமெரிக்கா, ஜப்பான் ஏகாதிபத்தியங்களிற்கு தாக்குப்பிடிக்கும் முகமாகவும், அவற்றை பொருளாதாரரீதியில் வெற்றி கொள்வதற்காகவும் மேற்கு ஐரோப்பியக் கூட்டு மேலும் விரிவடைகிறது.

தமக்கிடையே எல்லைகளை நீக்குவதும், இதன் மூலம் பொருட்கள், மூலதனம், மனித வளம் என்பவற்றை சுலபமாகப் பரிமாறிக் கொள்வதும் நடைபெறவுள்ளது. இணையும் மேற்கைரோப்பாவிற்கு புதிய சந்தையாகவும், மலிவான உழைப்புச்சக்தி வங்கியாகவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விளங்கும். சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியையடுத்து முன்றாம் உலகானது இந் நாடுகளுடன் சேர்ந்துவிடும் அரசியல் அபாயமும் தற்போது இல்லை!. அத்துடன் முன்றாம் உலக நாடுகளிலிருந்து சுரண்டலும் இதனால் ஏற்படும் பொருளாதார அரசியல் நெருக்கடியும் உருவாக்கும் அகதிகள் மேற்கு நாடுகளுக்கு வருவதைத் தடுக்க கடும் சட்டவிதிகளைக்கொண்ட ''புதிய மதிற்சுவர்'' எழுப்பப்பட்டு வருகிறது.

எனவே இந்நிலையில் அகதிகள், குடியேற்ற வாசிகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணத்தை அறிய முயல்கையில் தவிர்க்க வியலாதபடி காலனித்துவ, நவகாலனித்துவ வரலாற்றைப் பார்க்க வேண்டியுள்ளது.

**காலனித்துவ—நவகாலனித்துவ வரலாறு**

இந்தியாவின் வளம் பற்றி அறிந்த ஐரோப்பியர்கள் 15 ஆம் நூற்றாண்டுக் கடைசியில் கடற் பயணங்களை மேற்கொண்டனர். ஸ்பானியனான கொலம்பஸ் தலைமையில் புறப்பட்ட குழுவொன்று 1492 இல் அமெரிக்கக் கண்டத்தை வந்தடைந்தது. இதையே அவன் இந்தியாவென்று நம்பி அங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் எதிர்பார்த்தவாறு கறுப்பு நிறமாக இல்லாமல் சிறிது சிவப்பாக இருந்தமையினால் ''சிவப்பு இந்தியர்'' எனக் குறிப்பிட்டான். இதே காலப் பகுதியில் போர்த்துக்கீசர் இந்தியாவின் கோவா பகுதியை வந்தடைந்தனர்.

இவ்வாறு ஐரோப்பியர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா,அமெரிக்கா,அவுஸ்திரேலியா கண்டங்களை வந்தடைந்தனர். வியாபாரம் செய்யவென்று வந்தவர் அந்நாடுகளையே தமதாக்கினால் இன்னும் எவ்வளவோ இலாபமென படிப்படியாக தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தனர். முக்கியமாக வட அமெரிக்கா, அவுஸ்ரேலியாக் கண்டங்களின் சொந்த மக்களை அவர்களின் கலாச்சாரங்களை வாழ்வை அழித்தனர். இவ்வாறு அந்நாட்டு பூர்வீக மக்களின் கொடூரமான அழிப்புடன் தமது அதிகாரத்தை நிலை நிறுத்தினர்.

தென்னமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன



படிப்பகம்

www.padippakam.com

அங்கிருந்த கிராமிய தன்னிறைவுப் பொருளாதார அமைப்புமுறை குலைக்கப்பட்டது. நகரங்களில் தொழிற்சாலைகள் தோன்றின. முக்கிய விளைவாக அங்கிருந்த பொருளாதார அமைப்புமுறை முதலீட்டு வர்க்கம் மேல்தட்டு வர்க்கம், மத்திய தர வர்க்கம், என்ற சுரண்டல் அமைப்பு முறையாக மாற்றமடைந்து பெருந்தொகையில் பட்டினிச் சாவுகளையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏற்படுத்தியது.

காலம் செல்கையில் உள்நாடுகளில் காலனித்துவ எதிர்ப்பும், இரண்டாம் உலகயுத்த முடிவில் ரஷியாவின் வெற்றியும், ஆசிய ஆபிரிக்க. தென்னமெரிக்க நாடுகளில் காலனித்துவத்தைத் தொடர முடியாமற் பண்ணின. ஆனால் அது அவ்வவ் நாடுகளில் உருவாக்கியிருந்த பொருளார அமைப்பு முறையும், அதிகார வர்க்கமும், படித்த புதிய மத்தியதர வர்க்கமும் மீண்டும் நவ காலனித்துவமாக காலனித்துவ நாடுகளை ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கச் செய்தன.

காலனித்துவத்திலிருந்து நவ காலனித்துவமாகச் ''சுதந்திரமடைந்த நாடுகளின்'' அதிகார வர்க்கமும், முதலாளிகளும், பண்ணையார்களும் இன்னும் மூர்க்கமாக தமது பங்கிற்கு மக்களைச் சுரண்டினர். இன்றும் இன்னும் புதிய மேற்குநாட்டுத் தொழிற்சாலைகளை கொடூரச் சுண்டலுக்குத் திறந்து விட்டனர். இவர்கள் எமது நாடுகளிலும் தொழிலாளருக்கு கிடைத்த அற்ப சொற்ப சலுகைகளையும் தடைசெய்தனர். உதாரணமாக, கொழும்பு வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளருக்கு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்பட்டத்தைக் குறிப்பிடலாம்.

எமது நாடுகளில் அதிகரிக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றிற்கு எதிராக மக்கள் திரளும்போது அவை அதிகாரவர்க்கத்தினால் கொடூரமாக அடக்கப்படுகின்றன. இதற்காக பொலிஸ், இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் குறையும் அந்நியச் செலாவணிக்காக அரசு மீண்டும் தேயிலை, கோப்பி, சணல் என்று வர்த்தகப் பயிர்ச்செய்கையில் மூலதனமிடுவதும் மூலவளங்களை இன்னும் இன்னும் மலிவாக ஏற்றுமதி செய்வதும் நடைபெறுகிறது. இதனால் உள்நாட்டு உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு மீண்டும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன அதிகரித்து அதிகாரவர்க்கத்திற்கு எதிராக மக்கள் திரளுவதும், அரசு அடக்குவதும் என ஒரு சங்கிலித் தொடராக நடைபெற்றுவருகிறது.

மேற்கைரோப்பிய- அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களைப் பாதுகாக்க உள்நாட்டில் தமது மூலதனங்களைக் காப்பாற்ற மூன்றாம் உலகநாடுகளில் தங்கள் தரகர்களான தலைமைகளைக் காக்க நிதி, ஆயுத, இராணுவமாக எல்லா வகையிலும் உதவும்.

எனவே பொதுவாக எமது பொருளாதார அரசியல் அமைப்பு முறை தொடர்ந்து கீழே சென்று கொண்டிருப்பதே யதார்த்தத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தென்னமெரிக்காவின் தங்கமும் பொதுவாக மூன்றாம் உலகநாடுகளிலிருந்து சுரண்டப்பட்டுக் கொண்டு செல்லப்படும் மூலதனம், மூலவளங்களும் கூலியுழைப்பும் ஐரோப்பிய, அமெரிக்க தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் போட்டுக் கொடுக்கின்றன. இன்றும் இது தொடருகின்றது.

எனவே மூன்றாம் உலகநாட்டு மக்கள் பொருளாதார அகதிகளாக்கப்படுவர். இந் நெருக்கடி உச்சக்கட்டமடைகையில் அரசியல் அகதிகளாக்கப்படுவர். அதனால் இரு பிரிவினரையுமே அரசியல் அகதிகளாகவே காணலாம்.

எனவே இன்றும் நீடித்துக் கொண்டிருக்கும் காலனித்துவ, நவ காலனித்துவ சுரண்டல் வடிவத்தின் விளைவுகளில் ஒன்றே ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளை நோக்கிய மூன்றாம் உலகநாட்டு அகதிகளின் வருகையாகும்.

**நாம் செய்யவேண்டியவை**

1992உடன் காலனித்துவம் 500 ஆண்டை நிறைவுசெய்கிறது. இந்நிறைவுடன் இன்னும் இறுக்கமாகும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கூட்டானது இன்னும் மூர்க்கமாக மூன்றாம் உலகநாட்டு மக்களைச் சுரண்டும். இந் நாடுகளிலிருந்து தப்பியோடி வருபவர்களை எல்லைகளிலேயே நிறுத்தும். உள் நுழைந்தவர்களின் உரிமைகளைப் பறித்து அடக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் இங்கிருக்கும் நாம் என்ன செய்யலாம்?

1). எமது இங்கு வாழும் உரிமையை வலியுறுத்துதல்.

2). எமது நாடுகளில் வாழ்கின்ற மக்களின் குரலை இங்கு ஒலித்தல்.

3). எம்நாட்டின் அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறைகளையும், அதற்கு இம் மேற்குலக முதலாளித்துவம் எவ்வாறு உதவுகின்றது என்பதையும், தொடரும் மேற்குலக நாடுகளின் கொடூரச் சுரண் டலையும், மேற்குலக நாடுகளின் ஆயுத, இராணுவ உதவிகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்துதல்.

4). நாட்டைவிட்டு வெளியேறி வெவ் வேறிடங்களில் சிதறியிருந்தாலும் எமது நாடுகளின் சமூக மாற்றத்திற்காக எமது சக்திகளை ஒருங்கிணைத்து முடியு மானவுக்கு உழைத்தல்.

5). தமது நாடுகளிற்கு வரும் மூன்றாம் உலக நாட்டவர் மேல் வெறுப்பை உமிழும் இம் மேற்கத்தையர் தமது விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க இதே மூன்றாம் உலகநாடுகளைத் தேடிப்போய் தமது அந்நியச் செலாவணி மூலம் அந்நாட்டு அதிகார வர்க்கங்களுக்கு முண்டு கொடுப்பதும், தமது பாலியல் இச்சை களுக்கு அங்குள்ளவர்களைப் பயன் படுத்துவதும், தமது நாடுகளுக்குத் திரும் பியதும் தாம் போய்வந்த நாட்டின் மக்கள் பற்றி பொய்ப் பிரச்சாரம் செய்வதும் போன்ற இழிசெயல்களை எதிர்க்கவேண்டும்.

6). இங்கு இன, மத, நிற, கலாச்சார அடக்குமுறைகளுக்கு ஆளாகுபவர்கள் என்ற ரீதியிலும் மூன்றாம் உலகநாட்டு மக்கள் என்ற ரீதியிலும் மூன்றாம் உலக நாட்டு அகதிகள் ஒன்றுபட்டு போராட் டங்களை முன்னெடுக்க வேண்டும்.

நன்றி : தூண்டில் (ஜேர்மனி)

---

# எமது பிணைப்புகள்

...காலம் மாறியிருக்கலாம். பல தவறுகள், பல விபத்துகள் நிகழ்ந்திருக்கலாம். தேவை யில்லாமல் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டிருக்கலாம். மனித குலத்தின் வரலாறே குருதியில் தோய்த்து எழுதப் பட்டது தானே! அழுது புலம்பி, ஆத்திரப் பட்டுப் பயனில்லை. கடந்த காலத்து நிகழ்ச் சிகள் தரும் படிப்பினையை நாம் மறக்க இயலாதுதான். ஆனால் அதன் காரண மாகவே எதிர்காலத்தை நோக்கி நடை போட மறுப்பதோ, தயங்குவதோ, பெரும் மடமையாகும்.

ஈழத் தமிழர்க்கும், இந்நாட்டுத் தமிழர்க்கும் இடையே உள்ள பிணைப்புகள் எத்தனை துயர நிகழ்ச்சிகளினாலும் அறுந்து போய் விடமாட்டா. தமிழ் பேசுவோர் இந்த மண்ணில் இருக்கும் வரை, இலங்கைத் தமிழி னத்தின் உரிமைப் போருக்கு ஆதரவாக இங்கே குரல் ஒலித்துக் கொண்டேதான் இருக்கும்.

இனப்பற்றுக் கோணத்தில் மட்டுமல்ல, மனித உரிமைக்கோணத்திலிருந்து பார்க்கும் போதும், இலங்கைத் தமிழர்க்குத் தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகள் மன்னிக்கப்பட முடியாதவை. உலகின் எந்த மூலையில் இருந்தும் மனித உரிமைப் பாது காவலர்களிடமிருந்து இலங்கைத் தமிழர் களின் நியாயமான போராட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு கிடைத்தே தீரும்.

இலங்கை இனச் சிக்கலுக்குச் சரியானதொரு தீர்வு கிடைக்கும் வரை, அகதி மக்கள் இந்த மண்ணில் தொடர்ந்து இருந்து கொண்டே தான் இருப்பார்கள் அவர்களுக்கு இழைக்கப் படும் அநீதிகளை எதிர்த்து தொடர்ந்து போராடுமாறு தமிழ்த் தேசிய குழுக்களை யும் மனித உரிமை அமைப்புகளையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் எமது அமைப்பு கேட்டுக் கொள்கிறது.

— த. நா. கோபாலன்.

'இலங்கைத் தமிழ் அகதிகள்' நூலிலிருந்து.

வெளியிட்டோர் : இந்திய இலங்கை நட்புற வுக் கழகம், 9-ஏ ஐயம் குடியிருப்பு இரண்டா வது தெரு, இளங்கோ நகர், விருகம்பாக்கம், சென்னை 600 092.



படிப்பகம்

www.padippakam.com

# ஐரோப்பாவில் வளர்ந்துவரும் இனவெறி மனப்பான்மை

அண்மைக் காலங்களில் ஜேர்மனியில் இன வெறித் தாக்குதல் துரிதமாக வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. வெளிநாட்டுப் பிரஜைகள் மீது, முக்கியமாக கறுத்த இன மக்கள், சிறுபான்மையின மக்கள், அகதிகள் போன்றோர் மீது இன வெறியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கட்டுமீறிச் சென்றுகொண்டிருக்கும் இன வெறித் தாக்குதல்களையிட்டு ஐ.நா. மனித வுரிமை ஆணைக்குழு கண்டிக்குமுகமாக, ஜேர்மனியைத் தம்முன் ஆஜாராகும்படி கட்டளை பிறப்பித்துள்ளதென அறியப்படுகிறது.

ஜேர்மனிக்கெதிரான இனவெறிக் குற்றச் சாட்டினை அரசுகள் முறையிடாது தனி நபர்கள் பதிவு செய்திருப்பதனால் ஜேர்மன் வெளிவிவகார மந்திரி கிலோஸ் கின்கெல் (Klaus Kinkel) ஆணைக்குழுவின் முன் ஆஜாராகிகேள்விகளுக்கும் பகிலளிக்காமல் தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால் அணைக் குழு எடுக்கும் முயற்சிகள் அதிகளவில் பயன்தரப் போவதாக வில்லை.

CARF என்ற ஜேர்மன் சஞ்'கை ஒன்று, 1993ஆம் ஆண்டில் இனரீதியான 52 கொலைகள் நடைபெற்றுள்ளதாகப் பட்டியல் வெளியிட்டுள்ளது. இதில் 41 கொலைகளில் தீவிர வலதுசாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனர். 1992ஆம் ஆண்டு நடைபெற்ற இனவெறிக் கொலைகளுடன் பார்க்கும்போது இது இரண்டு மடங்காகும். மேலும் இத்தகைய இனவெறித் தாக்தல்கள் கறுப்பின மக்களுக்கெதிராக மட்டுமல்லாமல் இவர்களுக்காகப் போராடும் நாட்டு மக்கள் மீதும் மற்றையோர் மீதும் நடாத்தப்பட்டு வருகின்றன.

சடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கிழக்கு ஜேர்மனியிலுள்ள ஒபெர்ரொப் குளிர்கால விளையாட்டரங்கத்திற்குப் (Obertof Winter Sports Center) போட்டியிட அமெரிக்காவிலிருந்து வருகைதந்த ஒரு கறுப்பு விளையாட்டு வீரர் மீது இரு நாஜிகள் (Nazis) தாக்க முயலும்போது. அவரைக் காப்பாற்றுவதற்கெனச் சென்ற சகவீரர் ஒருவர் கடும் தாக்குதலுக்குள்ளாகி மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பலரைத் திகைப்புக்குள்ளாக்கியுள்ளது.

இச்சம்பவத்தை யடுத்து பொலிசாரால் வுபெர்டல் (Wuppertal) பிரண்டென்பெர்க் (Brandenburg), குலொட்ஸ் (Klotze) போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட தேடுதல் முயற்சிகள் பல நாஜி உறுப்பினரது விபரங்களையும், தொடர்புகள், மறைவிடங்கள், ஆயுதக்களஞ்சியங்கள், குறிப்புகள் பெயர்ப்பட்டியல் போன்ற முக்கிய விடங்களையும் வெளிக்கொணர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்படியான நாசியரின் தொடர்புகளை யிட்டு ஆராயும்போது பல அரசாங்க உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்களின் உதவி, ஆலோசனை, ஆசிர்வாதம், அனுசரணைகளுடன்தான் இப்படிப்பட்ட இனவெறிக் குழுக்கள் இயங்கி வருவதாகத் தெரியவந்துள்ளது

இதேபோன்று ஒல்லாந்து நாட்டிலும் இன வெறி மனப்பான்மை மேலோங்கி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. துவே வான் தேர் போஸ் (Douwe Van der Bos) என்றழைக்கப்படும் முன்னாள் இராணுவ அதிகாரியொருவர் தலைமையில் தேசிய பாதுகாப்புச் சேவை (National Security) எனக் கூறப்படும் தனிமுறைக் கண்காணிப்புக் குழுவொன்று, ஒல்லாந்தில் இயங்கி வருகின்றது. இது இனவெறியர்கள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமுகமாகவும், முக்கிய வலதுசாரித் தலைவர்களைப் பாதுகாப்பதற்கெனவும் உருவாக்கப்பட்ட ஒரு குழுவென அறியப்படுகிறது. இது பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டு வருவதாகக் கூறிக்கொண்டுள்ள போதிலும். இரகசிய கண்காணிப்பு, இடதுசாரிகளின் இனவெறித் தடுப்பு முயற்சிகள், ஆராய்ச்சி, வெளிநாட்டுத் தொடர்புகள் போன்றவற்றிலும் அதிகளவு ஈடுபாடு கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. நேரடியாகப் பாசிச செயல் முறைகளில் ஈடுபாடுகள் காண முடியாதிருப்பினும் இவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கைகள், அபிலாசைகள், தொடர்புகள் என்று பார்க்கும்போது இவர்களும் பங்கை அளித்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை என்பதே அவதானிகள் கருத்து.

ஆனால் இதன் தலைவர் துவே வான் தேர் போஸ் தாம் அந்நாட்டுச் சட்ட திட்டங்களுக்குள் கட்டுப்பட்டுள்ள ஒரு குழுவெனவும், தாம் ஒரு கூலிப்படையல்லவெனவும் கூறி வருகின்றார். இது இவ்வாறிருக்க, ஒஸ்ரியாவில் (Austria) இனவெறியாளர்கள் இனவெறி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துபவர்களுக்குக் கடிதக் குண்டுகளை அனுப்பி மிரட்டி வருகின்றார்கள். 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இனவெறியாளர்களால் நடாத்தப்பட்ட கடிதக் குண்டுப் போராட்டத்தில் 10 இனவெறித் தடுப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் படுகாயமுற்றுள்ளனர். இது தொடர்பாகப் பொலிசார் எடுத்த முயற்சியில் இந்த இனவெறியாளர்களுக்கும் ஜேர்மன், டென்மார்க் போன்ற நாடுகளில் உள்ள இனவெறியாளர்களுக்கும் இடையில் பரந்த தொடர்புகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் உள்ள இனவெறியாளர்கள், டென்மார்க்கில் உள்ள ராண்டேர்ஸ் என்னுமிடத்தில் டனிஷ் தேசிய சோசலிச அமைப்பு என்று கூறப்படும் ஒரு இனவெறியமைப்பின் தபால்பெட்டி எண் ஒன்றினைப் பாவித்துத் தமக்கிடையில் ஜேர்மனியில் உள்ள இனவெறித்தடுப்பு ஆதரவாளர்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் போன்ற தகவல்களைப் பரிமாறி வருகின்றார்கள் எனத் தெரிய வந்துள்ளது. இத் தபால் பெட்டி எண் மூலமே ''டேர் எயின்பிளிக்'' (Der Einblick) என்னும் இனவெறிப் பத்திரிகை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 400க்கு மேற்பட்ட இனவுணர்ச்சிக்கு எதிராகச் செயற்படும் எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களை உள்ளடக்கிய பட்டியலொன்றை வைத்திருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. மேலும் அண்மையில் ஜேர்மனியில் பொலிசாரால் நடாத்தப்பட்டு வரும் இனவெறியாளர்கள் பற்றிய விசாரணையின்போது, ஜூன் 1993ஆம் ஆண்டிலிருந்து இனவெறியாளர் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகவும், பிற நாடுகளில் வாழும் அங்கத்தவர்கள் மூலமும், துணையாளர்கள் மூலமும் பிறநாடுகளில் தீவிரமாக இயங்கிவரும் இனவெறி எதிர்ப்பாளர்கள் பெயர், விலாசம், புகைப்படம், அவர்களது மோட்டார் வண்டிகளின் பதிவிலக்கங்கள் ஆகியவற்றை ஜேர்மனியில மெயின்ஸ் என்னுமிடத்திலுள்ள ''தேசிய தொலைபேசி தகவல் பிரிவுக்கு'' அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இத்தகைய தகவல்களைச் சேகரித்து வரும் தாபனம் ''ஜேர்மன் தகவல் சேவை-காப்பு அமைப்புக் குழு அன்ரி அன்டிபா'' (German Information Service-Working Group Anti-Antifo) எனப்படுவதாகும். இதன் தொலைபேசிச் சேவை இத்தகைய தகவல்களை தமது தாபனத்தின் துண்டு வெளியீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்து வருகிறது. இத்தகைய விபரங்களை மற்றைய இனவெறி யாளர்களுக்கு அறியத்தர டென்மார்க்கில் உள்ள டனிஷ் தேசிய சோசலிச அமைப்பின் தபால்பெட்டி எண்ணும் பாவனையில் உள்ளதெனக் கூறப்படுகிறது.

இதேவேளை, அண்மையில் டென்மார்க்கிலுள்ள கோபன்கோஹன் (Copenhagen) பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையில் இருந்த கமல்டொவ்-கன்சன் (Prof. Gammeltotf Hansen) என்பவரது தொலைபேசியில் ஒட்டுக் கேட்கும் கருவி பொருத்தப்பட்டிருந்த தகவல் வெளிவந்துள்ளது. ஏழு வருடங்களாக இக்கருவி பூட்டப்பட்டு இவர் என்ன பேசுகிறார், யாருடன் பேசுகிறார் என்று தகவல்களைச் சேகரிப்பதில் உள்நாட்டுக் காவல்துறைக்கும், முன்னைய நீதியமைச்சர் எரிக் நின்-கன்சன் (Erik Ninn-Hansen) என்பவற்கும் தொடர்புள்ளதென அறியப்படுகிறது. பேராசிரியர் கமல்டொவ்-கன்சன் ஒரு முற்போக்குவாதி. இவர் டனிஷ் அகதி - சேவை என்னும் தாபனத்திற்குத் தலைவராகவும் இருந்தார். அகதி விடயங்களில் மிகுந்த ஆர்வமும், அவர்கள் உரிமைகளுக்காகத் தீவிரமாகப் போராடியும் வந்தவர். தமிழ் அகதிகள் விவகாரத்திலும் மிகுந்த ஈடுபாடுகள் உண்டு. எரிக் நின்கன்சனுக்கும் இவருக்குமிடையில் கருத்து மோதல்கள் பல இடம் பெற்றுள்ளன. தமிழ் அகதிகள் விடயத்தில் சட்டத்திற்கு மாறாக எரிக் நின்கன்சன் எடுத்தமுயற்சிகளில் கண்ட தோல்விகளை மூடி மறைக்க முயற்சித்த போதெல்லாம், பேராசிரியர் கமெல்டொவ்-கன்சன் தமிழ் அகதிகள் உரிமைக்காகப் போராடி பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளார். இறுதியில் தமிழ் அகதிகள் விவகாரம் டென்மார்க் கொன்ஸர் வேட்டிவ் அரசாங்கத்தைக் கவிழ்த்து, ஊழல்களை வெளிப்படுத்தி அரசாங்கத்தைத் திணறடித்துக் கவிழ்த்ததில் பேராசிரியர் கமெல்



படிப்பகம்

www.padippakam.com

சனுக்கும் பங்குண்டு. அண்மையில்
,த பேராசிரியர் கமெல்டன்-தன்சன்
ர்ம் டனிஷ் மக்களைத் திடுக்கிட
,துள்ளது.

இ..எங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்
படுத்தி, குடும்பங்களையும் சினேகிதரையும்
பிளவுபடுத்தி, நிரந்தரத் தொல்லையளித்து
வன்முறைக்கு இட்டுச் செல்லும் இனவெறி
மனப்பான்மை வளர்ச்சியைக் கண்டும்
காணாததுமாகப் பல நாடுகள் இருப்பதை
அங்கு நடைபெறும் சம்பவங்கள் மூலம்
அறிந்து கொள்ளலாம். ஒரு வழியில் சட்ட
திட்டங்கள் மூலம் கறுப்பின மக்கள். அகதிக
ளாகப் புலம் பெயர்ந்து வருவோர் போன்
றோரை வரவிடாது தடுத்து மறிக்க முயற்
சிக்கும் அதே வேளை,அதில் ஏற்படும் ஆட்சி
முறைச் சிக்கல்களையும் (Bureaucratic
Procedures) தாமதங்களையும் கையாளுவ
தற்கு ஆட்சியாளர்கள், இனவெறியாளர்கள்
உணர்ச்சிகளைப் பயன்படுத்தி வருகிறார்
கள் என்ற எண்ணமும் பலர் மத்தியில்
உள்ளது.

இனவெறியாளர்களின் வன்செயல்களைக்
கட்டுப்படுத்த முயன்று வருகிறோம் எனக்
கூறிக்கொண்டு அவற்றினை உடனடியாகக்
கட்டுப்படுத்த அரசுகள் தவறி தாமதம்
காட்டி வருவதாக அவதானிகள் கூறுகிறார்
கள். இனவெறி வன்முறை கறுப்பின மக்கள்
மத்தியில் குறிப்பாக மூன்றாம் உலக நாடு
களில் இருந்து வரும் அகதிகள் மத்தியில்
பயத்தையும் பீதியையும் எழுப்பி இந்நாட்
டில் அவர்களுக்கு வதிய உரிமையில்லை என்
பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி, செய
லிழக்கச் செய்து விரட்டியடிக்கவும், மேலதிக
மாகக் குடியேற வருபவர்களைத் தடுக்கவும்,
ஒரு முன் அறிவித்தலாக இருக்கவும் பயன்
படுவதாகபலர் கருதுகின்றனர்.இப்படியான
வழிமுறைகளைக் கடைப்பிடித்து வருவதில்
பிரித்தானிய அரசு விதிவிலக்கில்லை.

1993 ஆம் ஆண்டு மட்டும் 140,000க்கு
மேலான இனவெறித் தாக்குதல்கள் பிரித்
தானியாவில் நடைபெற்றுள்ளதாக அறிக்
கைகள் கூறுகின்றன. கடந்த இரண்டு
வருடங்களில் 80 பேர் கொல்லப்பட்டுள்ள
னர். பிரித்தானியத் தேசியக் கட்சி (British
National Farty (BNP) என்னும் தீவிர வலது
சாரிக் கட்சி முதன் முறையாக அண்மையில்
டவர் ஹம்லெட் (Tower Hamlet) என்னு
மிடத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்
தலில் வெற்றி பெற்றுள்ளது. இதில் வெற்றி
பெற்ற டெறக் பீகான் (Derek Beckon) ஒரு
தீவிரவாதி. இவருக்குக் கிடைத்த வெற்றி
யைப் பலர் வரலாற்றுக்குரிய வெற்றியெனப்
புகழாரம் சூட்டி வருகின்றனர்.இவர் உள்ளூ
ராட்சி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட
நாளிலிருந்து கறுப்பின மக்கள் மீது, குறிப்
பாக பங்களாதேஷ் மக்கள் மீது நடைபெற்ற
இனவெறித் தாக்குதல்கள் 300% உயர்ந்திருப்
பதாகக் கூறப்படுகிறது.

கறுப்பின மக்கள் இந்நாட்டு மக்களுக்குரிய
வேலைகளைத் திருடி வருவதாகவும்
இதனால் பல வெள்ளையருக்கு வேலை
வாய்ப்புக்கள் இல்லாமல் போவதாகவும்,
கறுப்பரை இங்கு இருக்க விட்டபோதும்,
இவர்கள் அரசாங்கம் கொடுத்து வரும்
சலுகை ஊதியங்களைத் திருடி வருவதாக
வும் இதனால் அரசுக்குப் பணச்சிக்கல் ஏற்
பட்டுள்ளதெனவும், இதனால்தான் வெள்
ளையர்கள் நலமுடைய வாழ்க்கை நடாத்த
முடியாதிருப்பதாகவும், பொலிசார் கறுப்
பினத்தவர்களுக்குச் சாதகமாகவே இயங்கி
வருகிறார்கள் என்றும், இப்படியெல்லாம்
விட்டுக் கொண்டு போனோமேயானால்,
கறுப்பினச் சுரண்டல்காரர்கள் எம்மை
முற்றாக விழுங்கி விடுவார்கள்என்றும் எச்ச
ரிக்கை செய்து பொய்ப் பிரச்சாரம் மூலம்
இனத்துவேஷத்தை வளர்த்து வெற்றிகண்டு
வருகிறார்கள். இதனைப் பிரித்தானிய
அரசும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி
வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை, சிறுபான்மை இனத்தவர்.
அகதிகள் மற்றும் வடுப்படத்தக்க மக்கள்
உரிமைக்காக, நீதி தேடி போராடுபவர்க
ளுக்கு எதிராக, அரசு நிர்வாகங்களும்,
காவல் துறை அதிகாரிகளும். அரசுகளின்
கொள்கைகளை மாற்றியமைக்கக் கூடிய
சக்தியுடைய முக்கிய நண்பர்களும் இன
வெறி வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருப்
பார்களேயானால் எப்படி. பொதுமக்களிடம்
வளர்ந்து வரும் இனத்துவேஷ உணர்வு
களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கேள்வி
பலரிடத்து அதிகரித்து வருகிறது. இன
வெறியை முற்றாக அகற்றுவது கடின
மாக இருப்பினும் வளர்ந்து வரும் இன
வெறி மனப்பான்மைக் கெதிராகப்
போராட வேண்டும் என்ற கருத்தும் மக்க
ளிடையே வளர்ந்து வருவதைக் காணக்
கூடியதாகவுள்ளது. இதற்கு ஆதரவளிப்பது
எமது கடமையெனக் கூறலாம்.

இனவெறிக் கெதிராக நடைபெற்று வரும்
அல்லது நடைபெறப் போகும் போராட்டங்
கள் பற்றிய தகவல்களை விரும்புவோர்
தமிழ்த் தகவல் நடுவத்திடமிருந்து பெற்றுக்
கொள்ளலாம். □

**நன்றி : மீட்சி, (இலண்டன்), மே 1994.**



படிப்பகம்

www.padippakam.com

# இன்னொரு ஐரோப்பா இன்னொரு லண்டன் இன்னொரு தமிழன்

—யமுனா ராஜேந்திரன்
(பிரித்தானியா)

## I

பூமிப் பரப்பின் அரசியல் பொருளாதார கலாச்சாரக் கருத்தமைவுகள், ஐரோப்பிய அமெரிக்க நிலை நலனுக்கு ஏற்ப ஒற்றைப் பரிணாம நோக்குடன் நுட்பமான பலவந்தமான வழிமுறைகளுடன் கட்டமைக்கப்படும் காலம், நாம் வாழும் காலம்.

இச்சூழலில் இதை எதிர்த்த கலகம் போல் சுய அடையாளத்துக்கான அரசியல் (Identity politics) பல்வேறு தளங்களில் முன்வைக்கப்படுகிறது.

மொழி, இனம். நாடு, ஜாதி, மூன்றாம் உலகக் கலாச்சாரம் என எத்தனையோ முகங்களோடு சுய அடையாள அரசியல் களம் போர்க்களமாகி விட்டிருக்கின்றது.

தேசீய இனங்களின் மறு எழுச்சி, இலக்கியத்தில் மூன்றாமுலக மொழியின் அவசியம் பற்றிய தேடல் போன்றவை இத்தகையன. அடிப்படையில் ஆதிக்கச் கட்டமைவுக்கு எதிரான எதிர்க்குரல்கள் இவை.

இன்று அடையாள அரசியல் பேசுகிறவன் இரண்டு அம்சங்களை கவனம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒன்று மனித மீட்சிக்காகத் தோன்றிய இயக்கங்களும் சமூக அமைப்புகளும் அடிப்படை மானுட மதிப்பீடுகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் சேதம். மற்றையது புதிய உலக முறைமை பேசுபவர்கள் ஏற்படுத்தியிருக்கும் புதிய முறை நுட்பச் சுரண்டல்/ஆதிக்கம்.

செய்தித் தொலைத் தொடர்பு வலைப் பின்னல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம், இருபதாம் நூற்றாண்டு மனிதனின் சிந்தையை நேரடியாகப் புரட்டிப் போட்டிருக்கிறது.

1917ல் உதித்த தொலை மானுடக் கனவு இடிந்து விடுவதை இவன் கண்ணெதிரே கண்டான். போலந்து, ருமேனியா, ரஷ்யா, பல்கேரியா போன்ற நாடுகளின் சவக்கிடங்கு நாற்றம் இவன் நாசியைத் தாக்கியது. இவனது தார்மீக அடிப்படைகள் பலமாக அசைக்கப்பட்டன. தியானன்மென் சதுக்க இரத்த நெடி இவனிடம் சலனத்தை ஏற்படுத்தியது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நிறுவனமயப் படுத்தப்பட்ட நிறவெறியும் நவீன பாசிசமும் தேசீய இனவெறியும் உத்வேகத்துடன் மீண்டும் இந்தக் குருதிச் சேற்றிலிருந்து எழுந்தன.

இச்சூழலில், ஈழத்தில் ஏற்பட்ட சூழலினால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடா வுக்கும் ஓடினான் தமிழன். 1980களில் புலம் பெயர்ந்த இத்தமிழன் முற்றிலும் வித்தியாசமான அனுபங்களினூடே தகித்தெழுந்தவன் இந்தப் புலம் பெயர் (Exiled Refugee) அகதித் தமிழன். இந்த நாடுகளுக்கு வருவதற்கு முன்பே, முதல் தமிழன் இந்நாடுகளில் இருந்தான். மருத்துவராக, என்சீனியராக, கணக்கியலாளராகப் பணம் சேர்க்க வந்த தமிழன் அவன். அவனோடு அவன் கொண்டு வந்தது அவனது ஆதிக்கக் கலாச்சாரம், ஜாதீயம், குங்குமப் பண்பாடு. பட்டுச்சேலை போன்றன. இவன் ஈழத்திலிருந்தும் வந்தான் இந்தியாவிலிருந்தும் வந்தான். வெள்ளை மூளையும் பழுப்பு உடலுமாக இவன் உறைந்தான். அகதித் தமிழனை ஏளனமாகப் பார்த்தான். கேவலமாகப் பேசினான். அடையாளம் பற்றிய அக்கறை இவனுக்கு இல்லை. அந்த நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றின அக்கறை இவனுக்கு இல்லை.

இவன் ஐரோப்பியச் சிந்தனையைத் தெரியாதவனாக இருந்தான். நிறவாதிகளோடு



படிப்பகம்

www.padippakam.com

உடன்பாடு கண்டான். இந்நாடுகளில் சுரண்டப்பட்ட மக்களிலிருந்து இவன் தன்னைத் தொலைவு படுத்திக் கொண்டான். சில வேளை மத்தியதர வர்க்க வெள்ளைப் பெண்களை மண முடித்துக் கொள்ளவும் செய்தான்.

ஆயின் இன்னொரு வகை தமிழரின்—அகதித் தமிழரின்—வாழ்வனுபவம் சொந்த நாட்டிலும் சரி, புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி வித்தியாசமானது, உக்கிரமானது. இவர்கள் ஆயுதக் கலாச்சாரத்தின் கொடுமையையும் ஜனநாயக மறுப்பினையும் மக்கள் மீது இயக்கங்களின் ஆதிக்கத்தையும் நேரடியாகக் கண்டவர்கள்; பெருந்தேசிய இனவாதத்தின் கொடூரத்தையும் தமது உடல் உயிர் உடைமைகள் சூறையாடப்பட்டதையும் எரியுண்டு போனதையும் நேரில் அனுபவித்தவர்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவந்த இம்மக்கள் வந்த இடங்களில் எதிர் கொண்ட துன்பங்கள் எண்ணிலடங்கா. பாசிசம், நிறவெறி, வேலையின்மை, குடும்பங்கள் சிதறுண்டு போதல், குழந்தைகள் அடையாளமற்றுத் தவித்தல் என நிறைய நிறைய.

அவர்கள் வதியும் சூழல் பற்றி அறிமுகமாகச் சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதே என் நோக்கம். இவர்களின் சமூகச் செயல்பாடுகள், இருப்பு, கலாச்சார/அரசியல் செயல்பாடுகள் பற்றிச் சில குறிப்புகளைப் பதிவதே என் எண்ணம்.

## II

பொதுவாக சமகால ஐரோப்பிய நடைமுறையில், நிறவெறி சார்ந்த நடவடிக்கைகளை 'ரேஷிஸம்' (Racism) என்றும், இனவெறி சார்ந்த நடவடிக்கைகளை 'பாசிசம்' (Fascism) என்றும் அடையாளப்படுத்துகிறார்கள்.

ஹிட்லரின் யூத இன எதிர்ப்புத்தன்மை, ஜெர்மானியர் அல்லாத அனைத்து இனங்களையும் பூண்டோடு அழிக்கும் தன்மை வரை போனது. நிறவெறியின் உச்சகட்ட கழிசடை நிலையாகத்தான் பாசிசம் ஐரோப்பாவில் இன்று நிலவுகிறது. பாசிச எதிர்ப்பாளர்கள் என்று சொல்லப்படுகின்ற பிற ஐரோப்பியர், அமெரிக்கர்களின் மனவுலகம் அடிப்படையில் நிறவெறி சார்ந்தது.

ஒன்றுபட்ட ஐரோப்பா (Unified Europe) வில் மற்ற நிற இனங்களுக்கு இடமில்லை. இது வெள்ளையர்களின் மூடுண்ட, மதில் எழுப்பப்பட்ட ஐரோப்பா. ஐரோப்பிய அரசியலில் வளர்ந்து வரும் நிறவெறி, இனவெறி அரசியல் நாம் அனுபவிப்பதுதான்.

பிரெஞ்சுக்காரனுக்கு நம் மொழி 'சத்தமாகவும்', நம் உணவு 'கெட்ட வாசமாகவும்', சகிக்கத்தக்கது இல்லாததாகியும் விட்டது. ஜெர்மனியில் தொடங்கி சுவிஸ், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா என அனைத்து வெள்ளை நாடுகளிலும், கறுப்பு இன மக்களும் பழுப்பு இன மக்களும், நிறத்தின் அடிப்படையில் கொல்லப்படுகிறார்கள்; எரிக்கப்படுகிறார்கள்.

இதில் இலங்கை, இந்தியத் தமிழன் என்றோ பாகிஸ்தான், பங்களாதேஷ் என்றோ, சோமாலியன், கானாக் குடிமகன் என்றோ, பட்டேல், சிங், செளத்ரி என்றோ வித்தியாசமில்லை. வெள்ளை அல்லாத இன மக்கள் எல்லாருடைய அடிப்படை இருத்தலே இங்கு பிரச்சினையாகி விட்டது.

இந்த நிறவெறிக் கருத்துருவம் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் அனைத்து வெகுஜன ஊடகங்களிலும் வெளியாகிறது. அமெரிக்க இடதுசாரியான நோம் சோம்ஸ்கியின் எழுத்துக்கள் இவ்வகை ஆய்வுகளைத் தெளிவாக முன்வைக்கின்றன.

இந்த நிறவெறி, இனவெறிக்கு எதிரான படைப்பெழுச்சி இந்த நாடுகளில் வாழும் வெள்ளையரல்லாத மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில், அரசியலில் 'கரும் புலிகள் இயக்கம்' இலக்கியத்தில் 'ஹர்லம் கலாச்சார மறுமலர்ச்சி' அத்தகையன. இங்கிலாந்தில் மூன்றாம் உலக மக்களின் கலாச்சார முயற்சிகளை மையம் கொண்டே பத்திரிகைகள் வருகின்றன.

Third Text (மூன்றாம் விபி) என்றொரு பத்திரிகை, கறுப்பு மற்றும் ஆசிய, இலத்தீன் அமெரிக்க மக்களின் காட்சிக் கலை (Visual Arts) சிறப்பிதழாக வெளியாகிறது. Third world Quarterly, Artrage, Bazaar போன்ற கறுப்பு, ஆசிய இலக்கிய இதழ்கள் வெளியாகின்றன. சமீபத்தில், Values மற்றும் Vertigo என்று இரு பத்திரிகைகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

சினிமாவிலும், அமெரிக்காவில் ஸ்பைக் லீ தொடங்கி, பிரிட்டனில் Sankofac (வேர்



படிப்பகம்

www.padippakam.com

களுக்குத் திரும்பிப் போதல் என்று பொருள்) திரைப்பட அமைப்பு மூலம் படங்கள் வெளியாகின்றன. அந்த உந்துதலில், சமீபத்தில் பிரிட்டனில் வெளியாகியிருக்கும் திரைப் படம் Bajji on the Beach. குரீந்தர் Ccada எனும் குஜராத்திப்பெண்மணியால் இயக்கப் பட்ட படம். மீரா சயால் எனும் புகழ் வாய்ந்த ஆசியத் திரைப்பட நடிகை, இதற்கான கதை வசனம் எழுதியிருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளில் நிலவும் நிறவெறியின் சில சிறப்புத் தன்மைகளை முதலில் நாம் அவதானிக்க வேண்டும் :

ஐரோப்பியர்கள் பிரதானமாகத் தங்கள் நிறவெறி நடவடிக்கைகளைக் காண்பிப்பது ஆபிரிக்க மற்றும் ஆசிய மக்கள் மீதுதான் கணக்கீடுகளின்படி, கொல்லப்படுவதும் வன்முறைக்காளாவதும் எரிக்கப்படுவதும் இம்மக்கள்தான்.

ஒப்பீட்டளவில் நிறவெறித் தாக்குதலுக்கு ஜப்பானியர்கள், இலத்தீன் அமெரிக்கர்கள், யூதர்கள் தற்பொழுது ஆட்படுவதில்லை. காரணம், அவர்களது நல்ல சிவந்த நிறம். மற்றையது கலாச்சாரரீதியில் கறுப்பு/ஆசிய இன மக்களை விடவும் ஐரோப்பியர்களுடன் உடன்படுவதும், ஒன்றுபடுவதும் தான்.

ஆசியர்கள் என்று குறிப்பிடும் போது, குறிப்பாக இலங்கைத் தமிழர்கள், இந்தியர்கள், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாட்டைச் சேர்ந்தவர்களைத்தான சொல்கிறேன். இது இவ்வாறாக இருந்தாலும்கூட, வெள்ளையரல்லாத பிற ஆசிய இலத்தீன் அமெரிக்க/யூதமக்களிடம் வெள்ளையருக்குத் துவேஷம் உண்டு இவர்களிலிருக்கும் இடதுசாரிகள் பொதுவான நிறவெறி/இனவெறி எதிர்ப்புப் போராட்டங்களில் ஒன்றுபட்டுச் செயல்படுகிறார்கள்.

இந்த போராட்டங்களில் முன்னணிச்செயல் வீரராகவும் சித்தாந்தியாகவும் செயல்படும் ஒரு தமிழரும் உண்டு. அவர் 'இனமும் வர்க்கமும்' (Race and Class) காலாண்டு இதழின் ஆசிரியர் ஏ. சிவானந்தன்.

சிவானந்தன் இலங்கைத் தமிழர். இக்பல் மகூத், எட்வேட் ஸயத், சமீர் அமீன் போன்றவர்களோடு சேர்த்துச் சொல்லப் படுபவர்.

இந்தியர்கள்/இலங்கைத் தமிழர் கலாச்சாரத்தில் வேரோடியிருக்கும் ஜாதீய மனோவியல், ஐரோப்பியச் சூழலில் வேறொரு பரிமாணத்துடன் சிக்கலானவடிவம் எடுக்கிறது. பொதுவாக, கீழ் ஜாதி மக்கள் தமது சமூகத்தில் செய்யும் தொழில்கள், 'நமக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட வரலாற்றின்படி' ஆபிரிக்க மக்கள் செய்யும் தொழில்கள் ஒரே வார்த்தையில் அடிமையின் தொழில்கள். ஆபிரிக்க மக்களும் கீழ் ஜாதி மக்களும் கலாச்சார மற்றவர்கள்; காட்டுமிராண்டிகள். எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் கலாச்சாரம்/நாகரீகம் அவர்களுக்கு வாாது. ஆபிரிக்க மக்களும் கீழ் ஜாதி மக்களும் நிறத்தில் கறுப்பர்கள்.

ஆண்டை வர்க்கமும் பிராமணீயமும் ஒடுக்கு முறையும் நம் சமூகத்தில் பின்னிப் பிணைந்தவை. கறுப்பு நிறம் எமது கலாச்சாரத்தில் கெட்ட வார்த்தை; அசிங்கமான வார்த்தை இருட்டு நிறம் நமக்குப் பேய் பிசாசு. இந்த ஜாதீய மனோவியல் அடிப்படையிலான ஒரு இடைவெளி, கறுப்பு மக்களுக்கும் நமக்கும் இடையில் உணடு.

இந்தியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்குமான இடைவெளியில், இந்த ஜாதீய அம்சம் தவிரப் பிறிதொரு அம்சமும் உண்டு. அது அரசியல்ரீதியிலானது. பிரிட்டிஷ் காலனி நாடுகளில் புலம்பெயர்ந்த இந்திய மக்கள், வியாபார வர்க்கமாகக் குடியேறினார்கள். உகண்டா, தன்சானியா போன்ற நாடுகள் இதற்கு உதாரணம்.

அங்கு தலைமுறை தலைமுறையாக வியாபார வர்க்கமாக ஆபிரிக்க மக்களை ஒப்பீட்டளவில், லாபம் சம்பாதிக்கப் பயன்படுத்திய இந்தியர்கள், கலாச்சார ரீதியில் ஆபிரிக்கர்களோடு ஒன்றுபடவேயில்லை. ஆபிரிக்க ஆணொருவன் இந்தியப் பெண்ணைச் காதலிப்பதும் மணந்து கொள்வதும் சாத்தியமேயில்லை. பொருளாதார ரீதியான கலாச்சார ரீதியான இந்தத் தன்மை கறுப்பு மக்களிடத்தில் இந்தியர்கள்பால் வெறுப்புணர்வை உருவாக்க ஆதாரமானது. 24 மணிநேர அவகாசத்தில் உடுத்திய துணியுடன் உகண்டவை விட்டு வெளியேற்றப் பட்டார்கள் இந்தியர்கள் இடி அமீன் அப்போது ஆட்சியிலிருந்தார். வெளியேற்றப்பட்ட இந்தியர்கள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் குடியேறினார்கள். மறுபடி தங்கள் வியாபார வாழ்வைத் தொடர்ந்தார்கள். இவர்களில் குஜராத்திகள், பிரதானமானவர்கள்.

இத்தனை தன்மைகளும் கொண்டதுதான் ஐரோப்பிய நிறவெறி உலகம். இந்த உலகத்



படிப்பகம்

www.padippakam.com

தில், பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபட வேண்டிய தேவை அனைத்துஆசிய/ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க மக்களுக்கும் உண்டு. இந்த அணியில் பொப் டைலன் உண்டு, ஸ்ரிங் உண்டு. ரெர்ரி ஈகிள்டன் உண்டு ரோனி பென் உண்டு ஷீலா றோபோத்தம் உண்டு. யூத சோசலிஸ்ட் அணி உண்டு. அமித்கிதாய் எனும் இஸ்ரேலியத் திரைப் படக் கலைஞனும் உண்டு தமிழரான சிவானந்தனும் உண்டு

தற்பொழுது ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகள், புலம் பெயர்ந்த தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கான முஸ்தீபுகளைச் செய்து கொண்டிருக்கின்றன. ஸ்விட்சர்லாந் திலிருந்து ஏற்கெனவே சிலர் திருப்பி அனுப் பப்பட்டு விட்டனர். இன்றும் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படாத சூழ்நிலையில், அம்மக்களின் உயிர் பாதுகாப்பு பற்றி, மனித உரிமை பற்றி வாய்கிழியப் பேசும் இந்நாடுகள் கவலை கொள்வதில்லை.

அகதிகளின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாகச் செயல்படும் சில தமிழமைப் புகள் பற்றியும் தனிநபர்கள் பற்றியும் சொல்ல வேண்டும்.

1) தமிழ் தகவல் மையம் (Tamil Information Centre) மூலம் செயல்படும் வரதகுமார்.

2) குடிபுகுந்தோர் நலக் கூட்டுக் குழு (Joint Council for Welare of Immigrants (JCWI) எனும் அமைப்பில் செயல்படும் நிர்மலா ராஜசிங்கம்.

வரதகுமாரும் நிர்மலா ராஜசிங்கமும் இலங் கைத் தமிழர்கள். தமிழ் தகவல் மையம் அகதி கள் தொடர்பான மனித உரிமைப் பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆவணங்களைப் பாதுகாக்கும் நூலகம் ஒன் றையும் நடத்துகிறது. 'மீட்சி' எனும் மனித உரிமை/கலாச்சாரப் பத்திரிக்கை ஒன்றையும் வெளியிடுகிறது.

நிர்மலா ராஜசிங்கம் ஈழ விடுதலைப் போராட்டத்தில் போராளிகளால் சிங்களச் சிறையிலிருந்து மீட்கப் பெற்றவர்; பெண் நிலைவா தி; நிறவெறி எதிர்ப்பு நடவடிக்கை களில் தீவிரமாகச் செயல்படுவர். தெற்கு ஆசியர் ஒற்றுமை இயக்கம் (South Asia Solidarity Campaign) எனும் அமைப்பு மூலம் இவை தொடர்பான கருத்தரங்கங்களிலும், பிரித்தானிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளி லும், வீதி ஆர்ப்பாட்டங்களிலும் பங்கு கொள்கிறார்.

கடந்த அய்ந்து ஆண்டுகளில், ஐரோப்பா வில் நடந்த தேர்தல்களில் பாஸிஸ்டு/நிற வெறி ஆதரவாளர்கள் கணிசமான வாக்கு கள் பெற்றிருக்கின்றனர். பிரான்ஸில் லீபென், இத்தாலியில் முசோலினியின் பேத்தி, ஸ்பெயினில் பிராங்கோவின் வாரிசு கள், ஜெர்மனியிலும் நோர்வேயிலும் மொட்டைத்தலையர்கள் (SkinHead), பிரிட் டனில் பிரிட்டிஷ் தேசியவாதக் கட்சி (British National Party) போன்றவை இந்த அமைப்பு கள். பிரிட்டிஷ் தேசியவாதக் கட்சி வெற்றி பெற்றிருக்கும் தொகுதிகள் ஒரு காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் வாக்கு வங்கி களாக விளங்கியவை. பெரும்பாலும் வேலை யிழந்த தொழிலாளர்கள் நிறவெறிக்கு ஆட்படுகிறார்கள்.

ஆட்சி பீடத்திலுள்ள அரசுகள் தங்கள் முதலாளித்துவ சமூக நெருக்கடிகளுக்குக் காரணம் அகதிகள்தான் என்று அடிக்கொரு தரம் பிரச்சாரம் செய்கின்றன. இவற்றை எதிர்த்து நிறவெறி எதிர்ப்பு நேச அணி (Anti racist alliance), பாசிசத்திற்கு எதிர் போராடு, நிறவெறிக்கு எதிர் போராடு (Fight fascism, Fight racism)எனும்அமைப்பு போன்றவற்றிற்குள்ளும் நிறவெறி தொடர் பான பிரச்சனைகள் இருக்கின்றன. தொழிற் சங்க அமைப்புகளுக்குள்ளும், பாசிசத்திற்கு எதிரான அமைப்புகளுக்குள்ளும் நிறவெறிப் பிரச்சினைகள் எழுகின்றன. இதை, சிவா னந்தம், 'நிறவகைப்பட்ட இனவாதம்' என்று குறிப்பிடுவார்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழர்கள் மிகக் குறைவானவர்களே. தீவிரவாத சிந்தையுள்ள சில கலாச்சாரக் குழுக்கள் மட்டுமே இத்தகைய நடவடிக்கை களில் பங்கு பெறுகின்றன. தமிழ் நாட்டின் சினிமாக் கலாச்சாரம் இங்குள்ள ஈழத்தமி ழரின் வாழ்வில் பாதிநேரத்தைத் தின்று விடுகிறது.

தமிழரின் சுய அடையாளத்திற்கான தேடலில், இம்மாதிரியான போராட்டங் களில் தம்மை இணைத்துக்கொள்வதும் முக்கியமான அம்சம். இந்நாடுகளில், தமிழன், அடிப்படையில் வெள்ளையரல்லா தவன்; மூன்றாமுலகைச் சார்ந்தவன்; சுரண் டலுக்கு ஆட்பட்டவன்; வேலையில்லாதவன்; உதிரிப்பாட்டாளி; கலாச்சார ஒடுக்கு முறைக்கு ஆளானவன். இந்தப் பிரக்ஞை ஏற்கெனவே பணம் பண்ண வந்த இந்தியத் தமிழனுக்கும் இல்லை; ஈழத் தமிழனுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. இந்தப் பிரக்ஞையுடன் செயல்படும் தமிழர்கள் அகதிகளாக வந்துள்ள தமிழர்கள் மட்டுமே. ஜெர்மனியில் 'தூண்டில்' பத்திரிகையைச் சார்ந்தும் கனடாவில் ''தேடல்'' பத்திரிகையைச் சார்ந்தும், நோர்வேயில் ''சுவடுகள்'' பத்திரிகையைச் சார்ந்தும் செயற்படும் நண்பர்கள் இவ்வகையினர் எனக் குறிப்பிட முடியும்.

மாற்றுச் சமூக அமைப்புக்காகவும், மாற்றுக் கலாச்சாரததுக்காகவும் சிநதிப்பவர்கள் தான் உலகை முன்னோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

லண்டன் நகரம், உலக சிந்தனையின் பல்வேறு சிகரங்களுக்கும் அரசியல் அடைக்கலம் தந்த நகரம் ஜெர்மானியரான கார்ல் மார்க்ஸ் தொடக்கம், இலத்தீன் அமெரிக்க பெண் கவியான மரியா ஜெவ்யனியாபிரவோ வரை இது வளர்கிறது.

நம் சமகாலத்தின் அறிவாளியான பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் யுத்த எதிர்ப்புக்காக ஊர்வலம்போன டிராபல்கர் சதுக்கம் இப்பொழுதும் மாபெரும் மக்கள் எழுச்சிகளுக்குச் சாட்சியாக இருக்கிறது.

சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் (Socialist Workers Party) மார்க்ஸீயப் பட்டறை நிகழ்த்தும் மார்க்ஸிய அழகியலாளர் ரெரி ஈகிள்டனின் எதிர் கலாச்சார உணர்வுக்கு சாட்சியாக நிற்கின்றன, லண்டன் பல்கலைக்கழக கட்டடங்கள்.

எமது மக்களுக்கு எமது நாட்டு டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்களால் சுட்டப்படும் லண்டன் நகரம் பகட்டு நிறைந்த, கார்கள் குவிந்த, கட்டடக்காடுகள் அடர்ந்த, புல்வெளிகள் சிரிக்கும், மெழுகுப் பொம்மைகள் அழைக்கும், பொது மதுவிடுதிகள் கண்சிமிட்டும், கிளுகிளுப்பூட்டும் நகரம். இது அறியாமையில் விளைந்த ஆதிக்கத்தில் குனிந்த, திட்டமிட்ட பொய். லண்டனின் இதயத்தின் ஆழத்தில் கோபம் குமுறிக் கொண்டிருக்கிறது. தேம்ஸ் நதியின் ஆத்மா குளிர்ந்து ஜில்லிட்டிருக்கிறது

ஐந்து ஆண்டுகள் தேடித்திரிந்ததில்- ஆழ்ந்து அலைந்ததில்— நான் கண்ட லண்டன் எரியும் லண்டன்.

சுரங்கப் பாதைகளில் நெஞ்சுருக கித்தார் வாசிக்கும் பிச்சைக்கார இளைஞர்கள்; கட்டடங்களின் அடியில் குளிர்காயும் வீடற்ற முதியவர்கள்; பக்கத்தில் அன்பான நாய்.

மாபெரும் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், வரிகொடாமை இயக்கம், பிறிக்ஸ்ரன் நகரே பற்றி எரிந்த நிறவெறி எதிர்ப்புப் போராட்டம்.

தினம்தினம் ஊர்வலங்கள்; ஆர்ப்பாட்டங்கள். மூடப்படும் நிலக்கரிச் சுரங்கங்களின் தொழிலாளர் எழுச்சிகள். பெண்ணிலைவாத இயக்கங்கள்.

லண்டன் மாநகரத்தை ஜீவனுடன் உலுப்பிக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்தான்.

இவர்களுடன் கைகோர்த்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், ஓவியர்கள், பத்திரிகையாளர்கள், மூன்றாமுலக நாட்டு விடுதலை ஆதரவு அமைப்புகள்,மாற்று நூலகங்கள்...

இன்னொரு லண்டன் பற்றிய இந்த அறிமுகம், நம் அடையாளத்துக்காகப் போராடும் சக மனிதர்களுக்காக முன்வைக்கப்படுகிறது.

மாற்றுக்கலாச்சார செயல்பாடுகள் பல்வேறு தளங்களில் நடைபெறுகின்றன. இவற்றுள்- 1. மாற்று பத்திரிகைள். 2. மாற்று சினிமா, நாடகம், தொலைக்காட்சி. 3. மாற்று விஞ்ஞானம். 4. சுற்றுப்புறச் சூழல் இயக்கம் 5. பெண்ணிலைவாத இயக்கம். 6. மாற்று நூலகம் 7. மூன்றாம் உலக விடுதலை ஆரவு இயக்கங்கள். 8. ஒன்றுபட்ட இடதுசாரி இயக்கம்.

என்பன பற்றி அறிமுகமாகச் சில விடயங்களைச் செல்லலாம்.

முதலில்: 1. அரசியல் கலந்த சிறு பத்திரிகைகள்:

Confrontation, Living Marxism, New Statesman and Society, Changes, The Marxists, Spartacus, Socialist Review, International Socialism, The Next Step, Arab Review, Amnesty International; Jewish Socialist, Fight Facism Fight Racism, The Socialist, Pink, History Today, Red Pepper.

2. இலக்கியம், கலாச்சாரம் சார்ந்த சிறு பத்திரிக்கைகள்:

Third Text, Granta, Third World Review, Latin American Perspecitve, Art Rage, London Magazine, Wasafari, Index on Censorship, PN Review, LondonReview of



படிப்பகம்

www.padippakam.com

Books, Times Literary Supplement, Artists Review, Painters Quartely, Modern Painters, New Left Review, Rece & Class, New York Review of Books, Times Higher Education Supplement, Class and Capital, The New Economy, Bazaar, Radical Philosphy

3. பெண்ணிலைவாதம் சார்ந்த சிறு பத்திரிகைள்:

Gender Studies, Every Woman, Stuggle and Strife, Feminist review

4. விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம் சார்ந்த சிறு பத்திரிக்கைகள்:

The New Scientist, Science as Culture, Alternative Science.

5. சுற்றுப்புறச் சூழல் சார்ந்த சிறு பத்திரிகைகள்:

Socialism & Health, The Ecologist Outrage, Resurgence, Rural Socialism, Green

வீதிகளிலும் நடைபாதைகளிலும் வாழ்வோர், பிச்சை எடுப்போர்களால் வெளியிடப்படும் Big Issue (என்ற சஞ்சிகை)

ஏறக்குறை 500 சிறு பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் நிறைய விவாதங்களைத் தூண்டுகிற, லண்டனை மையமாகக் கொண்டு வரும் பத்திரிகைகள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இவையன்றி, அமெரிக்காவிலிருந்து வரும் The Monthly Review, Insurgent Sociologsit போன்ற பத்திரிகைகள் உள்ளிட்டு அனைத்து மாற்றுக் கலாச்சார இதழ்களும் இங்கு கிடைக்கும்.

இங்கு குறிப்பிடப்பட்ட இந்தப் பத்திரிகைகள் சமூக மாற்றத்துக்காகப் போராடும் அமைப்புக்கள், சினிமா சங்கங்கள், குழுக்கள் அவர்கள நடாத்தும் நூலகங்கள், புத்தக விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

மாற்று சினிமா, நாடகம், தொலைக்காட்சி போன்றவற்றுக்காகவும் பத்திரிகைகள் வருகின்றன.

லண்டனிலிருந்து வரும் சினிமா பத்திரிகைகளில் தரமானவை மிகச் சிலவே:

1. British ilm Society வெளியிடும் Sight and Sound.

2. கறுப்பு மற்றும் மூன்றாம் உலக சினிமா அமைப்பான Sankofa வெளியிடும் Film Frame.

3. Michael Chanan வெளியிடும் Vertigo.

அதுவன்றி கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகங்களும் சினிமாப் பத்திரிகைகளை வெளியிடுகின்றன. இவற்றுள் ஒன்றான Screen பத்திரிகை சில குறிப்பிடத்தக்க கட்டுரைகளை வெளியிடுகிறது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் மிகச் சிறந்த அரசியல் சினிமா பத்திரிகைகளான Cineaste, Jumpcut என்பனவும் இங்கு கிடைக்கின்றன, இன்னொரு நல்ல பத்திரிகை Film Quarterly.

மாற்று சினிமா அமைப்புகளாக Sankofa Film Society, Amber Films, Black Video and Film Collective போன்றவை செயல்படுகின்றன. இவை படங்களையும் தயாரித்து வெளியிடுகின்றன. ஆப்பிரிக்க படமான அமா (Ama), இந்தோ-ஆங்கில படமான Bajji on the Beach போன்றவை இவ்வமைப்புக்களின் படங்கள்.

இம்மாதிரியான படங்களையும் மூன்றாம் உலக படங்களையும், சில நல்ல ஐரோப்பிய படங்களையும் விநியோகிக்கும் நிறுவனமாக, The Other Cinema என்ற அமைப்பு செயல்படுகிறது.

பேசப்பட்ட அனைத்து இலத்தீன் அமெரிக்கப் படங்களையும் இவ்வமைப்பு மூலம் பார்க்கக் கிடைக்கிறது

Praxis என்ற அமைப்பும் ICA (institute of Contemporary Arts) எனும் நிறுவனமும் யப்பானிய, சீனப் படங்களை விநியோகிக்கின்றன.

சேகுவேராவை ஆதர்சமாகக் கொண்டு கிளர்ந்த, 60 களின் மாணவர் எழுச்சிக்குத் தலைமை யேற்ற தாரிக் அலியின் Pandung Productions சில நல்ல மூன்றாம் உலக விவரணப்படங்களைத் தயாரித்திருக்கிறது. தமிழகத்தின் சில்பி கணபதி ஸ்தபதி பற்றியொரு படமும், இத்தாலிய டைரக்டர் பொன்டகார்வோ பற்றிய விவரணப் படமும் குறிப்பிடத்தக்கவை.

ஹெரால்ட் பின்ரரின் (Herald Pinter) ஆதர்சம் பெற்ற நாடகக் கலைஞர்கள் ஹனிப் குரேஸி, தாரிக் அலி போன்றவர் களின் நாடகங்களும் மேடையேறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

வனஸா ரெட்கிரேவின் நாடகக் கம்பனியும், Volcano எனும் நாடகக் கம்பனியும் சில நல்ல நாடகங்களை சமீபத்தில் மேடையேற்றின.

The Red, Brecht in NewYork, Communist Manifesto போன்றவை இவர்கள் சமீபத்தில் மேடையேற்றிய நாடகங்கள்.

இந்த நாடக, சினிமா முயற்சிக்கு பொருளாதார வளமாகவும், ஆன்மீக பலமாகவும், காட்சிக்கான வாய்ப்பாகவும் இயங்குவது Channel 4 TV. இந்நாட்டில் சிந்திப்பவனது வாழ்வின் ஓர் அங்கமாக ஆகிவிட்டது Channel 4. Harold Pinter, Noam Chomsky, John Pilger, Jonathan Ree, Focaualt, Sartre, Althuser போன்றவர்கள் பற்றிய படங்களும் விவாதங்களும் இதில் நிறைய திரையிடப்பட்டன.

மிருணாள் சென்னின் Genesis படம் சனல் 4 நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்ட படம். மனுஷி சஞ்சிகை ஆசிரியர் மதுகிஸ்வர், நாவலாசிரியை கீதா கபூர் போன்றவர்களின் நேர்முகங்களும் இதில் திரையிடப்பட்டன.

மேலே குறிப்பிட்ட பத்திரிகைகளும் தொலைக்காட்சியும், அது சார்ந்த Michael Channan, Ray Armes, Robert Cruz போன்ற சினிமா விமர்சக ஆளுமைகளும் இணைந்து நடைபெறும் திரைப்பட விழாக்களின் நிகழ்ச்சி நிரல்களை மாற்றுச் செயல்பாட்டுக்குத் திருப்புகிறார்கள்.

லண்டன் திரைப்பட விழா, எடின்பரோ திரைப்பட விழா, கிளாஸ்கோ திரைப்பட விழா, லண்டன் லத்தீன் அமெரிக்க திரைப்பட விழா, பொதுநல நாடுகள் நிறுவன Asia Focus போன்ற திரைப்பட விழாக்களில் இம்மாதிரியான மாற்று கலாச்சார செயல்பாடுகளைச் சாதாரணமாகப் பார்க்கலாம்.

Free Associations Books எனும் புத்தக வெளியீட்டு நிறுவனம் மார்க்ஸுக்கும் சிக்மன்ட் பிராய்டுக்கும் உறவை நிறுவும் பொருட்டு Jacques Lacan, Erich Fromm போன்றவர்களின் புத்தகங்களை வெயியிடுவதோடு Franz Fenon, Amilcar Gabral போன்றவர்கள் பற்றிய உளவியல் பகுப்பாய்வுப் புத்தங்களையும் வெளியிடுகிறது. விவாகரத்துப் பெற்றவர்களது குழந்தைகளின் மனவுலகம் பற்றி நிறைய ஆய்வுகளை வெளியிடுகிறது. Science as Culture என்ற பத்திரிகையையும் வெளியிடுகிறது. தீவிர பெண்ணிலைவாத பத்திரிகையான Spare Rib அதன் ஆசிரியகுழுவுள் நிகழ்ந்த நிறவாதப் பிரச்னையால் நின்று போனதெனச் சொல்லப்படுகிறது. நின்றுபோன மற்றொரு பத்திரிகையான Marxism Today பிரிட்டிஷ் சமூகம் பற்றிய அற்புதமான ஆய்வுகளோடு வெளிவந்து கொண்டிருந்தது.

Pink, Outrage, Struggle and Strife பத்திரிகைகள் ஆண், பெண் சமபாலுறவு மற்றும் மார்க்ஸீயத்துக்கும் இருக்கும் பரஸ்பர சித்தாந்தப் பிரச்னைகளை ஆராய்கிறது. மாற்று கலாச்சார செயல்பாட்டாளருக்கென்று சில குறிப்பிடத்தக்க நூலகங்களும் உண்டு. 1 Karl Marx Memorial Library, 2. Institute of Race Relations Library 3. Latin American Bureau Library 4. Feminist Library 5. Poetry Library 6. Africa Centre 7. Workers School Library 8. British Film Institute Library.

இங்கு ஐரோப்பிய வரலாற்றுக் கலாச்சார விஞ்ஞானப் புத்தகங்களோடு, மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரி, கம்யூனிஸ்ட் இயக்கங்களின் புத்தகங்களும் கிடைக்கும். லத்தீன் அமெரிக்க விடுதலைப் பாடல்களிலிருந்து நக்ஸலைற் பாடல்கள் வரை கிடைக்கும்.

மூன்றாம் உலக விடுதலை ஆதரவு அமைப்புகளும் மூன்றாம் உலக அரசியல் அமைப்புகளும் பத்திரிகைகள், புத்தகங்கள் போன்றவற்றை வெளியிடுகின்றன.

Elsalvdor Solidarity Campaign, Nicaragua Solidarity Campaign, SouthAsia Solidarity Group, Cuba Solidarity Campaign, Kurdish Cultural Centre, Tamil Information Centre, Latin American Culture Centre போன்ற அமைப்புக்கள் பல நிகச்சிகளை நடாத்துகின்றன. Roque Dalton, Gebrial Alegria, Nazim Hickmet போன்றவர்களின் கவிதைத் தொகுதிகளை வெளியிடுகின்றன. உலகப் புகழ்வாய்ந்த புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் இங்கு செயல்படுகின்றன. பெண்ணிலைவாத வெளியீட்டாளர்கள் Womens Press, Virago, Women Only, Sheba Publishers போன்றவை

மார்க்ஸீய, மூன்றாம் உலக புத்தக வெளியீட்டாளர்கள் Pluto Press, Verso, Lawrence & Wishart, Chatto and Windus போன்றவை. இடதுசாரி புத்தகங்கள், புத்தக நிறுவனங்கள், சிறு பத்திரிகைகள் போன்றவற்றை



படிப்பகம்

ஆவணப்படுத்தவென்று மூன்று வெளியீடுகள் வருகின்றன.

1. The Radical Bookseller Directory 2. Small Press Year Book 3. London Book Shops போன்றவை அவை.

மாற்றுக் கலாச்சார புத்தகக் குவிப்பாக சில புத்தகக் கடைகள் உண்டு.

1. Central Book, 2. Path Finder Books, 3. Turn Around Distributors 4. Index Books 5. Compendium Books Stores 6. Book Marks 7. New Beacon Books

லண்டனில் வருடாவருடம் உலக புத்தவிழா நடைபெறுகிறது. கோடிக்கணக்கில் பணம் புரளும் விழா அது. அதில் World Books Distributors Directory ஒன்றும் வெளியிடப் படுகிறது. புத்தகங்கள் காட்சிக்கு மட்டுமே அங்கு வைக்கப்பட்டிருக்கும்; விற்பனைக்கு அல்ல. வியாபாரம் தான் அதன் நோக்கம்.

கம்பியூட்டரிலிருந்து காதல் வரையிலான புத்தகங்களை கண்டுபிடித்து பின்னர் வாங்கலாம்.

இதற்கு மாற்றாக, இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை Radical and Thirld World Book Fair ஒன்றும் நடைபெறுகிறது. இவ் விழாவில் உலகெங்குமிருந்து படைப்பாளிகள் வந்து உரையாற்றுவார்கள். கவிதை வாசிப்பார்கள் குறிப்பிடத்தக்க மனிதர்களைச் சந்திக்கலாம். குறிப்பிடத்தக்க புத்தகங்களை வாங்கலாம்.

இந்தச் சிந்தனைச் செழுமையின் மானுட உள்ளடக்கமாக அற்புதமான அறிவு ஜீவிகள் இங்கு வாழ்ந்திருந்தார்கள். தற்போதும் வாழ்கிறார்கள்.

கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கல்ஸ் நடந்த வீதிகள், லெனின் தங்கிக் குறிப்பெடுத்த நூலக அறை, கார்ல் மார்க்ஸ் கல்லறை, பிராய்ட் மியூசியம், மானுட ஜீவனின் வற்றாத ஆன்மிக ஊற்றாக தேம்ஸ் நதி, ஸ்ரீபன் ஸ்பென்ரர், ரெரி ஈகிள்டன், சிவானந்தன், ஜோர்ச் ஸ்ரைனர்.

தேம்ஸ் நதியைப் பார்க்கும் போது அதன் குளிர்க் காற்று மெல்லப் படுகிறபோது, அமெரிக்க நீக்கிரோ கவிஞன் லோங்ஸ்டன் ஹ்யூஸின் கவிதை வரிகள் நினைவில் வருகின்றன:

**தற்கொலையின் குறிப்பு:**

அமைதியான
நதியின் குளிர்ந்த முகம்
என்னிடம்
ஒரு முத்தத்தைக் கேட்கிறது

Race and Class ஆசிரியர் சிவானந்தன், லத்தீன் அமெரிக்க கவி ஜெவ்னியா மரியா பிரேவா, கிரிஸ் கர்னாட், ரெரி ஈகிள்டன் போன்றோரை இங்குதான் நான் சந்தித்தேன்.

## III

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் கலாச்சார ரீதியான தளம் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்பு, பாசிஸ்ட் எதிர்ப்பு, மூன்றாம் உலக ஆதரவு, சூழலியல், பெண்நிலைவாத நோக்கு போன்றவைதான் இங்குள்ள அறிவுஜீவிகளின் நடவடிக்கைக் களம்.

நோம் சோம்ஸ்கி என்னும் அமெரிக்க மொழி இயலாளர்மனிதஉரிமைப் இயக்கவாதி; ஜான் பில்ஜர் எனும் மனித உரிமைப் பத்திரிகையாளர் தொலைக்காட்சித் தயாரிப்பாளர்; ஹெரால்ட் பின்ட்டர் நாடக ஆசிரியர்; ஷீலா ரோபோதம், பெண் நிலைவாத நடவடிக்கையாளர். கென்லோச், கோஸ்டா கார்வாஸ், அலன் பார்க்கர் போன்ற திரைப் படக் கலைஞர்கள். இவர்கள்தான் எதிர்ப்புக் குரலைத் தம் தம் தளங்களில் எழுப்பிக் கொண்டிருப்பவர்கள்.

பல்வேறு மாவோயிச, ட்ராட்ஸ்கியிஸ்ட், கம்யூனிஸ்ட் குழுக்கள், அராஜகவாதிகள், வீதிப் பயணிகள், நாடோடிகள், மாணவர்கள் போன்றவர்களும் இத்தகைய நடவடிக்கையாளர்கள். பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் இதில் அடங்குவர்.

இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளோடு தம்மை இனம் கண்டு, இவர்களது கருத்துக்களில் ஆழ்ந்து சில தமிழ்ச் சிறு பத்திரிகைகள் புலம் பெயர்ந்த தமிழர் வாழும் நாடுகளிலிருந்து வருகின்றன.

புரட்சிக்குப் பிந்திய சமூகங்கள் பற்றிய ஆய்வு, புரட்சியில் ஜனநாயகத்தின் பங்கு, பெண்நிலைவாதம் சூழலியல் ஜாதியம் அமைப்பியல் போன்ற விவரங்களோடு கலைப்படைப்பிலக்கியங்களையும் ஓவியங்களையும் இவை வெளியிடுகின்றன.

www.padippakam.com

முக்கியமான சில பத்திரிகைகளையும் கலைஞர்களையும் படைப்புக்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்வகையில் என் அறிவு வரையறைக்குட்பட்டதுதான். அந்தந்த நாடுகளில் வாழும் எனது நண்பர்கள் மட்டுமே தத் தமது நாட்டிலிருந்து வெளிவந்து நின்றுபோன, வந்து கொண்டிருக்கிற பத்திரிகைகள் பற்றி விரிவாகச் சொல்ல முடியும்.

பிரான்ஸிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த அத்தகைய பத்திரிகைகள் பற்றி விரிவான கட்டுரையொன்று ஒல்லாந்து நாட்டிலிருந்து வெளிவரும் 'அஆஇ' சிறப்பிதழொன்றில் பிரான்ஸைச் சேர்ந்த கலைச்செல்வன் எழுதியிருக்கிறார்.

இனி பத்திரிகைகள். ஜெர்மனியிலிருந்து : தூண்டில், ஊதா,சிந்தனை; பிரான்ஸ் : மௌனம், ஓசை,சமர்; ஒல்லாந்து : அஆஇ; நார்வே: சுவடுகள்; கனடா :தேடல்,தாயகம், காலம், செழியனின் அதிகாலையைத் தேடி; லண்டன் : தாயகம், மீட்சி, நாழிகை; டென்மார்க் : உயிர்ப்பு, சஞ்சீவி; ஸ்விட்ஸர்லாந்து : மனிதம்.

இதுவன்றி பெண்நிலைவாதப் பத்திரிகை ''சக்தி''. இந்தப் பத்திரிகைகள் சில குறிப்பிடத்தக்க சிறுகதைக் கட்டுரைத் தொகுப்புகளையும் படைப்பாளிகளின் தொகுதிகளையும் வெளியிட்டிருக்கின்றன.
அவற்றுள் குறிப்பிடத்தக்கவை :

புலம் பெயர் சிறுகதைத் தொகுதி : அஆஇ வெளியீடு.

புலம் பெயர் பெண்கள் கவிதைத் தொகுதி : EXILE வெளியீடு.

பெண்கள் சந்திப்பு மலர்; ஒல்லாந்து இலக்கியச் சந்திப்பு மலர்; பார்த்திபனின் ''கனவை மிதித்தவன்'' (நாவல்) (கவி. சுகனுடைய 'நுகத்தடி நாட்கள்' (கவிதைகள்)

அரவிந்தனின் ''முகம் கொள்'' (கவிதைகள்) சோலைக் கிளியின் * சில தொகுதிகள்; இளவாலை விஜயேந்திரனின் வரவிருக்கும் கவிதைத் தொகுப்பு; யமுனா ராஜேந்திரன் தொகுத்த மொஹமத் தார்வீஸ் கவிதைகள்; ஜெயபாலன் தொகுதிகள்: தமயந்தி செல்வம் கவிதைகள்; சிவசேகரத்தின் கட்டுரை; சுசீந்திரனின் ஜெர்மன் மொழிபெயர்ப்புகள்; ஆதவனின் நாவல்.

**சில முக்கியமான கட்டுரைகள் :**

வ.ஐ.ச. ஜெயபாலன் : யாழ்ப்பாணத்தில் சாதியத்தின் தோற்றம் வளர்ச்சி(தாகம்/அஆஇ/சரி நிகர்);

சிவசேகரம் : புலம் பெயர்ந்த தமிழர்களின் அடையாளத்துக்கான தேடல்(தமிழோசை); ஏகலைவன் : தமிழ் தேசிய இனப்பிரச்சினை அமைப்பியல் வாதமும் புதிய வெளிச்சமும் (உயிர்ப்பு)

யமுனா ராஜேந்திரன் : இல்மஸ் குணே, ஸ்பைக்லீ மற்றும் மூன்றாம் உலக சினிமாக் கட்டுரைகள் (தாகம்)/மௌனம்/நாழிகை/சுவடுகள்/மீட்சி;

மு. நித்தியானந்தம் : சிவரமணி தற்கொலை பற்றிய இருகட்டுரைகள் (அஆஇ/தாகம்/தாயகம்.

சமுத்திரன் : மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் (சுவடுகள்)

இக்குறிப்புகளெல்லாம் ஐந்து வருடங்களில் நான் படித்ததைப் பற்றிய உடனடி நினைவிலிருந்து எழுந்தவை. உடனடியாக என் ஞாபகத்துக்கு வராத முக்கியமான படைப்புகள் பற்றி என் நண்பர்கள் பின் நாட்களில் எழுதுவார்கள் என்று நம்புகிறேன்.

புலம் பெயர் தமிழர்களின் இன்னொரு முக்கியமான கலாச்சார நடவடிக்கையாகத் திகழ்வது அவர்களது ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு.

இது ஜெர்மனியில் வாழும் சில நண்பர்கள் (பார்த்திபன், சுசீந்திரன் போன்றவர்கள்; தமக்குள்ளான சிறு இலக்கியச் சந்திப்பாக தோற்றம் கொண்டது. படிப்படியாக, ஜெர்மனியின் பல்வேறு நகர்களுக்கும், பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்விட்சர்லாந்து முதலிய நாடுகளுக்கும் விரிந்தது. இதன் பத்தொன்பதாவது இலக்கியச் சந்திப்பு லண்டன் நகரில் 1994 செப்டம்பர் 24, 25 தேதிகளில் நடைபெற்றது.

இலக்கியம், பெண் நிலைவாதம்,தேசிய இன அடையாளம், அய்ரோப்பியச் சூழலில் தமிழர், மூன்றாம் உலக சினிமா என பல கருத்தரங்குகள் நிகழ்ந்தன.

சிந்திக்கிற தமிழர்களும் கலைஞர்களும் ஒன்றுகூடி பேச இச்சந்திப்புகள் உதவு

* சோலைக்கிளி மட்டக்களப்பிலுள்ள கல்முனையில் வசித்து வருபவர்.



படிப்பகம்

www.padippakam.com

கின்றன. இருபதாவது இலக்கியச் சந்திப்பு ஐரோப்பாவிலிருந்து நகர்ந்து கனடாவில் வரும் ஏப்ரல் 1995-இல் நடைபெற உள்ளது.

சுசீந்திரன், ஆதவன், பார்த்திபன், லக்ஷ்மி, நிர்மலா, பாலேந்திரா, ஓவியர் ராஜா, தாசீசியஸ், மாலி, ஜெயபாலன், உமா, தயாநிதி, மல்லிகா, சிவசேகரம், அசோக், கீரன் என முக்கியமான பத்திரிகையாளரும் படைப்பாளிகளும் லண்டன் சந்திப்பில் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து மார்க்சிய திறனாய்வாளரும் கவிஞருமான எம். ஏ. நுஃமான் கலந்து கொண்டார்.

ஐரோப்பியத் தமிழரின் கலாச்சார வாழ்வில் இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்வு,நெறியாளர் பாலேந்திராவின் நவீன நாடகங்கள்.

பாலேந்திரா, தீவிர உணர்வுடன் நாடகம் பார்ப்பவனை உருவாக்கும் முயற்சியில் பிரக்ஞையுடன் விடாப்பிடியாக ஈடுபட்டு வருகிறார். நவீன நாடகாசிரியர்கள் பிரெக்ட், ஹரால்டு பின்ரர், அயனஸ்கோ போன்றவர்கள் இவர் மூலம் தமிழ் நாடக மேடையில் அரங்கேற்றப்பட்டுள்ளனர்.இவரது நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானவையும் குறிப்பிடத் தக்கவையுமாக விளங்குபவை, ஹரால்டு பின்ரரின் **''போகிற வழிக்கு ஒன்று,'** வாக்லாவ் ஹாஸவலின், **''மன்னிக்கவும்,''** ஈழத்துக் கவிகளின் கவிதை நிகழ்ச்சியான **''எரிகின்ற எங்கள் தேசம்''.** இன்னொரு காத்திரமான நாடகாசிரியர் 'களரி' அமைப்பின் மூலம் செயல்படும் தாசீசியஸ். அண்மையில் இவர் அரங்கேற்றிய முக்கியமான நாடகம் **''எந்தையும் தாயும்''** நாட்டுக்கூத்து வடிவங்களையும் நவீன நாடகத்தையும் இணைப்பது இவர் நாடக வடிவம்.

இக்கலை நடவடிக்கைகளை இணைப்பவராக விளங்கும் ஒரு தமிழர் கிருஷ்ண ராஜா. இவர் புகைப்படக்கலைஞர், ஓவியர், பத்திரிக்கை வடிவமைப்பாளா. வெளியிடப்படும் தொகுப்புகள் பெரும்பாலானவற்றிலும், சிறு பத்திரிக்கை முகப்புகளிலும் எம்மை நெக்குருக்கும் ஓவியங்கள் இவருடையவே.

எல்லாவற்றுக்கும் அடிநாதமாக, ஓர் இலக்கியச் சக்தியாக, பாலமாக, உந்துதலாகச் செயல்படும் ஒரு இலக்கிய மனித ஆளுமை உண்டு. அவர் பெயர் பத்மநாப அய்யர். இலக்கியவாதிகள், பத்திரிகைகள், படைப்பாளிகள் என அனைவருக்கும் பாலமாக உள்ள மனிதர் அவர். இவரும் பாலேந்திராவும் மேற்கொண்ட முன் முயற்சிகளால், தமிழகத்தின் எழுத்தாளர்கள் சுந்தர ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி போன்றோர் இங்கு வந்து நிறைய விவாதங்களைத் தூண்டிவிட்டுச் சென்றனர்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு வருகை தந்த இன்னொரு அரசியல்—கலாச்சாரவாதி 'நிறப்பிரிகை' பத்திரிக்கைக் குழுவைச் சார்ந்த அ. மார்க்ஸ். அவருடைய பார்வையில் ஐரோப்பா பற்றி கூடுதலான தெளிவான சித்திரம் ஒன்று தமிழனுக்குக் கிடைத்திருக்கிறது.

இறுதியாக, புலம் பெயர்ந்த தமிழனின் அடையாளத்துக்கான தேடலில், தன்னை எவ்வாறு இருத்திக் கொள்ளவேண்டும் எனில் அவன் நிறவெறி எதிர்ப்பாளனாக இருக்க வேண்டும்; மூன்றாமுலக, மற்றும் ஐரோப்பிய இடதுசாரிகளுடன் தன்னை இனங்காண வேண்டும்; நவ பாசிசத்தை எதிர்ப்பவனாக இருக்க வேண்டும்; சுரண்டு பவருக்கும், ஒடுக்கு பவருக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிராளியாகத் திகழ வேண்டும்.; பெண் நிலைவாத நோக்கை சுவீகரிக்க வேண்டும்;சூழலியல் பிரக்ஞையை வர்க்க நோக்குடன் வளர்த்துக்கொள்ள வேண்டும்; சமயச்சார்பற்றவனாக இருத்தல் வேண்டும்.; பிராமணீயத்திற்கும்/யாழ்ப்பாணீயத்திற்கும் எதிரான பிரக்ஞையைப் பெறவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நடவடிக்கைகளில் பங்கு கொள்ள அவன் வீதியில் இறங்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆஸ்திரேலியாவில் தமிழ் மொழி கற்றல், கற்பித்தல்

—கலாநிதி ஆ. கந்தையா
(ஆஸ்திரேலியா)

ஆஸ்திரேலியாவின் ஆட்சி மொழி ஆங்கிலம். பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை ஆங்கிலமே கற்பித்தல் மொழியாக உள்ளது. எனினும் ஒவ்வோர் இனத்தவரும் இரண்டாவது மொழியாகத் தத்தம் தாய்மொழியைக் கற்றுக்கொள்வதற்கு அரசு வாய்ப்பளிக்கின்றது.

ஆஸ்திரேலியா ஆறு மாநிலங்களையும் இரண்டு மண்டலங்களையும் கொண்டுள்ளது. நியூசவுத்வேல்ஸ்(NSW), விக்றோறியா, குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, தஸ்மேனியா, என்பன மாநிலங்கள். வடக்கு ஆஸ்திரேலியாவும் ஆஸ்திரேலியாவின் தலைநகரப் பகுதியும் (ACT) மண்டலங்கள். எல்லா மாநிலங்களிலும், மண்டலங்களிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். கீழ்வரும் அட்டவணை ஆறு மாநிலங்களிலும் இரண்டு மண்டலங்களிலும் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கையைத் தனித்தனியாகக் குறிப்பிடுகின்றது. ஆறு மாநிலங்களிலும் இரண்டு மண்டலங்களிலும் இடம்பெறும் தமிழ் கற்றல், கற்பித்தல் பற்றி எடுத்துரைப்பது மிகக்கடினம். காலமும் தூரமும் தடைகளாக உள்ளன. எனவே, இவ்வறிக்கை நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் தமிழ் மொழி கற்றல், கற்பித்தலை மட்டுமே எதுத்துரைக்கும்.

நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில், பள்ளிகளில் கற்பித்தற்கான மொழிகளாக 13 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன இம் மொழிகளைப் பேசுகின்றஇனத்தவர்களின் பிள்ளைகளுக்கு ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகளில் இம் மொழிகளைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றது இன்னும், 20 மொழிகளில் சனிக்கிழமைகளில் வெவ்வேறு நிலயங்களில் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் பள்ளிகளில் அல்லது சனிக்கிழமைப் பள்ளிகளில் கற்பித்தற்கான மொழியாகத் தமிழ் மொழியை அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மக்களின் எண்ணிக்கை, ஆஸ்திரேலியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழங்கக்கூடிய பங்களிப்பு என்பவற்றை நோக்கியே ஒரு மொழியை முன்னுரிமை மொழியாக அனுமதித்து, அதனைப் பள்ளிகளில் கற்பித்தலுக்கு அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. 1991-ஆம் ஆண்டு (Australian bureau of statistics) மேற்கொண்ட குடிசனத்தொகைக் கணக்கின்படி, ஆஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமைகின்றது:

| | |
|---|---|
| நியூசவுத்வேல்ஸ் | 5372 |
| விக்றோரியா | 4338 |
| குயின்ஸ்லாந்து | 541 |
| தெற்கு ஆஸ்திரேலியா | 433 |
| மேற்கு ஆஸ்திரேலியா | 864 |
| தஸ்மேனியா | 76 |
| வடக்கு மண்டலம் | 161 |
| ஆஸ்திரேலிய தலைநகர் மண்டலம் | 419 |
| மொத்தம் | 12204 |

தமிழர்களின் அமைப்புகள் இக்கணிப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் மட்டும் 10,000 தமிழர்கள் வரை வாழ்கின்றனரென அவ்வமைப்புகள் மதிப்பிடுகின்றன. 1991-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பு, நியுசவுத்வேல்ஸ் மாநிலத்தில் வாழ்கின்ற தமிழர்களைம் அட்டவணையில் உள்ளவாறு பிறந்த நாடுக்கு அமையப் பகுத்துக் காட்டுகின்றது.

| பிறந்தவிடம் | ஆண்கள் | பெண்கள் | ஆட்கள் |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 53 | 58 | 111 |
| இங்கிலாந்து | 24 | 18 | 42 |
| இந்தியா | 501 | 483 | 984 |
| மலேசியா | 207 | 225 | 432 |
| சிங்கப்பூர் | 64 | 71 | 135 |
| இலங்கை | 1649 | 1524 | 3173 |
| ஏனைய நாடுகள் | 47 | 66 | 113 |
| மொத்தம் | 2545 | 2445 | 4990 |



படிப்பகம்

www.padippakam.com

தவும், உரையாடவும் வழி செய்யும். தமிழ்ப் பண்பாட்டை அறிந்து கொள்ளவும், அதனைப் பேணி வாழவும் வழி செய்யும். வெளிநாடுகளில் தமிழர்களிடையே தமிழை வாழும் மொழியாக நிலைத்து நிற்கச் செய்வதற்குத் தமிழ்த் திரைப்படங்கள் பெருமளவிற்கு உதவும் என்பதை இங்கு எடுத்துரைக்கவேண்டியதில்லை!

3. தமிழ் நூல்களை வாசிப்பதற்கும் தம் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றனர். மத்திய நூலகம் வழங்குகின்ற வாய்ப்பைப் பயன்படுத்த அவர்கள் தவறவில்லை. பொது நூலகங்களின் வாயிலாக மத்திய நூலகத்திலுள்ள தமிழ் நூல்களிற் சிறுவர்களுக்கான படைப்புகளைப் பெற்று அவற்றை வாசிக்க வைத்து தமிழ் வாழவழி செய்கின்றனர் ஸ்ரத்பீல்ட் இல் உள்ள தமிழர் தகவல் நிலையமும், தமிழ் நூலகமும் வழங்குகின்ற வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்துகின்றனர்.

4. ஒலிப்பதிவு செய்த தமிழ்ப்பாடல்களைக் கேட்டு அனுபவித்து இன்புறுவதற்குப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்கின்றனர். கார்வண்டியில் பிரயாணம் செய்யும் போதும் தமிழ்ப் பாடல்களைக்கேட்டு மகிழ்கின்றனர். இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழவும், அவற்றைப் பிள்ளைகள் கேட்டு அனுபவிக்கவும் ஒலிப்பதிவு நாடாக்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர்

5. நடனம், இசை என்பனவற்றைத் தத்தம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கவும் பெற்றோர் அக்கறை காட்டுகின்றனர். தமிழ்ப் பண்பாட்டைப் பேணவும், மனப் பண்பாட்டை வளர்க்கவும் இக்கலைகள் பெரிதும் பயன்படும்.

6. இந்து ஆலயங்களிலும் தமிழ் மொழிக்கு இடமளிக்கப்படுவது மகிழ்ச்சிக் குரியதாகும். கூட்டு வழிபாடு, அறிவிப்புக்கள் என்பன தமிழ் மொழியிலும் நடைபெறுகின்றன. தேவார வகுப்புகளையும், வழிபாடுகளையும் திருப்பலிப் பூசையையும் வசதிக்கேற்ப தமிழில் நடத்துகின்றனர். இவை தமிழ்ப் பிள்ளைகளின் தமிழறிவைப் பெருக்க வழி செய்யும்.

7. தமிழ்ப் பண்டிகைகளைத் தவறாமல் கொண்டாடுகின்றனர். பொங்கல், தீபாவளி, புத்தாண்டு போன்ற பண்டிகைகளைத் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் கொண்டாடி மகிழத் தவறுவதில்லை. தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக்காக்க இவை பெரிதும் பயன்படும். எனவே, தமிழ் மொழி பேசும் மொழியாக கடல் கடந்து வாழும் தமிழர்களிடையே நிலைத்து வாழ வழிசெய்வதற்குப் பெற்றோர் பெரும் பங்களிப்பைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்!

**வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்!**

நன்றி : **'தமிழ் உலகம்'** 15-28, ஜூலை, 1994, ஆஸ்திரேலியா

---

# ஆப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி...

**—நா. நிருபா**

அகதி என்ற
அத்தாட்சிப் பத்திரத்தோடு
ஐரோப்பிய வாசலில்.
புல்லுப் போட்டு
புண்ணாக்கும் வைத்தனர்
பசி பறந்துபோனது நிஜமே.
நாலா புறமும்
பலமான வேலிகள்
ஆம்!
ஜனநாயக நாட்டில்
சுதந்திர மனிதன்!!

தமிழ்ப் பேசி
கவி பாடி
கருத்துக்கள் கக்கிய
உதடுகள்
முரண்பாடு கொண்டு
சிக்கித் தவிக்கின்றன.
சிந்தனையும் தான்.

ஏன் இங்கு வந்தாய்?
எட்டிநில் சுறுப்பனே!
வெண்முகங்கள்
விட்டெறியும்
ஏளனப்பார்வையில்
தலை குனியும் மௌனமாய்.
இறந்துபோன நிமிடங்களை
இயக்கிப் பார்க்கும்
இதயத்து நினைவுகள்...
வீட்டின் கோடியில்
மணற்பரப்பு
மா மரங்கள்
மரவள்ளி மாலை.
நீர்வற்றிய
குட்டிக் கிணறு
குரும்பட்டித்தேர் இழுக்க(க்)
காத்திருக்கும் தோழியர்கள்.

நன்றி : **"நமது குரல்" (4/91)**



படிப்பகம்

www.padippakam.com

# நுகர்பொருள் மோகமும் எம்மீழத் தமிழரும்

—வரன்—
(பிரான்ஸ்)

'மேலை நாட்டைப் பாருங்கள்' எனும் குரல் தமிழில் மிக நீண்ட காலமாகவே ஒலித்து வருகின்றது. நமது பழக்க வழக்க நடைமுறைகளை மேலை நாட்டுடன் ஒப்பிட்டு நம்மை நாமே மட்டந்தட்டிக் கொள்வது இன்னொரு குரல் வகை. கடந்த பத்தாண்டுகளில் மேலை நாடுகளில் இருந்து இந்தியா இலங்கை திரும்பும் தமிழ்ப் பெருங்குடிகள் காசைத் தண்ணீராக்கிக் காட்டி, தோளைக் குலுக்கி தன்னூர்க்காரரை மலைப்புறுத்தி, வீணீர் வடியவைத்து விட்டுத் திரும்பி விடுவதும் சாதாரண நிகழ்ச்சியாக காணலாம். அதில் அந்த மேலை நாட்டுவாசிகளுக்கு ஒரு திருப்தியும் கூட.

ஆனால் இந்த மேலை நாட்டை, அதன் மறு பக்கத்தைச் சற்றுப் புரட்டினால் போதும், சில பல உண்மைகள் பட்டெனப் புலப்படும். நீங்கள் பாவப்பட்ட ஜீவராசிகளைப் பார்ப்பதுபோல் இவர்களைப் பார்க்க தொடங்கி விடுவீர்கள்.

இங்கு—மேலை நாட்டில்-இந்தியா இலங்கை போல் கைகளில் பணநோட்டு புரள்வது குறைவு. செக்' 'பாங்க் கார்ட்', என்பவையே பணத்தை மாற்றீடு செய்யும் ஊடகங்களாகப் பணியாற்றுகின்றன. உழைப்பவர்களின் மாத வருமானம் வங்கிக் கணக்கிலக்கத்திற்கே அனுப்பப்படுகின்றது. கணக்கிலக்கம் இல்லாதார்க்கு சம்பளம் காசோலையாகவே வழங்கப்படுகின்றது. கணக்கிலக்கம் இல்லாதார் அக்காசோலையை மாற்றித் தன் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கொஞ்சம் திண்டாட்டம் தான். ஆதலால் வேலை செய்வோர், சமூக உதவித் தொகையில் வாழ்வோர் கணக்கிலக்கம் வைத்திருப்பதும், 'செக்' புத்தகம் அல்லது 'பாங்க் கார்ட்'காவுவதும் சாதாரணத்திலும் சாதாரணம். ஆதலால் வசதிபடைத்தோர், பண வரவு மிக்கோராய் எல்லோரும் திகழ்கின்றனர் என்பது அர்த்தமாகாது. இங்குள்ளோர் அனைவரினதும் வரவு செலவுகள் வங்கியூடாகவே மேற்பார்வை செய்யப்படுகின்றது. கட்டுப்படுத்தப்படுகின்றது. வங்கிக் கணக்கில் இருநது நீங்கள் விரும்பிய நேரத்தில் பணத்தைப் பெறுவதற்காகவே 'பாங்க் கார்ட்' தரப்படுகின்றது. ஆனால் வாரத்தில் குறித்த தொகைக்கு மேல் எவரும் நோட்டாகப் பணத்தை கையில் எடுக்க முடியாது. அதேபோதில் பொருளை கொள்வனவு செய்வதற்குக் கணக்கில் இருப்பதை விடச் சற்று அதிகமாகக் கூட, காசோலை மூலமோ, இந்த வங்கித் தகடு ('Bank Card') மூலமோ பணத்தை வழங்கலாம். பிரான்சில் இந்த 'Bank card' ஐ நீல அட்டை ('Carte Bleue') என்கிறார்கள். சர்வதேச அளவில் எங்கும் பொருளை இதன் மூலம் கொள்வனவு செய்யலாம். பிரான்சில் ஆயிரம் பிராங்குக்கு மேல் நோட்டாக எடுததுச் செல்வது கேள்விக்குள்ளாக்கப்படக் கூடியது.

இப்படியான நடைமுறை உள்ள இந்த மேலை நாட்டில் பொருளாதார அமைப்பானது 'அதிநுகர்வு ஊக்குவிப்பை'வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இப்பொருளாதார அமைப்பு முறை 0ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது இதன் மூலம் நுகர்வைத்தூண்ட எல்லா நிறுவனங்களும், (வங்கி, வங்கியல்லாத) கடன் உதவியை (வட்டியுடன்) இலகுவாக்கின. இது எல்லா சமூக தரத்தினரும் (சேமிப்பு உண்டோ, இல்லையோ) எல்லா வகையான ஆடம்பரப் பொருள்களையும் நுகரத் தூண்டியது. தேக்கமற்ற உற்பத்தியைத் தொடரக் கூடிய வாய்ப்பை உருவாக்கியது. இவ்வாடம்பரப்பொருட்களை நுகரச் செய்ததன் மூலம் சமூக வர்க்க வேறுபாட்டை 'மறைத்து'க் கொண்டது. இத்தகைய மாயத் தோற்றத்தினூடாக மனோவியல் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டது. எல்லோரும் சமமான வர்க்கத்தினரே எனும் மாயையில் மக்கள் மயங்கிப் போகின்றனர். அரசுகளும், நிறுவனங்களும் தம் கட்டுப்பாட்டின் கீழுள்ள தகவல் தொடர்பு ஊடகங்களினூடாக மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சனைகளைப் பெரிதாக்கிக் காட்டியும்



படிப்பகம்

www.padippakam.com

யுடன் தமிழ் அகதிகளின் நிலையை ஒப்பிடலாம். இங்கு நாற்பது வருடங்கள் வரையிலான கால இடைவெளியை நாம் கருத்தில் கொள்ளல் அவசியம். புலம் பெயர்ந்த பலஸ்தீன அகதிகளில் கணிசமானோர் புகலிடத்திலேயே நிரந்தரமாகக் குடியேறக் கூடுமானும் பலஸ்தீனமே இன்னமும் அவர்களது மனதில் அவர்களது மண்ணாகத் தெரிகிறது. இது மண்ணுக்கும் மனிதனுக்குமுள்ள உறவு. எனவே தமிழ் அகதிகள் ஈழ மண்ணுடனான தம் பற்றைப் புலம்பெயர்வால் அறுப்பது எளிதில் நடக்கக்கூடிய ஒன்றல்ல. ஆயினும் நீண்டகாலமாகப் புலம் பெயர்ந்து வாழ்ந்தோர், முக்கியமாக ஒரு தலைமுறைக்கு அதிகமாக வாழ்ந்தோர் சொந்த நாடு திரும்புவது எளிதில் சாத்தியமாகாது.

புலம் பெயர்ந்த தமிழர் மத்தியிலே தம் சுய அடையாளம் பேணுவது பற்றி வேறுபட்ட கண்ணோட்டங்கள் உள்ளன. மாபில் உள்ளவற்றில் எதை எவ்வாறு பேணுவது, புதிய சமுதாய சூழலுக்கேற்ப நமது வாழ்க்கை முறையை எவ்வாறு அமைப்பது என்பன பற்றிய தெளிவீனங்கள் மிக அதிகம். மரபுபேணல் மேலோட்டமாகவும் குருட்டுத்தனமான பழமை வாதப் சார்ந்தும் அமையும் அதே வேளை, வாழ்க்கை முறை புதிய சமுதாயச் சூழலின் நெருக்கடிகளுக்கு வளைந்து கொடுத்து மாறி வருகிறது. இவை பற்றிய ஆழமான சிந்தனையோ எதிர்காலம் பற்றிய தீர்க்கமான பார்வையோ இல்லாது மரபு பற்றியும் தமது தனித்துவம் பற்றியும் பேசுவோர் மதச்சடங்குகளையும் சமுதாயச் சடங்குகளையும் முன்பு கற்றவற்றை மீண்டும் ஒப்பிப்பதையுமே தமது சுய அடையாளம் பேணும் வழிகளாகக் காண்கின்றனர்.

இத்தகைய சூழலில் வெளிவரும் வியாபார ஏடுகளில் சமுதாயம் பற்றிய ஆழமான அக்கறையைக் காண்பது கடினம். இவற்றுட் செய்திப் பத்திரிகைகளாக வருபவை தரத்தில் மிகவும் குறைந்தும் பரபரப்பான செய்திகட்கே முக்கியத்துவமளித்தும் வருகின்றன. ஈழத்தின் அரசியல் நெருக்கடி பற்றியும் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் பற்றியும் ஆழமான ஆய்வுகளை விட அவரவரது சார்புகட்கேற்பச் செய்திகளைத் தெரிந்தும் திரித்தும் போடும் தன்மையும் அதிகம். சில பிரபல எழுத்தாளர்களின் படைப்புகள் தொடர்ச்சியாகவும் இடைவிட்டும் வெளிவந்தாலும் பொழுதுபோக்கு அம்சமே முதன்மை பெறுகிறது. புலம் பெயர்ந்த வாழ்க்கையின் நெருக்கடிகளைப் பிரதிபலிக்கும் ஆழமான எழுத்துக்களை வியாபார ஏடுகளிற் காண்பது அருமை. இத்தகைய அக்கறை சிற்றேடுகளிலேயே அதிகமாகக் காணப்படுகிறது.

சிற்றேடுகள் தரமான எழுத்துப் பற்றிய அக்கறை காட்டுவதால் ஒரு பிரசுரம் சிற்றேடு என்பது நல்ல படைப்புகட்கு உத்தரவாதமல்ல. சிற்றேடுகளின் தரம் அவற்றின் பின்னணியில் உள்ளவர்களது அக்கறைகளினாலும் இலக்கியம் பற்றியும் சமுதாயம் பற்றியும் அவற்றில் எழுதுவோரது கண்ணோட்டங்களாலும் நிர்ணயமாகிறது. ஏட்டின் அமைப்புப் பற்றிய தெளிவான கண்ணோட்டத்துடன் தொடங்கித் தொடர்ந்து வெளிவருவன அதிகமில்லை. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அகதிவாழ்வின் நிலையும் ஏடுகளின் தரத்திற்கும் எண்ணிக்கைக்கும் முக்கிய பங்களிக்கிறது எனலாம். அகதிகள் சுதந்திரமாக நடமாட வசதியில்லாத ஜேர்மனியில் சிற்றேடுகள் கருத்துப் பரிமாற்றலுக்கு உகந்த ஒரு வாய்ப்பாக இருந்தன. 'தூண்டில்' ஒரு கருத்துப் பரிமாற்றக் களமாக ஐந்து வருடங்கள் மட்டில் நடந்தது. இதற்கு அகதிகளின் நலன்சார்ந்த நிறுவனமொன்றின் ஆதரவு இருந்தமையும் இதன் நீண்டகால நிலைப்புக்கு ஒரு காரணம். 'தேனி'', 'ஊதா', 'புதுமை', 'நமது குரல்' போன்ற ஏடுகள் வேறுபட்ட சமூக அக்கறைகளைப் பிரதிபலிக்கும் நோக்குடன் அவற்றில் ஈடுபாடுள்ளோரால் வேறுபடும் கால இடைவெளிகளில் வெளியிடப்பட்டு வந்துள்ளன. பத்திரிகைத் துறை அனுபவமின்மையை விடப் பொருளாதாரம், விநியோகம் என்பன பற்றிய அனுபவமும் அறிவும் போதாமை காரணமாகவே, பத்திரிகைகள் பல தொடங்கிய நேரத்திலேயே முடங்கிவிட நேர்ந்தது.

இத்தகைய சூழலில் வியாபார நோக்கமின்றியும், வெளி வெளியான அரசியல் ஸ்தாபனச் சார்பின்றியும் தொடர்ந்து வரும் பத்திரிகைகளில் நோர்வேயிலிருந்து வரும் 'சுவடுகள்' (மாசிகை), 'சக்தி' (காலாண்டு), பிரான்சிலிருந்து வரும் 'ஓசை' (காலாண்டு), 'மௌனம்' (காலாண்டு), ஒல்லாந்திலிருந்து வரும் 'அ, ஆ, இ' (காலாண்டு), கனடாவிலிருந்து வரும் 'நான்காவது பரிமாணம்' (மாசிகை) போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'காலம்' என்ற கனதியான ஏடு சில காலம் கனடாவிலிருந்து வந்து நின்றுவிட்டது. லண்டனிலிருந்து வந்த 'பனி மலரும்' கனதியான எழுத்து முயற்சியில் அக்கறை காட்டியது. பத்து இதழ்களுடன் நின்று விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கனடாவிலிருந்தே அதிகப்படியான 'செய்தி' ஏடுகள் வெளிவருகின்றன. 'உலகத் தமிழர்', 'தாயகம்', 'கனடா ஈழநாடு', 'சக்தி' உட்பட 10 வார ஏடுகள் உள்ளன. எல்லாவற்றை யுமே பார்க்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. பாரிஸ் 'ஈழநாடும்' அங்கு பதிவாகிறது.

டென்மார்க்கில் தமிழர் பெருந்தொகையாக இருப்பதாகக் கூற முடியாது. ஆயினும் அங்கிருந்து 'சஞ்சீவி' என்ற ஏடு கடந்த மூன்று, நான்கு வருடங்களாக வருகிறது. லண்டனில் எத்தனையோ மடங்கு அதிகமான தமிழர் தொகை இருந்தும் தமிழர்கட்கான ஒரு தரமான ஏட்டை இதுவரை தொடர்ச்சியாகக் கொண்டு வர முடியவில்லை. வியாபார நோக்குடைய செய்தி ஏடுகளின் நடுவிற், 'தமிழோசை' என்ற தரமான ஏட்டை நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுத் தோல்வி கண்டது. இதன்பின் 'இந்தியா டுடே' பாணியில் 'நாழிகை' என்று ஒன்றைக் கொண்டுவரும் முயற்சி, மூன்று இதழ்களின் பின் இன்னமும் தடுமாறிக் கொண்டுள்ளது. மற்றபடி பிற ஐரோப்பிய நாடுகளுடனும் கனடாவுடனும் ஒப்பிடுகையில் பிரித்தானியத் தமிழேடுகளின் நிலை பல கேள்விகளை எழுப்புகிறது. அவுஸ்திரேலியாவிலிருந்து 'மரபு', 'அக்கினிக் குஞ்சு' என்ற இரண்டு ஏடுகளைக் கண்டிருக்கிறேன். அவை தொடர்ந்தும் வருகின்றன என்றே ஊகிக்கிறேன். லண்டனில், அண்மை வரை 'தமிழ் டைம்ஸ்', 'தமிழ் நேஷன்' என்ற இரண்டு ஆங்கிலச் செய்தி/அரசியல்சமூகவியல் ஏடுகள் அனேகமாக மாதம் தவறாமல் வந்தன. பின்னையது அண்மையில் நின்று விட்டது. முன்னையது பன்னிரண்டு வருடங்களாக இடையறாது வருகிறது. ஆங்கில ஏடொன்றை வெற்றிகரமாக 1981 முதல் நடத்தக்கூடிய லண்டனிலிருந்து தரமான ஒரு தமிழேட்டை வெளிக்கொண்டு வருவது ஏன் முடியாமலுள்ளது? இது லண்டனிலுள்ள தமிழ்ச் சமுதாயம் ஐரோப்பாவிலுள்ளதினின்று வேறுபட்டது என்பதைக் குறிக்கிறதா?

இயக்கச்சார்பான ஏடுகள் பல வருகின்றன. அரசியற் சார்பான கட்டுரைகளும் கவிதைகள் சிலவும் காணப்பட்டாலும் இலக்கியத் தரம் என்பது அதிகம் அழுத்தம் பெறுவதில்லை. விலக்காக 'எரிமலை' என்ற சஞ்சிகை உள்ளது. மாதாமாதம் ஒழுங்காக வரும் 'எரிமலை'யில் வரும் ஆக்கங்கள் கருத்து வேறுபாடுள்ளோரும் ஏற்கத்தக்க தரமுள்ளவை 'எரிமலை'யின் உள்ளடக்கம் பெருமளவும் ஈழமண்ணில் வாழும் படைப்பாளிகளது ஆக்கங்களையே சார்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம் படைக்கிறார்கள்; சமூக—இலக்கிய பத்திரிகைகளை வெளியிடுகிறார்கள். இது எவ்வளவு தூரம் புலம் பெயர்ந்தோர் இலக்கியமாக அமைந்துள்ளது என்பது ஒரு முக்கியமான கேள்வி. பெருவாரியானோரின் எழுத்தில் ஈழமண்ணில் நிகழும் சம்பவங்கள், இளமை நினைவுகள் போன்றவற்றின் ஆதிக்கம் இன்னமும் மேலோங்கியுள்ளது. இது இயல்பானது. ஏனெனிற் சமூக உள்ளுணர்வுகளும் தமது இருப்பும் தமது சுயஅடையாளமும் பற்றி ஆழமாகச் சிந்திப்போரே பெருமளவும் இலக்கிய ஈடுபாடுடையோராக இருக்கின்றனர். இவர்களுக்குச் சொந்த மண்ணுடனான பற்று அதிகம். நாடு திரும்புவது பற்றிய நம்பிக்கையே இவர்களிற் பலரது செயற்பாட்டின் உந்து சக்தியாக உள்ளது. எனவே இவர்களது எழுத்தும் இப்பண்பைப் பிரதிபலிக்கிறது. அதே வேளை புலம்பெயர்ந்த வாழ்க்கையின் அவலங்களையும் நெருக்கடிகளையும் அடையாளங்காட்டும் எழுத்துக்கள் வருகின்றன. கேலியும் கிண்டலுமான உரைச்சித்திரங்களில் இவை புலனாகும் அளவுக்கு ஆழமான நோக்குடைய படைப்புகளில் இவைக் காணப்படுவதில்லை. குறிப்பிடத்தக்க கவிதைகளும் சிறுகதைகளும் ஓரிரு தொடர்கதைகளும் அகதி வாழ்வின் பிரச்சனைகளின் நுண்ணுணர்வைக் காட்டுகின்றனவெனினும் புலம்பெயர்ந்த வாழ்க்கை சார்ந்த எழுத்து இயக்கம் என்ற வகையிலான புலம்பெயர்ந்தோர் இலக்கியம் இன்னமும் தன் தொடக்க நிலையிலேயே உள்ளது,

நல்ல புதிய எழுத்தாளர்கள் சிலர் தோன்றியுள்ளனர். இனவிடுதலைப் போராட்டம் எழுப்பிய புதிய கேள்விகளைப் புதிய எழுத்துக்கள் எழுப்புகின்றன. பெண்ணுரிமை, மரபு, மனித உறவுகள் என்பன பற்றி இன்று எழும் கேள்விகள் முன்னைய காலத்தினவற்றை விட மிகவும் காத்திரமானவை. ஆயினும் புதிய எழுத்தாளர்களுக்குத் தமது எழுத்தின் தரத்தை உயர்த்துவதற்கான தேவை மிகவும் உள்ளது எழுதுவதற்கான களங்கள் உள்ளளவுக்கு மேம்பாட்டுக்கு அவசியமான விமர்சனப் பழக்கம் இல்லை தரமான படைப்புகளிற் பெருவாரியானவை புலம் பெயரு முன்னமே தம்மை எழுத்துத் துறையில் ஈடுபடுத்தி ஈழத்திலேயே தமது எழுத்துப் பழக்கத்தைத் தொடங்கியவர்களால் அல்லது தமிழ்நாட்டில்வாழ்ந்த காலத்தில் எழுதத் தொடங்கியவர்களால் எழுதப்படுவன என்பது கவனித்தக்கது. இது



படிப்பகம்

www.padippakam.com

காலப்போக்கில் மாறிவிடும். எனினும் தரமான புதிய எழுத்தாளரது உருவாக்கத் திற்கும் வளர்ச்சிக்கும் தடையான ஒரு விஷயம் மிகுதியான சுயதிருப்தி. வயதுவேறு பாட்டின்றிப் பல எழுத்தாளர்களையும் பீடித்துள்ள இந்த நோய், பத்திரிகை வெளி யீட்டாளர் பலரையுங்கூடப் பாதித்துள்ளது. சாதனைகள் பற்றிய சுயப்பிரதாபங்கள் தமிழருக்குப் புதியனவல்ல. விமர்சனத்தை வெறுக்கும் இப்போக்கைப் பற்றித் தமிழ் இலக்கியத் துறை கவனங்காட்டுவது அதன் எதிர்காலத்திற்கு அவசியம்,

புகலித் தமிழ் இலக்கியம் பற்றித் தமிழக எழுத்தாளர்கள் சிலர் அண்மையில் புகழ்ந்து எழுதியுள்ளனர். இவை ஈழத்தமிழ் இலக் கியப் பரப்பில் என்ன நடந்து வருகிறது என்ற முழுமையான அறிவின் அடிப்படை யில் கூறப்பட்ட கருத்துக்கள் அல்ல. புகலிட எழுத்து என்று இவர்களால் அடையாளங் காணப்படுவது முற்குறிப்பிட்டவாறு முற்றி லும் புகலிடப்பாங்கான எழுத்தல்ல. அதை விட, ஈழமண்ணிலிருந்து வரும் சமகால ஆர்வங்கள் பற்றிய அறிவு இவர்களிடம் போதாது. இன்றைய தமிழ் இலக்கியப் பரப்பில் ஈழத்துக் கவிதைகளும் சிறுகதை களும் சிறப்பான இடமொன்றைத் தமக் கென உருவாக்கி விட்டனவெனில் அதற் கான காரணம் இவை தமது இருப்புக்காகப் போராடும் மக்களின் தேவை சார்ந்து இருப்பதேயாகும். இவ்வகையிற் கருத்தும் முனைப்பும் பற்றிய முரண்பாடுகள் எத்தனை இருப்பினும் ஈழ மண்ணிலிருந்து அம்மண்ணின் நெருக்கடியைச் சார்ந்து எழும் படைப்புக்களே மேம்பாடானவை என எண்ணுகிறேன்.

புலம் பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம் முழுமையும் முனைப்பும் பெற இன்னமும் காலம் உண்டு என்பதால் அதன் எதிர் காலம் புலம்பெயர்ந்த தமிழரின் சுய அடையாளத்தில் மொழி எவ்வளவு முக்கியத் துவம் பெறுகிறது என்பதிலும் தங்கியுள்ளது. இன்றைய காலகட்டத்திற் புலம்பெயர்ந் தோரின் தமிழ்ச்சிற்றேடுகள் முக்கியமான சில பணிகளை ஆற்றுகின்றன. புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் அவர்களது இருப் பும் எதிர்காலமும் தொடர்பான காத்திர மான கேள்விகளை எழுப்புவதோடு மட்டு மின்றி நாட்டின் யுத்த சூழலிற் சாத்திய மில்லாத விவாதங்கட்கு அவை ஆரோக்கிய மான களங்களாகவும் அமைகின்றன. இச் சிற்றேடுகள் ஒவ்வொன்றினதும் வாசகத் தொகை சிறியது என்பதோடு இவை கணிச மான பணநட்டத்தைத் தாங்கிக் கொண்டு பிரசுரிக்கும் சிலரது தனிப்பட்ட உற்சாகத் தாலேயே தங்கியுள்ளன. இவை எட்டும் வாசகர் வட்டம் விரிவடைதலும் நட்ட மில்லாது பத்திரிகை நடத்தும் நிலைமையும் உருவாகாவிடின் இவற்றின் தாக்கம் வரை யறைக்குட்பட்டேயிருக்கும்.

புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் வீடியோ திரைப்படங்களினதும்தமிழகத்துக் குப்பைச் சஞ்சிகைகளினதும் செல்வாக்கு அதிகம். ஒன்று இக்குப்பைகட் கெதிரான ஒரு போராட்டம் அவசியம். புலம் பெயர்ந்த தமிழரது சுய அடையாளம் பற்றிய கேள்வி கட்கு மரபைக் குருட்டுத்தனமாகப்பின் பற்று வதையே பாதையாகக் காட்டுவோராலும் வியாபாரப் பத்திரிகையாளர்களாலும் தகுந்த பதில் தரமுடியாது. இவ்விடத்திற்சிறு சஞ்சிகைகளும் தரமான எழுத்தாளர்களும் கலைஞர்களும் செய்யக்கூடியது அதிகம். சிறு பத்திரிகைகளினிடையே கூடிய புரிந் துணர்வும் ஒத்துழைப்பும் பொறுப் புணர்வுள்ள விமர்சனக் கண்ணோட்டமும் அவர்களது பங்களிப்பையும் பிற நல்ல சமூகச் சக்திகளது பங்களிப்பையும் வலியன வாக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# செக்கு மாடு

—வ. ஐ. ச. ஜெயபாலன்
(நோர்வே)

தனக்குத் தொல்லை தருகிற பேய் ஒளிந்திருக்கிற இடத்தை இன்னமும் குமரனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அன்றைக்கு பொழுது சாய்வதற்கு முன்னமே அந்தக் கொடிய பேயைக் கண்டுபிடித்து நொருக்கிப் போடுவதாகச் சங்கற்பம் செய்திருந்தான் அவன். நோர்வே போன்ற துருவத்து நாடுகளில் கோடை நாட்களில் பொழுது சாய்வதில்லையென்பது வேறு விடயம்.

அந்தப் பேயை யார் ஏவி விட்டிருப்பார்கள் என்பது பிடிபடவில்லை. அவனைச் சந்திப்பதற்காகச் சென்னைக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தவமிருக்கும் அவனது தாய் கனகம்மாவுக்கும் காதலியும் தூரத்து உறவுக்காரியுமான கமலிக்கும் கூட இது பற்றிக் கடிதம் எழுதியிருந்தான். பதறிப் போன அவர்கள் மறு கடிதத்துக்குள்ளேயே மந்திரித்த நூலும் சென்னை வடபழனி முருகன் கோவில் விபூதி பிரசாதமும் வைத்து அனுப்பினார்கள். இது அவசர முதலுதவி.

இதைவிட அவனது நலத்துக்காகத் தமிழகத்துக் கோவில்களுக்கு யாத்திரை போய் பிரார்த்தனை செய்யப் போவதாகவும் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். தங்கள் சேமிப்பில் கொஞ்சம் பணமிருப்பதாகவும் தங்களது யாத்திரைக்காகப் பணம் அனுப்புவது அவசியம் இல்லையென்றும் வேறு எழுதியிருந்தார்கள். ராசன்தான் குமரனுக்குச் செய்வினை செய்து பேயை ஏவி விட்டிருக்கிறான் என்ற விடயத்தையும் கண்டு பிடித்து எழுதியிருந்தாள் கனகமமா. மந்திரவாதிகளின் ஊரான மட்டக்களப்பிற்கு அண்மையில் ராசன் போய் வந்திருப்பதாக அவளுக்கு துப்புக் கிடைத்திருக்கிறதாம்.

தன்னை நேசிக்க இரண்டு பேராவது உலகத்தில் இருக்கிறார்களே என்கிற விடயம் பாறாங்கல்லாக உறைந்து போயிருந்த அவனது மனதை நெகிழ வைத்திருக்க வேண்டும். கடிதம் வந்த அன்று அந்தக் கடிதத்தை முத்தமிட்டுக் கொண்டு நெடு நேரமாக அழுது கொண்டிருந்தான் குமரன். பல்வேறு சமூக விடயங்களில் தாங்களே உயர்ந்தவர்கள் என்று கருதியபோதும் இந்து சமய, தமிழ்க் கலை கலாசார விடயங்களில் மட்டும் தமிழகம சம்பந்தப்பட்டவை எலலாம் மகததானவை என்றும் கருதுகிற சராசரி இலங்கைத் தமிழன்தான் அவனும். அம்மாவினதும் கமலியினதும் கடிதம் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மந்திரித்த நுலைக் கையிற கட்டிக் கொண்டு 'இனி ஏலுமென்றால் ஆட்டிப்பார்' எனத் தனக்குத் தொல்லை தருகிற பேய்க்குச் சவாலும் விட்டான் அவன்.

கொஞ்ச நாட்களுக்குப் பேய் தென்படவில்லை. பேய்க்கு நேர்நத கதியைப்பற்றி அம்மாவுக்கும் கமலிக்கும் மகிழ்ச்சியோடு கடிதமெழுதிய அன்று இரவே ம்ண்டும் பேயின் சேட்டைகள் ஆரம்பித்து விட்டன. பாத்திரங்களை உருட்டி ஒலி எழுப்புகிற வழமையான சேட்டைகளோடு பேய் இப்போது ரகசியத் தொனியில் பேசவும் செய்தது. நச்சுக்கொல்லி மருநதுகளுக்கு பழக்கபபட்டு விடுகிற கொசுக்களைப்போல அந்தப் பேயும் விபூதிக்கும் மநதிரித்த நூலுக்கும் பழக்கப்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொண்ட போது அச்சத்தில் குமரனின் உடல் நடுக்கமெடுத்தது.

## 2

இரண்டு வருடங்களுக்கு மேலாக குமரன் ஒஸ்லோவின் மத்தியில் இருக்கும் உணவு விடுதி ஒன்றில் பாத்திரம் கழுவுகிற மெசினுக்கு எடுபிடி ஆளாக இருந்து வருகிறான். வந்து குவிகிற எச்சில் தட்டுக்களையும் அழுக்குச் சமையல் பாத்திரங்களையும் அந்த இரும்புப் பூதத்தின்வாயினுள் திணிக்கிறதும் அது நக்கித் துடைத்துத் தருகிறவற்றை மீண்டும் வெளியில் எடுத்து அடுக்கி வைக்-



படிப்பகம்

www.padippakam.com

கிறதும் மட்டும்தான் அந்த உணவு விடுதியில் அவன் செய்து வருகிற வேலை. பயிற்று வித்தால் ஒரு குரங்குகூட இதைச்செய்துவிடும் என்பது புரிகிறபோதெல்லாம் குமரனுக்கு வாழ்க்கையே வெறுத்து விடும்.

மழைநாட்களில் எச்சில் தட்டுகள் அவ்வள வாகப் பெருகாது. கழுவுகிற மெசினும் அவனும் சற்று ஓய்ந்திருப்பார்கள். அப்போ தெல்லாம் தான் ஒரு பல்கலைக்கழகப் பட்ட தாரி என்கிற விசயத்தை அந்த மெசினுக்குப் புரியவைக்க முயற்சி செய்வான். வீட்டுச் சொந்தக்காரி 'பேரித்', அந்த உணவு விடுதி நிர்வாகி 'ஆரில்ட்' என அவனோடு சம்பந்தப் படுகிற நோர்வேஜியர்களைப் போலவே அந்தமெசினும் அவனுடைய சிறப்பியல்பு களைப் புரிந்து கொள்வதில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. இதுதான் அந்த மெசின் மீது அவனுக்கிருந்த மனத்தாங்கலுக்குக் காரணம். இருக்காதா பின்னே.

தமிழ் மாணவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுகிற சாததியம் அருகியிருந்த காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கே அனுமதி பெற்றவ னல்லவா அவன். இதற்காக அவன் தனது இளமைக்காலம் முழுவதையுமே இழந்திருக் கிறான். பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் இனக்கலவ ரத்தால் பாதிக்கப்பட்டு அகதியாக யாழ்ப் பாணத்துக்கு ஓடிச் சென்றான். பின் வருடக் கணக்கில் உண்ணாவிரதம், ஊர்வலம் என்று போராடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துக்கு இடமாற்றம் பெற்று அங்கேயே படித்து முடித்து பட்டமும் பெற்றான். இவையெல்லாம் சாதனையே இல்லையா. யாரும் இதைப் பொருட்படுத்த வேண்டி யதே இல்லையா?

வாட்டசாட்டமான தேகத்துடன் வேலை தேடிவந்திருக்கிறவன் இலங்கைத் தமிழ னென்று தெரிந்ததுமே அந்த உணவு விடுதி யின் நிர்வாகி ஆரில்ட் பாத்திரம் கழுவுகிற வேலைக்கு குமரனே மிகவும் பொருத்தமான நபர் எனப் புரிந்துகொண்டு அவனுக்கு வேலை வழங்கினான். அந்த மெசினுக்குக் கூட நெடுங்காலமாக இலங்கைத்தமிழர் களது சகவாசம் இருந்ததில் தமிழைப் புரிந்து கொண்டது. குமரனும் அந்த மெசி னுக்கு உண்மையுடன் குறிப்பறிந்து பணி புரிந்தான். முறைப்படி அதனைப் பராமரிப் பது, வேலை முடிந்தபின் குளிப்பாட்டி ஈரம் துவட்டிவிடுவது என அவன் அந்த மெசி னுக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை.

தன்னை அழிப்பதற்குச் சதி செய்கிற பேயு யுடன் அந்த மெசின் தொடர்பு வைத்திருக் கிற விடயம் தெரிந்த போது அவன் ஆடிப் போய் விட்டான். இந்தக் குழப்பத்தில் அந்த மெசினை அவன் உதைத்தது என்னவோ உண்மைதான். இதைப் போய் அந்த உணவு விடுதியின் நிர்வாகி பெரிது படுத்தியிருக்க வேண்டாம். நிர்வாகி பக்கத்தில் எங்கோ நிக்கிற நேரம் பார்த்து அந்தப் பாத்திரம கழுவும் மெசின் 'சிசுக் கொலைகாரன், சிசுக்கொலைகாரன்' எனக் அவனைக் கிண்டல் செய்தது.

அதுவரை பேய்மட்டும் அவன் மீது இப்படி ஒரு பழியைச் சுமத்தி வந்தது. ஆத்திரத் துடன் 'நீயுமா புரூட்டஸ்' என்று கத்தியபடி பாத்திரம் கழுவுகிற மெசினுக்கு உதை விட் டான் குமரன்.

## 3

இன்றைய நாள் முடிவதற்குள்ளேயே அந்தப் பேயைத் தேடிப்பிடித்து நொறுக்கிப் போட வேண்டுமென்று குமரனுக்கு வெறியேற்றப் பட்டதற்கு போதிய காரணங்கள் இருந்தன. குமரன் எப்போது வீட்டுப் போனாலும் அவனது அறை மூலையில் இருந்த மின்சார அடுப்பங்கரையில் நாற்றமெடுக்கும் எச்சில் கோப்பைகளைப் பேய் குவித்து வைத் திருக்கும். அந்தப் பேய் இதனோடு திருப்திப் படாமல் இரவிரவாக அந்த எச்சில் பாத்தி ரங்களை நிலத்தில் எறிந்து உருட்டி ஒலி எழுப்பி அவனது தூக்கத்தையும் கூட கெடுத்தது காலையில் போய்ப் பார்த்தால் பாத்திரங்கள் எதுவும் நிலத்தில் உருண்டிருக் காது.

ஒரு முறை எதிர்பாராத விதமாக அவனது வீட்டுக்கும் ஒரு விருந்தாளி வந்திருந்தான். பல்கலைக்கழக நண்பனான அந்த விருந்தாளி வீட்டுக்கு வந்தவுடனேயே பேயின் ஆதரவாளனாக மாறிவிட்டதில் குமரனது கோபத்துக்கு ஆளாக வேண்டி யிருந்தது. அடுப்பங்கரையில் எச்சில் கோப் பைகளைக் குவித்து வைப்பது பேயல்ல குரமன்தான் என்பது அவ்னது வாதம். ''ஒஸ்லோ நகரம் முழுவதற்குமே எச்சில் கோப்பை கழுவித்தாறவன் நான், என்னைப் பார்த்து சாப்பிட்ட கோப்பை கழுவ வக்கில்லாதவன் என்று சொல்ல நீ யாரடா ''— என்று பேசி அவ்னைத் துரத்தி விட்டான் குமரன்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த இரவு எச்சில் பாத்திரங்களைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தது பேய். அவனுக்கு கோபம் தாளவில்லை'. ''சொல் நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன்'' எனக் கத்தினான் அவன். மின்சார அடுப்பங் கரைப் பக்கமாகப் பேய் சிரிக்கும் சத்தம் கேட்டது. ''உனது அக்கா குந்தவையின் சிசுவைக் கொலை செய்தது பாவமில்லாமல் என்னவாம்'' என்று பேய் முணுமுணுத்த போது அவன் உண்மையிலேயே தடுமாறிப் போனான். அவனது முகம் வெளிறிப் போனது. உடல் நடுங்கியது. ''குந்தவை அக்காவின் பிள்ளையை நானா கொன் றேன்'' என்று தன்னைத்தானே விசாரித்துத் துக்கித்தான்.

அவனுக்கு மூன்று சகோதர சகோதரிகள். அக்காவின் பெயர் குந்தவை. தங்கையின் பெயர் செல்வி. தம்பி சுரேஸ். போர்க்களத்தில் மரணமடைந்து விட்ட அவனது இயக்கப் பெயர் மேஜர் பகத்சிங். குமரனின் அக்கா பிறந்த தசாப்தத்தில் பிறந்த பலருக்கு குந்தவை என்ற பெயர் வாய்த்திருந்தது. கல்கியின் பொன்னியின் செல்வன் சரித்திர நாவலை வாசித்துவிட்டு யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் சிலர் சோழ அரசர்களாகவும் இளவரசிகளாகவும் தங்களை வரித்துக் கொண்டு பகல் கனவுகளில் புலிக் கொடியுடன் பவனிவந்த நாட்கள் அது புலிக்கொடி தாங்கியபடி குதிரைகளிலும் கப்பல்களிலும் திரிந்த அவர்கள் தமது கனவுலகச் சுப்பர்மான்களான சோழ அரசர்களது பெயர்களைத் தமது பிள்ளைகளுக்கும் சூட்டினர். அவனது அக்காவும் 'பொன்னியின் செல்வன்' சரித்திர நாவல் வெளிவந்த காலத்தில் பிறந்தவள்தான். அவளுக்குச் சோழ இளவரசி குந்தவைப் பிராட்டியின் பெயர் இப்படித்தான் வாய்த்தது.

## 4

பெயரின் பின்னணி எதுவாயிருந்த போதும் குந்தவை சராசரியான யாழ்ப்பாணத்துப் பெண்தான். சின்னவயதிலிருந்தே படிப்பில் அவளுக்கு ஈடுபாடிருக்கவில்லை. வீட்டுப் பணிகளை ஒரு ஈடுபாட்டோடு செய்கிறது. ஊர் ஊராக ஆள் அனுப்பி நல்ல பூக்கன்று நாற்றுக்களைச் சேகரித்து வீட்டு வளவையும் முற்றத்தையும் பூஞ்சோலையாக்குவது, இலங்கை வானொலி 'பூவும் பொட்டும்—மங்கையர் மஞ்சரி' நிகழ்ச்சிக்கு கடிதங்கள் சிறுகதைகள் எழுதி அனுப்பி வானொலியில் அவை வாசிக்கப்படுகிறபோது உச்சி குளிர்ந்து போவது, இப்படி அவளது உலகம் யாழ்ப்பாணத்து சராசரி இளம் பெண்களின் உலகம்தான். இலங்கை வானொலியில் வாசிக்கப்பட்ட குந்தவையின் மிக சாதாரணக் கவிதை ஒன்றை பெண் பெயரில் 'ஓகோ ஓகோ' எனப் புகழ்ந்து பாராட்டிக் கடிதமெழுதி குந்தவையின் சினேகிதனாகிய வன்தான் ராசன். இதனை மோப்பம் பிடித்து, ராசனின் ஊர், பெயர் சாதிசனங்களைப் பற்றி தகவல்களை விசாரித்து அறிந்து, பின்னர் குந்தவையை விசாரித்து எச்சரித்தது இவை எல்லாமே யாருக்கும் தெரியாமல் நான்கு சுவருக்குள் கனகம்மாவே நடத்தி முடித்திருந்த நாடகம் முதலில் காதல் ஒன்றும் இல்லை. வானொலிக்கவிதைகள் தொடர்பாகப் பாராட்டி ராசன் கடிதம் எழுதியது மட்டும்தான் நடந்தது என்று வாதிட்ட குந்தவைக்கு தான் கைப்பற்றி வைத்திருந்த கடிதங்களைக் காட்டினாள் கனகம்மா. பின்னர் பழிவாங்கிக் கொண்டு கதையை தங்கள் இருவருக்குள்ளும் அமுக்கி விட்டாள் கனகம்மா.

இது நடந்து நான்கைந்து வருடங்களுக்குப் பின் மீண்டும் ராசனும் குந்தவையும் தொடர்ந்தும் தொடர்புகளை பராமரிக்கும் விஷயம் கனகம்மாவுக்குத் தெரிய வந்தது. அப்பாவுக்குக்கூட இதனைச் சொல்ல வேண்டாம் என்ற நிபந்தனையில் அப்போது பல்கலைக்கழக மாணவனாக இருந்த குமரனிடம் குந்தவையின் காதல் விபரம் சொன்னாள் கனகம்மா. குமரன் அப்பாவாக அவதாரம் எடுத்து குந்தவையை அக்கா என்றும் பாராமல் கன்னத்தில் அறைந்து அட்டகாசம் செய்துவிட்டான். ''எங்கள் அந்தஸ்தென்ன கேவலம் ஒரு சிறு சாப்பாட்டுக்கடை நடத்திற நாயை கலியாணம் கட்டப் போறியா'' என்று கத்தினான் குமரன். ''தம்பி நீ பேசிற கொம்யூனிசம் இதுதானா'' என்று தளர்ந்த குந்தவை பின் பணிந்து போய் இனி ராசனிடம் தொடர்பு கொள்வதில்லை என்றும் மீண்டும் சத்தியம் செய்து கொடுத்தாள் இத் தடவை கனகம்மா அவளை நம்பவில்லை. பின்னர் குந்தவைக்கு திருமணப் பேச்சுகள் ஆரம்பித்தபோதும் சாதகத்தில் செவ்வாய் ஏழாவது வீட்டில் குந்தியிருந்து கொண்டு திருமண முயற்சியைத் தோற்கடித்துக் கொண்டிருந்தது.

இதுதான் அவர்கள் வாழ்வைத் தலைகீழாக மாற்றிப்போட்ட சம்பவங்கள் பல வேகமாக இடம் பெற்ற காலகட்டம். ''நாட்டுக்காக நான் வீட்டை விட்டுப் போகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தேடவேண்டாம்'' என துண்டெழுதி சோற்றுப்பானைக்குள் வைத்துவிட்டு சுரேஸ் காணாமல் போனது இந்தச் சம்பவக் கோவையின் தொடக்கம். அதன் பின் தங்கை செல்வி பூப்படைந்தது, குமரன் பட்டதாரியாகியது, நாகலிங்கம் பணியில் இருந்து ஓய்வூதியம் பெற்று வீட்டில் சாய்மனை நாற்காலிவாசியானது, போராளி இயக்கத்துக்குப் போன சுரேஸ் அகால மரணமடைந்து மாவீரனாகியது, குமரன் நோர்வேக்கு அகதியாக வந்து சேர்ந்து வீட்டாரின் சுமைதாங்கியானது எல்லாம் அடுத்தடுத்து இடம் பெற்ற சம்பவங்கள்.

## 5

குமரன் அகதியாக நோர்வே வந்து சிதைய யாழ்ப்பாணத்தில் அவனது குடும்பம் சமூக பொருளாதார ரீதியாக பலப்படத் தொடங்கியது. புதுப் பவிசு வந்ததில் நாகலிங்கம் தன்னையும் பணக்காரர் வரிசையில் தூக்கி இருத்திக் கொண்டார். கடந்த சில வருடங்களாகக் குந்தவைக்கு பள்ளி ஆசிரியர் மட்டத்தில் கூட ஒரு மாப்பிள்ளை தேடமுடியாமல் கஷ்டப்பட்ட நாகலிங்கம் திடீரென்று டாக்டர், எஞ்ஜினியர், பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற மட்டத்தில் மாப்பிளை தேட ஆரம்பித்தார். குந்தவைக்கு கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளரான பேரின்பத்தை திருமணம் பேசப்பட்டது. மாப்பிளை வீட்டார் மூன்று லட்சம் சீதனம் கேட்பதாக முதலில் கடிதம் வந்தது. குமரனும் சரி ணம் அனுப்புகிறேன் என்று வழிமொழிந்து பதில் எழுதினான்.

இதற்குள் பேரின்பத்தின் தாயார் மகனுக்கு பல பணக்கார வீடுகளில் இருநதது திருமணம் பேசி வருகிறார்கள் என்றும் ஐந்து ஆறுலட்சம் என்று அவர்கள் சீதனம் தருகிறதாகச் சொல்கிறார்கள் என்றும் கூறி தங்களது பெருமை பேசத் தொடங்கினாள். குந்தவையின் சாதகமும் பேரின்பத்தின் சாதகமும் நன்கு பொருந்தியிருக்கிறதால்தான் தாங்கள் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்ததாகவும் இந்தத் திருமணத்தால் தங்களுக்கு நட்டம்தான் என்றும் அவள் திரும்பத் திரும்பக் கூறியபோது நாகலிங்கம் கொதித்துப் போய்விட்டார். ''நாங்கள் மட்டும் என்ன சின்னப் பணக்காரரா? எனது மகன் குமரன் நோர்வேயில் கோடீஸ்வரனாக இருக்கிறான். பட்டதாரி, பெரியஅறிஞன். நோர்வே அரசாங்கமே அவனை இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விடாமல் வேலை வீடு எல்லாம் கொடுத்து தங்கள் நாட்டோடு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலகாலத்தில் அவனுக்குக் குடியுரிமை கூடக் கொடுத்து விடுவார்கள். நாங்களும் பணக்காரர்தான். எங்களாலும் ஐந்துலட்சம் சீதனமாகக் கொடுக்க முடியும்'' என்று ஆத்திரப்பட்டு பொரிந்து தள்ளிய நாகலிங்கம் வாக்குறுதியும் வேறு கொடுத்து விட்டார். வீட்டில் கனகம்மா செல்வி குந்தவை எல்லோருமே இதைக் கேட்டு அதிர்ந்து போய் விட்டார்கள்.

இதை அறிந்ததும் குமரனுக்கு ஐந்தாறு நாளாகக் கைகால் ஓடவில்லை. ஒரு நாள் முழுவதும் அறையைப் பூட்டிக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதான். தனது தந்தையாரான நாகலிங்கத்தை ஏகவசனத்தில் திட்டித் தீர்த்து நீண்ட கடிதமொன்றும் எழுதினான். சம்பிரதாய பூர்வமாக 'உங்கள் அன்பு மகன் குமரன்' என்று வீட்டுக்கு எழுதும் கடிதங்களை கையொப்பமிட்டு முடிப்பது அவனது வழக்கம். ஆனால் அந்தக் கடிதத்தில் அவன் வெறுமனே குமரன் என்று மட்டுமே கையொப்பம் இட்டிருந்தான். நாகலிங்கம் அதைப்பற்றி ஒன்றுமே அலட்டிக கொள்ளவில்லை. ''உனது பெருமை நிலை நாட்டத்தான் அப்படிச் சொன்னேன். அந்த லெக்சரர் மாப்பிள்ளை ஐந்து என்ன பத்து லட்சமே பெறுவான். நீயும் கொஞ்ச நாளைக்கு ஜெர்மனியில் இருக்கிற பக்கத்து வீட்டுப் பையன் நாதனைப்போல இரண்டு வேலை மூன்று வேலை யென்று ஓடி ஆடிச் செய்யலாம்தானே. கவலையை விட்டு விட்டு ஆகிறதைப்பார். சீதனப்பணத்தை கூடியவிரைவில் அனுப்பிவை'' என்று நான்கு வரியில் கடிதம் எழுதியிருந்தார்.

ஒருவாறு பாரமிழுக்கிற மிருகம் போலாகி உறக்கத்தையும் ஓய்வையும் மறந்து இரண்டு மூன்று உணவு விடுதிகளில் ஓடி ஓடிக் கழுவி ஐநதுலட்சம் ரூபா திரட்டி அனுப்பிய போது, கனகம்மா குந்தவையும் கையுமாகக் கொழும்புக்கு வந்து தொலைபேசியில் விக்கி விக்கி அழுதாள். குந்தவை கற்பமாகியிருக்கிறாள், அந்தப் படுபாவி ராசன்தான் அவளை ஏமாற்றிக் கெடுத்துப் போட்டான் என்று அழுத அம்மாவைச் சமாதானம் செய்த குமரன், ரகசியமாகக் கருச்சிதைவு செய்துவிட்டு பேசி ஒழுங்காய் இருக்கிற மாதிரி குந்தவையைப் பேரின்பத்துக்கு திருமணம் செய்து வைத்து விடுங்கள் என்று தொலைபேசி மூலமே தீர்ப்புவழங்கினான். ''நீ மட்டும் கமலியைக் காதலிக்கலாம் நான்



படிப்பகம்

www.padippakam.com

ராசனை விரும்பினால் மட்டும் பிழையா'' என்று வாதாட முற்பட்ட குந்தவையை ''பொத்தடி வாய் வேசை'' என்ற நெத்தியடியில் வாயை அடைத்தவன் கருச்சிதைவுக்கு முன் அவளோடு எதுவும் பேசமுடியாது என்றும் மறுத்து விட்டான். ''செப்புச் சல்லியும் சீதனமாகத் தனக்கு வேண்டாம் என்று ராசன் கடிதம் எழுதியிருக்கிறான் மகனே குந்தவையை ராசனுக்கும் செல்வியைப் பேரின்பத்துக்கும் கலியாணம் செய்து வைப்போமா'' என்று தொலைபேசியில் தயங்கித் தயங்கி கோரிக்கை விடுத்த தாய் மீதும் வெறுப்பைக் கக்கினான். நாகலிங்கமும் குமரனும் ராசனை நிராகரித்ததற்கு ஒரு சிறு உணவு விடுதியின் சொந்தக்காரனான ராசனது தாழ்ந்த சமூக அந்தஸ்த்துதான் காரணம். மற்றுப்படி ராசனும் அவர்களும் ஒரே சாதிசனம்தான்.

குந்தவையின் திருமணம் நடந்து அதற்குள் இரண்டுவருடமாகிவிட்டது. அவள் இப்போது தனது கணவன் பேரின்பத்துடன் லண்டனுக்கு வரவிருக்கிறாள். ''அத்தானுக்கு மேற்படிப்புக்காக புலமைப்பரிசில் கிடைத்திருக்கிறது. வருகிற யூன் மாதமளவில் லண்டன் செல்கிறோம். நான் தாயாகி இருக்கிறேன் நீ கட்டாயம் என்னை வந்து பார்க்க வேண்டும்'' எனக் குந்தவைமகிழ்ச்சியோடு கடிதம் எழுதியிருந்தாள். லண்டனில் தான் குழந்தை பிறக்குமாம்.

## 6

இரவும் பேய் 'சிசுக்கொலைக்காரன்' என்று குற்றம் சாட்டியதில் குமரனுக்கு நித்திரை கொள்ள முடியவில்லை. குந்தவையின் கருச்சிதைவுக்கு ஒருவகையில் தான்தான் காரணமென அவனது மனம் அடித்துக்கொண்டது. கருச்சிதைவைச் ''சிசுக்கொலை'' என்று பேய் சொல்லுகிறது. பேயின் கூற்றில் அவனுக்கு சம்மதமில்லை.

காலையில் எழுந்தவன் நேரே அடுப்பங்கரைக்கு போய்ப் பார்த்தான். பாத்திரங்கள் எதுவும் நிலத்தில் உருண்டிருக்கவில்லை. எனினும் மின் அடுப்பிலும் கழுவும் தொட்டியிலும் எச்சில் கோப்பைகளையும் உணவு அடிப்பிடித்த பாத்திரங்களையும் பேய் குவித்து வைத்திருந்தது. பேயின் தொல்லையால் அவன் இளைத்துப் போனான். தூக்கமின்மையால் நிரந்தரமாகவே கண்களும் சிவந்து போனது. தலைவலியும் குடி கொண்டது. தலைவலி தாங்க முடியாத ஒரு பொழுதில் சென்ற மாதமே அவன் வைத்தியர் ஒருவரைப் போய்ப்பார்த்திருந்தான். துக்கமும் தூக்கமின்மையும்காரணமாக குமரனது மனநிலை பாதிப்படைந்திருப்பதாக அந்த வைத்தியர் கூறினார்.

வைத்தியருக்கு விசயம் தெரிந்திருக்க நியாயமில்லை. தன்னுடைய வீட்டில் பேய்த் தொல்லை இருப்பதையும் தூக்கமின்மைக்கு அதுதான் காரணமென்பதையும் அந்த டாக்டருக்கு எடுத்துச் சொல்ல முயன்றான் குமரன். அவனது அரைவேக்காட்டு நோர்வேஜிய மொழி அறிவு அதற்கு ஒத்துழைக்கவில்லை. மூன்றாம் பேர்வழிக்கு இந்த விடயம் தெரிய வேண்டாம் என்பதால் மொழிபெயர்ப்பாளர் ஏற்பாட்டுக்கு குமரன் ஒருப்படவில்லை.

அவனது கதைகளையெல்லாம் கேட்ட அந்த வைத்தியர் ''இரண்டு வருடங்களாக இந்தியாவுக்கு சென்று அம்மாவைப் பார்க்கவும் கமலியைத் திருமணம் செய்யவும் ஏன் உன்னால் முடியாமலிருக்கிறது'' என்று ஆச்சரியத்தோடு வினவினார். 'எனக்கு முதலில் இந்திய விசாக் கிடைத்தது அப்போ. எனது தங்கை செல்விக்கு சீதனம் உழைத்துஅனுப்ப வேண்டியிருந்ததால் இந்தியாவுக்குப் போக முடியவில்லை. இப்போ இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா விசாத் தருவது இல்லை'' என்று தனக்குத்தெரிந்த நோர்வீஜிய மொழியில் சிரமத்துடன் எடுத்துச் சொன்ன அவன் மனமுடைந்து அழுதான். ''இலங்கைத் தமிழன் என்பதனால் இந்திய விசாக் கிடைக்கவில்லையா'' என்று அந்த வைத்தியர் ஆச்சரியப்பட்டார். கமலியையும் அம்மாவையும் இங்கே அழைத்துப் பார்க்கலாம் என்றால் நோர்வீஜிய விசாவும் கிடைக்கவில்லை என்றான் குமரன். டாக்டர் இரண்டு சீட்டுக்கள் எழுதித்தந்தார். ஒன்று மருந்துக் கடைக்கு, மற்றது இந்தியத் தூதுவருக்கு குமரனின் மனநிலையை கருத்திற் கொண்டு அவனுக்கு இந்தியா விசா வழங்கி உதவிட வேண்டும் என கோரும் இந்தியத் தூதுவருக்கான சிறு கடிதம் அது.

டாக்டர் நல்லவர் போலத்தான் தோன்றினார் அவருடைய மாத்திரைகளுக்குப் பேயை விரட்டுகிற சக்தி இருக்கிறதாகவே பட்டது. முன்பு மந்திரித்த விபூதிக்கும் நூலுக்கும் பழக்கப்பட்டது போல இந்த மருந்துக்கும் பேய் பழக்கப் பட்டு விடுமோ என குமரன் அஞ்சினான். வைத்தியரின் கடிதத்தைப் பார்த்து விட்டு



படிப்பகம்

www.padippakam.com

இந்தியா விசா தந்து விடுவார்கள் என்றும் நம்பத்சலைப்பட்டதில் அவன் மீண்டும் உயிர்க்கத் தொடங்கியிருந்தான். வைத்தியரைச் சந்தித்த இரவு முழுக்க அவன் மூசி மூசி தூங்கினான். நெடு நாளைக்குப்பிறகு கனவுகள் கண்டான். காலையில் எழுந்த போது ஒரு கனவு மட்டும் நினைவில் சிதைந்திருந்தது.

அந்தக் கனவு முழுவதும் சூரியன் கனன்று கொண்டிருந்தது. உலகத்தைப் பிடித்திருந்த வெண்பனி எல்லாம் உருகி ஆறாக ஓடிக் கழிந்தது. உலகம் பச்சையாக உயிர்த்துத் துடிக்குது. குமரனும் ஒரு மரமாக வேர் ஊன்றினான். கைகள் கிளைகளாக விரிய விரல்கள் மிலாறுகளாகச் சிலும்பின. கிளைகள் எங்கும் பசும் களிர்களும் பூக்களும் பிஞ்சுகளும் நிறைந்த இலைகளும் கனிகளுமாயின. அந்த மரத்தைப் பற்றிப்படர்ந்து தொற்றிய பூங்கொடி வேறு யாருமில்லை. கமலிதான். அந்த மரத்தின் நிழலில் வந்து தங்கிய கிழப் பசுவுக்கு கனகம்மாவின் சாயல். இந்தப் பசுவும் நானும் சிநேகிதம். இந்த பசு ஒரு போதும் என்னைக் கின்று போடாது என்று குதூகலமாகச் சொன்னது பூங்கொடி. பூங்கொடியைத் தழுவிய மரம் பசுவுக்கு கனிகள் தந்தது.

கட்டாயமாக இரண்டு வேலை செய்து பணம் சேர்க்க வேண்டி இருந்ததில் நெடு நேரம் தூங்கவைக்கிற மாத்திரைகளை கைவிட நேர்ந்தது. வைத்தியர்கூட பிசாசின் ஆள்தானா எனக் குமரனுக்கு சந்தேகமும் வந்தது.

காலையில் வேலைக்கு வருகிறபோதும் பேயின் சேட்டை இருந்தது. இரண்டொரு தடவை ஓடிக்கடந்து செல்கிற மோட்டார் வண்டிகளுக்குள் பாய்ந்து அந்தப் பேயை வண்டிச் சக்கரங்களுக்குள் நசித்துப்போட வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது. வருகிற வழியில் நெடுநேரம் ஆற்றுப்பாலத்தில் நின்றான். ஆற்றில் பாய்ந்தால் பேயை ஆற்றில் மூழ்கடித்துவிட்டு தான் மட்டும் தப்பித்து கரைசேர முடியுமா என்பது பற்றி அவனால் ஒரு இறுதி முடிவு எடுக்க முடியவில்லை.

உணவு விடுதி மூடுவதற்கு இன்னம் நேரமிருந்தது. வெளியே அந்த நள்ளிரவு பட்டப் பகலாகத் தோற்றம் தந்ததை அவன் சன்னல் வழியாகப் பார்த்தான். வீதிக்கும் கட்டிடங்களுக்கும் பின்னே தேவதாரு மரங்கள் துருத்திக் கொண்டிருந்த மலைக்காட்டின் மேலே அவனது கனவில் சுடர் விட்ட அதே சூரியன் இருந்தது. உணவுவிடுதிச் சமையலறைக்குள் வேலையும் மேலதிக நேரவேலையுமாக இரண்டு வருடங்களாகத் தேய்ந்து கிடக்கிற குமரனுக்குக் கனவில் வந்த சூரியனை மீண்டும் பார்ப்பது ஆறுதலாக இருந்தது. ஆப்பிள் மரம்போல துளிர்ப்பதும் கொடிபடரவும் பசு துயிலவும் இடம் தந்து வாழ்கிறதும் சாத்தியமே என கண் சிமிட்டும் அந்த சூரியன் அவனுக்கு எடுத்துச் சொன்னது. எனினும் சன்னலில் நின்று ஆறுதல் அடைகிறது சாத்தியமில்லை. குவிகிற எச்சில் தட்டுகளும், கழுவி ஓய்கிற மெசினும் அவனை வா-வா என அதட்டிக் கொண்டிருந்தது.

நார்வே நாட்டுக்கு வருகிற வரைக்கும் எச்சில் தட்டுகளற்ற ஒரு உலகத்தில் வாழ்ந்தவன் குமரன். படிக்கிறபோதும் சரி பட்டதாரி ஆசிரியராக பணியாற்றிய போதும் சரி அவனது உலகத்தில் எச்சில் தட்டுக்களும் அழுக்குச் சமையல பாத்திரங்களும் இருக்கவில்லை. எப்போதாவது அதிகாலைப் பொழுதில் மூத்திரம் பெய்ய எழுந்து வெளியில் வந்கால் புழைச்கடையில் வாழைமரக் கூட்டத்தின் அடியில் லாம்பு வெளிச்சம் தெரியும். கொட்டும் பனியில் எச்சில் தட்டுக்களையும் சமையல் பாத்திரங்களையும் குவித்து வைத்து பற்றுத் தேய்த்தபடி கனகம்மாவும் குந்தவையும் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இப்படித்தான் ஒரு நாள் கனகம்மா பாத்திரம் தேய்த்தபடி சிருஷ்டியின் ரகசியங்கள் பற்றி குந்தவைக்கு வகுப்பு நடத்திக் கொண்டிருந்தாள். மூத்திரம் பெய்ய எழும்பி வெளியே வந்தவனை பார்த்ததும் இருவருக்கும் நாணமாகிப் போய்விட்டது "நித்திரை வரவில்லையா ராசா" என்று கேட்டுச் சமாளித்தாள் கனகம்மா.

மெசினில் இருந்து கழுவிய பாத்திரங்களை வெளியே எடுதது வைத்த குமரன், புதிதாக அழுக்குப் பாத்திரங்களை அதன் வாயுள் திணித்து ஓடவிட்டு விட்டு, மீண்டும் சன்னல் அருகே வந்தான். இப்போதும் கனவுச் சூரியன் மலைமேல்சிரித்துக்கொண்டிருந்தது. சூரியனுக்குக் கீழே மலையில் புதிதாக ஒரு இந்துச்கோவில் இருந்தது. 'ஐயோ எனக்குத் தீர்ப்பு நாள் வந்துவிட்டது' என்று பரபரப்படைந்தான் குமரன்.

வீட்டில் இருந்து உணவுவிடுதிக்கு வரும் வழியில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு சமயம் அந்தத் தேவாலயத்துக்குப் போன அவன் கடவுளுடன் கூட பேசியிருக்கிறான். ''என்னை விசாரித்து தண்டனை வழங்கிடு'' என்று முழங்காலில் இருந்து வேண்டுதல் செய்திருக்கிறான். ஆனால் அப்போதெல்லாம் என்னை சிலுவையில் இருந்து இறக்கிவிடு என்று கடவுள் அவனைக் கேட்டுக் கொள்வார். ஒரு முறை கடவுளுக்கு உதவப் போனவனை கோவிலின் காவல்காரன் பிடித்துக் கொண்டான். கடவுளைச் சிலுவையில் இருந்து இறக்கினால் சேச்சின் வருமானம் போய்விடுமென காவல்காரன் கவலைப்பட்டிருக்க வேண்டும். காவல்காரனின் பிடியில் இருந்த போதே ''கடவுளே எனது பேயைத் துரத்தி விடு'' என்று அவன் கத்தினான். ''நீ என்னைக் காப்பாற்று உன்னை நான் காப்பாற்றுகிறேன்'' என்பது தான் குமரனின் நிலைபாடு. ''குந்தவையின் சிதைந்த கருவும் நாகலிங்கத்தின் பேராசையும் தான் உன்னைப் பிடித்த பேய்கள்'' என்று கடவுள் சொல்லி முடிக்க முன்னமே கோவில் காவல்காரன் குமரனை முற்றத்துக்கு இழுத்து வந்து விட்டான்.

மலையில் தெரிந்தது இந்துக்கோவில். இந்துக் கடவுளர்களுக்கு தன்னைப்பிடித்த பேய்களை துரத்துகிற கெட்டித்தனம் இருக்குமென குமரனுக்குத் தோன்றியது. மீண்டும் திரும்பிப் போய் பாத்திரம் கழுவும் மெசினுக்கு வழமையான பணிவிடைகள் செய்து விட்டு சன்னலண்டை வந்தபோது சூரியனும் இந்துக் கோவிலும் மறைந்து விட்டிருந்தன. உணவு விடுதியில் ஆட்களும் சந்தடியும் குறைந்து காணப்பட்டது.

## 7

பல்கலைக்கழக தேர்வு எழுதி முடித்த வசந்த காலநாட்கள் குமரனுக்கு ஞாபகம் வந்தது. அது அவனைச்சுற்றி தேவ தூதர்களும் தேவதைகளும் இறகுகட்டிப் பறந்து திரிந்த காலம். பரீட்சை முடிவு எப்படி அமையுமோ என்கிற விசாரம் இருந்தது. கமலியைப் பிரிந்து வெளிநாடு செல்வது இனியும் தவிர்க்க இயலாதது என்கிறதை அவன் உணர்ந்தான். பிரிவின் தவிர்க்க இயலாமையை கமலியும் உணர்ந்தாள். அவளது நெஞ்சு துணுக்குற்று நார் நாராக உடைந்தது. எதற்கும் துணிந்தவளாக திடீரென்று கமலி ஒத்துழைக்கத் தொடங்கியதில் இருவருமே கவலை மேகங்களுக்கு மேலே சுடர்ந்த இன்பத்துள் சிறகுகட்டிப் பறந்தார்கள். காலம் தனது திசையில் மட்டுமே நகர்ந்து சென்றது.

குமரனது பல்கலைக்கழக சகா ஒருவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டான். இது நடந்து ஒருவாரம் ஆவதற்குள்ளேயே அவனது தெருவைச் சேர்ந்த, ஒரு வருடத்துக்கு முன் சோற்றுப் பானைக்குள் கடிதம் வைத்து விட்டுக் காணாமல் போயிருந்த ஒரு இளைஞன் மின் கம்பத்தில் செத்துக் கிடந்தான். அவன் சார்ந்திருந்த போராளி இயக்கத்துள் 'உள்கட்சிப் பிரச்சனை' என்று கதை அடிபட்டது. இச்சம்பவங்களால் இளைஞர்களும் அவர்களது பெற்றோர்களும் அச்சமடைந்தார்கள்.

குமரனது பாதுகாப்புக்கு வெளிநாட்டுப் பயணம் மட்டுமே உத்தரவாதமென கனகம்மா ஒரேயடியாக அழுது கொட்டினாள். நாகலிங்கத்துக்கு அவனது பாதுகாப்பு, குடும்பத்தின் பொருளாதாரப் பாதுகாப்பு என்ற இரண்டு மாங்காய்களையும் ஒரே கல்லில் வீழ்த்துவதில் கறாராகி அமைந்தார். இது அவன் கனடாவிலோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றிலோ அகதியானால் மட்டுமே சாத்தியம்.

குமரனது மனப் பதட்டங்களுக்கு பல காரணங்கள் இருந்தன. பரீட்சைப் பெறுபேறுகள் எப்படி அமையுமோ, வெளிநாட்டுக்கு ஆட்களை அகதிகளாக அனுப்புகிற பயண முகவர்கள் காசை வாங்கிக் கொண்டு ஏமாற்றி விடுவார்களோ என்பன போன்ற வழமையான ஏக்கங்களைவிட வெளிநாட்டுப் பயணத்துக்கு முன் ஒருதடவையாவது கமலியுடன் நிறைகலவிச் சுகம் தேடிய மனதின் துக்கம் பெரிதாக இருந்தது. யாராவது நண்பர்கள் வீட்டில் ஓரிரவேனும் தங்கி விடுகிற கோரிக்கை கெஞ்சல், கொஞ்சல், மிரட்டல் எல்லாம் கமலியிடம் எடுபடவில்லை என்பதை குமரன் கண்ணீரோடு உணர்ந்தபோது அதிஸ்டம் வீடு தேடி வந்தது.

கனடா போகவிருந்த குமரனது பல்கலைக்கழக சகா சிவலிங்கம் திடீரென ஒரு நாள் அவனைத் தேடி வந்தான். ''மச்சான், என்னை கனடாவுக்கு வழியனுப்ப வீட்டில் எல்லோரும் கொழும்புக்கு வருகினம் நீதான் எங்க வீட்டையும் நாயையும் பார்த்துக் கொள்ள வேண்டும்'' இது சிவலிங்கத்தின் விண்ணப்பமாக இருந்தது கமலியை அந்த அமாவாசை இருட்டில் சிவலிங்கத்தின் வீட்டுக்கு அழைத்துச் சென்றான் குமரன். அவள் பல்கலைச்



படிப்பகம்

www.padippakam.com

கழக 'பெண்கள் விடுதியில் தங்கியிருந்ததில் எல்லாமே இலகுவாயிற்று. கமலிக்கு தெரு நீள வியர்த்துக் கொட்டியது. நெஞ்சத்திகிலும், உடலின் இன்பவேகனையும் அவளைச் சுட்டெரித்தது. தலைக்குமேலே கனவுப்பிரக்ஞையுள் மஞ்சள் மஞ்சளாக சணல்பூக்கள் அசைந்தன.

தெரு நாய்கள் குரைத்தபோதெல்லாம் குமரன் கமலியின் கவசமாகி நடந்தான். ஒரு சினிமாத்தனமான வெற்றிப் பெருமிதத்தில் அவன் திளைத்துப் போயிருந்தான். கமலிக்குப் பெருமிதமேதுமில்லை. இன்பக் கனவுகளிலும் கூட, தன்னை இழந்து போகிற உணர்வும், கருப்பயமும் அவளை நிலத்தில் நடக்க வைத்தன. தவிர்க்க இயலாது வரவிருந்த பிரிவினாலும் அவள் உருகிப் போய் கண்ணீர் வடித்தாள்.

கமலி, அழாதே, பயப்படாதே. தயவுசெய்து என்னை நம்பு. நான் கட்டாயம் உன்னைத் தவிர வேறு ஒரு பெண்ணையும் தொட மாட்டேன் என வழிநீள வாய்க்கு வந்தபடி வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டிக் கொண்டுவந்தான் அவன்.

சிவலிங்கத்தின் வீட்டுக்குள் நுழைந்தபோது கமலியின் கண்கள் பார்க்குமிடமெல்லாம் மஞ்சள் சணல் பூக்களாக நிறைந்து அசைந்தன. கமலியின் நினைப்பில் குமரன் சுகனைப் போலவும் தோன்றியது. சுகம் செய்தது.

சுகன் ஒரு அழகிய பாடும் பறவையைப் போல கமலிக்கு மேல் குந்திவிட்டு பறந்து போய்விட்ட ஒரு பயல். அவன் சின்னவயதிலிருந்தே கமலிக்குத் தெரிந்த பயல்தான். பின்னர் காணாமல் போயிருந்தவன் கொழும்பில் படிக்கிறேன் பேர்வழி என்று சொல்லிக் கொண்டு மீண்டும் ஊருக்கு வந்திருந்தான். நல்ல பிள்ளை மாதிரி ஒரு முறை கமலியின் வீட்டுக்கு வந்து தேனீரும் அருந்திவிட்டுப் போனான். அன்று கமலியின் அம்மா கமலியையும் சுகனையும் பேசவிடவில்லை. தானே முன்னுக்கு நின்று சுகனை உபசரித்து திருப்பி அனுப்பிவைத்தாள். மறுநாள் மாலை கமலியின் அம்மா பால்மாடு சாய்க்க வெளியே போன போது கமலி வீட்டின் பின்புறமாக நின்று காற்றில் சணல் பூக்கள் அசைந்தாடுவதை பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கு திடுப்பென வந்த சுகன் கேட்டுக் கேள்வியில்லாமல் கமலியின் கைகளைப் பற்றினான். மிரண்டு போன கமலி கைகளை உதறி விட்டு திமிறிப்பாய முனைந்தாள். சுகன் கமலியின் கால்களை பிடித்துக் கொண்டு இரந்தான். அதன் பின் கண் இமைக்கிற நேரத்துக்குள் அவன் கமலியை பூத்து மஞ்சள் கடலாகக் கிடந்த சணல் தோட்டத்துக்குள் கிடத்திவிட்டான். கமலியின் கூடப் பிறந்த தற்காப்பு உணர்வும், கரு அச்சமும் கூட கனவுகளுக்குள்ளும் இன்ப அந்தரங்கங்களுக்குள்ளும் மூழ்கிப் போயின. இனம் புரியாத சுகங்களை நிரந்தரமாகவே அவளது மேனியில் சுகன் பச்சை குத்திவிட்ட போதெல்லாம் அவளுக்கு வானமாகவும் தாரையாகவும் தெரிந்தவை சுற்றிவர அசைந்தாடிய 'சணல் பூக்கள்தான். பின்னர் சுகனின் குடும்பம் முழுவதுமே கொழும்புக்குப் போய்விட்டது. அதன்பின் கமலிக்கு தொடும் சுகம் கிட்டியது பல்கலைக்கழகத்தில் குமரனின் அரவணைப்பில் தான்.

மறுநாள் காலை விடிந்தபோதே குமரனது வசந்த காலங்கள் முடிந்துவிட்டிருந்தன. கண் விழித்தபோது காற்றில் செனாய் வாத்தியத்தின் இசையில் சகானா ராகம் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது. ''யாரோ இயக்கப் பொடியன் செத்துப் போயிற்றாங்கள்'' என்று சொல்லியபடி எழுந்து ஒன்றுக்குப்போய் வந்தான் குமரன் ''பாவங்கள்'' என்றபடி அவனை மீண்டும் ஆரத் தழுவிக்கொண்டு அவனது நெஞ்சுள் புதைந்தாள் கமலி.

சற்றைக்கெல்லாம் இரும்புப் படலை திறக்கப்படுகிற சத்தத்தைத் தொடர்ந்து நாய் குரைக்கத் தொடங்கியது. யாழ்பாணத்து நாய்கள் போருடை அணிந்தவர்களைப் பார்த்து குரைக்கிற குரைப்பு அது. பதைபதைத்துப் போய் எழுந்த குமரன் சாரத்தை எடுத்துக் காட்டிக்கொண்டு வாசலுக்கு ஓடி வந்தான்.

துப்பாக்கியோடு சில போராளி இளைஞர்கள் முற்றத்தில் நின்றார்கள். ஒருவன் துண்டுப் பிரசுரம் ஒன்றை குமரனிடம் தந்தான். வேறு சிலர் வீட்டுக்குப் பின்புறமிருந்து குலை போட்ட வாழைமரமொன்றை வெட்டி தோளில் சுமந்து கொண்டு வந்தார்கள் வீதி சோடிக்கிறோம் என்றபடி அவர்கள் வாழை மரத்துடன் வெளியேறிய போது குமரனுக்குச் சற்றுக் கோபம் வந்தது. பின்னர் அவன் கையிலிருந்த துண்டுப் பிரசுரத்தை விரித்தான். முதுகில் கணகணப்பாக முலைகள் தேய்பட கமலி பின்னுக்கு வந்து நின்றாள்.

ஐயோ என்று குமரன் அலறினான். கமலி அதிர்ந்து போனாள். பின்னர் அவளும்



படிப்பகம்

www.padippakam.com

குரல் எடுத்து அழத் தொடங்கினாள். அஞ்சலி துண்டுப் பிரசுரத்தில் குமரனின் தம்பி சுரேஸ் ராணுவ உடையில் எழுந்து நின்றான். படத்தின் கீழ் மேஜர் பகத்சிங் (சுரேஸ்) திண்ணவேலி,மலர்வு 5. 6. 68, வீர மரணம் 6-5-1986 என்றிருந்தது.

இப்படித்தான் அவர்களது வசந்த காலங்கள் முடிவுக்கு வந்தன. குமரன் நோர்வே நாட்டுக்கு வந்து சேர்ந்து, வேரறுந்த அகதியாகி, அன்னியப்பட்டு, உறவுகளின் பேராசைப் புதை மணலுள் கால்வைத்து,உடலும் உள்ளமும் நைய்ந்து இப்படி பேய் பிடித்தவானாகச் சிதைந்து போனான்.

## 8

உணவு விடுதி மூடப்பட்டதும் தெருவில் இறங்கிய குமரன் பஸ் தரிப்பை நோக்கி விரைந்தான். இரண்டு பக்கமும் கட்டிடங்களில் வண்ண வண்ண கீற்றுக்களாய் குறி ஒளிகள். தெருவெல்லாம் வசந்த காலத்து இரவை அனுபவிக்கிற இளைய தலைமுறையின் கும்மாளம். இவற்றையெல்லாம் அனுபவிக்கிற மனித ரசனையை ஏற்கனவே அவன் இழந்து விட்டிருந்தான். சகோதரிகளது சீதனம், பெற்றோரின் பேராசை, வயசு வந்தும் காதலும் காமமும் இன்மை என்பவற்றுள் நசிந்து சிதைகிற யாழ்ப்பாணத்து அகதி இளைஞர்கள் தருகிற முதல்பலி மனித ரசனைதானே.

பஸ் தரப்பில் யாருமில்லை. வெளியே மெல்லிய இருளும் குளிரும் தலையெடுத்திருந்தன. நான்கு குமரிகளும் மூன்று இளைஞர்களும் பியர்ப் போத்தல்களுடன் அவனைக் கடந்து சென்றார்கள். அவர்களில் ஒருத்தி தன்னைப் போலவே கபிலநிறமாக இருந்ததில் அவனுக்கு சிடு சிடுப்பு ஏற்பட்டது. வெறுப்புடன் வேசி என்றவன் அந்தப் பெண் தமிழச்சியாக இருக்க மாட்டாள் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

வானம் மேலும் இருண்டது. ஏன் இன்னமும் பஸ் வண்டி வரவில்லை என்பது அவனுக்குப் புரியவில்லை. மீண்டும் அவன் தனது பாவப்பட்ட வாழ்வின் நினைவுக் குழிக்குள் இடறி வீழ்ந்தான்.

குந்தவைக்கு சீதனமாக ஐந்து லட்சம் ரூபாய் அனுப்பியதுமே கமலியைத் திருமணம் செய்து கொடுக்க சம்மதம் தெருவித்திருந்தார் நாகலிங்கம். பின்னர் அவர், உனக்கு நல்ல சீதனத்தில் திருமணம் பேசி வருகிறார்கள். சீதனத்தை வாங்கிசெல்விக்கு கொடுத்துவிட்டு அவர்களில் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள் என வலியுறுத்தத் தொடங்கினார்.

நாகலிங்கத்தை முதல் முதலாக எடுத்தெறிந்து அவன் கடிதம் எழுதியதே கமலியின் விடயத்தில்தான். ''உங்களுக்கு காதலைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இதற்குமேலும் எங்கள் காதலுக்கு குறுக்கே நின்றால் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வேன்'' என்று கோபமும் துணிச்சலும் மிகுந்திருந்த ஒரு தருணத்தில் கடிதமெழுதி அஞ்சல் செய்தான். அதன் பின் நாகலிங்கம் வாய்மூடி மௌனமாக ஒதுங்கிக் கொண்டார். குந்தவையின் திருமணம் முடிந்த கையோடு கனகம்மா கமலியை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தாள்.

எல்லாம் கனவு போல இனித்தது. ஒரு கனவில் பசிய சோலைகளின் ஊடாக அவன் சிறகசைத்துப் பறந்தான். பறந்தான். திடீரென்று விபத்தில் அகப்பட்டது வாழ்வு. செல்வியின் கடிதம் அவனது இதயத்தை ஊனப்படுத்தியது. சகமனிதர்கள் மீதான நம்பிக்கை அதிர்ந்தது ''அண்ணா எனது பெருக்கு ஐந்து லட்சம் ரூபாய் வங்கியில் போட்டு விட்டு நீ கமலியைத் திருமணம் செய்து கொள்ளலாம்'' என செல்வி எழுதியிருந்தாள். நாகலிங்கமும் தனது நெடு நாளைய மௌனத்தைக் கலைச் செல்வியின் கடிதத்துக்குக் கீழே ''அவள் மூர்க்கத்தோடு இருக்கிறாள். எனக்குப் பயமாகவிருக்கிறது எதுவும் செய்து விடுவாள்.'' என்று கிறுக்கியிருந்தார். எதுவும் செய்வதென்பது, தற்கொலை செய்தல், போராளியாக இயக்கத்துக்கு ஓடுதல், குடும்பத்துக்கு அவமானம் விளைவிக்கக் கூடிய மாதிரியான சாதி தாழ்ந்த காதல் திருமணம் செய்து கொள்ளுதல் என பல்வேறு அர்த்தங்களாக முடிச்சு அவிழ்ந்ததில் குமரன் பதறிப் போனான்.

செல்விக்கு ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பையனோடு கடிதத் தொடர்பு இருந்தமை வீட்டில் கண்டு பிடிக்கப் பட்டதும் கட்டுக் காவல் அதிகரிக்கப் பட்டதும் குமரனுக்கு ஞாபகத்தில் வந்தது. அதன்பின் இயக்கத்துக்கு ஓடி விடவும் எத்தனித்திருக்கிறாள். தன்மீது அனுதாபம் இல்லாத ஒருவனாகவும், காதலைப் பற்றிய மனிதப் புரிந்துணர்



படிப்பகம்

www.padippakam.com

வில்லாத ஒருவனாகவுமே அவள் குமரனை பார்த்தாள். ''வாழ்தல் என்பது வாழ்வை பணயம் வைத்து அந்தஸ்துக்காக ஆடும் சூதல்ல. அண்ணாவோடு நீ வாழ்வை அனுபவிக்க முடியும் என்று வீண்கனவு காணாதே' என்று கமலிக்கு கூட புத்திமதி கூறி எழுதியிருக்கிறாள் செல்வி.

செல்வியின் கடிதம் குமரனை மட்டுமல்ல கமலியையும் கனகம்மாவையும் கூட கிழித்துப் போட்டது. இது செல்வியின் வேலையல்ல, அந்த சுயநலம் பிடித்த கிழவனின் சதியென நாகலிங்கத்தைத் திட்டிக் கடிதம் எழுதியிருந்தாள் கனகம்மா. கமலியை தனது கையில் பிடித்துத் தராமல் நான் வீடு திரும்ப மாட்டேன், உனக்காக சென்னையில் கமலியுடன் காத்திருப்பேன் என எழுதி சிவப்பு மையில் அடிக்கோடு வேறு போட்டிருந்தாள் அவள். அடிக்கோடு கமலியின் வேலையென்பதைக் குமரனும் புரிந்து கொண்டான்.

கமலியைத் திருமணம் முடித்து, பின் இருவருமாக வேலை செய்து ஒரு வருடத்துக்குள்ளேயே செல்வியின் சீதனம் ஐந்து லட்சம் ரூபாவும் அனுப்பி வைப்பதாக குமரன் எழுதிய கடிதத்துக்கு வீட்டில் இருந்து ஒரு பதிலும் வரவில்லை.

தனது மனிதக் கனவுகளை புதைத்துவிட்டு இரவும் பகலும் வேலை வேலையென்று சிதைந்து போகிற அவலம் அவனது இருப்பில் இப்படித்தான் தொற்றிக் கொண்டது. 'எனக்கென்று இந்த உலகத்தில் இருப்பதெல்லாம் அம்மாவும் கமலியும்தான்'' என அவன் தனது நாட்குறிப்பில் எழுதினான் ''மற்ற எல்லோருமே போனபிறவியில் எனக்கு வட்டிக்குப் பணம் தந்தவர்கள். இந்தப் பிறவியில் வெனிஸ் நகரத்து சைலொக் போல உறவுகளாகப் பிறந்து வந்திருக்கிறார்கள்.''

சம்பந்தப்படுகிறவர்களால் சகமானுடர்களாக அடையாளப்படுத்தப்படுகிறது தான் பாக்கியம். இதனாலேயே மனித இருப்பு வாழ்வாகச் செழித்து அர்த்தப் படுகிறது. நோர்வே வந்து சேர்ந்ததிலிருந்தே குமரன் இந்த வரப்பிரசாதத்தை இழந்து போனான். இதுதான் துர்அதிஸ்டம். குமரன் மட்டுமல்ல புறாக்களாகப் பறந்து போய் பணம் பண்ணக்கூடிய நாடுகளில் அகதிகளாக விழுந்து கிடக்கிற ஈழத்தமிழர் பலரது துர் அதிஸ்டமும் இது தான். தன்னை, தனது மனித முகத்தை சிதைசிதையென்று சிதைத்து ஐந்துலட்சம் ரூபாய் திரட்டி ஊருக்கு அனுப்பியபோது குமரனின் தலையில் புதிய இடியொன்றும் விழுந்தது.

அதிர்ச்சி தருகிற சென்னைச் செய்திகளும் அதைத் தொடர்ந்து இந்தியத் தூதரகம் இலங்கைத் தமிழர்களுக்கு விசா வழங்குவதை திடீரென்று நிறுத்தி வைத்ததும் அவனது கனவுகளை நிர்மூலமாக்கியது.

''ஐயோ நான் என்ன பாவம் செய்தேன்'' என பஸ்தரப்பில் நின்றபடி வாய்திறந்து அழத்தொடங்கினான் குமரன்.

## 9

பஸ்வண்டி ஓடத்தொடங்கியது. அந்த நள்ளிரவிலும் தெருக்களில் பெண்கள் கூட்டம் நிறைந்திருந்ததை அவன் பார்த்தான். ஒஸ்லோ நகரத்தின் அழகே அந்தப் பாதுகாப்புத்தான்.

நாளைக்கே மீண்டும் இந்தியத் தூதரகத்துக்கு செல்ல வேண்டும் என்றும் அவன் தீர்மானித்துக் கொண்டான்.

விசா கிடைத்தால் சிதம்பரம் கோவில் உண்டியலில் இந்தியப்பணம் பத்தாயிரம் போடுவதாகவும் கதிர்காமத்துக்கு ஆயிரம் ரூபாய் தபாலில் அனுப்புவதாகவும் பஸ்சில் இருந்து கொண்டே அவன் தாராளமாக நேத்தி வைத்தான். இத்தொகை இரண்டு மாதங்களுக்கு முன்னம் சிதம்பரத்துக்கு ஐயாயிரமும் கதிர்காமத்துக்கு ஐந்நூறும் என்றிருந்தது. பணம் தேடுகிற சக்தியைத் தவிர ஏனையவற்றை எல்லாம் ஏற்கனவே இழந்து போயிருந்த வனுக்கு முடிந்தது எல்லாம் அவ்வளவுதான்.

கமலியை நோர்வேக்குக் கூப்பிட்டு விட்டால் தனது துயரங்கள் எல்லாம் தீர்ந்து விடும் என அவன் மனப்பூர்வமாக நம்பினான். வேலை முடிந்து வீடு திரும்புகிற போது கமலி வீட்டில் இருப்பாள். எச்சில் பாத்திரங்கள் எல்லாம் கழுவி அடுக்கி இருக்கும். உணவு விடுதிக்கு வருகிற நோர்வீஜிர்களைப் போல சாப்பாட்டு மேசையில் போய் உட்கார வேண்டியதுதான். கமலி செல்லம் கொஞ்சிக் கொஞ்சி அவனுக்கு உணவு பரிமாறுவாள். ''பெண்கள் குந்தியிருந்து அரட்டை அடிக்கிறது எனக்குப் பிடிக்காது'' என்று அவன் அரற்றிய போது பஸ்வண்டியின் முன் இருக்கையில் இருந்த இளைஞர்கள்



படிப்பகம்

www.padippakam.com

அவனை திரும்பிப் பார்த்துச் சிரித்தார்கள். கமலி வந்த உடனேயே ஒரு நல்ல தொலைக் காட்சிப் பெட்டியும் வி. சி. ஆரும் வாங்க வேண்டும் என்று அவன் மீண்டும் உறுதி எடுத்துக் கொண்டான்.

எந்தத் திரைப்படமும் சென்னையில் வெளி வந்த கையோடேயே சாயம் போன திருட்டு வீடியோக்களாக ஐரோப்பாவில் நடமாடும். கமலி வந்தபின் அடிக்கடி புதிய திரைப்படங் கள் பார்க்கலாம், தினசரி செல்லம் கொஞ்சி கலவி முடிந்த பின்னும் சினுங்கச் சினுங்க இரவு முழுவதும் அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தூங்கலாம் என்ற கனவுலகில் மூழ்கி இருந்த போது கமலி முலைகள் நசிய முதுகில் சாய்ந்திருப்பது போன்ற பிரமை குமரனுக்கு ஏற்பட்டது. பிரக்ஞை மீண்ட போது தனது திருமணம் தள்ளிப் போனதற் காக அப்பாவையும் தங்கையையும் வசை பாடினான்.

பஸ்ஸில் இருந்த இளைஞர்கள் அடிக்கடி குமரனை திரும்பிப் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

## 10

அது குமரன் வழக்கமாகப் பயணம் செய்கிற பஸ் வண்டியாகிப் போனதில், சாரதியே சரியான தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்தி விட்டு குரல் கொடுத்தான். அவன் தனது கனவுகளிலிருந்து மீண்டு பஸ்ஸில் இருந்து கீழே இறங்க சற்று நேரம் எடுத்தது. நள்ளி ரவிலும் சூரியன் மறையாது நிக்கிற காலமது எனினும் வானில் பரவியிருந்தது அதிகாலை வெளிச்சம்தான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். இப்படி ஆறுதலாக நின்று வானத்தையும் பூமியையும் பார்த்து ஐந்து வருடங்களாகி விட்டன. அது, அவன் நோர்வே வந்து சேர்ந்த வருடம். மொழி படிப்பதற்காக முறைசாராத மக்கள் கல்லூரி ஒன்றில் மாணவனாகி இருந்தான். அதுதான் அவன் மனிதனாக இருந்த இறுதி வருடம்.

அந்த வருடம் கூட "குமரன், அங்கு உனக்கு படிப்பதற்காக அறுபதாயிரம் குரோனர் கடன் தருவார்கள். பணத்தை எடுத்து வீண் செலவு செய்து விடாதே. பணத்தையும் உனது வரவு செலவுக் கணக்கையும் வீட்டுக்கு உடன் அனுப்பி வைக்கவும்" என அவனுக் குக் கடிதம் எழுதியிருந்தார் நாகலிங்கம்.

கடனாகக் கிடைத்த பணத்தில் பெரும் பகுதியை வீட்டுக்கு அனுப்பிய போதும் அந்த வருடத்தின் வசந்தத்தையும் கோடை யையும் அனுபவிக்க பணமுடையும் கமலி யின் பிரிவும் அவனுக்குத் தடையாக இருக்க வில்லை.

## 11

ஒற்றையடிப் பாதையில் இறங்கி வீட்டை நோக்கி நடந்தபோது பிசாசு பின் தொடர்ந்து வருவதை உணர்ந்தான். திரும் பிப் பாராமலே தன்னைத் தொடர்வது ஒரு பெண் பிசாசு என்பதை அவன் ஊகித்துக் கொண்டான். காற்றில் மிதந்து வந்த நறுமணம் சிறு வயதில் கேள்விப்பட்ட மோகினிப் பிசாசுகளின் கதைகளை குமரனுக்கு நினைவு படுத்தியது.

எதிரில் பூத்துக் கிடந்த அப்பிள் தோட்டம் இன்னமும் இருண்டு கிடந்தது. □

---

நிமிர்ந்த தலைக்குக் கழுமரம் வைத்த
பெருமை எனக்குண்டு
நானோர் யாழ்ப்பாணத்து
மேட்டுக்குடியாம்!
புறத்தால் வக்கில்லா சூத்திர நாயும்
அரசியல் கயிறேறி வந்துள்ளது
முன்னாலோ, பின்னாலோ வரக்காணின்
தப்பாமல் சொல்வேன்
உதையும், உதையும்
உம்கால் ஒற்றி மகிழ்வேன்
எனைப் போகவிடும்"
இப்போது
சந்திரனை கைதொட்ட மகிழ்வெனக்கு.
"கற்றுக்கொள் கறுப்பு நாயே!
சர்கப்பிறந்த பன்றியே
தொழுவத்தைவிட்டு ஏன் வந்தாய் வெளியே?
கறுப்பர் அழிந்தால் மட்டும்
புனிதமடையும் பூமி!"

ஒரே கணத்தில் குறுக்கும் நெடுக்குமாக
பூமி சுற்றும் அதிசயம் எப்படி?
நெற்றி பிளந்து
பிடரி தெறித்தது.
கொட்டிப் பரவியது இரத்தம்
வானம் வெண்பூ தூவியபடி
குற்றுயிராய் நிலம் சாய்ந்து நான்
என்னுள்ளே வெப்பம் உறைய
குளிர் பற்றி எரிந்தது.

—தம்பா (இனிக்கும் இரவும் புளிக்கும் பகலும் கவிதையிலிருந்து)

(நன்றி : 'சுவடுகள்' 4/94)



படிப்பகம்

www.padippakam.com

# அலையும் தொலைவு

***கார்த்தி நல்லையா***

**(பிரான்சு)**

அவன் முதுகிலே ஒரு சுமையும் கையிலே ஒரு கட்டுக் கார்டுமாக தொடர் மாடிக் கட்டிடமொன்றின் நுழை வாயிலில் நின்று கொண்டு ''செவ்...'' எனச் சத்தமிட்டான். இரைச்சல்களைப் பீச்சிய வண்ணம் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. கட்டிடங்கள் கட்டப்பட்டவையா ''மோல்ட்'' செய்து வைக்கப்பட்டவையா எனச் சந்தேகம் கொள்ளும் ஓரே மாதிரி வேலைப்பாடு கொண்ட கட்டிடங்களும், தெருக்களுமான இடத்தில் ஒரு மூலையில் இருந்து வந்து கொண்டிருந்தவனை நோக்கி 'கதவு பூட்டியிருக்கு' என சைகை மூலம் தெரியப்படுத்தினான். சுற்று முற்றும் தலையைத் திருப்பித் தங்களை யாரும் கவனிக்கிறார்களா என அவதானித்த வண்ணம் விரைந்து வந்த 'செவ்', ''உனக்கு என்ன சொன்னனான். பிரெஞ்சுக்காரனுக்கு தமிழ்தான் தெரியாது, சைகை கூடவா தெரியாது.? இப்ப நான் கதவைத்திறக்க யாரும் மூன்றெழுத்துக்காரன் அல்லது வீட்டுச் சொந்தக்காரன் கையும் களவுமாகப் பிடித்தார்களென்றால் என் கதி அவ்வளவுதான். தம்பி கவனம்... சொல்வதை கேட்டு புத்திசாலியாக நடக்கவும்''. 'செவ்'வுக்கேயுரிய தோரணையுடன் புத்திமதி கூறி, மீளவும் ஒரு தடவை சுற்றுப்புறத்தை கவனித்து, கதவை இரகசியமாக திறந்து விட்டு 'அவிசு'[2]களை பார்த்து எடுத்து விட்டு இடத்தை விட்டு மறைந்தான். போகிற போககில் 'எங்களுடைய அவிசுகளை வைத்து விட்டுவா'' என உத்தரவும் பிறப்பித்தான். வெளியார் அனுமதியின்றி கதவைத் திறப்பது சட்ட விரோதம். தான் செய்யும் வேலை சட்டத்திற்கு இசைந்தது பாதி, இசையாதது பாதி என்பதை அவன் அறிந்திருந்தான். பல குடிமனைகள் உள்ள அம்மாடிக் கட்டிடததின், இரகசிய இலக்கம் தனிச்சாவி கொண்ட முன்வாசலை 'செவ்' திறந்து விட உள்ளே சென்றவன், கார்டியனின் கண்ணில் படாமல், பின்னால் உள்ள 'எஸ்கலியரில்'[3] ஏறி இரண்டிரண்டு வீடுகள் கொண்ட எட்டுமாடிக்கும் ஏறி கதவுகளின் கீழால் கார்டுகளை[4] செருகிக்கொண்டு சென்றவனின் கால்களில் தாள முடியாத வலி. நேரத்தைப் பார்த்தான். பதினொன்றுக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. காலையில் எட்டு மணியில் இருந்து ஏறி இறங்கிய அசதி. படியொன்றில் சட்டென இருந்து விட்டான். நேற்று வந்த அம்மாவின் கடிதம். எழுத்து வரிகளில் மின்னிய எதிர்பார்ப்பு. ''பக்கத்து வீட்டு கந்தையற்ற மகன் ஒரு வருடத்துள் தமக்கைக்கு சீதனத்துடன் கட்டிக் கொடுத்திட்டான். தாய் தகப்பனையும் கொழும்புக்கு கூப்பிட்டு வீடெடுத்து கொடுத்து செலவுகளை கவனிக்கிறான்.''

உட்கார்ந்தவனின் அயர்ச்சிக்கும் மேலால் நெஞ்சலையில் இவ்வரிகள் உருண்டு வலித்தன. கடிதம் இன்னும் முழுசாய்ப் படிக்க முடியவில்லை. உட்கார்ந்து படிக்கலாமென்றால் 'செவ்' கண்கொத்திப் பாம்பாட்டம் அலைந்தபடி கண்காணிக்கின்றான். அவனுக்கு இன்னும் பதினேழு வயது முடிந்திருக்கவில்லை. விடலைப் பருவத்தினன். பதின்மூன்று வயதுக்குமேல் அவனால் பள்ளி செல்ல முடியவில்லை. வசதி குறைந்த குடும்பமானாலும், படிக்க அது தடையாய் இருந்ததில்லை. முதலில் இந்தியாவுக்கு குடும்பத்துடன் அகதியாய் ஓடி பின்பு அமைதியெனத் திரும்பி, சொற்பகால இடைவெளியில் அதுவும் குலைய கொழும்புக்கு இடம் பெயர்ந்து கண்கட்டிவித்தை மாதிரி எப்படியோ பிரான்ஸ் வந்து சேர்ந்து நான்கு மாதங்கள் தான்.

குடும்பத்தில் ஒரே பொடியன். மூத்தது இரண்டு, இளையது இரண்டு என்று நான்கு பெண் சகோதரங்களுக்கு ஒரு பொடியன். அம்மாமனுஷி எத்தனையோக் கொடிய வல்லூறுகளுக்குமிடையில் இந்தக் குஞ்சை பொத்திப் பொத்தி காப்பாற்றி எங்கேயாயினும் உயிர் பிழைத்து இருக்கட்டும் என்றுதான்' உள்ளதை யெல்லாம் வித்து சுட்டு வெளிநாடு அனுப்பிவைத்தாள். அவனுக்கும் கஸ்டம் நஸ்டம் வாழ்க்கை எல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

புரிகின்றதுதான். ஆனால் எடுத்த எடுப்பிலே கடிதத்தில் தொனிக்கும் அம்மா மனுஷியின் எதிர்பார்ப்புக்கு என்ன செய்ய இயலும். காசு வரும் வழிகள் என்ன என்று யோசித்தான். ஒன்றும் புலப்படவில்லை. கடன் யார் தரப் போகிறார்கள்.

மாடியில் கதவு திறந்து மூடும் சத்தம் கேட்கவே அறண்டதில் நினைவு அறுந்தது. வருபவன்' பேசுவானோ என்ற அச்சத்தில் எழுந்து ஓசைப்படாமல் இறங்கி 'கார்டியன்' அறைக்கு பக்கத்தில் இருந்த படிகளில் ஏறி மற்ற மாடிகளில் உள்ள வீட்டுக் கதவுகளின் கீழால் கார்டை சொருகும் வேலையை தொடர்ந்தான். நான்காம் மாடியாக இருக்கலாம். பூட்டிய கதவுள் இருந்து குலைத்தது நாயொன்று. ஒரு கணம் அதிர்ந்தவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கார்ட்டை தள்ளியது பாதி தள்ளாதது பாதியாக விட்டு விட்டு, நாய், பூனைகளின் சொகுசையும், 'அவற்றின் மீதான இந்த மனிதர்களின் ஜீவகாருண்யத்தையும்' எண்ணிய வண்ணம் மற்ற மாடிக்கு ஏறி வேலையை தொடர்ந்தான். நாய் குரைப்பது இன்னமும் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு கதவினுள் கார்டைசெருக குனிந்த போது அது திறபட, அதிர்ந்து நிமிர்ந்தவன் 'போன்சூ'[5] என பிரெஞ்சில் தடுமாறி வணக்கம் சொல்லி அசடுவழிந்தவனாய் கார்டை நீட்டினான். கதவை திறந்த ஆறடிக்கும் சற்றே உயரமான, வாட்டசாட்டமான வெள்ளை மனிதன் நின்று கொண்டிருந்த இவனை பூச்சி புழுவைப் போல் நோக்கிய வண்ணம் கார்டை வாங்கி சட்டென கிழித்து உரத்த தொனியில் வெடித்தான். இவனது முகத்தில் வியர்வை அரும்பத் தொடங்கியது. நாக்கில் பிரெஞ்சு திக்கு முக்காடியது. 'நோ மிஸ்யூ... தறவாய் நெப்பா...செவ்புறப்ளம்...மே!! சோ புறப்ளம்...?' சாப்பிடுவது போல் சைகை செய்தான். உடம்பு லேசாக நடுங்கியது. இவனது ஜாக்கெட்டில் பிடித்த அந்த வெள்ளை மனிதன் மாடிப்படி வழியே தள்ளிக் கொண்டு வந்து கட்டிட வாசலுக்கு வெளியே விட்டு கதவை அடித்து சாத்தினான். மனசு குறுகித் துவண்டது. மூச்சு வாங்கியது. நெஞ்சத்துடிப்பு அதிகரித்தது. லேசான கோபமும், அதை மீறிய பயமும், வெட்கமும் என உணர்ச்சிக் குவியலின் கலவையில் ''இன்னும் வேணும்... இதற்கு மேலயும் வேணும்...'' நிலத்தை சப்பாததுக் காலால் உதைத்தான். தன்னைத்தானே திட்டிக் கொண்டான். நல்ல வேளை, பிடித்தவன் 'கொன்சியர்ஸ்' அறையில் பூட்டி பொலிசுக்கு அறிவிக்காமல் விட்டானே.

சுற்றும் முற்றும் பார்த்தபொழுது சற்றுத் தூரத்தில் 'செவ்' நிற்பது தெரிந்தது. அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. குனிந்து மூடப்பட்ட அந்தக் கதவின் அருகில் கையில் வைத்திருந்த சோக்கட்டியினால் நிலத்தில் தன் இலக்கத்தை 'நாலு(4)' என எழுதினான். சோக்கட்டி எழுத்தின் மீது கண்ணீர் சொட்டித் தெறித்தது.

தூரத்தே நின்று கொண்டிருந்த 'செவ்' அவனருகே வந்து ''தம்பி வேலை எண்டா இப்படித்தான் பிரச்சனைகள் வரும். கவலைப்படவோ யோசிக்கவோவேண்டாம். நாடுவிட்டு நாடுவந்த நாங்கள் இதையெல்லாம் பெரிதாக நினைக்கக்கூடாது. நம்மட ஊர் என்றால்தான் வெட்கப்படவேண்டும். இதுகளை மறந்திட்டு வேலையை செய்யும் என்ன...'' என்றவன் ''நான் மற்றப் பொடியனைக் கொண்டுவந்து இந்தக் கதவைக் கவனிக்கிறேன். நீர் மற்றக் கதவில் இருந்து வேலையை தொடர்ந்து செய்து கொண்டு இந்த 'பாத்துமா'வை[6] சுற்றிவா. மற்றப் பக்கத்தில் இரண்டாம் நம்பர் வந்து கொண்டிருப்பான். அவனைச் சந்தித்து பூட்டிய கதவுகள் இருந்தால் அதன் முன்னால் நில்லுங்கள்'' என வேலை பற்றி கூறிவிட்டு 'செவ்' விரைந்தான். வேலையை தொடர அவன் மனம் மறுத்தது. ''கண்டறியாத வெளிநாடும், பணியார வேலையும்'' என வாய்க்குள் திட்டிய வண்ணம் கட்டிடத்தின் முன்னால் நின்று கொண்டிருந்த மரத்திற்கு உதைவிட்டான். மரங்கள் துளிர்த்தது. துளிர்த்த இலைகளில் வண்ணங்கள் படர்வதை, பருவகால அழகை அவனால் ரசித்து மகிழ முடியவில்லை. பொக்கட்டுக்குள் கையை நுழைத்தவாறு மற்றக் கதவிற்கு வெறுப்புடன் சென்றான். 'செவ்' வந்து அவ்வளவு சாதாரணமாக சொல்லிவிட்டு போறான். 'செவ்' வேலையும் நாய் வேலை தான். இவனைப்போல அஞ்சு பேரை மேய்க்க வேணும். ஊரில் 'ஓவசியர்' வேலை மாதிரித்தான். இவனைப்போல் பேப்பர் வேலையில் சேர்ந்துதான் பின்னர் 'செவ்' ஆனவன். பலதும் பத்தும் பட்டுத் தெளிந்தவன். காலையில் எட்டுமணிக்கு 'மெத்ரோ'[7] ஒன்றில் தனக்குரிய வேலையாட்களைச் சந்தித்துச் சென்று—வரைபடத்தில் குறிக்கப் பட்டிருக்கும் 'பாத்துமாவில்' வேலை-மாலையில் எல்லோருமாக 'பிரோ'[8] சென்று அடுத்தநாள் வேலைக்கான கார்டுகளையும், வரைபடத்தையும் பெற்று மறு நாளைய வழமையை தொடர பிரிந்து செல்லும்வரைக்கும் 'செவ்' வேலையாட்களுக்கு பொறுப்



படிப்பகம்

www.padippakam.com

பானவன், நடத்துபவன். பொதுவாக புதிய தாய் நாட்டுக்குள் வந்து சேர்பவர்கள், நிரந்தர விசா இல்லாத தற்காலிகமானவர்கள் என்பவர்களைத்தான் வேலைக்கு விரும்பிச் சேர்ப்பர் இவ்வேலை நிறுவனங்களின் 'பத்ரோன்'மார்,[9] குறைந்தகூலி. கூலியில் வெட்டு, தொழில் சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டிய அவசியமின்மை, தாமதக் கொடுப்பனவு. இவைபத்ரோனுக்கு லாபங்களாகும். ஆனால் இவர்களை மேய்க்கும் 'செவ்' மாருக்கு தலைக்குமேல் சுமை. புதிதாக வேலைக்கு வருபவர்களில் பலர் இடம் மாறி போய் தவிப்பர். வேலைப் பளுவால் சிலர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுவர். பத்ரோனின் கூலி கொடுப்பனவுகளின் ஒழுங்கீனங்களினால் வேலையாட்களின் கோப வெளிப்பாடுகளை செவ் தான் அனுபவிக்க நேரிடும். அநேகமாக பாரிஸ் வந்தவர்கள் எல்லோரும் இந்த பேப்பர் வேலையை செய்திருப்பார்கள் அல்லது முயற்சித்திருப்பார்கள்.காசை கட்டி வெளிநாடுவந்து அறைக்குள் முடங்கி இருப்பதைவிட இந்த வேலையிலாயிலும் நாலு காசு வருமே என்பது பலரிதும் எதிர் பார்ப்பு. வியாபாரம் பெருக விளம்பரம் செய்க என்பதை உயிர்மூச்சாக கொண்ட தொழில் நாடுகளில் எப்போதும் இவ்வேலைகள் தவிர்க்க முடியாதவை. வர்த்தக தொழில் நிறுவனங்கள், உற்பத்திப் பொருள்கள் பற்றிய அறிவித்தல்களை ஒவ்வொரு வீட்டாருக்கும் சென்றடைய செய்தல்தான் பேப்பர் வேலையின் தலையாயபணி.

ஒரு கதவினடியில் இரண்டு என சோக்கட்டியால் இலக்கமிட்டிருப்பதைக் கண்டவன் இரண்டாம் நம்பர்காரன் அடுத்த கதவில் தான் நிற்பான் என்ற முடிவுடன் கதவை மெல்ல திறந்து உள்ளே காலை வைத்தான். 'மச்சான் மேலே வா' தாழ்ந்த குரலில் தமிழ் கிசுகிசுத்தது. இரண்டாம் நம்பர்காரன் 4ம் நம்பர்காரனான இவனுக்கு வரவு கூறினான்.

''செவ்' இப்பதான் வந்து பார்த்திட்டு போனவன். அவன் வர பதினைந்து நிமிடமென்றாலும் பிடிக்கும். வந்து உட்கார் கொஞ்ச நேரமென்றாலும் காலாறிவிட்டு போகலாம். எஸ்கலியர்களில் ஏறிஇறங்கினதில் காலெல்லாம் நோகுது'' என்றான் இரண்டாம் நம்பர்காரன்.

''வேண்டாம். செவ் சரியான கள்ளன். எங்கேயாவது நின்று எத்தனை மணிக்கு உள்ளே சென்று, எத்தனை மணிக்கு வெளியே வாறாங்கள் என்று கவனிப்பான். ஏன் அவனிட்ட பேச்சை வாங்குவான். உன்னைச் சந்தித்து இந்த பாத்துமாவில் இருக்கும் 'பெர்மிகளை' பார்க்க சொன்னவன். வா ஏதாவது பெர்மிக்கு முன்னால் பார்க்கிற மாதிரி நின்று கொண்டு கதைக்கலாம்'' என்றான் இவன்.

அவர்களது அதிர்ஸ்டம் பத்திலேயேதிறக்க முடியாத கதவுகள் இருந்தன. இந்த வேளையில் சந்தித்துத்தான் இருவரும் கூட்டாளியானார்கள். 'உனக்கு என்ன நடந்தது' என்றான் இரண்டாம் நம்பர்காரன். இவன் நடந்ததை கூறினான். கூறுகையில் குரல் தளதளத்தது. இவனைப்பார்க்க பரிதாபமாக இருந்தது. இரண்டாம் நம்பர்காரனுக்கு யோசனை ஓடியது: 'எனக்கு இப்படி நடந்திருந்தால்'. நம்பர் நான்காம்காரனான அவனது கூட்டாளியை அனுதாபத்துடன் நோக்கியவன், ''என்ன மச்சான் செய்யிறது. இந்த வேலையை விடுவம் என்றாலும் எங்கடை கஸ்டம்விடுகுதில்லை. பேசிற்றும்[10] இல்லாத வேலை. எல்லோருக்கும் பயந்து பயந்து செய்ய வேண்டியக் கிடக்கு. எல்லாம் எங்கட நிலமைதான்'' என்றான் ஆறுதல் மொழியில். ''முந்தி ஒப்ரா கூப்பிட்டுமுடிவு சொல்லும் வரைக்கும் வேலை செய்யக்கூடிய விசா இருந்ததாம். நம்மட காலம் இப்பயெல்லாம்ஒப்ரா எங்களை அகதியா ஏற்றுக் கொண்டமுடிவுக்கு பின்தான் வேலைசெய்யலாம். நாளுக்கு நாள் சட்டம் மாறுது. இப்ப நம்மட்ட இருக்கிற விசாவுக்குவேலையில்லை. அப்படி இப்படி ஏதாது நடந்து பிடிச்சாங்களெண்டால் அவ்வளவுதான். இந்த ஒப்ராவும் இழுத்தடிக்கின்றது. வேற எங்கொயெண்டாலும் பாஞ்சிரலாமென்றால் ஏஜென்சிக்கு 'பிராங்'கில்[11] அழவேண்டும். அதைவிட இங்க சமாளிக்குறதுதான் வழி... 'செவ்'டா...'' என்றவன் ''கதவை தள்ளிற மாதிரி, நம்பரை அமத்துற மாதிரி நில்டா'' என கூறிவிட்டு தானும் அப்படி பாவனை செய்துகொண்டு நின்றான்.

'செவ்' சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்தான். ''என்ன நடக்குது''. செவ்வின் குரலில்அதிகாரம் தொனித்தது. ''செவ் கதவு பூட்டியிருக்கு'' என்றான் பவ்வியத்துடன் இரண்டாம் நம்பர். ''பரவாயில்லை பன்னிரண்டுக்கு இன்னும்பதினைந்து நிமிடங்கள் தான் இருக்கு, பக்கத்து பாத்துமாவில் வேலை செய்யும் மற்றும் இருவரையும் கூட்டிக்கொண்டு மெத்ரோவுக்குள் இருந்து சாப்பிடுங்கள். வெளியே குளிராக இருக்கின்றது''. செவ்வின் குரல் தணிந்திருந்தது. வேலையில் இடைவேளை கிடைத்து



படிப்பகம்

www.padippakam.com

அவனுக்கு ஆறுதலாக இருந்தது. காலைச் சம்பவத்தில் காயப்பட்டு சோர்ந்த மனம் உற்சாகம் கொள்ளத் தொடங்கியது. அம்மா மனுஷியின் கடிதம் இப்போது படிக்கலாம் என்பதும் அவனுக்கு உற்சாகத்தை தந்தது. பாரிஸ் நகரம் விறைத்திருப்பது போல் பட்டது. ஐஸ் கியூப்புகள் போல் கட்டிடங்கள். ஒரே வகையான மரங்கள். ஒரே மாதிரி வளர்க்கப் பட்டிருந்தன. சலிப்புதருகின்றது. ஆனால் மனிதர்கள்தான் தினம் தினம் ஆச்சரியம் தரும் பொருள் அவனுக்கு, பல நிறங்கள், பல்வேறு முகவடிவுகள். இவர்கள் எந்த நாடு— அது எங்குண்டு என யோசிப்பதில் அலாதி இன்பம் அவனுக்கு. எப்படிச் சாப்பிடுவார்கள், எப்படிப்படுப்பார்கள் என்றெல்லாம் யோசனை ஓடும். எல்லாம் இப்படி வேலைக்கு வந்து சுற்றும் நேரத்தில்தான் வேறு யோசனைகள் தொற்றிக் கொள்ளும். பேப்பர் வேலை செய்வதால் ஒரு நாளைக்கு ஒருபகுதியென பாரிஸ் நகரத்தையும் சுற்றுப்புறத்தையும் பார்க்க அவனுக்கு வசதியாயிற்று. கொழும்பையும் மதுரையையும் மட்டுமே பார்த்திருந்த அவனுக்கு பாரிஸ் பிரமிப்புதான். செல்வச்செழிப்பும், மிதப்பும் அச்சம் தரும் அவனுக்கு. ''மச்சான்'சமர்' இன்னும் முடியவில்லை இப்படிக் குளிருது''என்றபடி மற்றப் பாத்துமாவில் உள்ள மற்ற இருவரையும் தேடி நடந்து சென்றனர்.

மெத்ரோவுக்குள் படிகளில்இறங்கும் போதே அம்மா மனுஷியின் கடிதத்தை கையில் எடுத்து விட்டான். இனி எழுத்தை கூட்டி வாசித்து முடிக்க வேண்டும். பாரிசுக்கு கடிதம் வந்து மூன்றுநாள். நேற்றுதான் கையில் கிடைத்தது. இவனது விசா பதிந்த முகவரிக்குத்தான் கடிதம் வரும். தங்கி இருக்கும் இடம் வசதிகளுக்கேற்ப இடம் மாறும். விசாபதிந்து முகவரி எடுப்பதென்பது மிகுந்த சிரமத்திற்குரியது. எல்லாரும் முகவரி தர மாட்டார்கள். அதில்சிக்கல்களும் உண்டு. அவனது ஊர்க்காரர் ஒருவரின் முகவரியில் தான் இவனது பதிவு உள்ளது. அந்த முகவரியைத்தான் தனது சகல தொடர்புகளுக்கும் பயன்படுத்துகிறான். அம்மாவின் கடிதம் அங்கு வந்திருந்தும் போய் எடுக்க நேரம் ஒத்துவரவில்லை. இவனுக்கு நேரம் கிடைத்தபோது முகவரிச் சொந்தக்காரன் வீட்டில்இல்லாமல்இருந்தான். வீட்டுக்காரன் வீட்டில் இருந்த நேரம் இவன் வேலையில் இருந்தான். ஒரு மாதிரி நேரத்தை இருவருக்கும் ஏற்றமாதிரி ஒழுங்குபண்ணி நேற்றிரவு பத்துமணிக்கு கடிதத்தை கையில் எடுத்த போது மூன்று நாட்கள் கடந்து விட்டிருந்தது. கையில் எடுத்ததும் வழியில் ஓடும் மெத்ரோவில் வாசிக்க முடியவில்லை. அறையில் வாசிக்கலாமென வந்தபோது அறையில் பார்ட்டி நடந்து கொண்டிருந்தது. பதினைந்துக்கு பத்து என்ற அளவு அறையில் வேறு இருவருடன் இவன் தங்கி இருந்தான். வந்து நான்கு மாதங்களுள் இது மூன்றாவது தங்குமிடம். இவன் அறைக்கு வந்த போது மேலும் இருவர் கூடி இருந்தனர். வந்தவர்களும் இவனுடைய அறை நண்பர்களும் குடித்து முடிய பன்னிரண்டாகி கடைசி மெத்ரோவுக்கு வந்தவர்கள் போக, அடுக்கு பண்ணி படுக்க ஒரு மணியாகி விட்டது. அது சமைக்கும் போது சமையலறை, படுக்கும் போது படுக்கை அறை, போத்தல் உடைபடும்போது வரவேற்பறை அது மாறி மாறி அவதாரம் எடுக்கும். படிப்பறையாக அது மாறியது கிடையாது. காலையில் எழுந்து ஓடிவந்து வேலையில் கிடைக்கும் நேரத்தில் படிக்கலாமென்றால், நாய் சலைத்து நெஞ்சில் காயத்துடன் முடிந்து போனது. இது நல்ல நேரம். சாப்பிட்டபடியே கடிதத்தை படிக்கலாம். ஒருகையில் பாணைப் பிடித்து கடித்தபடி மறுகையில் கடிதத்தை விரித்தான். ''இனியும் என்னால் தாக்காட்ட ஏலாது. கொஞ்சமென்றாலும் அனுப்பி வை'' பக்கத்தில்இருந்தவன் சாப்பிட்டுவிட்டு வீரகேசரியை புரட்டிக் கொண்டிருந்தான். மற்றவன் இடைக்கிடை அரைக்கண்ணால் முழித்து தூங்கி விழுந்தான். இவனுக்கு பாண் இறங்கமறுத்தது. கடிதம் நெஞ்சுக்குள் அடைத்து நின்றது. அம்மாவின் எழுத்துகள் செரிக்க மறுத்தன. கடிதத்தில் மேலும் பல வெடிகுண்டுகளை அம்மா பொருத்தியிருந்தாள். கொழும்பு வரப் போவதாயும், வந்து தொலைபேசி எடுப்பதாயும் அப்போது விவரமாய் கதைப்பதாயும் குரலை கேட்க ஆசையாக இருப்பதாயும் குறிப்பிட்டிருந்தாள். கொழும்பு வந்தால் அம்மாவைஎப்படி வெறுங்கையுடன் ஊருக்கு திருப்பி அனுப்ப முடியும். இதுதான் மிகப் பெரிய அச்சத்தை அவனுக்கு உண்டு பண்ணியது. இப்பொழுதே கையில் காசு இருக்க வேண்டிய கட்டாயத்திற்கான முன்னறிவித்தல் இது அவன் பணம் அனுப்பியாகத்தான் வேண்டும். இவனை அனுப்ப அம்மா பட்ட பாடு அவனுக்கு தெரியும். அறாவட்டிக்கெல்லாம் அம்மா கடன் வாங்கி இருந்தாள். உழைச்சுக் கட்டியிரலாம் என்றுதான் அவனும் நம்பி இருந்தான். பாரிஸ் வந்திறங்கிய பிறகுதான் தெரிகின்றது உழைப்பின் அருமை. ஒவ்வொருவர் படும்பாடு. ''கடிதம் என்ன சொல்லுது'' —இரண்டாம் நம்பர்



படிப்பகம்

www.padippakam.com

கேட்டான். இவன் பேயறைந்தவன் போல் அவன் முகத்தை பார்த்தான். ''ஏன் இப்படி இடிஞ்சு போறாய். அம்மாள் இப்படித்தான் கடிதம் எழுதுகினம். எங்கள் நிலைமை அவைக்கு தெரியுமே. கடிதத்தை மடிச்சு டேசாமல்லை.''

அவனால் ஆற்றுப்பட முடியவில்லை. கண்ணீரென கண்களில் திரண்டாள் அம்மா. தலையைக் கவிழ்த்தபடி மேலும் கடிதத்தை படிக்க முயற்சித்தான். எழுத்துகள் கலங்கின. படிக்க முடியவில்லை. கடிதத்தை மடித்து ஜாக்கெற்றுக்குள் வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தான் வேலை தொடங்க இன்னும் அரைமணி நேரத்திற்கும் மேல் இருந்தது. 'செவ்' இன்னும் சாப்பிட்டுவிட்டு வரவில்லை. வேலையாட்களுடன் சேர்ந்து செவ் சாப்பிடுவதில்லை. மரியாதை இல்லை. தூங்கி வழிந்தவன் சட்டென முழித்து ''தம்பி காலையில் யாரோ அடித்தார்களாம்'' என சுரத்தின்றி கடமைக்கு கேட்டான். ஏன் கேட்டான் என அவனுக்கு புரியவில்லை. எரிச்சல் வந்தது. ''செவ் சொல்லலையா அண்ண'' என்றான். ''சொன்னவர்தான் தம்பி. விளப்பமாய்சொல்லவில்லை அதுதான் கேட்டேன்'' என்றபடி கண்ணை மூடிக் கொண்டான். தூங்குபவனுக்கு ஏன் க்கை சொல்லவேண்டுமென்று மெத்ரோலின் எதிர்ப்பக்கத்தைப் பார்த்தான்.

1½ நிமிடக்கிற்கொரு முறை மெத்ரோக்கள் வருவதும் போவதுமாய் இருந்தன. சனம் பிதுங்கினர் எல்லோரும் அவசரம். இயந்திரம் தோற்றுப் போகின்றது அவர்களிடம். மெத்ரோவில் பயணிக்கும் தமிழ்சனம் தலையை நிமிர்க்கி காடி ஓணான் போல் அலைவுடன் பார்க்கின்றனர் அறிந்த முகங்களை தேடி இவனும் அவர்கள் அறிந்தவர்களா என பார்த்தான். இத்தனை காட்சிகளை புலன்கள் உள்வாங்கியபோதும் வேகமாய் ஓடும் ரயிலில் உள்ளவனின் பார்வையில் அருகே உள்ள காட்சிகள் வேகத்தில் மறைய, தூரத்தில் உள்ளவையே தெளிவாக தெரிவது போல் அவன் மனதில் ஊரும் அம்மாவும், அம்மாவின் கடிதமும், வீட்டுக்கு அனுப்ப எப்படி பணம் புரட்டுவதென்பதும் ஓடிக் கொண்டிருந்தது யாரிடம் கடன் கேட்பது. கணக்குகள் மனதில் ஓடிய வண்ணம் இருந்தன.

'செவ்' வந்தான். நால்வரும் எழுந்து அவனுக்கு கைலாகு கொடுத்தனர். அவனும் ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டான். ''என்ன தம்பி பேயறைந்தவன் போல் இருக்கிறாய். என்ன யோசனை. காலைச்சம்பவத்தை பற்றி இன்னும் யோசிக்கிறியே. இப்படித்தான் பிரச்சனை வரும் போகும். வெளிநாட்டிற்கு வந்திட்டம். சமாளிக்கத்தான் வேணும் என்ன?'' செவ் அவனுக்கு தெம்பூட்ட முயற்சித்தான். ''ஓம் அண்ண அதுவும்தான். அம்மாகிட்ட இருந்து கடிதம் வந்தது. அதை வாசிச்சனான் அதுதா...'' என்றான் இவன். கதையைமாற்றவோ என்னவோ திடீரென இரண்டாம் நம்பர்காரன் ''அண்ண, போன கிழமையும் சம்பளம் தரவில்லை இந்த கிழமை இரண்டையும் சேர்த்து பத்ரோன் தருவானோ'' என்றான். தூங்கி வழிந்தவனும் உஷாரானான். நால்வரும் 'செவ்'வை ஆவலுடன் பார்த்தனர். ''அதுதான் எனக்கும் தெரியவில்லை. உங்களை மாதிரித்தான் எனக்கும் போன வாரச்சம்பளம் தரவில்லை. இந்த பத்ரோன் இப்படித்தான் இழுத்தடிச்சுத் தாறவன். தருவானென்டு நினைக்கிறேன்...'' என தொனியை இழுத்து நிறுத்தினான் செவ். இன்னும் ஏதோ சொல்ல வருவதுபோல் இருந்தது செவ் கதைத்தது. 'என்ன அண்ண விழுங்குறீங்க...' இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான் தூங்கி வழிந்தவன்.

''பத்ரோன் ஆட்களை நிற்பாட்ட போறான் போல இருக்கு. என்னைப் போல இன்னும் இரண்டு 'செவ்'மாரை நிற்பாட்டி 'சோமாவு' எழுதித் தரப் போறானாம். நேற்று 'கொன்ரோல்' தான் கதை யோட கதையா சொன்னவன். ஆனா நிச்சயமில்லை ...பார்க்கலாம்...'' மேலும் இழுத்து நிறுத்தினான்

நால்வர் மத்தியிலும் இறுக்கம் குடி கொண்டது.

இவன் தேம்பி அழத் தொடங்கினான்.

**குறிப்புகள் :**

1. செவ்—Chef (Chief) ;
2. அவிசு —avis (~~office~~); notice
3. எஸ்கலியர்—escalier (escalator);
4. கார்டு—carte (card);
5. போன்சூ—bonjour (good day);
6. பாத்துமா—apartment;
7. மெத்ரோ—Metro (underground railway);
8. பீரோ—bureau (office);
9. பத்ரோன்—patron;
10. பேசீற்-pay sheet ; 10. பிராங்—franc (French currency.)



படிப்பகம்

www.padippakam.com

# தெரிய வராதது

—பார்த்திபன்—

(ஜேர்மனி)

ஆரம்பிக்கும் போதிலிருந்த மனநிலை இப்போதில்லை. அதுபாட்டுக்குப் புல்லாகிப், பூடாய், புழுவாகிப் பாணியில் எரிச்சலாகி சலிப்பாய், விரக்தியாய் முடிந்தது.

இது வழமைதான். வராவிட்டால் எங்கே என்று ஏங்கும். வந்தாலோ பழைய கதை தான்.

'பாவம் அதுகள். நான் உதவாம ஆர் உதவுறது? என்னை விட்டிட்டு அதுகளும் ஆரிட்டப் போறது' என்று கவலைப்படும் அவனுக்குப் பெயர் பாலகிருஷ்ணன். பாலு என்று வீட்டிலும், இங்கேயும் வசதிக்குச் சுருக்கிக் கூப்பிட்டார்கள்.

அடுத்த விசாப் புதுப்பித்தலுடன் வயது இருபத்தைந்து முடிந்துவிடும். தலைமுடி இதற்கும் பொயச்சாட்சி சொன்னது. உடம்பு றெசிலிங் பார்க்கக் கூடப் பொருத்த மற்றிருந்தது. தொட்டு நெற்றியில் வட்டமாக வைத்துக் கொள்ளக் கூடியளவிற்கு கறுப்பு.

''இண்டைக்கெல்லே வரச் சொன்னவங்கள், நேரத்தோடு போனவன். முதல் நாளே சுணங்கிப் போனியெண்டா கிழிச்ச மாதிரி தான்''

அறை நண்பன் சிவக்குமார் கோப்பியை உறிஞ்சிக்கொண்டு அறிவுறுத்தினான். ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக மேல், கீழ் கட்டில்களில் படுத்துறங்கும் சிநேகிதர்கள். இன்று சிவகுமாருக்கு விடுமுறை!

''வாறன் போட்டு''. படித்து முடித்த ஏரோகிறாமை எட்டாக மடித்து டெனிம் பின் பொக்கற்றில் வைத்துக்கொண்டு பாலு புறப்பட்டான்.

கதவுவரை போனவன் திரும்பி வந்து ''கோப்பி குடிச்சு முடிஞ்சு புத்தகங்களைத் தூக்கிப் போடாதை. ஒரு நாள் நிக்கிறனி. வடிவாய் சமைச்சு வை. பிறகு புத்தகங்களைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு படு'' என்று சிவகுமாருக்குச் சொல்லிவிட்டுப் போனான்.

சமூக உதவி அலுவலகம் தந்திருந்த தகர அலுமாரியில் பாதிக்கு மேல் புத்தகங்களால் நிரப்பி வைத்திருந்தான் சிவகுமார். எல்லாமே மொஸ்கோ முன்னேற்றப் பதிப்பகமும், நியூசெஞ்சுரியுந்தான்.

ஒருநாள் தப்பித்தவறி ஒன்றைத் தூக்கிப் பார்த்த பாலு இயக்கவியல், வரலாற்றுப் பொருள், கருத்து முதல் வாதங்கள் என்று போவதைப் பார்த்து தலையைப் பிய்த்து விட்டான். சிவகுமார் வெகு சாவகாசமாக அந்தப் புத்தகங்களுக்குள் இறங்கிப் போவதைப் பார்க்க அவனுக்கு ஆச்சரியமாய்இருக்கும்.

''சொல்லிப்போட்டன். கெதியில மொட்டையாய் நிக்கப் போறாய். பிறகு இப்ப இருக்கிற மாதிரி பிரமச்சாரியாய் இருககப் போறாய்''

இப்போது பஸ்ஸில் போகும்போது அவையும் ஞாபகத்துக்கு வந்தன. கூடவே இன்று போகும் காரியமாவது சரிவர வேண்டும் என்ற கவலையும் பிறந்தது. வீட்டிலிருநது வரும் கடிதங்களை எததனை நாட்களுககுத் தான் எட்டாக மடிதது வைதது கொணடிருப்பது. அவர்கள் பாவம். அவர்களுக்கு வேறு யார் இருக்கிறார்.

பள்ளிக்கூடங்களில் உயரத்தின்படி நிற்க வைப்பது போல் வீட்டிலிருப்பவர்கள் வரிசைக் கிரமமாக வந்து போனார்கள்.

அப்பா அஸ்பெஸ்ரஸ் கொம்பனி ஒன்றின் கேற்றில் அமைக்கப்பட்டிருந்த கூண்டுக்குள் மண்ணிறக் காற்சட்டை, சேட் போட்டு வேலை பார்த்தார். இப்படியான தொழில் காரர்களைப் போல் சம்பளத்துடன் கூடலும்



படிப்பகம்

www.padippakam.com

பாலு பதில் சொல்லவில்லை.

"மற்றப் பகுதியளிலயும் சனம் சீவிக்குதான? ஆக நீ இதுகள் ஒண்டையும் கணக்கில எடுக்காம நீ, உன்ரை குடும்பம் எண்டுதான் பாக்கிறாய்''

''நான் என்ன வானத்தில இருந்து குதிச்சு மண்ணைத் தட்டிப்போட்டு வந்தனானே. நானும் மற்றவையைப் போல சாதாரணமான ஆள்தான்''

''அப்பிடி இவ்வளவு நாளும் நாங்கள் நினைச்சது காணும். இனியெண்டாலும் மற்றச் சனங்களைப் பற்றியும் யோசிப்பம். அதுதான் உண்மையான வாழ்க்கையாயிருக்கும்''

''நான் போறன். தொடர்ந்து கதைச்சால் இப்பவே போராட போட்டுவா எண்டு பிளைற் ஏத்தி அனுப்பிப்போட்டுத்தான் நீ மற்ற வேலை பாப்பாய் போல இருக்கு''

அப்போது அப்படிப் பதில் சொன்னாலும் இப்போது நினைத்துப் பார்க்கையில் சிவகுமார் சொன்னதிலிருந்த உண்மை உறைத்தது.

'எங்க பாத்தாலும் யாழ்ப்பாணந்தான். மற்ற இடங்களில இருக்கிறது சனங்களில்லையோ? அதுகளை ஆர் கவனிக்கிறது?' என்று யோசிக்க ஆரம்பித்தாலும் வீட்டுக் கடிதங்கள் ஞாபகத்துக்கு வர எல்லாம் கரைந்து போயின.

அண்ணாவுக்கு உயிராபத்து காப்பாத்து, அக்காவுக்கு வயசு கூடக் கூட தொகையும் கூடுது என்ற அப்பாவின் கடிதங்கள் வேறு யோசனைகளை விரட்டி அந்த இடத்தில் மறுபடி கனடாவுக்கு களம் அமைத்தன.

பாலு இரண்டாம் முறை முயற்சித்தபோது வேறுநாட்டுப் புத்தகத்தைத் திருப்பித் தேடவில்லை. கனடாவில் பாஸ்போட் கிடைத்த ஒருவனே வந்து கூட்டிச் செல்வதாக ஏற்பாடு.

வந்தவனுக்கு ஜேமன் சாமான்களை அன்பளித்து, போத்தில் பருக்கி, பிற்சா போட்டு உழைத்த காசுடன் கொஞ்ச கடனும் வாங்கிக்கொண்டு புறப்பட்டான்.

இம்முறை ஜேர்மெனி எப்போட்டுக்குள்ளால் தப்பியாயிற்று. ஆனாலும் ரான்சிஸ்ற் இடமான சோமாலியாவில் மோப்பம் பார்த்து பிடித்து அவனைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைத்தார்கள்.

குற்றக்கட்டணம் இரட்டிப்பாகியது. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரும் ''உனக்கேன் சரிவராத வேலை'' என்று நக்கலடித்தார்கள். சிவகுமார் ஏதோ புத்தகத்திலிருந்து ஏதோ வரிகளை வாசித்துக் காட்டிப் புத்திமதி சொன்னான்.

மறுபடியும் மனம் நொந்து விரக்தியடைந்து பியர் குடிக்கப் பழகினான். அப்பாவின் கடிதங்கள் வந்தபோது அவருக்கு இதே பிறாண்ட் பியரை வாங்கி அனுப்பலாமா என்று யோசித்தான்.

கனடா முயற்சியினால் பிற்சா வேலையும் போய்விட்டது. அன்றிலிருந்து இன்றுவரை எந்த வேலையும் இல்லை. அவனும் முயற்சிக்காமலில்லை.

நேற்று தற்செயலாக ஒரு றெஸ்ரோறண்டில் வேலை இருப்பதாகவும், முதலாளி இல்லாததால் இன்று மறுபடியும் வரும்படியும் சொல்லியிருந்தார்கள்.

அங்குதான் பலத்த நம்பிக்கையோடு பாலு இப்போது போய்க் கொண்டிருந்தான். பஸ் ஏறுவதற்கு முன் வாசித்த அப்பாவின் கடிதம் மனதில் மறுமதிப்புச் செய்தது.

''......அக்காவுக்குச் சம்பந்தம் ஒன்று சரிவந்துள்ளது. பணம்தான் கூடக் கேட்கிறார்கள். இதையும் தவறவிட்டால் இனி நம்புவதற்கில்லை. மூன்று மாதம் காத்திருப்பதாகத் தவணை தந்திருக்கிறார்கள். அண்ணாவின் நிலைமை படுமோசம். அவன் இருந்த இயக்கம், அதற்கெதிரான இயக்கங்கள், அரசாங்கம் என்று எல்லோரும் அவனைக் கொல்லத் தேடுகிறார்கள். அவன் தங்கியிருக்கும் சிங்கள நண்பனின் வீடும் வெகுவிரைவில் பாதுகாப்பில்லாமல் போய்விடுமாம். அவனை எப்பிடியாவது நீதான் கூப்பிட்டு காப்பாற்ற...''

இந்தச் சம்பந்தமாவது அக்காவுக்குச் சரி வர காசனுப்பத்தான் வேணும். அண்ணையக் கூப்பிடவும் காசனுப்பத்தான் வேணும். இவ்வளவுக்கும் காசுக்கு நான் எங்க போறது? இந்த வேலையும் சரிவராட்டி...?

யோசனைகளுடன் பஸ்ஸை விட்டிறங்கி றெஸ்ரோறண்டுக்குப் போனான். இந்த நேரத்துக்கு அதிக கூட்டமில்லை.

முதலாளியைச் சந்தித்தபோது எதிர்பார்ப்பு சரிந்து கொட்டிண்டது. ஒரு மணித்தியாலத்திற்கு முதல்தானாம் யாரோ போலந்துக்காரன் வேலையில் சேர்ந்து கொண்டானாம். அவ்வளவுக்கு வேலைப் போட்டி, அகதி



படிப்பகம்

www.padippakam.com

களை கறுப்பிலேயே வைத்து உறிஞ்சி முதலாளிகள் வீங்கிக் கொண்டிருந்தார்கள். றெஸ்ரோறண்டை விட்டு வெளியே வந்ததும் இயலாமை, ஆத்திரம், துக்கம் எல்லாம் வெடித்து வந்தது. பெட்டிக் கடைக்குப் போய் பியர் வாங்கி விட்டுக் கொண்டான். எதுவும் தணிவதாய் இல்லை. 'இனிமேலக்கும் இஞ்சயிருக்கேலாது. ஜேமனி யில இனி எந்தச் சாத்தியத்துக்கும் இடமில்லை, இருந்தால் இப்பிடியே பியர் அடிச்சுக்கொண்டிருக்க வேண்டினதுதான் எல்லாத்தையும் மறந்து போட்டு. அதுகள் கஷ்டப்பட்டுக்கொண்டே கனவு காணுங் கள்.

என்ன செய்யலாம்...?

திருப்பியும் கனடாதான். இதுதான் கடைசி முயற்சி. சரிவரேலயோ பேசாம நாட்டுக்குப் போய் அதுகளோட இருந்து ஒண்டாய் கஷ்டப்படலாம்.

முடிவுக்கு வந்துவிட்டான். இம்முறை செய் யும் முயற்சியை ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாகவே வைத்துக் கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டான். 'தெரிஞ்சால் நக்கலயுடிக்குங்கள். ஏசுங்கள். பேசாம வெளிக்கிட்டு அங்க போய்ச் சேந்திட்ட மெண்டால் கடிதம்போட்டு அறிவிக்கலாம் மிகவும் இரகசியமாகவும், தீவிரமாகவும் முயற்சியில் இறங்கினான். இம்முறை மற்ற வர்களை நம்பாமல் தானே நேரடியாகத் தலையிட்டான்.

அமெரிக்காவில் சீவிக்கும் ஒரு கறுப்பனின் பாஸ்போட் எப்படியோ தனக்குரிய வழி களில் கிடைத்தது. முகம் சுமாராகப் பாலு வைப் போலவே. தலை மயிர்கூடச் சுருட்டத் தேவையில்லை. சென்ற முறையின் பாக்கி இருந்தது. மொத்தத்தில் மாறுவேடம் இல்லாமல் அப்படியே போக இயலக்கூடிய தாயிருந்தது.

பிரயாணத்திற்கான காசையும் தூர இருக் கும் உறவினரிடம் மாறினான். 'பயப்பிடத் தேவையில்லை. இந்த முறை எப்பிடியும் சரிவரும்'.

ரிக்கற் பதிவு செய்தாயிற்று. எல்லா அலு வல்களும் பார்த்து முடித்து வைத்தாயிற்று. ''தெரிஞ்ச பெடியனிட்ட வேற சிற்றிக்குப் போறன். சிலவேளை அங்கிருந்து சுவிசுக்குப் போனாலும் போவேன். போனா போன் பண்ணிறன்'' என்று சிவகுமாருக்கும் பொய் சொல்லி வைத்தான்.

''மத்தியதர வர்க்கம் இப்...'' என்று ஆரம் பித்த சிவகுமாரிடம் ''நீ வேலை செய்து கொண்டு எதுகும் கதைக்கலாம். என்ரை நிலைமையில இருந்தாத்தான் உனக்குப் புரியும். புத்தகங்களுக்கு அங்காலயும் உலகம் இருக்கு'' என்று எரிச்சலுடன் சொல்லி விட்டு, தூர இடத்திலிருக்கும் தன் நண்பனின் இடத்துக்கு வந்தான்.

அவனுக்கும் உண்மையைச் சொல்லாமல் சாமர்த்தியமாக மறைத்து, பறக்க வேண்டிய நாள் வர பிராங்பேட் எயாப்போட்டிற்கு வந்தான். தனக்கான பாஸ்போட்டுக்குரிய வரின் பெயரை கிறிஸ்டோபர் பீலிக்ஸ் என்று மனப்பாடம் செய்து கொண்டான்.

இரண்டு முறை அனுபவங்களினால் இப்போது வியர்க்க, படபடக்க, நடுங்க வில்லை. எல்லாம் கிளியர் ஆகி, விமானத் தின் இருக்கையில் அமர்ந்தபோது வாழ்க் கையில் முதற்தடவையாக தனது கறுப்பு நிறத்திற்காக அப்பா, அம்மாவுக்கு மனப்பூர் வமாக நன்றி தெரிவித்தான்.

விமானம் பறக்கையில் சிந்தனையும் விரிந் தது. திடீரென சிவகுமார் தோன்றினான்.

''நாங்கள் ஓடிக்கொண்டேயிருக்கலாம். அதுக்கு எல்லையேயில்லை. ஓடிக்கொண்டே யிருந்தா என்னத்தைச் செய்து முடிக்கிறது? நீ உன்ரை குடும்பத்தைக் கூப்பிட்டு அவை யின்ரை கஷ்டத்தைத் தீர்க்கலாம். ஆனா அதால நாட்டில இருக்கிற பிரச்சினை தீராது நாட்டில பிரச்சினை இருக்கிற வரைக்கும் உன்னைப்போல ஆயிரம், பத்தா யிரம் பேர் ஓடிக்கொண்டேயிருப்பினம். இந்த ஓட்டத்துக்கு ஏலாத சனங்கள் அவலப் பட்டும், செத்துக்கொண்டுமிருக்கும்.''

உண்மைதான். என்ற குடும்பத்துக்கு விடிவு வாறதால எல்லாக் குடும்பத்துக்கும் விடிவு வநதிடாது. ஆனா எல்லாச் சனங்களின்ரை கஷ்டத்துக்கும் பொதுவாய் கிடைக்கிற விடிவு, தீர்வெண்டா அதுக்க எங்கட குடும்ப மும் அடங்குதுதானே.

அப்ப என்னதான் செய்யிரது?

இஞ்சயிருந்து புத்தகங்களை வாசிச்சுக் கொண்டு அதில இருக்கிறதையெல்லாம் இப்பிடித்தான் செய்ய வேணும் எண்டு முரண்டு பிடிச்சு, மற்றவையோட அந்நியப் பட்டு கடைசியா புத்தகமும், வேலையுமாய் சிவகுமார் மாதிரி தனிய இருக்கிறதோ?

நாட்டுக்குத் திரும்பிப் போனாலும் தட்டுற பெருமை எங்களுக்குதான் வரவேணுமெண்டு எல்லாற்றை துவக்கும் அடிபடுகுது.

அப்ப என்ன செய்யலாம்?



படிப்பகம்

www.padippakam.com

மேற்கொண்டு யோசிக்க விடாமல் உழைத்துக், களைத்து தளர்ந்துபோன அப்பா, ஔவையாராகிக் கொண்டிருக்கும் அக்கா, துவக்குகளுக்குப் பயந்து கொண்டிருக்கும் அண்ணா, எதிர்காலக் கற்பனைகளின் ஆரம்பங்களுடன் தம்பியும், தங்கையும்...

முதல் யோசனைகள் கலைந்து போயின. கனடாவுக்குப் போய்சேர்ந்தபின்னான நடவடிக்கைகள் பற்றி எண்ணினான்.

விமானம் இலண்டன் விமான நிலயத்தில் தரித்து, சிறிகாக இளைப்பாறி, மீண்டும் பறந்த பல நிமிடங்களின் பின் வானத்தில் வெடித்துச் சிதறி சிதையல்கள் லொக்கபே என்ற இடத்தில் வீழ்ந்தன.

அனைத்து நாடுகளும் அவசரமாகச் செய்திகளை வெளியிட்டுக்கொண்டன. அமெரிக்க யுத்தக் கப்பல் ஈரானின் பயணிகள் விமானத்தைச்சுட்டு வீழ்த்தியபோது வெறும் செய்தி சொன்ன இங்காடுகள் இப்போது இது ஈரானின் சதியென்று ஊகத்தில் ஏகமாய் திட்டின.

விமானநிலையப் பொறுப்பாளர்கள், விமானப் பொறுப்பாளர்கள், அமெரிக்க 'பனம்' அதிகாரிகள் எல்லோரும் பிரயாணம் செய்தோரின் விபரங்களை கொம்பியூற்றர்களின் உதவியுடன் அக்கறையாகத் திரட்டி, உறவினர்களுக்கு மரணச் செய்திகளை அறிவித்தார்கள்.

இரவு முழுவதும், போதைவஸ்தும், கும்மாளமுமாய் இருந்துநேரம் கழித்து வந்து படுத்து, இன்னும் எழும்பாமல் இருக்கும் கிறிஸ்டோபர் பீலிக்சைத் திட்டியபடி வாசலுக்கு வந்தஅம்மா லொக்கபே விமானநிலையத்தில் கிறிஸ்டோபர் பீலிக்ஸ் இறந்துவிட்ட செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவிப்பதற்கு வந்த தந்தியை வாங்கி வைத்துக்கொண்டு ஒன்றும் புரியாமல் குழம்ப—

பாலகிருஷ்ணன் எங்கே என்ற உண்மை தெரியாமல் அவன் சுவிஸ் போய்விட்டதாக ஜேர்மெனியில் இருந்த நண்பர்கள் நினைத்துக்கொள்ள—

இலங்கையில், ஒரு மூலையில் உழைத்துக் களைத்துத், தளர்ந்துபோன அப்பாவும், ஔவையாராகிக்கொண்டிருக்கும் அக்காவும் துப்பாக்கிகளுக்குப் பயப்படும் அண்ணாவும், எதிர்காலக் கனவுகள் பற்றிய ஆரம்பங்களுடன் தம்பி தங்கையும் பாலுவின் கடிதம், பணத்திற்காகக் காத்திருந்தார்கள்.
காத்திருப்பார்கள்.

நன்றி: **அஆஇ**, ஒல்லாந்து (7-8/90)

---

# தமிழ் ரெகே

*—நல்லையா*

கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. பாரீஸில் தமிழ் கலாச்சார விற்பனை நிலையமொன்றில் ரெகே திசையில் தமிழ்ப் பாடல். கால்கள் அசைய மறுத்தன. செவிப்புலன் கூர்மையானது.

''ஐயோ... ஐயோ... ஐயோ ஐயோ...
இதுதானே லண்டன் 20 வருடமாச்சு இங்கென்ன கண்டன்...
''I am Tamil I can speak Tamil
I WONDER WHY SOMF DON'T SPEAK TAMIL
இப்ப வந்த தமிழரும் எங்க தமிழ் மறந்தார்
இந்த நாட்டு வாழ்க்கையில் எங்க நிலை மறந்தார்.
இங்கிலீசிம் பேசவேண்டும் ஒப்புக்கொண்ட உண்மை.
உள்ள தமிழை மறவென்று யாரு சொன்னது...
அப்பு. ஆச்சி ஆண்டி ஓடி வாருங்கோ. எனக்கொரு கல்யாணம் செய்து தாருங்கோ...
பொறு தம்பீ பொறுதம்பி இப்ப தானே முப்பத்தைஞ்சு''

பாடல்களில் உண்மை மனசு வெளிப்படுவது மனதை அலாதியாகக் கௌவிற்று. ஆம் புகலிடவாசிகளின் குரல் வெளிப்பட ஆரம்பித்து விட்டது. முன்னர் கபட கனவுலகமாக சிருஷ்டித்து காட்டிய லண்டன் டமில்ஸ்களின் போலிப் புனைவுகள் நொறுக்கப்பட்டு உண்மை மடை திறந்தவெள்ளமெனப் பாய்கிறது.

70 களில் நித்தி கனகரெத்தினம் போன்றோர் 'SKY LARK' இசைக்குழு மூலம் பொப்பிசையில் ஒரு சில விழிப்புணர்வுப் பாடல்களைக் கொண்டு வந்திருந்ததை இங்கே நினைவு கூரலாம்...

TAMIL REGGE PRODUCED BY : LEWISHAM POOPALAM'S ''ZAMMBA'' MUSIC GROUP
ஏக விநியோகஸ்தர்கள் : AJ வீடியோ & ஓடியோ LEWISHAM, LONDON SE 13 7 SW.



படிப்பகம்

www.padippakam.com

(Rosa Luxemberg Stra)

# 'றோஸா லஷ்சம்பேர்க் வீதி'

—ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(பிரித்தானியா)

குழந்தைக்கு நல்ல நித்திரை போலும். சரியாகப் பால் குடிக்காமல் தூங்கி விட்டாள். அவளை இன்னொரு தரம் எழுப்பிப் பால் கொடுக்கத் தொடங்கினால் வேலைக்குப் போக நேரமாகி விடும். வேலைக்குப் பிந்திப் போவதை ஜேர்மன் முதலாளி விரும்பமாட்டான்.

வேலையை விட்டால் குடும்பம் தாங்காது. சுமதி மெல்லமாகக் குழந்தையை அவள் முலையிலிருந்து விலக்கினாள். குழந்தை முலையைச் சப்புவதுபோல் சப்பிவிட்டு தூங்கிவிட்டாள்.

இனி இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்குக் குழந்தை எழும்பாமல் நித்திரை செய்வாள்.

மூன்றுமாதக் குழந்தை, உலகத்தில் எந்தத் துன்பத்தையுமறியாமல் எத்தனை நிம்மதியாகத் தூங்குகிறாள்?

நானும் இப்படி இருந்திருப்பேனா?

மூன்றும் பெண்குழந்தையாகப் பிறந்த போது தாய் இறக்கும் தறுவாயிலிருந்தாளாம். அந்தப் பழியை இவள் பாட்டியார் சுமதியின் மீது சுமத்திவிட்டாள்.

''பிறந்த நேரமே தாயை பிடுங்கவந்த சனியன்'' என்று பாட்டி இவளுக்குச் சொன்னதையுணராமல் இவளும் ஒரு காலத்தில் தாயின் முலையைச் சப்பிக்கொண்டிருந்திருக்கலாம்.

அடுத்த கட்டிலில் பெரியமகள் செல்வி நிம்மதியாகத் தூங்குகிறாள். பத்துவயதில் தான் எத்தனை பொறுப்புணர்ச்சி.

செல்விக்குப்பிறகு ஒரு குழந்தையும் வேண்டாமென்றுதான் சுமதி பிரார்த்தித்தாள். இப்போது இந்தக் குழந்தை பிறந்து விட்டது.

குழந்தை வயிற்றில் வந்ததும் இவள் மாமியார் இவளைப்பார்த்த விதம்?

''இன்னொரு பெட்டைக் குட்டியை போடப் போகிறாயா?''

ஈவிரக்கமின்றிக் கேட்டாள் மாமியார். சுமதி மறுமொழி சொல்லவில்லை. மாமியாரின் கேள்விகளுக்கெல்லாம் மறுமொழி சொல்ல இவள் முயன்றால் இவளுக்கு மூளை குழம்பிவிடும்.

அறையின் ஒரு மூலையில் ஒரு கட்டிலில் இவள் கணவனின் குறட்டையொலி சீராகக் கேட்கிறது

குறட்டைச் சத்தத்துடன் மதுபான நெடியும் மூக்கிலடிக்கிறது.

சுமதி பெருமூச்சு விட்டபடி எழுந்தாள்.

மெல்ல அடி எடுத்து வைத்துக் குளியலறைக்குப்போனாள். போகும்போது ஜன்னலில் வெளியே எட்டிப்பார்த்தாள்.

உலகம் மிக மிக அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் தெரியவில்லை. கருமுகில்கள் நிறைந்த வானம் எப்போதும் மழையைக் கொட்டலாம்.

தூரத்தில் கருமுகில்களுக்குக் கண்ணடித்துக்கொண்டு ஒரு விமானம் போய்க்கொண்டிருந்தது.

சுமதி ஜன்னல் திரையை மூடிவிட்டு ஒரு நிமிடம் சுவரில் சாய்ந்தாள் அதிகாலை ஒரு மணியாகிறது. இப்போதுதான் அவள் வேலைக்குப் போக வெளிக்கிடுகிறாள். ஊரிலென்றால் பயிர்களுக்குத் தண்ணீர்விட அதிகாலை ஐந்து மணிக்கு முன் யாரும் எழும்புவது அவளுக்குத் தெரியாது.



படிப்பகம்

www.padippakam.com

இது பேர்லின். மேற்கு பேர்லின். ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர் அகதிகளாக வந்த தேசம். இரவு பகல் என்று வேலை பார்க்காவிட்டால் குடும்பம் நன்றாக நடக்காது! கௌரவத்தைப் பார்த்தால் வாயும் வயிறு மென்ன செய்யும்?

வெளிநாடு வந்த தமிழர்களில் படித்த பட்டதாரிகள் சிந்தனையாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் என்று எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் படிப்புக்கும் திறமைக்கும் ஏற்ப வேலை கிடைப்பதென்பது கனவில் நடக்கும் காரியமே.

மேற்கு நாட்டாரின் ஆழ்ந்த இனவாதக் கொள்கைகளுக்கு முன்னால் மூன்றாம் உலக மக்களின் எந்தவிதமான திறமையும் அதிகமாக எடுபடாது. அவர்களின் பார்வையில் அயல் நாட்டார் என்பவர்கள் கூலிவேலை செய்து பிழைக்கவந்த மூளையற்ற மனிதர்கள். ஏதோ ஒரு தொழிலைச் செய்து பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தம். சுமதி இலங்கையில் A level-க்கு மேல் ஒன்றும் படிக்கவில்லைதான்; ஆனால் படித்துப் பட்டம் பெற்ற அவனின் தமக்கைகளை விடப் பகுத்தறிவாளி. வாழ்க்கையின் தேவைகளை யுணர்ந்தவள். உழைக்கத் தயங்காதவள். இப்படி நினைக்கும் போது சுமதிக்குத் தன்னிலேயே ஒரு பரிகாசம் வரும். மின்னல்கள் பதிந்த பார்வை உலகத்து இருளைக் தாண்டிக்கொண்டு இலங்கையின் ஒரு ஊருக்கு நினைவையும் இழுத்துக் கொண்டு போகிறது. நீலவானமும் பசும் புற்களையும். இளம் காற்றும் கோயில் மணியோசையும் நினைவில் வருகின்றன.

பன்னிரெண்டு வருடங்கட்கு முன்னால் தான் பேர்லின் நகரில் இரவில் ஒரு மணிக்கு எழும்பிப் போய் ஒவ்வொரு வீட்டுக்கும் பேப்பர் போடும் வேலையைச் செய்வேன் என்று நினைத்திருப்பாளா? பேர்லினில் கிடைக்கும் வேலைகள் ரெஸ்ரோரண்டில் வேலை செய்வது கிளீன் பண்ணுவது, அல்லது பெரிய கொம்பனிகளின் விளம்பரங்கள், அல்லது பத்திரிகைக் கொம்பனிகளின் பத்திரிகைகளை வீடுகளுக்குக் கொண்டு போய்ப்போடும் வேலைதான் கிடைக்கும். பேர்லினிலிருந்து தமிழர்கள் தூக்கப்பட்டால் பேர்லின் நகரம் ஸ்தம்பிக்கும், நாற்றமெடுக்கும். அவள் பெருமூச்சு விட்டாள் முகம் கழுவத் தலையிழுத்தபோது வேதனைச் சிரிப்பு முகத்தில் நெளிந்து மறைந்தது. யார் பார்க்கப் போகிறார்கள் என்று தலை சீவுகிறாள்? இந்த இரவில் தெருவில் ஒன்றிரண்டு மனிதர்களையே காண்பது அபூர்வம். ஆனாலும் சுமதி தன் தலையை சீவிக்கொண்டாள். வெளியே சரியான குளிர். அதற்கேற்ப உடுத்திக்கொண்டாள். ஊரில் மார்கழி மாதம் திருவெம்பாவைப் பாடல்கள் அதிகாலை மௌனத்தைப் பிளந்து கொண்டு வந்து காதில் விழுமே.

குழந்தைகளை இன்னொருதரம் திரும்பிப் பார்த்துவிட்டுக் கதவைப் பூட்ட வெளிக்கிட்டவளின் பார்வை அவள் கணவனில் படிகிறது. உடுத்திருந்த சாரம் சோர்ந்ததும் தெரியாத மது வெறியில் படுத்திருக்கிறான் சண்முகநாதன். உலகத்தைப் பற்றிய அக்கறையற்றுப் படுத்திருக்கிறான். வாயில் எச்சில் படித்து தலையணையில் படிந்திருக்கிறது. அவனின் குறட்டை எரிச்சலை யுண்டாக்கியது.

மதுவெடி அறையை நிறைத்திருக்கிறது.

அவளுக்குத் தன் முகத்தைப் பொத்திக் கொண்டு அழவேண்டும் போலிருக்கிறது.

இவனை நம்பித்தானே தனக்கு முன்னால் இரண்டு அக்காக்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் இந்த ஊருக்கு ஓடி வந்தாள்?

இவனை இப்படியாக்கியது யார்? அவனுக்கும் அவளுக்கும் பன்னிரண்டு வயது வித்தியாசம்.

அவளின் மூத்த அக்காளின் கிளாஸ்மேட் அவன். சுமதிக்கு நினைவு தெரிந்த நாள் முதலே அவனைத் தெரியும். இவனுடன் ஓடி வந்து என்ன சுகம் கண்டாள் சுமதி? மெல்லமாகக் கதவைச் சாத்தினாள்.

முன்னறையில் மாமியார் படுத்திருக்கிறாள். தற்செயலாக எழும்பி இவளின் கண்ணீரைக் கண்டால் திட்டுவாள். ''மூதேவி, விடிய முதலே முனகத் தொடங்கிட்டியா'' என்று மாமியார் முழங்கத் தொடங்குவாள். சுமதி தன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டாள். மிகவும் அவசரமாகப் படிகளில் இறங்கினாள். மூன்றாவது மாடியில் உள்ள வீட்டில் சுமதி குடும்பம் இருக்கிறது. மாடிப்படிகளில் அவள் காலடிகள் அவசரமாகத் தொனிக்கிறது. மாமியாருக்கு இவளைப் பிடிக்காது. பெண் இன்னொரு பெண்ணை இப்படி வெறுக்கும் உலகில் தர்மம் நிலைக்குமா? சுமதி நடந்தபடி யோசிக்கிறாள்.

பேப்பர்போட இப்படி எத்தனையோ மாடிப்படிகளில் ஏறி இறங்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

முதலில் போய் ஒரு பெரிய கனமான பேப்பர்க் குவியலை எடுக்க வேண்டும். பின்னர் எல்லாவற்றையும் ஒவ்வொரு வீட்டுக்கும் போட்டு முடிய அதிகாலை நாலு மணிக்கு மேலாகிவிடும்.

பெரும்பாலான ஜேர்மன்காரர் தூங்கிக் கொண்டிருப்பார்கள். 89-ம் ஆண்டுகளுக்கு முன் தற்செயலாக யாரும் ஜேர்மன் தெருவில் கண்டால் காலை வணக்கம் சொல்லி விட்டுப் போவான். இப்போதெல்லாம் வெளிநாட்டாரைக் கேவலமாகப் பார்க்கிறார்கள். தங்கள் நாட்டுக்கு இந்த அகதிகள் தொற்று நோய்களையும், களவு கொலைகளையும் பரப்ப வந்திருக்கிறார்களாம் என்று துர்பிரசாரம் செய்கிறார்கள். வெளிநாட்டாரைக் கண்டால் துப்புவார்கள், தூஷணத்தில் பேசுவார்கள்.

சுமதி தெருவில் இறங்கினாள். இந்தத் தெருவில் எத்தனை யூதர்களை இந்த ஜேர்மன்காரர் கொலை செய்திருப்பார்கள் இந்தத் தெருவின் பெயர் றோஸா லஷ்ஸம் பேர்க் வீதி. இந்தத்தெருவிலுள்ள ஒரு பெரிய கட்டிடத்தில்தான் அவள் குடும்பம் இருக்கிறது.

மேற்கு பேர்லினையும் கிழக்கு பேர்லினையும் பிரிக்கும் பிரண்டன்பேர்க் வாசலின் ஒரு சில மைல்களுக்கப்பால் இந்த இடம்.

அவள் சைக்கிளில் ஏறிக்கொண்டாள். யாரோ தூரத்தில் வெறியில் தள்ளாடிக் கொண்டு ஆபாசமாகப் பேசிக் கொண்டு போறான்.

மேற்கு ஜெர்மனும், கிழக்கு ஜேர்மனும் ஒன்றாகச் சேர முதல் பேர்லின் தெருக்களில் இப்படி ஆபாசங்களைக் கேட்பது அபூர்வம். இப்போது காலம் காலமாக கம்யூனிச வாழ்க்கையை அனுபவித்த கிழக்கு ஜேர்மனியர் மேற்கு ஜேர்மனியுடன் இணைந்துவிட்டால் செல்வம் கொழிக்கும் என நம்பியவர்கள் ஏழைகளாக மேற்கு ஜேர்மன் தெருக்களில் திரிகிறார்கள். வீடுவாசல் வைத்திருக்கும் வெளிநாட்டாரில் அவர்களுக்குப் பொறாமை, ஆத்திரம். இவையெல்லாம் இப்போது கொலைகளிலும் முடிவடைந்திருக்கிறது.

கிழக்கு ஜேர்மன்காரரின் கொதிப்பை ஜேர்மன் இனவாதிகள் பயன்படுத்திக் கொண்டு அயல் நாட்டாரை இனப்படுகொலை செய்கிறார்கள். நான்கு துருக்கியப் பெண்களைப் பூட்டிய அறையில் வைத்துத் துடிக்கத்துடிக்க கொழுத்திக் கொலை செய்தார்கள். கோடிக்கணக்கான யூதர்களைக் கொலைசெய்த பரம்பரை இன்றும் ஜேர்மனியில் இல்லாமலில்லையே.

இலங்கையில் அவள் கணவனை 83-ம் ஆண்டில் சிங்களக் காடையர் பெறறோல் ஊற்றி நடுத்தெருவில் கொலை செய்ய முயன்றபோது ஓடித்தப்பியவன். அங்கு தப்பி ஓடி வந்து இந்த ஜேர்மனியில் எப்போதும் பயந்து வாழவேண்டிக் கிடக்கிறது. கணவனை நினைத்தால் கோபம் வந்தாலும் பெரும்பாலும் பரிதாபம்தான் வரும் அவளுக்கு. அக்காவுடன் இலஙகைப் பல்கலைகழகததில் படித்தவன். படிப்பை முடிததுக் கொணடு கொழும்பில் வேலை செயது கொண்டிருந்தவன். 80-ஆண்டு முறபகுதியில் தமிழாகளுக்கெதிராக இலஙகை எங்கும் பயஙகரங்களை இலங்கையரசாங்கம் கட்டவிழ்தது விட்டிருதத காலம. கொழுமபில் அதிகம பிரச்சனையிலலை. அவன் கொழும்பிலிருந்து அடிக்கடி விடுதலைக்கு ஊருககு வருவான். 83-ம் ஆண்டு 13 சிங்கள ராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொலை செய்து விட்டார்கள்.

அதன் எதிரொலியின் பயங்கரத்தைக் கண்டு உலகமே அதிர்ந்தது. சிறுபான்மையினருக்கு எதிராக இப்படி ஒரு பயங்கரமா? இப்படி ஒரு பயங்கர சூழ்நிலையை எதிர்பார்க்க சிறுபான்மைத் தமழர் பெருமபான்மை சிங்களவர்களுக்கு என்ன செயதார்கள்? நாகரீகமடைந்த மக்கள் இநத நரபலிகளால் நாணித்தலை குனிந்தார்கள.சிங்களப் பேரினவாதம சிறுபான்மையை வேட்டையாடியது. சண்முகநாதன் போன்றோர் இனி கொழும்புக்கு ஒரு நாளும் போவதிலலை எனறு சபதம் செய்துவிடடு வந்துவிட்டார்கள்...... சுமதி சிந்தனை தொடர இருட்டில் போகிறாள்.

சுமதியின் கண்கள் அந்த மூலையிலிருக்கும் கிழவியின் வீட்டை நோட்டம் விடுகின்றன. அந்த வீட்டிலிருக்கும் கிழவிக்கு இப்போது எழுபது வயதாகிறது. ஜேர்மனியினரால் யூதர்களை அழித்தொழிக்க அமைத்த ஆஷ்விஷ் என்ற சித்திரவதை முகாமில் தன் முழுக்குடும்பத்தையும் பறிகொடுத்தவள் இந்த யூதப் பெண்மணி இஸபெல் கோல்ட்பேர்கர்.

மிருகங்களுக்கு அடையாள நம்பர் போட்டது போல் இவள் கையில் ஜேர்மனியரால் போட்ட அடையாள நம்பர் எழுதப்பட்டி



படிப்பகம்

www.padippakam.com

# அன்னை பூமி

—வான் நிலா
(நோர்வே)

நிறுத்துவதாக இல்லை; யாரும்நிறுத்துவதாக இல்லை. நட்டுவாங்கம் தொடர்ந்து கொண்டிருந்தது. அவளும் ஆடிக்கொண்டே இருந்தாள். கண்கள் மெல்ல மெல்லச் சிவந்தன. கண்களில் கண்ணீரில்லை. அவளின் சுழற்சிகண்டு பஞ்சபூதங்கள் நிலைதடுமாறின. வருணன் மெல்ல மெல்ல தன்னை இழந்து அவளை அணைத்துக் கொண்டான். ஒட்டிய மேனியில் இயற்கையின் தாண்டவம்.

அற்புதம்! ஆ... அற்புதம்! எங்கிருந்தோவொரு குரல்: குரல் வந்த திசையை நோக்கினாள். ஆட்டம் நின்றது. மெல்ல மெல்ல அவனை நெருங்கினாள். அவனது கைகளை மெதுவாக பற்றினாள்.

''அம்மா... தண்ணீர்...''— சின்னவனின் அழுகையில் அவள் விழித்துக்கொண்டாள். கனவை மீண்டும், மீண்டும் நினைத்து பார்த்தாள். இப்படி எத்தனைக் கனவுகள்...

வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. ஜன்னலை இலேசாகத் திறந்து விட்டாள். மழையின் இசை இதமாக விருந்தது.

இன்னும் கொஞ்சத்தில் விடிந்து விடும். விடிந்தால் வேலை. மீரா லைட்டைப் போட்டாள். 'சித்தர் பாடல்கள்' சிரித்தது: ''பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்தது போல் உற்றுற்றுப் பார்த்தாலும் உன் மயக்கம் தீரவில்லை.''

பக்கங்களைப் புரட்டினாள். ''புல்லரிடத்திற் போய்ப் பொருள் தனக்குக் கையேந்திப். பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி.'' நெஞ்சைத் தொட்ட அழுகுணிச் சித்தர், நேற்றைய நினைவுகளில் அவளைத் தள்ளியும் விட்டார்.

''நான் கக்கா இருக்கேக்கை, அவன்கள் என்னைப் பார்த்தவன்கள்; இப்ப கலைச்சுக் கலைச்சு சிரிக்கிறான்கள்.''பாவலன் கலங்கிய கண்களோடு சொன்னான். அவனை மடியில் இருத்தியபடி சின்னவால்களில்சீறினாள்.

வெள்ளைக் குழந்தைகளுக்கு மத்தியில் பொட்டு வைத்தாற்போல் தனித்து நிற்கும் கறுப்புக் குழந்தைகள். இந்தச் சின்னஞ்சிறு குஞ்சுகள் எத்தனை வதையறியும்.

ஓய்வு எடுக்கும் நேரம் வர, மீரா பாவலனை ஊஞ்சலில் இருத்தினாள். அவள் அவனை இருத்திவிட்டு நகர்ந்ததுதான், சின்னவாலுகள் ஓடிவந்து அவனை இறக்கிவிட்டன. அவனும் மௌனமாக ஒதுங்கிப் போனான். ஒதுங்கிப் போன அவனுக்கு அந்நியப்பட்டது நிறமும் மொழியும் மட்டுமல்ல? அவனது ஆளுமையும்தான்.

ஓய்வெடுக்கும் அறையில் மீரா கோப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். சிகரெட்டைப் பற்றவைப்பதற்காக வந்த லைலா, மீராவுக்கு ஒரு சேதி என்றபடி அமர்ந்தாள்.

சாந்தியின் அம்மா தன் பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிக்கவேண்டாம் என்றதல்ல ஆச்சரியம்; சாந்தி கொஞ்சம் தமிழ் கதைப்பதால் அவளை வசந்தியுடன் விளையாட விட வேண்டாம், மற்றத் தமிழ்ப் பிள்ளைகளுடனும் சேரவிட வேண்டாமாமென்றாள்.

சகோதரங்களைக்கூட சேர்ந்து விளையாட விட வேண்டாமென லைலா சொன்ன சேதி எல்லோர் கவனத்தினையும் ஈர்த்தது. அமெரிக்காவில் செட்டில் பண்ணிவிட்ட தன் பேரன், பேத்தி தம் மொழியையும் கலாச்சாரத்தையும் பேணுவதைப் பெருமையுடன் சொல்லிக்கொண்டாள் லைலா. மீரா சொல்வதற்கு எதுவுமிருக்கவில்லை.

தமிழர்களும் போராட்டமும், தமிழ்ப் பெண்களும் கலாச்சாரமும் பற்றிக்கூட அவளுக்குச் சொல்லக்கூடிய வகையில் அவர்கள் அறிந்திருந்தனர்; வழக்கம்போலவே உண்மைக்குப் புறம்பான தரவுகளுடன்.

பர்தா போடும் பெண்ணை விட மேலாகவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பற்றி இந்த



படிப்பகம்

www.padippakam.com

வெள்ளைத் தோல்களுக்கு சொல்லிவைத்த சீரிய நங்காள் வாழ்கவென மீரா நொந்து கொண்டாள். அந்தப் பத்தினியின் பெண்ணுக்கு பால்ய விவாகம் செய்துவைத்து, மறக்காமல் அவளை உடன் கட்டை ஏற்றவும் திட்டம் போட்டபடி கற்பனையில் மீரா கோப்பியைக் குடித்து முடித்தாள்.

அவனைப் பொறுத்தவரையில் அவளும் அந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையக் குழந்தைகளும் மிருககாட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்ட குரங்குகள்தான்.

மீரா கடிகாரத்தினைப் பார்த்தாள். அவளின் சுழற்சிக்கு ஈடுகொடுப்பதற்காக வேகமாகச் சுழன்று நின்ற காலத்தை என்ன செய்வது?

அவள் போனை எடுத்து வேலைக்கு வரவில்லை என்பதை ஒப்புவித்தாள். வேகமாக வந்து சின்னவனை இறுக அணைத்தபடி கண்களை மூட முயன்றாள்; முடியவில்லை.

... ... ...

''அம்மா, இங்கை பாருங்கோ; நான் Boat தள்ளுறன். எல்லாம் நனைஞ்சு போச்சு.'' சின்னவனின் உற்சாகத்தைக் கண்ட படகோட்டி ''தம்பி உன்னைப் போல ஆக்கள் தான்டா எங்களுக்கு வேணும்'' எனக் குட்டியுரை ஒன்று நிகழ்த்தினார்.

''பார்த்துப் போங்கோ; சேறு... முன்னால போற ஆக்களைப் பாத்துப் போங்கோ, கவனம். தம்பி, கைக்குழந்தையோட போறீர், கவனம்...''

ஓயாமல் உற்சாகமான சத்தங்கள். யாரும் சோர்ந்துவிடுவதாக இல்லை. தள்ளாத வயது அது தள்ளுகின்ற வயது இது என்று தெரியாத வேகம், உறுதி.

''மீரா இங்கை கொழும்பில இருக்கிறவையின்ட கதையைக் கேட்டு சும்மா குழம்பாதை. போயா அன்டு போவம். நிலவுக்கும், கிளாலிக்கும் என்ன சம்பந்தம் என்டு சொன்னா விளங்கா; வாவன் விளங்கும்''—அப்பா சொன்னதை நினைக்க, அவரின் ரசனையும் கூடவே வந்தது.

படகும் வேகமாக ஓடத் தொடங்கிவிட்டது. மீரா சின்னவனை துவாயால் போர்த்தி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

ஏதோவொரு அமைதி நெஞ்சை அடைத்தது. கட்டுந்தவாரம் அவளுக்கு நீண்ட ஓய்வு தேவையென டாக்டர் சொல்ல, அவள் ''சித்தமற்று சிந்தையற்று சீவனற்று'' எனத் தன் நிலையை தானே சொல்லி நின்றதை இந்தக் கிளாலி நிலா நம்பமறுத்தது; அவளும் கூடத்தான்.

''கரை வருது; இனி ஓடேலா. இறங்கி நடவுங்கோ''— படகோட்டி கத்தினான். மீரா தூங்கிக் கொண்டிருந்த சின்னவனோடு இறங்கினாள்.

''பிள்ளை. தம்பி கவனம்! மெச்சை இறுக்கிப் பிடி. மெல்ல, மெல்ல இப்படி வா''— துணைக்கு வந்த வேலு மாமா அவளை உற்சாகப்படுத்தியபடி ''வெளிநாட்டில இருந்த உனக்கு இதெல்லாம்...''— அவர் சொல்ல வந்ததைக் கேட்க மீராவின் நெஞ்சம் விம்மியது அந்த நிலவுக்குக் கேட்டது.

வேலு மாமாவுக்கு ஒரு சின்னக் குடிசை; கூட வேகறுக்க மட்டைக் குசினி. வீட்டைச் சுற்றி வாழைமரங்கள். வாசலில் செவ்விளனி கிணற்றடியில் தேவைக்களவாய் மிளகாய், கத்தரி, தக்காளி. காவலுக்கு வாலை ஆட்டியபடி ஒரு மண் நிற நாய். அவள் போகும்போது நிர்வாணமாய் நிலவொளியில் தூங்கிக் கொண்டிருந்த இரட்டைக் குழந்தைகள். நேசிக்க மட்டுமே தெரிந்த மனைவி. வழக்கம் போலவே கம்பீரமான வேலு மாமா.

மீரா நிலவைப்பார்த்தாள் ''தன்னையறிந்து இன்புற வெண்ணிலாவே— ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே''. கோரிக்கைகளோடு தன்னைப் பார்க்கும் மீராவை நிலவு பரிதாபமாகப் பார்த்தது.

கிளாலி தாண்ட, டக்டரில் சாவி, ஓட்டோவில் தூங்கி வழிய வீடு. ஓட்டோ வாசலில் நிற்க குப்பி விளக்கோடு வீடே வந்தது.

''இவன் இருட்டைக்கண்டு பயப்படேல்லையே; கெட்டிக்குட்டி''— அவனைக் கட்டியிறுக்கிக்கொண்டது அன்னை இல்லம்.

... ... ...

ஊர் அவளை அடிக்கடி சிலுவையில் அறையத்தான் செய்தது. அதிலும் இந்தச் சின்னவன் பண்ணிய சின்னஞ்சிறு சேட்டைகளை அவளாற்கூட நம்ப முடியவில்லை.

எதற்கெடுத்தாலும் அவளைச் சுற்றிச் சுற்றித் திரியும் சின்னவன். கைகளைப் பற்றியபடி ஒட்டியொட்டித்திரியும் சின்ன



படிப்பகம்

www.padippakam.com

லாரி ஓட்டுநராக இருந்து படித்து பத்திரிகை யாளன் என தொழிலை மாற்றிக் கொண் டானாம். தற்போது 'சோமாசில்' இருக்கின் றானாம். வேலை இல்லா பத்திரிகையாளன் என்பது முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. பத்திரிகையாளர் அட்டை வைத்திருக்கும் இருபத்தேழாயிரம் பேர் வேலையற் றிருப்பதாக கணக்குக் கூறினான். அவன் கூற்றுகளில் ஒன்ற முடியவில்லை. தவிப்பாக இருந்தது "எங்களிடம் எதற்காக வந்திருக் கின்றான்?" எதுவாக இருக்ககூடும். ஊகித்தே பழகிய மூளை - எதிரே பேசப் படும் ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னால் உள்ளது பற்றி ஆராய்ந்து ஆராய்ந்து களைத்த மூளை.

ஒரு வெள்ளைத்தாளை நீட்டி 'இதைப் படித்துச் சொல்ல முடியுமா?' சே... இதற்கா சுத்தானா எங்களிடம் இவ்வளவு அலைந்து வந்திருக்கின்றான். தாளை வாங்கிப்பார்த் தேன். கோழி கிளறிய குப்பைமேடு மாதிரி தாள் எங்கும் சிதறிக்கிடந்தன பருமனான எழுத்துக்கள்.

ராணி... ஜனதனன்... கர்ப்பம் கலச்சு... விருப்பம்... அடிக்கிறான் (முகவரி பாண்டிச் சேரி).

ஒரு மாதிரி எழுத்துக்களை கூட்டி வாசித் தாகிவிட்டது ஆனால் எப்படி புரிந்து கொள்வது. கர்ப்பம் கலைக்க நிர்ப்பநதமா? கர்ப்பம் கலைக்க விருப்டமா? பத்திரிகை யாளனுக்கு எதைச் சொல்வது. பிரச்சனை யின் வேர் தெரிந்தால் அல்லவா மிச்சம் புரிவதற்கு. அவனும் அதிகம் சொல்கின்றான் இல்லை. கேள்விகள் கேட்க மனம் உந்தியது. அவசரப்படக்கூடாது. பிரெஞ்சுக்காரர் போல் இருக்க வேண்டும். நாமாக ஏதும் அதிகம் கேட்கக்கூடாது. கேட்பவற்றிற்கு மாத்திரம் பதில் பார்க்கலாம். எனக்குப் புரிந்ததை ஆங்கிலத்தில், "எழுத்தைப் பார்க் கும் போது படிப்பறிவு அற்றவர்போல் தெரிகின்றது" என்பதை அதிகப்படியான வார்த்தைகளாக சொல்லிவைத்தேன். தன் பெட்டியை திறந்தவன் ஒரு புகைப்படத்தை எடுத்து மேசையில் எங்கள் முன் வைத்து, "இதுதான் ராணி" என்றான்.

நீள் தூரத்தில் எடுபட்டபடம். ஓர் ஒடிசலான மெல்லியபெண் உழப்பட்ட நிலத்தில் ஏதோ செய்து கொண்டிருந்தாள். வண்ணப் படத் தில் அவளது கறுப்பு மிக உன்னதமாக பதிவாகி இருந்தது. இன்னொரு உருவம் கோவணாண்டி சாமியார் போல- மயிருள் முகம்புதைந்த, வயதான, பருத்த, குளிர் ஆடைகளால் தன்னை போர்த்துக் கொண்ட ஒருவன். அவன் மண்ணை கொத்திப் புரட்டும் 'சவள்' பிடியின் நுனியில் இருகை களையும் குவித்து அதன் மேல் தன் நாடியை தாங்கியபடி நின்றான். எனக்கு திரையில் படம் ஓடதொடங்கிவிட்டது. முகத்தில் வெற்றிப்புன்னகை படர பத்திரிகையா ளனை நோக்கினேன். அவன் சிகரெட் புகைத் தபடி எந்த சலனமும் இன்றி என்னைப் பார்த்தான். என்னுள் ஓடிக்கொண்டிருந்த திரைப்படம் அறுபட்டு, கொலைநடந்து, விசாரணை நடை பெற்று, துப்புத்துலக்கும் பததிரிகையாளனோ காவல்துறையோ... நான் இறுகிக் கொண்டிருந்தேன். மீளவும் ஊகங்களை வளர விட்டேன்.

"ராணி தமிழர்களை சந்திக்க விரும்புகின் றாள்... நீங்கள் சந்திப்பீர்களா?... உதவி யாக இருக்கும்" பொதுவாகவே கேட்டான் பத்திரிகையாளன். அப்பாடா என்றிருந்தது. என்னொத்த மனநிலையில் இருந்த ஊர்க் காரனான நண்பர், உற்சாகம் பொங்க 'அதுக்கென்ன சந்திக்கலாம்- உதவலாம்- நாங்களும் தமிழர்தான்' கேள்விகள்- பதில் கள் என்று தட்டுத்தடுமாறிய பிரெஞ்சில் விளாசித் தள்ளினார்.

சுவிஸ்நாட்டைச் சேர்ந்த 65 வயதான கிழவன் என புகைப்படத்தில் இருந்தவன் பற்றி அறிமுகம் செய்த பத்திரிகையாளன் இந்தியாவில் திருமணம் செய்து இந்த பெண்ணை அழைத்து வந்துள்ளான். எனக்கு அவனை பத்து ஆண்டுகளுக்கு மேலாக தெரியும். அவனுடன் நான் காணும் ஆறா வதோ ஏழாவதோ பெண். எந்தப் பெண்ணாலும் அவனுடன் இருக்க முடி யாது. ராணி பாவம். தன்னுடன் தனது ஏழுவயது மகன் ஜனார்த்தனையும் அழைத்து வந்துள்ளாள். கொத்தடிமைபோல் இருக் கின்றார்கள். அவள் எதை விரும்புகின்றாள் என்பதை என்னால் அறிய முடியவில்லை. அவன் அவளை கொன்று விடுவான் என அச்சமாக இருக்கின்றது. அவளுக்கு உதவ விரும்புகிறேன். அநதப்பெண் சந்திக்கும் வேறொரு மனிதன் நான் மட்டுமே. நண்பன் என்ற வகையில் அக்கிழவன் வீட்டிற்கு வர அனுமதிக்கின்றான். உங்களை சந்தித்தால் உற்சாகம் கொள்வாள். நீங்கள் உதவுங் களேன்... பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் அவன் விளக்கிக்கூறி விட்டான். ஆத்திரம் வந்தது. இரத்தம் சூடேறியது. உணர்நரம் பெல்லாம் விழித்துக் கொண்டன. என் நண்பருக்கு பதட்டமாக இருந்தது. முகம் சிவந்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

''அந்தப் பெண்ணை அழைத்து வாருங்கள். இங்கு அவள் தனித்து வாழ எவ்வளவோ வழி இருக்கின்றது.'' உணர்ச்சிமிக்க கூறினார் நண்பர்,

''அவசரப்பட வேண்டாம்- சந்திக்க ஏற்பாடு செய்கின்றேன். அவளுடன் பேசியபின் எனக்குச் சொல்லுங்கள். ஏதும் செய்யலாம்.'' பத்திரிகையாளன் பதட்டமின்றி கூறினான்.

நான் பேசவில்லை- கேட்டுக் கொண்டிருந்தேன். நீருக்குள் இறங்கி நீந்துவது என்பது தீர்மானமாயிற்று.

இப்போது ராணியை சந்தித்துவிட்டு திரும்புகையில்தான் எங்களை நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

□

60 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்தோம். பத்திரிகையாளனின் ஏற்பாடு கச்சிதமாக இருந்தது. ஏற்பாடுகளுடன் ஒதுங்கிவிட்டு இப்போதுதான் எங்களை அழைத்து வருகின்றான். வீட்டில் விட்ட நேரம் மாலை ஆறுமணி இருக்குமா? பகலின் நீட்சியைப் பாருங்கள்சூரிய ஒளியை. காலை 10 மணிக்கு வீட்டை விட்டு கிளம்பிய பயணம்.

நெடுஞ்சாலையில் வந்து, பிரிந்து செல்லும் குறுகலான மலைச்சாலையில் ஏறி, செப்பமற்ற கிறவல் வழியில்தான் அந்த இடத்தை அடைந்தோம். அந்த சுற்று வட்டாரத்தில் மூன்று வீடுகளில்தான் மனிதர்கள் வசிக்கின்றார்களாம் வேறு சிலபழங்கால வீடுகளும் இருக்கின்றன. அவை ஓய்வுகாலத்தை, விடுமுறை காலங்களை கழிப்பவை மட்டுமே. உரிமையாளர்கள் நகரங்களில் வசிக்கின்றார்கள். மலை முழுவதும் விவசாய நிலங்கள். எங்களை றோபேட்டும், பறியாவும் வரவேற்றனர். எழுபது ஹெக்டர் நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள். ஹோலண்ட்- சோமாலியா கலப்புதம்பதிகள். அவர்களின் முரட்டு பிள்ளைகளாய் இரண்டு நாய்கள். பறியாவுடன பிரெஞ்மொழி வகுப்பில் ஒன்றாய் படித்தவர்கள் என்பதும், வீட்டிற்கு அழைக்கப்பட்ட விருந்தினர் நாங்கள் என்பதும் ஏற்பாடான உறவு. அப்படியானால் அந்தப் பகுதியை சுற்றிப் பார்க்க வேண்டும்தானே. மதியபோசனம் முடிந்தபின் பறியாவுடன் அவர்களின் எஸ்டேட்டை சுற்றிப் பார்க்க கிளம்பினோம். பறியா, றொபேட்டும் ராணி பற்றிய அக்கறை கொண்டிருந்தனர். பறியாவுக்கு தங்கள் நாட்டிற்கு பக்கத்தவள் ராணி என்பதால் அவளில் ஒருபிடிப்பு தென்பட்டது. சிற்றருவி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. 'கல்லென்றுசொல்லிவிழும்நீர்த்தரங்கம் கண்டேன்' என்னும் விபுலானந்தரின் செய்யுள் வரிகள் என்னுள் ரீங்கார மிட்டன. எந்த நேரத்தில் எந்த வரிகள்! நாய்கள் இரண்டும் குலைக்கும் சத்தம் இன்னமும் கேட்டுக் கொணடிக்கின்றது. மலைகளில் மோதி குலைடபு எதிரொலிக்கின்றது. நாங்கள் விருந்தினர்- நண்பர்கள் என்று அவைகளுக்கு இவர்கள் சொல்லி வைக்கவில்லை போலும். பறியாவின் நிறத்தில்தான் நாங்களும் இருக்கின்றோம், உறவினர்களாக இருக்கலாம் என்று கூட இந்த நாய்களுக்கு புரியவில்லை.

நல்லகுளிர். வெயிற்காலம் தொடங்கி இருந்தால் பொருத்தமான குளிர் ஆடையை நாங்கள் அணிந்திருக்கவில்லை. யார் நனைத்தார்கள் இங்கு குளிருமென்று உடனே நடையை மீண்டும் பறியாவின் வீட்டுக்கே திருப்பி, றோபேட்டின் குளிர் அங்கிகளை அணிந்து கொண்டோம். கொஞ்சம் இதமாக இருந்தது. கைகளை அவர்களது வீட்டின் கணபபடுப்பில் சூடேறறி அங்கிக்குள் பதுக்கிக் கொணடோம் எங்கள் நிலைக்கு இரங்கினாரோ என்னமோ 'பிரான்சின் கால நிலையையும் பெணகளையும் நம்ப இயலாது' சிரித்துக் கொண்டே கூறினார். பொத்துக் கொண்டு வந்தது சிரிபபு. உங்களுக்கும் வருகின்றதா சிரிப்பு.

பறியா தங்கள் கோழிப்பண்ணையை காட்டினாள். பயிரிட வேண்டிய நாற்று மேடைப் பக்கம் அழைத்துச் சென்றாள. அவர்களின் நில எல்லையை கடக்கும் முன்னரேயே களைப்பாகி விட்டது. சலிப்பாயும் இருந்தது. மலை அவ்வளவு பசுமையாகவும் இல்லை. துர்நாற்றம் லேசாக நாசியில் ஏறியது. இதுதான் ராணியின் வீடு என்றாள் பறியா. வீடா !?

பிரெஞ்சில் முகமன் கூறியபடி எதிர்ப்பட்டான், தலையில், முகத்தில் மயிர்வளர்த்து வைத்திருக்கும் புகைப்படத்தில் பார்த்த மனிதன். பாரிஸ் நகர மெத்ரோக்களில் படுத்திருக்கும் 'வைன் கேஸ்' என அழைக்கப்படும் போதைக்கு அடிமையான, போக்கிடமற்ற மனிதர்கள் போல் இருந்தான். அதேபோன்ற நாற்றம் இவனிடமிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

'என்னுடன் படிப்பவர்கள்...தமிழர்'என அறிமுகப்படுத்தினாள் பறியா. 'வணக்கங்க'



படிப்பகம்

www.padippakam.com

என வெளிப்பட்டாள் ராணி. மூக்கின் இரு மருங்கிலும் தொங்கியது மூக்குத்தி. கறுத்த அம்மன் சிலை செதுக்கல்போல் முகம். நேர் கொண்ட பார்வையில் தன் துயரங்களை கச்சிதமாக மறைத்து வைத்திருந்தாள். குளிர் நாட்டிற்குரிய வெளிர்பூச்சு தோலில் ஏற வில்லை. கபடமற்ற சிரிப்பில் பற்கள் மட்டும் மிளிர்ந்தன. அவளின் உடலினை ஒட்டியபடி சிறுவன் நின்று கொண்டிருந்தான். ராணி அளவற்ற, நைந்த ஆணின் ஆடையில் இருந்தாள். சிறுவனின் முகம் தவிர உடலைனைத்தும், தலையும் ஏதோ ஒருவாறு மூடி கட்டப்பட்டிருந்தன. சிறுவனின் முகத்தில் எங்களைக்கண்ட வெட்கமும், கண்களில் மகிழ்ச்சியும் தெரிந்தது. தாயைப் போல் அழகாக சிரித்தான். குளிர் தோற்று இருக்கவேண்டும். அது பற்றிய உணர்வு அவர்களிருவரிடத்தும் காணப்படவில்லை, இடுப்பில் தண்ணீர்குடம் தூக்கும் பெண்களின் ஆடை நனைந்ததைப்போல் இடுப்பின் இடது பக்க ஆடை நனைந்தும் இருந்தது. அதிசயமாகப்பட்டது எனக்கு.

ஒரு பெரிய மரத்தின் கீழ் அடுப்படியும் பாத்திர பண்டங்களுடன் கூடிய கதவற்ற அலுமாரியும் இருந்தன. சமையலறை போலும். சமையல் பாத்திரங்கள் கழுவப்படாமல் கிடந்தன. கறள் கட்டிய இரும்புகளால் -எவற்றின் உதிரிபாகங்களோ தெரியவில்லை- அடுப்படியின் உயர மேடை அமைக்கப்பட்டிருந்தது. பறியா முன் சென்று ராணியை கட்டி அணைத்து கன்னங்கள் இரண்டிலும் தன் கன்னங்களை மாறிமாறி வைத்து உரிமை கலந்த முகமன் கூறினாள். அயல் வீட்டில் இருவரும் இருந்தும் ஒரே ஒரு தடவைதான் தாங்கள் சந்திந்துக் கொண்டதாய் பறியா என்னிடம் கூறியிருந்தாள். இவ்வளவு இயல்பாக பறியா நடந்து கொள்வாள் என நான் எதிர்பார்க்கவில்லை. வீட்டினுள் வரும்படி அந்த வயதானவன் எங்களை அழைத்தான்.

எப்படி இது வீடாகி இருக்கின்றது என்ற ஆராய்ச்சியிலேயே கவனம் இருந்தது. வீட்டைப்பார்க்க பார்க்க வயிறுபற்றி எரிந்தது. குதிரைக் கொட்டகையாகவோ, மாட்டுத் தொழுவமாகவோ முன்னர் இருந்திருக்கலாம். நிச்சயம் மனிதர்கள் இருந்திருக்க மாட்டார்கள். வெயிலுக்கு பரவாயில்லை. மழை குளிருக்கு எப்படித் தாக்குப்பிடிக்கின்றது. தவம்செய்து வரம்பெற்ற முனிவனோ!

இருக்கைகளை கிழவன் எப்படி தயாரித்தான் என்பது தெரியவில்லை. ஒருவாறாக சமாளித்துக் கொண்டோம். கிழிந்த கம்பளிகளின் கும்பல் கட்டுகள் கிடந்தன. அழுக்கின் மொச்சை குடலைப் பிரட்டியது. எரிந்து கொண்டிருந்தது. உள்ளேயே கணப்படுப்புபோல் விறகு எரிந்து கொண்டிருந்தது. விறகு தாராளம் போலும். கரிமண்டிய கிடாரத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது, குளிக்கத் தயார் செய்து கொண்டிருப்பதாய் ராணி கூறினாள். அரைக்கிலோமீற்றர் இறங்கிப்போய் சிற்றருவியில் தண்ணீர் மொண்டு வரவேண்டும் எனக் கூறினாள். அதிர்ந்து போனோம் நானும் நம்ம ஊர்க்காரரும். எனக்கு எலும்புகளும் சில்லிட்டன. நெருப்பை வெறித்தபடி இருந்தேன்.

'பெயர் என்னா' கிழவன் அசத்தி விட்டான். தமிழின் சில சொற்களை அறிந்திருந்தான். என் பெயரைக் கூறினேன். வாசல்பக்கத்து கதவை மூடி தடி ஒன்றால் முட்டுக் கொடுத்தான். குளிர்வராதாம். அந்த வாசல்படியில் அவனும் அமர்ந்து கொண்டான். காற்சட்டையின் முன்பக்கம் ஆவென வாயைத்திறந்ததில் அவன் உறுப்பு வெளித்தெரிந்தது. கைகளால் பொத்தி கால்மேல் கால் போட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தான். ராணியிடம் எப்படி விபரங்களை கேட்பது எனத் தெரியவில்லை. கிழவன் முன்னாலேயே உட்கார்ந்து இருந்தான். எரியும் நெருப்பிற்கருகே நின்றவண்ணம் ராணி எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் திரையிட்டிருந்தது. விம்பலில் சற்று ஊதியிருந்தது முகம். பொத்தான்கள் இல்லாத மேலங்கியை அணிந்திருந்த ராணி மார்பு பக்கத்தின் அங்கியின் இருபக்கத்தையும் இழுத்து ஒருகையால் பொத்தியபடி நின்றாள். மார்பு சேலையை சரிசெய்த பழக்கம் போலும். பையன் கூச்சத்துடன் தாயின் காலடியில் தரையில் அமர்ந்திருந்தான். 'நாங்க பேசுறது புரியுமா' எனக்கேட்டேன். ஏனெனில் இலங்கைத் தமிழ் அவனுக்குப் புரியாது என்பது தெரியும். தலையால் ஆமென தலையசைத்தவன் சிரித்தான். 'பேசண்டா' அதட்டினாள் ராணி. 'இருபக்கத்து டீ குடிக்கிறீங்களா' என்றாள் ராணி- நாங்கள் மறுத்தோம்- 'எனக்கோசரம் குடிங்க' என்றாள். மறுக்கமுடியவில்லை. கிழவன் எழுந்து வாசலுக்கு எதிரே எங்களுக்குப் பின்னால் தொங்கிக்கொண்டிருந்த கம்பளியை விலக்கி சென்றான். மலைச்சரிவு தெரிந்தது. இவ்வளவுதான் அறையா? இந்தியாவில் எடுத்தவை என சில படங்களை தந்தான் கிழவன். சரிகையிட்ட வர்ணப்புடைவையில் இருந்தாள் ராணி. பெரிய குங்குமப் பொட்டும், தளைய தளைய தலைநிறையப் பூவு



படிப்பகம்

www.padippakam.com

மாக- அழகாக இருந்தாள். கிழவனும் கோட் சூட்டுடன் சிறிது கம்பீரமாகத்தான் இருந்தான். ராணி தேநீருடன் வந்தாள். படங்கள் பார்த்துக் கொண்டிருப்பது கண்டு வெட்கத்தை வெளிப்படுத்தினாள்.

''இப்படி வனாந்தரத்தில் கொண்டாந்து குளிருக்குள் விறைக்கவிடுவான் என்று எங்க நான் நினைச்சேன்'—வெடித்தது துயரம். கிழவன் கணப்படுப்பிற்கு விறகு எடுக்க வெளியே சென்றிருந்தான்.

''நான் மூணுமாசமாக முழுகாம இருக்கேங்க. எனக்கு வேணாங்க- எனக்கு டாக்டரை பார்க்க வேணுங்க-எனக்கு என்னமோ பயமாயிருக்குங்க...'' கேவினாள் ராணி.

''அழாதிங்க உங்களுக்கு உதவத்தான் வந்திருக்கோம்'' நான் கூறினேன். 'அழ வேண்டாம் நான் இருக்கேன்' என சைகையால் தென்பு கூறினாள் பறியா. பையன் மலங்க மலங்க எங்களைப் பார்த்தபடியே நின்றான்.

''இந்த இடத்தைவிட்டு, அந்த கிழவனை விட்டு வெளியேற விருப்பமா?'' பத்திரிகையாளன் இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் அதிகம் விரும்பி இருந்தான்- என்னிடம் அழுத்திக் கூறியுமிருந்தான்.''ஒபல. என்னை இந்தியாவுக்கே அனுப்பி விடுங்க...'' கெஞ்சினாள் ராணி. 'எனக்கோசரம் கவலைப் படலங்க. என் புள்ளையையும் இட்டாந்துட்டேங்க. எனக்கோசரம் அவனும் வதைப்பட றானுங்க, அத நினைச்சாத்தான்...''.

கிழவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. ராணி கணப்படுப்பில் நெருப்பை சரிசெய்த படியே கண்களை துடைத்து ஆசுவாசப்படுத்தினாள்.

ராணியிடம் எதையோ கேட்டாள் பறியா. ராணிக்குப் புரியவில்லை. எனக்கும் விளங்கவில்லை. கையால் தலையை தடவிக் காண்பித்தாள். தலைக்கு எண்ணெய் முடியாமல் தான் தவிப்பதை கூறினாள் பறியா. கிழவன் சிறுபோத்தலைஎடுத்துக்கொடுத்தான்.ராணி முறு வலித்தபடியே அந்தப்பத்திரிகையாளர் வாங்கிவந்து தந்ததை பறியாவை கொண்டு செல்லும்படியும் கூறினாள். உடனேயே போத்தலை நெருப்பில் பிடித்து உருக்கி சிறிது எண்ணெயை தலையில் தடவிக் கொண்டாள். கையை முகர்ந்து மகிழ்ச்சி பொங்க 'நன்றி' என்றாள். லண்டன் செல்லும போது பெரிய போத்தல் வாங்கி வந்து தருவதாக சைகையால் தெரிவித்தாள் பறியா.

நாங்கள்புறப்படத் தயாரானோம். மரத்தின் கீழுள்ள அவர்களது சமையலறை முன்னால் நின்று ''எல்லாம் நல்லபடியா நடக்கும்'' எனக் கூறினேன்.

ராணிக்குப் புரிந்ததோ...? கிழவனுக்கு புரியாமல் இருந்தால் சரிதான். பையன் ஓடி வந்தபடியே மாமா...மாமா...நானும்...நானும்... உச்சி சிலிர்த்தது ஒரு தடவையல்ல. முடியுமா...?

பத்திரிகையாளனையும் பறியா தம்பதியினரையும் நம்பிய மனதுடன் நான். என் வீட்டுத் திருப்பத்தில் வாகனம்.

○

---

''புலம் பெயர்ந்தோர் கதைகள் ஏராளம்' ஆனால் அவற்றைச் சொல்லுவதற்குத்தான் பலருக்குக் கூச்சங்கள். பிறந்த நாள், திருமணம் இன்னபிற கொண்டாட்டங்களின்போது வீடியோக்களில் பதிவாக்கப் படும் எங்கள் முகங்கள் போலியானவை, பொய்யானவை. நெருக்கடி மிக்க அகதிக் கோலத்தை மறைத்து 'வாழ்வது' போல் நடிக்க முயற்சிக்கிறோம். அதில் ஒரு திருப்தியும். போதிய நெறிப்படுத்தோவரற்று, சிதறிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் எங்கள் புலம் பெயர் உண்மை வாழ்வு பதிவாக்கப்படல் வேண்டும்...''

**'புலம் பெயர்ந்தோர் கதைகள்'** முன்னுரையிலிருந்து (மகாஜன வெளியீடு, பாரிஸ். தொடர்புக்கு: M. SINNATHURAI, B.P. 7..1-09, 75425 PARIS CEDEX, FRANCE



படிப்பகம்

www.padippakam.com

# மூன்று சனி

—தமயந்தி
(நோர்வே)

நாளை சனிக்கிழமை. தாய்மொழிக்கல்வி புகட்டும் தமிழ்ச்சிறுவர் பாடசாலை.சென்ற கிழமை மகனின் ஆசிரியை ஆளுக்கொவ்வொரு சிறுவர் பாடலை வீட்டில் பெற்றோரிடம் கேட்டுப் பாடமாக்கி வரும்படி கட்டளையிட்டுள்ளார். கார்த்திகாவுக்கு நேரமில்லை. புகுந்த நாட்டு மொழியைப் பொறிபறக்க கற்றுக் கொள்ளும் முயற்சியில் அவள். அத்தோடு பகுதி சேர வேலையாக ஒரு சிறுவர் பூங்காவை சுத்திகரிக்கும் சில மணி நேர வேலை. இரண்டும் செய்தாகத்தான் வேண்டும். இந்த இரண்டில் எந்தவொன்றையும் அவளால் தியாகம் செய்ய முடியாது. இந்த நாட்டில் வாழ்வதென்பது மொழியறிவற்று முடியாத காரியம். அதனால் மொழி கற்பதை இடையில் நிறுத்தவோ, குறைக்கவோ முடியாது. சாதாரண இருமலென்று வைத்தியரிடம் சென்ற ஒரு புதுத் தமிழ் அகதிக்கு மொழிபெயர்த்த தமிழ்மொழி பெயர்ப்பாளரொருவர் வைத்தியர் கூறியது புரியாமல் ''கான்சராம் உனக்கு'' என தவறாக மொழிபெயர்த்து அந்த அகதியைக் கதிகலங்க வைத்ததும், இன்னோரிடத்தில் புதிய அகதிகளுக்கு நோர்வேயின் சுருக்கமான விபரங்களைப் பற்றி அதிகாரியொருவர் விளக்கப்படுத்துகையில் நாற்பது லட்சம் சனத்தொகையைக் கொண்ட நாடு நோர்வே என்பதை, நான்கு லட்சம் சனத்தொகையைக் கொண்ட நாடு நோர்வே என்றும் மொழிபெயர்த்த எமது மொழிபெயர்ப்பாளர்களின் சாதனைகளைக் கேள்விப்பட்டபின் கார்த்திகாவுக்கு மொழியறிவு கட்டாய அடிப்படைத் தேவைகளில் ஒன்றென்ற முடிவுக்கே வந்துவிட்டாள். அடுத்து சிறுவர் பூங்கா சுத்திகரிக்கும் வேலை. இதனை நிறுத்த முடியாது. சுந்தரேசன் செய்து வந்த றெஸ்ரோறண்ட் வேலையையும் இப்போது பாதியாகக் குறைத்து விட்டார்கள். அவனது வருமானம் சாப்பாட்டிற்கெனில் வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம் என்பனவற்றையேனும் சமாளிக்க கார்த்திகா இந்த வேலையைச் செய்தேதான் ஆகவேண்டும். இந்த இயந்திரத்தனமான நகர்வுக்குள் மகன் மாறனின் அலுவல்களில் நேரம் ஒதுக்குவதென்பது இருவருக்குமே கடினமாகத்தான் இருக்கிறது ஆனால் எல்லாவற்றையும்விட மிக முக்கியம் மகனின் வளர்ச்சி பற்றியதென்பதுதான் என்ற முடிவில் அவர்களிருவரும் உறுதியாயிருந்தனர். மிகவும் பிரயத்தனப்பட்டு இருவரும் நேரங்களை மகனுக்காக ஒதுக்கிக் கொண்டனர். நாளை தமிழ்ப் பாடசாலையில் மகன் பாடிக் காட்டுவதற்காக 'மாமா வீட்டு முற்றத்திலே...' என்ற பாடலைத் தேடியெடுத்து ''அப்பாட்டக் குடுத்துப் பாடமாக்கு செல்வம்'' என்று விட்டு சிறுவர் பூங்கா வேலைக்குச் சென்று திரும்பிய கார்த்திகாவின் காதுகளில் சுந்தரேசன் கூறியது விழுந்தது.

''கெட்ட மனுசன். குறைஞ்சது நூற்றியம்பது காயாவது ஆஞ்சிருக்கும். அந்தப் பிள்ள கஸ்டப்பட்டு மணியடிச்சு அணிலுகளத் துரத்தினதால்தான் அவ்வளவும் மிஞ்சியிருக்கும். ஆனால், ஒரேயொரு மாம்பழம் தான் அந்தப் பிள்ளைக்கு மனுசன் குடுத்திருக்கு. பாவமந்தப் பிள்ள. உது சரியான சுரண்டல். அந்தப் பிள்ளயின்ர உழைப்புக் கேத்த கூலி ஒரு மாம்பழம்தானா...? எங்க அப்பரம்மாவும் உந்தச் சுரண்டலத் தான் படிச்சுப் பாடமாக்கிச்சினம். நாங்களும் உதத்தான் சப்பினம், இப்ப என்னண்டால் எங்கட பிள்ளயளுக்கும் உதத்தான் திணிக்கிறம். மாடா அடியனடிச்சு, உழைச்சு சொற்ப சலுகயளோட திருப்திப்பட வேணுமெண்டதுதான் உந்தப் பாட்டின்ர நோக்கம். உது சரிவராது''

''பிள்ளைக்கு பாட்டச் சொலிக் குடுங்கோ எண்டால் உங்கட தத்துவங்களச் சொல்லி அறுத்துக் கொண்டிருக்கிறியள்''

''தத்துவங்களண்டால் அறுவயண்டே வழக்கமாப் போச்சு. உது தத்துவமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்க. வாழ்க்கைக்குதேவையான விசயம். உந்தத் தேவயான விசயத்த மறுதலிக்கிறது தான் உந்த மாமா வீட்டு மாமரம். உதப் போய் பிள்ளைக்கும் திணிக்கிறது நல்லா யில்ல கார்த்தி''

''அதுக்கு அவசரத்துக்கு என்னப்பா செய் யிறது. நாளைக்கு பிள்ள பாடிக் காட்ட வேணும்...''

''எங்கட அவசரத்துக்காக வாழ்க்கைக்கு முரணானத பிள்ளைக்குத் திணிக்கேலாது கார்த்தி''

''எனக்கு விளங்காமலில்ல. இப்ப பிள்ளைக் குச் சொல்லிக் குடுக்க நல்ல பாட்டுக்கு எங்க போறதாம்?''

''நீர் கொஞ்சம் சத்தம் போடாமலிரும். அவன் நாளைக்கு நல்ல பாட்டுப் பாடு வான்''

சனிக்கிழமை.

தமிழ்ப்பாடசாலை முடிவுற்று பிள்ளைகள் வெளியேறிக் கொண்டிருந்தனர். தத்தமது பிள்ளைகளை அரவணைத்தும், ஆரத் தழுவியும், ''என்ன படிச்சனீங்க இண் டைக்கு?'' என செல்லமாய் தமது பிள்ளை களிடம் வழமையான ஒரேமாதிரியான கேள்வியைக் கேட்டபடி பிள்ளைகளைக் குளிருடைக்குள் திணித்தபடியும், திணித்து முடித்தோர் கார்களில் ஏற்றி 'பாதுகாப்பு பெல்ட்' பூட்டியபடியும் பெற்றோர் செயற் பட்டுக் கொண்டிருந்தனர். கார்த்திகா மகன் மாறனை எதிர்பார்த்தபடி வெளியில் நின்றிருந்தாள். இன்னும் சில நிமிடங்கள் தான் இருக்கின்றது பஸ்ஸிற்கு. இந்த பஸ்ஸை விட்டால் இனி ஒரு மணி நேரம் கழித்துத்தான் அடுத்த பஸ்.

ஆசிரியை மாறனை ஒரு கையிலும், மறுகை யில் ஒரு பேப்பர் துண்டுடனும் வெளிப்பட் டார். ''இங்க பாருங்கோ கார்த்திகா! இது அவ்வளவு நல்லதில்ல. மற்றப் பிள்ளயளயும் கெடுக்கிற வேல இது. இதால வாற பிரச்ச னைக்கு நான்தான் பதில் சொல்ல வேண்டி யிருக்கும். நிர்வாகம் என்னத்தான் கேள்வி கேக்கும். பெற்றாருக்கும் நான்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். உங்கட அரசியல குழநதயளின்ர பள்ளிக்கூடத்துக்குள்ளயும் கொண்டுவந்து பூர்க்காதேங்கோ''

ஆசிரியை பொரிந்து தள்ளி விட்டு மாறனை யும், அந்த பேப்பர் துண்டையும் கார்த்திகா விடம் கொடுத்து விட்டுப் போய்த் தனது காரில் ஏறி கதவை அடித்து மூடினார். கார்த்திகாவுக்கு எதுவுமே புரியவில்லை.

தாவிக்கரை வந்து மேவும் அலைகளில்
தேடி வருகுது ஒரு பாட்டு / தேடி வரும்
அதில் நாடி எங்கேயென, தேடுதெ.
சிந்தையும் தாய் நாட்டை.

வானை அளந்ததன் நீளம் அறிந்திட
வானத்தில் தாவுது என் மூச்சு / தாவு
மென் மூச்சினில் ஆணிவேர் ஏதென
தேடுகில் தோணுதென் தாய் மண்ணே.
காற்று வெளிதனில் கேட்டிடும் சங்
கொலி வாவென என்னை அழைத்
திடுதே / காற்றில் வருமொலி பற்றி
நான் சென்றிட, றக்கை விரித்து விண்
மேல் நடப்பேன்.

வீசுது கீழ்த்திசை மீதினில் நின்றொரு
மெல்லிய தென்றலின் உயிர் மூச்சே/
வீசிடும் தென்றலின் மூச்சினிற் கேட்கு
தென் தேசத்தின் சுதந்திர தமிழ்ப்
பாட்டே.

''அதுசரி உதென்ன வேல பாத்திருக் கிறியள்...? பி ளைக்கு பாட்டுச் சொல்லிக் குடுங்கோ எண்டு சொன்னால் நீங்க என்ன எழுதிக் குடுத்திருக்கிறியள்? அங்க ரீச்சர் என்னோட ஏறி விழுகிறா. நாங்க மற்றப் பிள்ளயளயும் கெடுக்கிறமாம், பள்ளிக்கூடத் துக்க அரசியலத் திணிக்கிறமாமெண்டு. எல்லாத்திலும் உங்களுக்கு விளையாட்டா சுந்தரேசன்?'' மாறனின் சப்பாத்து உடை களைக் களைந்தவாறே கோபமாய் சுந்தரேசனை வினவினாள். சுந்தரேசன் எதிர்பார்த்த விடயம் இது.

''கார்த்தி! நிதானம். ஏன் கோவிக்கிறீர்? நான் எழுதிக் குடுத்த உந்தப் பாட்டு உமக்கும் பிழயெண்டு படுகுதோ?''

''எங்களுக்குப் பிழையில்லாமல்த் தெரிய லாம் ஆனால் உது மற்றவைக்கு பிழையாத் தெரிஞ்சால் நாங்கள் தவிர்க்கிறது நல்லது தானே?''

''நீர் என்ன சொல்லுறீரெண்டது உமக்கு விளங்குதோ...? அல்லது விளங்காமற்தான் சொல்லுறீரோ? மற்றவைக்குப் பிழயாப் படுந்து எண்டதுக்காக எங்கட சரியள சாகடிச்சுப் போட்டு நாங்களும் பிழயாப் போகேலாது...''

''பொறுங்கோ சுந்தர், பள்ளிக்கூட மெண்டது எங்களுக்கு மட்டும் சொந்தமான தில்ல. பலபேர்ர பிள்ளயள் அதில படிக்குது கள். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு வித மான கருத்திருக்கு. தங்கட தங்கட பிள்ளயள எப்பிடியெப்பிடி படிப்பிக்கவேணும், எப்பிடி யெப்பிடி வளக்க வேணுமெண்டு ஒவ்



படிப்பகம்

www.padippakam.com

வொருத்தருக்கயும் ஒவ்வொரு விருப்பங்க ளிருக்கு...''

''அத நான் மறுக்கயில்லயே?! எங்கட பிள்ள எப்பிடி வளரவேணுமோ அதின்ர விருப்பும், வெளிப்பாடும்தான் உது. உதப் பிழ யெண்டு சொல்லுறீரோ...?''

''.........''

''உதில வந்து அடிப்படப் பிரச்சன என் னண்டால் வெளிநாடுகளில வளர்ர எங்கட பிள்ளயளுக்கான பள்ளிக்கூடங்களுக் கொண்டு ஒரு சரியான பாடத் திட்டம் இல் லாததுதான்.''

''சுந்தர்! இப்ப பாடத்திட்டம் இருக்கா இல்லயா எண்டதில்லப் பிரச்சன. இப்பிடி யான சூழ்நிலைக்குள்ள தொடந்து பிள்ளய பள்ளிக்கு அனுப்பிறதா, இல்லயா எண்ட முடிவுக்கு வரவேணும் நாங்க''

''கார்த்தி! இப்பிடியான ஒரு சூழ்நில ஏன் உருவாகினது எண்ட கேள்விக்கு பதில் வந்து சரியான பாடத் திட்டமில்லாதது தானேயம்மா. பிறகேன் பாடத் திட்டம் இருக்கா, இல்லையா எண்டதில்லப் பிரச்சன எண்ட கேள்வியக் கேக்கிறீர்?''

''இப்ப என்ன செய்யிறது...? சரியானது வரும்வர பிள்ளய வீட்டில வச்சிருக் கிறதா...''

''வேற வழியில்ல. பிள்ள எப்பிடி வளர வேணுமெண்டு நாங்கள் எங்களுக்குள்ள ஒரு கனவ வளர்த்துக்கொண்டிருக்க, அவன் அங்கபோய் வேறமாதிரி வளர்ந்து வந்து நிப்பான் இப்போதைக்கு அவன் வீட்டில நிக்கட்டும். முடிஞ்சவர நாங்கள் சொல்லிக் குடுப்பம். நல்லமாதிரிச் சூழ்நில வரேக்க பாப்பம்''

''சுந்தர்! பள்ளிக்கூடத்தில சொல்லிக் குடுக் கிறதவிட நாங்கள் திறமான முறயில நம்மட பிள்ளைக்கு தமிழச் சொல்லிக் குடுப்பம் எண்டதில எந்தச் சநதேகமுமில்ல. ஆனால், இப்ப மாறன் தமிழ் படிக்கிறதுக் காக மட்டும் தமிழ்ப்பள்ளிக்கூடத்துக்குப் போகேல்ல. எங்கட சமூகத்த அறியாதவனா வளராமல், எங்கட சமூகத்த அறிஞ்சவனா வளரட்டுமெண்டுதானே அனுப்பிறம்''

''உத இல்லயண்டு இப்ப ஆர் சொன்னது. தமிழ்ச் சமூகத்த அறியவேணுமெண்டு அனுப்பிற பிள்ள நாளைக்கு மொத்தச் சமூ கத்துக்குமே உதவாத கருத்தோட வளந்தால் என்ன செய்யிறது...?''

''......!''

''கார்த்தி! எதுக்கும் இன்னும் கொஞ்சக் காலம் அனுப்பிப் பாப்பம். நிலமயளப் பாத்து தொடந்து அனுப்பிறதா, இல்ல யாண்டதப்பற்றி யோசிப்பம்...''

''நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்''

அடுத்த சனி.

காலை பத்துமணி. சுந்தரேசன் வேலைக்குப் போய்விட்டான். கார்த்தி வீட்டில் செய்ய வேண்டிய காலை அலுவல்களை முடித்து விட்டாள். காலையில் சுந்தரேசன் நேரத் தோடு எழுந்து சமையல் பாத்திரங்களை கழுவி விட்டுச் சென்றிருந்ததால் அவளுக்கு வேலை குறைவாகவே இருந்தது. மாறனுக்கு காலைச் சாப்பாட்டைக் கொடுத்து விட்டு, தமிழ்ப்பாடசாலை செல்வதற்காகஅவனுக்கு உடையணிவித்தாள்.

''நான் பள்ளிக்குப் போக மாட்டன்...'' மெல்லச் சிணுங்கியபடி கூறினான் மாறன். அவனது சிணுங்கலில் ஓர் பரிதாபகரமான கெஞ்சல் வெளிப்பட்டது. கார்த்திகா வியப் பானாள். வழமையாக தமிழ்ப்பள்ளிக்குப் போவதென்றால் ஆர்வமிகுதியால் துடித்துக் கொண்டு நிற்கும் பிள்ளை இன்று ஏன் இப்படி என்பது அவளது வியப்பில் கேள்வி யாய் நின்றது.

''ஏன் குஞ்சு...? உங்களுக்குச் சரியான விருப்பமெல்லோ தமிழ்ப் படிக்க?'' சப்பாத் துக்குள் அவனது காலையிட்டுக் கட்டியபடி சாந்தமாய்க் கேட்டாள்.

''தம்பி இனிப் போகமாட்டான். தம்பிக்கு விருப்பமில்ல''குழந்தையின் இந்த வார்த்தை களுடன் அவனது விழிகளும் மெல்லப் பனித்தன. கார்த்திகா ஒருவித திணற லுக்குள்.

''அங்க நிதர்சனண்ணா, சூட்டியக்காவின்ர கௌசல்யா, சாளினி. கோகிலன், பரிமள னண்ணா எண்டு தம்பியில நேசமான எல் லாரும் படிக்க வருவினம் தம்பியும் போவம் என்ன...?'' குழந்தையைச் சமாளிக்க முயன் றாள். அவன் அழத் தொடங்கினான். அவனது விம்மல்களிடையே துண்டு துண் டாய் வந்து விழும் வார்த்தைகளைபொறுக்கி யெடுத்து பிரயத்தனப்பட்டு விளங்கிக் கொண்டாள்.

''ரீச்...ஈச்சர்... எ எ... என்ன்... என்னி... ல நே ஏ ஏசமில் ல. தம்... த... ம்பிய... அவவுக்கு... பிடிக்... க்சயில்,... ல. தம்,..,பீ



படிப்பகம்

www.padippakam.com

பள்ளிக்கு இனி... போ...க... யில்... போக யில்ல...

கார்த்திகாவின் விழிகள் கசிந்தன. சிவந்தன. அவளது சிவப்பேறிய விழிகளில் கசியும் நீர் இரத்தம் கசிவதைப் போன்றிருந்தது. கோபம் அவளுடலை வெப்பமாக்கியது.

''சீ. என்ன மனுசர்...?'' அவளது கோபமும், வெறுப்பும் இந்த வார்த்தைகளுடன் மட்டும் அடங்கிப் போனது. ஆனால் அவளொரு முடிவுக்கு வந்தவளானாள்.

மூன்றாம் சனி.

நள்ளிரவு.

''எனக்குப் பயமாயிருக்கு சுந்தர். பிள்ள கண்டபடி உளர்றான். காய்ச்சலும் நெருப் பாக் கொதிக்குது, சன்னி வந்தமாதிரி நடுங் கிறான்... சுந்தர்! என்ன சுந்தர் பேசாம லிருக்கிறியள். எனக்குப் பயமாயிருக்கு சுந்தர்'' அவளது குரலை நடுக்கம் துளைத் தது. கண்களை இறுக மூடியபடி நடுங்கிய படி படுக்கையில் கிடந்த மாறனின் தலை யைத் தடவிக் கொடுத்தபடி சுந்தரேசனின் முகத்தையே பார்த்திருந்தாள் ஆறுதலான பதிலுக்காக.

''பயப்பிடாதேயும் கார்த்தி. அதொண்டும் நடவாது. உது சும்மா சாதாரண காய்ச்சல் தான். அதோட கோகுலன், கௌசல்யா... இவயளக் கொஞ்ச நாள்ச் சந்திக்கவுமில்ல, அவயளப்பற்றி ஏதாவதுகனவு வந்திருக்கும். அதுதான் அவயளின்ர பேருகளச் சொல்லிச் சொல்லி புலம்பிறான். விடிஞ்சால் எல்லாம் சரியாப் போடும். நீர் அந்தப் பரசெத்த இன்னொருக்கல் குடும்''

''இப்பதான் குடுத்தனான்...'' கந்தரேச னின் பதில் அவளைத் திருப்திப் படுத்த வில்லை.

''கௌசல்யா... கோகுல், கோகுல்... நிதர் சனண்ணா... நிதர்சனண்ணா, பரி... என்ர சாளி... என்ன விடுங்கோ... நான் கோகு லோட விளயாடப்போறன்... என்ன விடுங்கோ... உந்த ரீச்சர் என்னில அன் பில்ல...'' இப்போது மாறன் அதிகமாய் வாயுளறத் தொடங்கினான்.

''சுந்தர்! எனக்குப் பயமாக்கிடக்குது சுந்தர். டொக்ரரிட்ட ஒருக்கால் கொண்டு போவமா...'' அவள் நடுங்கும் குரலில் சுந்த ரேசனைக் கேட்டாள். சுந்தரேசனையும் இப்போது பயம் கவ்விக் கொண்டது. நீண்ட அமைதிக்குப் பின் ''குட்டியக்காவுக்கு ஒருக்கால் அடிச்சுப் பாப்பம் கௌசெல் யாவக் கொண்டுவரச்சொல்லி...'' சுந்த ரேசனின் விழிகள் கலங்க ஆரம்பித்தன. வார்த்தைகள் தரித்துத் தரித்துப் பிரசவ மாகின.

''இந்தச் சமயத்தில... அவயள் படுத்திருப் பினம்...''

''வேறயென்னம்மா செய்யிறது...? அடிச்சுச் சொல்லிப்போட்டு ரக்ஸி பிடிச்சு தம்பிய நாங்கள் அங்க கொண்டு போவம்...''

தெரு வெளிச்சங்களெல்லாம் அவசர அவசர மாய் தலை தெறிக்க ஓடின. இருளைப் பிளந்து பெருந்தெருவினூடு உருண்டு கொண்டிருக்கும் ரக்ஸிக்குள் அவர்கள். சுத்தரேசனின் மடியில் மாறன் தன் நண்பர் களது பெயரை ஒவ்வொன்றாய் உச்சரித்த படி. இடையிடையே ''ரீச்சர் என்னில அன் பில்ல'' என்ற வார்த்தைகளும் வெளிவந்தன. வேகம் குறைத்துக் கொண்ட ரக்ஸி 'கப்டன். ஊலாவ்' தெருவுக்குள் நுழைந்தது. குட்டியக் காவின் வீட்டின் மின் விளக்குகள் சன்னல்க ளூடாக மின்னின. ''ரீ...ச்சர் தம்பியில... அன்பில்ல... அவவுக்கு என்னப் பிடிக்க... யில...ல...'' மாறன் சோர்ந்து போனான். இந்த வார்த்தைகள் மட்டும் ஏக்கமாய் கொட்டுண்டது தெரு நீளம். □

---

சீதளச் சீமையில்
தாளாத வெயில்
கண்கள் பொங்கும்
சூரியக் கடைக்கண்
நிழலின்றித் தகிக்கும்
ஓட்டுக் கூரைகள்
புகைக் குழாய்களும்
உலைக் கலன் களுமான்
ஆலைகளின் மேலாலும்
படரும் கானல்
இவற்றுள் எப்படி
எஞ்சிய நினைவுகளும்
நனவிலி நிழல்களுமாய்
வெயிலில் காய்கிறது
என்னெதிர் வெளி.

—கி.பி. அரவிந்தன் ('மதியம்' கவிதையிருந்து)



படிப்பகம்

www.padippakam.com

# காற்றில் நின்ற கல்

முரளி
(டேன்மார்க்)

இருவரும் தங்கள் வீட்டுப் பின்பக்கவெளியில் இறங்கி நடக்கத் தொடங்கினர். குளிர் வந்து குத்திக்கொண்டிருந்தது. விளக்குக் கம்பங்களில் லைற்றுகள் மிகவும் மங்கலாக எரிந்து கொண்டிருக்க, தூரத்தில் போகின்ற வாகன இரைச்சல்கள் மிகமிக அண்மித்துக் கொண்டிருக்கின்றது

''மச்சான் இனிமேஇரவில் உந்தப் பாருக்கு... டிஸ்கோவுக்குப் போறதையெல்லாம் நிப்பாட்ட வேண்டும். முந்தியப் போலவும் இல்லைஇப்ப. கறுப்பர்களை எங்கையெண்டு திரியுறாங்கள். அதிலையும் ஙங்களை எப்ப கலைக்கலாம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாங்கள். மற்ற நாடுகளில கண்டபடி அடிக்கத் தொடங்கியிட்டாங்கள். இங்க தொடங்கக் கனகாலமில்லை...'' சொல்லிக் கொண்டே போனான் யோகன்.

''டேய்...ஏன் டென்மார்க்கில... தொடங்கத் தான்வேணும்... இஞ்சையும் அடிவிழுந்தாத் தான் கொஞ்சத் தமிழர் திருந்துவினம். இவையள் கொஞ்சப்பேற்ற கதைக்கு வெளுக்கவேணும்...'' ஆவேசப்பட்டு பதிலளித்துக் கொண்டிருந்தான் ரஞ்சன்.

''ஆ...ஆ அப்படி விழுந்தா... முதலில் உனக்குத்தான் இங்கை விழும். நீதான் இரவிரவாய் உவடம் முழுக்க ஓடித் திரியிறனி. உனக்கு யாரும் அடிச்சா... எனக்கும் அடிச்சா ஒரு தமிழனும் வரமாட்டாங்கள்.'' இருவரும் மாறி மாறி சிரித்துக்கொண்டனர்.

''டேய் உதை நூரடா... அக்கா கண்டா... பிறகு வீட்டுக்கையும் அணைக்க மாட்டா... நூரடா இநதச் சிகரட்டை'' என்று நூர்க்கப் பண்ணினான் யோகன். அழைப்புமணியை அழுத்தினர்...றிங்...றிங்...றிங்...

தியாகண்ணையின் மூத்தமகள் சீதா கதவைத் திறந்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

''யார் தம்பியவையோ...'' எனக் குசினிக்குள்ளிருந்து எட்டிப்பார்த்தபடியே விமலாக்கா ''அவர் உள்ளே இருக்கிறார்'' என சைகை காட்டிவிட்டு குசினிக்குள் ஒழிந்து கொண்டா.

சோபாவில் இருந்த தியாகண்ணை ''என்ன கனகாலத்துக்குப்பிறகு...உதில இருங்கோவன்ரா'' எனக் கூறிவிட்டு ரி.வியை நிற்பாட்டினார்.

''இவன் சிறியெங்க... அவனையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாம்தானே...'' என்றபடி பேச்சைத் தொடங்கினார் தியாகண்ணை.

ரஞ்சனும் யோகனும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே ''அண்ணை அதுதான் நாங்கள் வந்தனாங்கள். சிறி விசயமாத்தான் நாங்கள் கொஞ்சம் கதைக்க வேணும் அது தான்...'' என இழுத்தான் யோகன்.

''என்னடா என்ன பிரச்சனை... என்ன...'' என்று ஆவலோடு கேட்டார் தியாகண்ணை. ''அவனுக்கண்ணை சுகமில்லை. சுகமில்லை என்றால் சும்மாய் காய்ச்சல், தலையிடி எண்டில்லை...ஆனால் சாதாரண வருத்தம் எண்டுகூட நாங்கள் நினைக்கவில்லை.'' சொல்லி முடிப்பதற்குள் ''டேய் என்ன... விளையாடுறியளோ... விபரமாய் சொல்லுங்கோ...'' மிக அவசரத்தோடு கேட்டார் தியாகண்ணை.

''அண்ணை இப்ப கொஞ்சநாளா அவன் ஏதோ எல்லாம் சம்பந்தமில்லாமல் கதைக்கிறான். இரவில புலம்புறான். பெரிதா சத்தம்போட்டுக் குளறுறான். இரண்டு நாளைக்கு முன்னர் ஏதோ யோசிச்சுக் கொண்டிருந்தவன் கத்தியை எடுத்து தன்ர கையை வெட்டிப்போட்டு இரத்தம் ஓட ஓட பார்த்துக் கொண்டிருந்தான். நாங்கள் ஒருமாதிரி புடிச்சு அமர்த்தி சமாளிச்சுப் போட்டோம்'' யோகன் மிகவும் பயத்தோடும் நிதானத்தோடும் சொல்லிக் கொண்டிந்தான்.

''அண்ண...அது மட்டுமில்ல. முன்பு நாங்கள் ஊரில இருக்கேக்க ஏற்பட்ட சம்பவங்கள் திரும்பத திரும்ப சொல்லுறான் திடீரென எழும்பி ஓடுறான். இரவில வெளியே போகப் பயப்படுறான். சிலநேரத்தில் மணித்தியாலக் கணக்கா ஒண்டுமே பேசாமல் மௌனமாய் இருக்கிறான். அண்ணை எங்களுக்கு ஒண்டுமே



படிப்பகம்

www.padippakam.com

விளங்கேல்ல... பயமாயிருக்கு. நாங்கள் ஏதோ பகிடிக்குத்தான் செய்கிறான் என நினைத்துக் கொண்டிருந்தனாங்கள். ஆனால் வரவர அவன் நிலை மோசமாகிக் கொண்டிருக்கின்றது.

''இரண்டு நாளுக்கு முன்னர் குடிச்ச சிகரட் துண்டுகள எடுத்து திருப்பிப் பத்திறான். நாங்கள் ஏதும் சொன்னால் எங்கள முறைச்சுப் பார்க்கிறான்'' என்றான் ரஞ்சன். தியாகண்ணை வியப்போடும், கவலையோடும் ஆடாமல் அசையாமல் பார்த்தபடியே கேட்டுக் கொண்டிருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக தியாகண்ணையின் முகம் மாறத் தொடங்கியது.

''அண்ணை எங்களால ஒண்டும் செய்யேலாமல் கிடக்கு. அண்ண இவனோட இருந்தால் எங்களுக்கும் விசர் பிடிச்சிடும் போல கிடக்கு. ஒருநாள் நித்திரைக்குளிகை வாங்கித் தாங்கோ எண்டு அடம்பிடிச்சான். இனி, தான் இங்கே வாழேலாது எண்டு அடிக்கடி சொல்லுறான் அண்ணை... இதுக்கு நீங்கள் தான் ஏதாவது வழிசொல்லுங்கோ... உதவி செய்யுங்கோ'' என்றான் யோகன்.

கொஞ்சநேரம் அமைதியாக இருந்தது. ஒருவரும் ஒன்றுமே கதைக்கவில்லை. கதவைத் திறந்தபடி விமலா அக்கா தேனீருடன் உள்ளே வந்தா.

''தம்பியவை, புட்டவிக்கிறன் சாப்பிட்டிட்டுப் போங்கோ...'' என்றபடியே தேத்தண்ணியை அங்கே வைத்தார்.

''இல்லையக்கா, நாங்கள் உடனே போக வேண்டும். சிறியும் தனிய வீட்டில... வேண்டாமக்கா'' என இருவரும் ஒருமித்தே பதிலளித்தனர்.

''அவங்கள் வேறு ஒருநாளைக்கு வந்து சாப்பிடுவாங்கள் , போய் வேலையை பாரப்பா'' என்றார் தியாகண்ணை. ஒன்றுமே பேசாது உள்ளே போய்விட்டார் விமலா அக்கா.

'இப்ப நான் உங்கவந்து ஒண்டும் செய்ய ஏலாது. நாளைக்குப் பின்னேரம் ஒரு ஆறு ஏழு மணிபோல வாறன், பிறகு என்ன செய்வமெண்டு கதைப்பம். நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதேங்கோ. எதுக்கும் நான் நாளைக்கு வாறனே... தேத்தண்ணியைக் குடிச்சிட்டு கெதியாய்போங்கோ... அவன் அங்க தனிச்செல்லே...' என்றார் தியாகண்ணை. இருவரும் ஒரே இழுவையில் தேத்தண்ணியை மடக்கென குடித்து விட்டு எழுந்தனர். அண்ண... நாளைக்கு வேலையால வந்தவுடன மினக்கெடாமல் வாஙகோ எனக் கூறிவிட்டு அக்கா நாங்கள் போட்டுவாறம் எனக்கூறியபடியே வெளியே இறங்கினர்.

சோபாவில் இருந்தபடியே யோசிக்கத் தொடங்கினார் தியாகண்ணை......

ஏறக்குறைய ஒரு ஐந்து வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து ஒரே பிளேனில் வந்திறங்கிய நால்வரும் ஒரே காம்பில ஒரே றூமில் இருக்கும் வாய்ப்புக் கிட்டியதால் தான் இவர்கள் நால்வருக்கும் இந்தச் சிநேகிதம். காலம் செல்லச் செல்ல மற்ற மூவரும் தியாகு அண்ணைமீது அதிக அன்பும், நட்பும் கொண்டதால் தாங்கள் எந்த இயக்கத்தில் இருந்தது, என்னென்ன அட்டூழியங்களையும், அடாவடித்தனங்களையும் செய்தனாங்கள், எத்தனையோ தெரியாத புரியாத பயங்கரப் படுகொலைகள், சித்திரவதைகள், கற்பழிப்புக்கள், மண்டையில போட்டது, கிடங்கில தாட்டது... இயக்கங்களின் பரம இரகசியங்கள் எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் வெளிப்படையாக மனம்விட்டுச் சொல்லியதோடு அப்போது அவைகள் எமக்கு வீர சாகச விளையாட்டுக்கள் என்றிருந்தது என்றும் எங்கள் உயிருக்கு ஆபத்து வருமென உணர்ந்தபோதுதான் இயக்கத்திலிருந்து களவாக வெளியேறி சில நண்பர்களின் உதவியோடு வெளிநாடு வந்து சேர்ந்தது பற்றியும் நிறையவே கூறியிருக்கின்றார்கள்.

தாங்கள் இயக்கத்திலிருந்து விலகி இந்தியாவுக்கு வந்து பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், செய்த நல்ல கெட்ட விடயங்களைப் பகிர்ந்து கொண்டமையால தியாகண்ணையும் தன்னுடைய கலாசாலை அரசியல் வாழ்க்கை, ஆரம்பகால வெகுசனப் போராட்டங்கள், சாத்வீகப்போராட்டங்கள், அரச எதிர்ப்பு ஊர்வலங்கள், மேதினங்கள்... பின்னர் ஏற்பட்ட கட்சி உடைவுகள், கட்சி ஏன் வளராமற்போனது, தமிழீழ இயக்கங்கள் என்ன மாதிரி வளர்ந்தன அமைப்பு சோம்பேறித்தனமாக இருந்தது... என்று தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டையும், பின்னர் தானும் ஒரு இயக்கத்துக்கு ஆதரவாக இருந்த காரணத்தால தானும் இந்தியா வரவேண்டி வந்த நிலையையும் ஒன்றும் விடாமல் தியாகண்ணையும் பகிர்ந்து கொண்டார்.

இந்த நால்வருக்கும் ஏற்பட்ட அரசியல் ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் வெவ்வேறு காலத்திற்குட்பட்டவையாக இருந்தாலும் ஒரே மாதிரியான தன்மைகளைக் கொண்டி



படிப்பகம்

www.padippakam.com

ருந்ததனால் இவர்கள் மத்தியில் உண்மை யான அன்பும் நட்பும், தோழமையும் வளர்ந்துகொண்டு போனது.

காலப்போக்கில் எல்லோருக்கும் தத்தமது குடும்பங்கள் இங்கு வந்தது போல் தியாகு மாஸ்ரருக்கும் மனைவியும், குழந்தைகளும் வந்ததனால் அந்த மூவரையும் விட்டு தியாகு மாஸ்ரரும் தனிக்குடித்தனம் போய்விட்டார். தனிக்குடித்தனம் போனாலும் பொடியங் களுக்கும், மாஸ்ரர் குடும்பத்திற்கும் தொடர்பு நீடித்துக்கொண்டே போனது.

இந்தச் சினேகிதர்களில் ஒருவனுக்குத்தான் வருத்தம். ஏன்? எதற்கு? அதுவும் இவ்வளவு காலமும் இல்லாதது... இன்று திடீரென... தியாகு அண்ணர் திரும்பத் திரும்ப யோசித் துப்பார்த்தார். அவர் படித்த படிப்புகளும் தத்துவங்களும், அவருக்கிருந்த அனுபவங் களும் ''இது இப்படித்தான் இருக்குமோ'' என்ற ஒரு நிலையான முடிவை எடுத்துக் கொண்டு அன்றைய இரவைக் கழித்து விட்டார்.

□

சுமார் ஆறுமணியிருக்கும். வின்ரர்காலமென் பதால் வெளியெங்கும் ஒரே இருட்டாய் இருந்தது ''இஞ்சேரப்பா நான் ஒருக்கா இவங்களிட்ட போட்டுவாறேன்'' எனச் சொல்லிவிட்டு ''கிளனற'' ரை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். ஒரே காற் றும் குளிருமாய் இருந்தது.

''டேய் வெளியில கிளனற் சத்தம் கேக்குது ...மாஸ்ரர் வாறார்போல் கிடக்கு. போய் கதவை திறந்துவிடு'' எனக்கூறிக்கொண்டே கோழியை வெட்டிக் கொண்டிந்தான்.

கையில் கெல்மெட்டுடன் குசினிக்குள் வந்து நுழைந்தார் தியாகண்ணை. ''எங்க அவன் சிறி'' என மெதுவாகக்கேட்டார். ''அவன் அதுக்கையிருந்து ரி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறான். இப்ப சும்மா நோமலாத்தான் இருக்கிறான்... அண்ண திடீர்த் திடீரென்றுதான் குழம்புகிறான். எங்களையும் குழப்பி பயப்படுத்துறான்...'' என்றான் யோகன.

''டேய் சிறி... இஞ்சை தியாகண்ணை வந்திருக்கிறார் வெளியே வாடா...'' எனப் பெரிதாய் குரல்கொடுத்தான் ரஞ்சன். ஒரு பதிலும் இல்லை. ரி வி.யில் போகும் நிகழ்ச்சி யின் சத்தம்மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. ''டேய் சிறி...சிறி...'' மீண்டும் குரல்கொடுத் தான் ரஞ்சன். ''அண்ணை இவன இதில நிண்டு கூப்பிட்டால் வரமாட்டான்...போய் கூட்டிக்கொண்டு வாறன்'' எனக்கூறிக் கொண்டே கோலுக்குள் நுழைந்தான் யோகன். ரஞ்சனும், தியாகண்ணையும் பேசாது நின்றனர். அடுப்பில் கோழிக்கறி பொது பொதுவெனக் கொதித்துக் கொண் டிருந்தது. ''சிறி, டேய்... என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்... குசினிக்கை வா... தியாகண்ணை வந்திருக்கிறார்... எழும்பு... வந்து அந்த குப்பையை கொண்டுபோய் வெளியில போட்டுவிடு... நெடுக இந்த சோபாவுக்குள்ள...'' சொல்லியபடியே... திரும்பவும் குசினிக்குள் வந்தான் யோகன்.

சிறியும் அவனைத்தொடர்ந்தே குசினிக்குள் வந்து நுழைந்துவிட்டான். சிறி, தியா கண்ணையைப் பார்த்து சிரித்துக்கொண் டிருக்கும் போதே... ''மச்சான் இதை கொண்டுபோய் வெளியால போட்டிட்டு வா...''

மூவரையும் மாறிமாறி பார்த்துக் கொண்டே தயக்கத்துடன் ''எனக்கு இருட்டுக்குள்ளே போகப் பயமாய்க்கிடக்கு... நான் வெளியில போகமாட்டன்'' என்றபடி விறைத்தபடி நின்றான்.

''யோகா, அதை இஞ்சை தா... நான் கொண்டுபோய் போட்டிட்டு வாறன்'' என தியாகண்ணை கையை நீட்டினார்.

''ஐயோ...அண்ணை நீங்கள் இருங்கோ நான் போய் போட்டிட்டு வாறன்'' என முந்தியடித்து பையைத் தூக்கிக் கொண்டு வெளிக் கதவைத்திறந்து கொண்டுபோனான் சிறி. மற்றைய மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து தலையாட்டிக் கொண்டனர்.

ஐயோ...ஐயோ... அம்மா என்று குளறிய படியே ஓடிவந்து உள்நுழைந்தான் சிறி. குழந்தைப் பிள்ளையைப் போல விக்கி விக்கி அழுதான். உடலெல்லாம் நடுங்கியபடியே ஐயோ...ஐயோ... எனக் கத்தினான்.

''சிறி...சிறி... இப்ப என்ன நடந்தது ஏன் அழுகிறாய் ஆ... ஆ...'' என அதட்டிக் கொண்டுகேட்டார் தியாகண்ணை.

ஐயோ... அணண ஐயோ... என்றபடியே மாஸ்ரரைக் கட்டிப்பிடித்துக் குளறினான் மாஸ்ரரின் தோளை சிறியினது கண்ணீர் நனைத்தது. சிறியின் தலையை நிமிர்த்திய படியே'' தம்பி...ஏன் அழுறாய்... விபரமாய் சொன்னால்தானே நாங்களும் அறிந்து கொள்ளலாம்'' என மிகவும் சாந்தமாகவும், ஆறுதலாகவும் கேட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

''அண்ணை...குப்பைத் தொட்டிக்கு பக்கத்தில...யாரோ... செத்துக்கிடக்கு... எல்லாம் இரத்தமாய் கிடக்கு தலைவேறாய் உடம்பு வேறாய் வெட்டி துண்டம் துண்டமாய் கிடக்கு...அவன் மூர்த்தியின்ர முகம்போல... கிடக்கும் அந்த இடமெல்லாம் ஒரே இரத்தமாய் கிடக்கு'' தொடர்ந்து சொல்லமுடியாமல் திக்கியபடி திக்குமுக்காடினான்.

ரஞ்சனும், யோகனும் தியாகண்ணையும் விறைத்துப்போய் நின்றனர். மூர்க்கி... மூர்த்தி...மூர்த்தி... இவன் குறிப்பிட்ட இந்த மூர்த்தியைப்பற்றி மூவருக்கும் நன்கு தெரியும். யோகன், ரஞ்சன், சிறி, மூர்த்தி இந்த நான்கு போராளிகளும் செய்யாத சாதனைகளும், சாகசங்களும்' சொல்லில் அடங்கா. தமது இனத்தின் விடுதலைக்காக வெளிக்கிட்டு சிங்கள ராணுவத்தோடு சண்டையிட்ட காலம்போய் சக இயக்கங்களுக்குள் ஏற்பட்ட பகைமுரண்பாட்டால் தங்களின் சக பங்காளித்தோழனான மூர்த்தியை மற்ற இயக்கத்தினர் வெட்டிக் கொலை செய்ததிலிருந்தும், தங்கள் அமைப்புக்குள் ஏற்பட்ட கொலைகளாலும், கொடூரங்களாலும் இனி இயக்கத்தில் இருக்க முடியாது என்றும் இந்த இனவிடுதலையே எங்களுக்கு வேண்டாம் என விட்டுவிட்டு இந்தியா வந்து சேர்ந்தார்கள் மூவரும்.

''சிறி...சிறி... நீ இப்ப டென்மாக்கில் 'இருக்கிறாய், நீ இங்கவந்து ஆறு வருடங்கள் முடிஞ்சுபோச்சு... எப்போதோ நடந்தவைகளை நினைச்சு இப்போது குழம்பிக் கொண்டிருக்கிறாய், இது டென்மார்க்... டென்மார்க்''... எனப் பலத்த சத்தத்தோடு உலுக்கியபடியே சிறியை நினைவுகளுலிருந்து விடுபடச் செய்தார் தியாகு மாஸ்ரர்.

கொஞ்ச நேரம் ஒரே அமைதி. ஒருவரும் ஒன்றுமே கதைக்கவில்லை. அடுப்பிலிருந்த கோழிக்கறி கொதகொத எனக்கொதித்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் புட்டும் ஆவி தள்ளிக்கொண்டிருந்தது.

ஒன்றுமே நடந்துகொள்ளாததுபோல 'அண்ணை நான்போய் ரி.வி பார்ப்போறன்' எனக் கூறிவிட்டு கோலுக்குள் நுழைந்தான் சிறி.

''அண்ணை, இப்ப உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறன். இந்த நிலையில் இவனோடு என்னெண்டு இருக்கிறது. எங்களுக்கு இருக்கிற பிரச்சனையளுக்க... ஊரில தங்கச்சிக்கி கலியாணம், காசு, கொழும்பில ;, தம்பி ஒருத்தன்...'' என்று ரஞ்சன் சொல்லி முடிப்பதற்குள் ''அண்ணை இந்த நிலையில் இவனை வைத்து நாங்கள் என்னண்ணை செய்ய முடியும்'' என ஒரு கேள்விக்குறியை தூக்கிப்போட்டான் மற்றவன்.

''ரஞ்சன்! யோகன்! நீங்கள் இரண்டு பேருந்தான்அவ னுக்கு எல்லாம். அவனுக்கென இருக்கும் உறவும் நீங்கள் தான். இந்தநிலையில் அவனை நீங்கள் கைவிடுவதென்பது மிகவும் ஆபத்தானது.''

''அண்ணை கொஞ்சம் பொறுங்கோ... அவனைப்போய் பாத்திட்டு வாறன்'' எனக் கூறிக்கொண்டு போனான் ரஞ்சன். ''அவன் சோபாவில படுத்திட்டான் இனிச் சொல்லுங்கோ''

''இவனுக்கு ஏற்பட்டிருப்பது ஒருவகை உளவியல் வருத்தம். இதை மாற்றமுடியாது என்று சொல்லமுடியாது அதற்குரியவர்களை அணுகி மிகவிரைவில் சிகிச்சை மேற்கொள்வதுதான் சாலச்சிறந்தது. நீங்களோ நானோ கவலையீனமாக இருந்தால் நாங்களே அவனை கொலைசெய்தவர்களாகி விடுவோம்.''

''அது சரி அண்ணை. அது என்ன இந்த ஆறு வருடங்களுக்குப் 'பிறகுதான் இந்த நினைவுகள், தாக்கங்கள், பாதிப்புக்கள்......இது எனக்கு விளங்கேல்லை யண்ணை? இது ஏன் இப்படி நிலை?'' இருவரும் ஆவலாக மாஸ்ரரிடம் கேட்டார்கள்.

''இது உங்களுக்கு விளங்காததல்ல, எமது தேசத்திலிருந்து அன்னிய தேசத்திற்கு வந்தவுடன் முற்றிலும் மாறுபட்ட சூழல், மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் ஏன் சாப்பாடு, காலநிலை எல்லாம் அதாவது எல்லா வகையாலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கையைத்தான் இங்கே மேற்கொள்ளுகின்றோம். இந்த தன்மைகள், வந்தவுடன் நாட்டு நினைவுகளையும், மண்ணில் நடந்த சம்பவங்களையும் மறக்க வைக்கலாம். ஆனால் காலம் செல்லச் செல்ல இந்த நாட்டு வாழ்க்கையில் ஏற்படுகின்ற வெறுப்புநிலை, தனிமை, பாதிப்பு, இப்ப நடக்கிற புதிய நாஜிகளின் செயற்பாடுகள், இங்கே இருக்கும் கறுப்பு, வெள்ளை என்ற நிறபேதங்கள் போன்ற இன்னும் பலவகையான சம்பவங்களால் மனது பாதிக்கப்படுகின்றபோது நாட்டைப் பற்றிய நினைவுகளும், நாங்கள் ஏன் வந்தோம் என்றும் சிந்திக்கத் தூண்டலாம்தானே...! என்னடா பேசாமல் இருக்கிறியள்!.''



படிப்பகம்

www.padippakam.com

''இல்லையண்ணை சொல்லுங்கோ'' என இருவரும் ஒருமித்து குரல் கொடுத்தனர். ''அதுதான் என்னென்றால் அப்படிச் சிந்திக்கத் தொடங்குகின்ற பொழுது முன்னர் ஏற்பட்ட பாதிப்புக்களும், தாக்கங்களும் திரும்பத் திரும்ப நினைவக்கு வரும். இப்படியான நிலையிலேதான் மனநோய்கள் பற்றிக் கொள்கிறது என நான் நினைக்கிறேன்''.

''ஓமண்ணை இருக்கலாம்''என தலையசைத்தான் யோகன். ரஞ்சனும் ஏதோ கதை கேட்பது போல அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''தம்பி கதையோடை கதையாய் மறந்திடாதேங்கோ''... எனத் தியாகண்ணை கூற அடுப்பிலிருந்த புட்டையும் கோழிக்கறியையும் நிப்பாட்டினான் யோகன்.

''அது சரி இது இவனுக்கு எப்ப தொடங்கினது? அல்லது அதற்கு ஏதாவது காரணங்கள் தெரியுமோ?'' என தியாகண்ணை கேட்டார்.

''இல்லையண்ணை ஏன் அப்பிடி கேட்கிறியள்?'' என யோகன் உடனே கேட்டான். ''இல்ல...அவனது எண்ணங்கள் தூண்டப்படுவதற்கு ஏதாவது காரணங்கள் இருக்குமோ என்றுதான் யோசிக்கிறன்'' என்றார் தியாகண்ணை.

''அண்ணை ஒரு மாதத்திற்கு முன்னர் எங்கட சினேகிதப் பொடியன் ஒருவன் இந்தியாவிலிருந்து கடிதம் போட்டிருந்தான். அவனும் முன்பு எங்களோடு இயக்கத்தில் இருந்தவன். அவன் சிறியின்ர ஊர்ப் பொடியன். சிலவேளை அதுதானோ தெரியாது''. எனச்சொல்லி முடிப்பதற்குள் ''அப்படி என்னதான் அந்தப் பொடியன் எழுதினவன்'' என மாஸ்ரர் கேட்க, ''நான் அதை எடுத்து வந்து வாசிச்சுக் காட்டிறன்'' எனச் சொல்லிக் கொண்டு யோகன் போனான்.

ஒன்றுமே பேசாது தலையைக் குனிந்த படி கைகட்டிக்கொண்டு குசினி அலுமாரியோடு சாய்ந்து நின்றான் ரஞ்சன். கதிரையில் இருந்தபடியே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் மாஸ்ரர். ''இதுதான் அண்ணை அந்தக் கடிதம் நீங்களே படிச்சுப் பாருங்கோ'' என கடிதத்தை நீட்டினான் யோகன்.

''அன்போடு சிறி''!எனத் தொடங்கி ''இடையில் ஏதோ ஒரு வகையில் நீங்கள்போய் தப்பிவிட்டீர்கள். நாங்கள் இப்போது நாட்டுக்கும் போக முடியாது. இந்தியாவிலும் இருக்க முடியாது, நீங்கள் போன பின்னர் நாங்கள் பட்ட துன்பங்கள் துயரங்கள், சொல்ல முடியாது. கடைசியாக சாப்பாட்டுக்கு வழியில்லாமல் குமார் தனது கிட்னி ஒன்றை விற்றுவிட்டான். பல முறை நாங்களும் இரத்தம் விற்றே சாப்பிட்டோம். முன்புபோல ஏதோ கள்ள வழியிலும் பணம் சம்பாதிக்க முடியவில்லை. அதற்கு இப்போது மனதிலும் வலிமையில்லை. சிறிதான் என்னைக் கொண்டு போய் இயக்கத்திலும் சேர்த்துவிட்டவன். இல்லையேல் எனக்கு இப்படியும் ஒரு வாழ்வா?

எனக்கு ஒரு நல்ல வழியை காட்டுங்கள் எங்கள் நிலை மிகவும் கவலைக்கிடம்.

அன்போடு

ராஜன்!''

கடிதத்தைப் படித்த மாஸ்ரர் நிமிரவேயில்லை. தன்னையுமறியாமல் தன் கண்களிலிருந்த திவலைகளைத் துடைத்துக் கொண்டார்.

''இந்தக் கடிதம் என்னையே இவ்வளவு தூரம் கவலை கொள்ளவைக்கிறது.

உங்களை குறிப்பாக சிறியை எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என என்னால் விளங்கிக் கொள்ள முடிகின்றது''.

மாஸ்ரர் மீண்டும் தன் கண்களை கசக்கிக் கொண்ட படியே...இன்னும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் உலகமெல்லாம் சீரழிந்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக இந்தியாவிலுள்ள இளைஞர்கள்... ஏதோ சொந்தக்காரர் வெளியிலுள்ளவர்கள் ஒரு வகையில் வெளிநாடு வந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஒன்றுமே அறியாத அப்பாவிகளும், கஸ்ரப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும்தான் கேவலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் வாழும் நாங்களாவது சந்தோசமாய் இருக்க முடிகின்றதா? எங்களுக்கு கறுப்பன்-வெள்ளையன் என்ற பிரச்சனைகளைவிட, தமிழர்களுக்குள்ளேயே எத்தனையோ சொல்ல முடியாத பிரச்சனைகள்.

''டேய் இது இங்க இவன் சிறிக்குத்தான் ஏற்பட்டிருக்கு என்று எண்ணிவிடாதேயுங்கோ...டென்மார்கிலும், உந்த ஐரோப்பிய நாடுகள் முழுக்க தமிழர் பலர் இப்



படிப்பகம்

www.padippakam.com

படித்தான் இருக்கிறார்கள். கனபேரை ஆஸ்ப்பத்திரிகளில் அடைத்தும் வைத்திருக்கிறார்கள்.

''இப்படித்தான் கொஞ்ச நாளைக்கு முன்னர் ஜேர்மனில் ஒரு பொடியன் எல்லாம் குழம்பி வீட்டிலுள்ள சட்டி பானைகளையும் அடிச்சு நொருக்க பொலிஸ் வந்து பிடிச்சுக் கொண்டு போய் அவனை அடைச்சு வைச்சாங்களாம். விடியப்பார்க்க அங்கேயிருந்த வயறுகளை அறுத்து தற்கொலை செய்து விட்டானாம். இப்படி கன இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கன பேரின் சாவுக்கு ஏன் என்ற காரணங்களும் தெரியாமல் கிடக்கு. இஞ்சை பாருங்கோ. உது சம்பந்தமாகக் கதைச்சா நிறையக் கதைச்சுக் கொண்டு இருக்கலாம். நாங்கள் செய்ய வேண்டிய வேலையில் முதலில் இறங்க வேண்டும். இது சம்பந்தமாக நான் நாளைக்கு வேலைக்கு லீவு போட்டிட்டு கொமூனில்* போய்க் கதைக்கிறன். நீங்கள் கொஞ்சம் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கோ'' எனச் சொல்லிவிட்டு கதிரையால் எழுந்தார்.

ஒன்றுமே பேசாது மௌனமாய் தலை யாட்டியபடியே நின்ற இடத்தில் சிலை போல நின்றனர் யோகனும் ரஞ்சனும்.

எல்லாவற்றையும் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையோடு இருளினுள் மறைந்தார் தியாகண்ணை.

* கொமூன்—நகரசபை

நன்றி : ''சஞ்சீவி'' (டேன்மார்க் 3-4/94)

# 90 - இன் கோடை

எவ்வித வரவேற்புமற்று
அடங்கியது காலம்
எவ்விதத் தலைப்புமற்று
இருந்தது என் வாழ்வு
அவ்வப்போ வரும் கனவுகளை
கலைத்தெழுந்து
யன்னலூடு எதையோ தேடித்
தொலைந்தன கண்கள்.

கூடாரம் சூழ்ந்த வட்ட நடுக்களத்தில்
மூட்டிய தீயின் கணகணப்பில்
வாட்டிய உணவை பகிர்ந்துண்டும்
மேளங்கள் முழங்க
பாடி
ஆடும் பாதங்கள்
எங்கு சென்றனவோ?

வானத்தே வட்டமிடும் புயற்பறவை
இறகை ஒடுக்கி வேகம் கொள்ளும்
அந்தோ!
சக்தியும் நன்மையும் வந்ததென
ஆர்ப்பரிக்கும் மக்களைக் காணவேயில்லை.

நீண்ட இந்தப் பெரும் கண்டத்தில்
நிமிர்ந்து நின்ற மக்கள்
எங்கு மறைந்தனரோ?
காலனித்துவ வேட்டையில்
முடங்கினரோ மனிதர்?

வசந்தநாட் களியாட்டம்
உல்லாசமாய்த் திளைக்க
'கொல்வ்' ஆடும் திடல்
பூர்வீகர் நிலத்தைக் குறிபார்த்த அரசு
வேர் பிடுங்க விரைந்த இயந்திரங்கள்
'இது பூர்வீகர் நிலம்'
மொவாக் போராளிகளாய்
ஒக்காவில் எழுந்தனர் பூர்வீகர்
நியதியும் விதியுமென எழுந்தன கரங்கள்
வான் நீண்ட முது மரங்கள்
பொத்திவைத்த புதல்வர் இவர்.

அரச தீர்வு
இராணுவ முற்றுகையானது
ஐந்நூறு ஆண்டுகள் இவ்வாறு
மீண்டும் தளிர்கையில் காலம்
கோடையில் மாண்டது.

அகதி நானோ
இங்கோர் அறையில்
புலன்பெயர்ந்து உறைந்தேன்.

இன்னுமந்த
ஒட்டாவா நதிக்கரையில்
பூர்வீகரின் பாடல் ஒலித்துக்கொண்டே
யிருந்தது
சிணைகளை சுமந்து மீன்கள்
ஆற்றை எதிர்த்து நீந்திக்கொண்டிருந்தன

**பா. அ. ஐயகரன்**
**(கனடா)**

ஒக்கா-பூர்வீகரின் (அமெரிக்க இந்தியரின்) போராட்டம் நிகழ்ந்த இடம்
ஒட்டவா நதி-அந்த நிலத்தினூடு ஓடும் ஆறு.
மொவாக்-பூர்வீக இனம்
புயற்பறவை-பூர்வீக மக்களின் ஆன்மீகப் பறவை.
மேலதிக விபரங்கள்
(தேடல் பக் 3, 18)
ஐந்நூறு ஆண்டுகள்-கொலம்பஸ் அமெரிக்காவுக்குள் புகுந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# வேப்பம் பூ

—வானம்பாடி

(நோர்வே)

விடிந்தும் விடியாதது போல வானம் இன்னும் இருண்டிருந்தது. கூடவே நல்ல மழையும். காற்றும். மழைத்துளிகள் என் அறை ஜன்னற்கண்ணாடியில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. காற்றின் வேகம் மரங்களினசைவில் தெரிந்தது.

இன்றுசனிக்கிழமை. எனக்கு வேலையில்லை. நீண்டநேரம் நித்திரை கொள்ளலாமென எண்ணியிருந்த எனக்கு, அந்தத் தந்தி மீண்டுமொரு போராட்டத்தினை எனக்குள் பெரும் புயலாகக் கிளப்பியிருந்தது.

ஐயா, வாய் மட்டுமுள்ள ஒரு மனுஷன். அதற்கு மேல் அவரிடமிருப்பதெல்லாம் செல்லாக் காசுகள்.

அவர் கொழும்புக்கு வந்த ஒரு கிழமையில் எனக்கனுப்பிய இரண்டாவது தந்தி இது!

"Contact 448913" என்ற வழமையான வரிகள்!

முதற்தடவை தந்தி வந்தபோது எடுத்து அரை மணித்தியாலத்திற்குக் கிட்டக் கதைத்தனான். இப்போதும் அதே விடயத்தினைக் கதைக்கப் போறார். இப்போது நான் கதைக்காவிட்டால் 'இமிடியேற்லி' என ஒரு சொல்லைக்கூட்டி இன்னொரு தந்தி அடிப்பார். அவரைப் பொறுத்து எனக்கு 'ஓசி' போன்.

அடிக்கடி கொழும்புக்கு வந்து போற ஐயா ஒவ்வொரு முறையும் இதைத்தான் செய்கிறவர். நான் இங்கே என்ன வேலை செய்யிறன்? என்று இதுவரை அவர் கேட்டதுமில்லை; நான் சொன்னதுமில்லை. ஊரில் என்னைப் பற்றி என்ன புறூடா விட்டு வைத்துள்ளாரோ தெரியவில்லை.

ஊரில்-இரவில் நித்திரை வராத நேரங்களில் பாயில் படுத்துக்கிடந்தபடி பூச்சிகளைப் பிடிக்கச் சுவரில் காத்துக்கொண்டிருக்கும் பல்லிகளை நான் பார்த்துக் கொண்டு மல்லாந்து படுத்துக் கிடந்து யோசித்துக் கொண்டிருப்பது எனக்கு நினைவிற்கு வந்தது.

எனக்கு பெருமூச்சு விடுவதைத்தவிர வேறொன்றும் தெரியவில்லை. வேறு வழியில்லாமல் ஐயாவுக்கு போன் பண்ண, சொல்லி வைதததுக் காத்திருந்தது போல் அவர்தான் கதைத்தார்.

"யார்... தம்பியே...?"

"ஓமய்யா... உங்கட தந்தி..."—சொல்லி முடிப்பதற்கிடையில்,

"என்ன தம்பி, காசு அனுப்பிட்டீயோ?"

"இல்லை ஐயா... இன்னுமில்லை."

"என்னடா லேசாய்ச் சொல்லுறாய்; தங்கச்சியிட கல்யாணமெல்லே.

"கொஞ்சம் கஸ்டமாயிருக்கு; ஒரு கிழமையில பார்த்து அனுப்பிறன் ஐயா."

"உந்தப் புடுக்குக் கதையொண்டும் என்னோட கதையாதே! கெதியில அனுப்பு; எனக்கு நிறைய வேலையிருக்கு; நான் போக வேணும். வெறைக்கை விஞ்சு மாமியிட்டத் தான் ஆறாயிரம் ரூபா மாறிக்கொண்டு வந்தனான். அதுவும் கொடுக்கவேணும்?"

"ஓமய்யா அனுப்புறன் வேறென்ன?" எனக் கேட்டுவிட்டு நான் போனை வைத்தேன்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தலை வெடித்து விடும் போலிருக்கிறது. கொஞ்சக் காசா... மூன்று லட்சம்; இந்த நாட்டுக் காசில் எப்படியும் ஐம்பதினாயிரம் வரும். நான் எங்கே போக...? யாரிடம் போக...? இந்தக் குளிரில் ஆஸ்பத்திரி நிலம் கழுவுமெனக்கு தலைக்கு மேற் கடன். கூடக்'கறுப்பன்' என்ற இன்னொரு பெயர். எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு நாரியிலிருக்கும் பாரிய நோய்.



படிப்பகம்

www.padippakam.com

ஜன்னலால் வெளியில் பார்த்த எனக்கு வானம், பூமி எல்லாம் பாலைவனமாகத் தெரிந்தது. வழமையாக என்னுடைய துயரங்களைக் கேட்கின்ற அந்த குருவியைக் கூட இன்றைக்குக் காணவில்லை. வேணு மென்றால், நான் வேலை செய்கின்ற ஆஸ்பத்திரியில் இருக்கின்ற 'சின்னவோக்' யிட்ட என் துயரங்களைச் சொல்லலாம்... ஆனால் அவளென்ன காசா தரப்போறாள். ''கர்த்தர் உன்னை ஆசிர்வதிப்பார்'' எனச் சொல்லுவாள். மனதிற்குக் கொஞ்சம் ஆறுதலாகவிருக்கும். அவ்வளவு தான்!

'சின்னவோக்' கிற்கு 77வயது. இளம் மனுசி மாதிரி. நல்ல மனுசியும் கூட. இனத் துவேஷமில்லாதவள், மனுஷன் செத்துப் போயிட்டாராம். பிள்ளையள் 16 வயதில் வீட்டை விட்டுப் போய் இப்போது கல்யாணம் செய்து, பிள்ளைகளோடு இருக்கின்றராம். ஆனால் பிள்ளைகளோ, பேரப் பிள்ளைகளோ அவளிடம் வந்துபோவதை நான் காண்பதுமில்லை; இவள் போய் வருவதாயுமில்லை.

ஐயாவுக்கு வயது 59. வாத்தியாக விருந்தவர். எட்டு வருடங்களிற்கு முதல், ஒருநாள் 'ஸ்டாப் ரூமில்' ஒருத்தருமில்லாத நேரம் பார்த்து வதனம் டீச்சரை கட்டிப்பிடிக்கப் போய், அது எல்லோருக்கும் தெரியவர ஹட்டனிலிருந்து ஓடிவந்தவர். ஓடி வந்தவர் தான். அதற்குப்பிறகு பள்ளிக்கூடப்பக்கம் தலையே காட்டவில்லை. இப்போது சைக்கிளில் சுற்றித் திரிவதுதான் அவருடைய வேலை. அவருக்குள் ''தானொரு மேய்ப்பன்'' என்ற நினைப்பு.

அம்மா பாவம். அவளை நினைக்கத்தான் கவலை. ஐயா படுக்கப்படுத்தும்எழும்பென எழும்பியுமிருக்கிற ஒரு ஜீவன். ஐயாவின் தொடுப்பு விடயம் தெரிந்தும அவருடைய அட்டகாசத்திற்குப் பயந்து எதுவும் இது வரை கேட்டதில்லை. சொல்லப்போனால், அவளொரு ஊமை. தினமும் காலையில் நாலு மணிக்கு எழும்பி செல்லத்துரை கடைக்கு இ டி ய ப் ப த் தை யு ம், பிட்டையும் கடையில் கொண்டு போய்க் கொடுப்பதே ஐயாவிற்கு கௌரவப் பிரச்சினை. தங்கச்சி விஜிதான் காலையில் இவைகளைக் கொண்டுபோய்க் கொடுப்பாள். விஜி கொண்டுபோய்க் கொடுத்தால் அவை எங்கள் வீட்டு இடியப்பமில்லை என்ற நினைப்பு ஐயாவுக்கு. அம்மாவின் கடிதங்களை வாசிக்கும் போது அழுகைதான் வரும். ஊமை தெய்வத்தினை வேண்டுகின்றமாதிரி! அவள் சூரியனைக் கண்டே எத்தினையோ வருடங்கள். இருட்டிலிருந்து வற்றின குளத்தில் மீன் பிடிக்கின்ற ஒரு ஆத்மா... கூடவே, அஸ்மா வேறு!

எங்கோவிருந்து பறந்து வந்து என்னுடைய அந்தக் குருவி தன் செட்டைகளால் ஜன்னலில் தட்டியது. அதுக்குப் பசி போல! ஜன்னலைத் திறந்து, கிடந்த பாணை எடுத்து துண்டுகளாய்ப் பிய்த்து அதற்குப் போட்டேன். கீச்...கீ... என கீச்சிட்டுக் கொண்டு அது பாண் துண்டுகளை கொத்திச் சாப்பிட்டது. ஒரு குழந்தையின் ஆர்ப்பரிப்பு அதில் தெரிந்தது.

என்னை ஒரு கடுவனாய் பெற்றுவிட்டு, நான் வீட்டைக் காவல் காப்பேன் என்ற எண்ணத்தோடு ஐயா திரிகிறார். நானொரு கடுவன் மட்டுமல்ல; கூடவே, ஐந்து பெட்டையளும்! முன்னால் இரண்டு! பின்னால் மூன்று. எனக்குப் பின்னால் பிறந்த மூன்று தங்கைகளும் பெடியளாய் பிறக்குமென்று ஐயா நினைத்திருக்கிறார் போல.

நான் இங்கு வந்த இந்த மூன்று வருடத்திற்தான் இரு அக்காமாருக்கும் ஒருமாதிரி கல்யாணம் முடித்துக் கொடுத்தாயிற்று. மூத்த அக்காவின் மனுஷன் ஐயாவைப் போல; மைனர் மச்சான! அக்கா, அம்மாவைப் போல; கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்றிருக்கிறாள். கூடவே, மூன்று வருடத்தில் மூன்று குழந்தைகள் வேறு. இரண்டாவது அக்காவின மனுஷன் நல்லவர். தன்னாலியன்றதை எங்களுடைய குடும்பத்திற்குச் செய்கிறார்.

இந்த இரு கல்யாணத்திற்கும், மூன்று மூன்றென ஆறு லட்சம் ஐயா வந்து வாங்கினார். பிறகு, இப்போது மூன்று. இதைவிட, எப்படியும் இரண்டு, மூன்று மாதங்களுக்கொருதடவை வந்து செலவுக்கென பத்தைந்து, இருபதென்க் கேட்பார். கூடவே, வந்துபோகிற செலவென ஆறாயிரம் ரூபா. ஐயா எவ்வளவு வாங்குகிறாரென்பது அம்மாவுக்கும் தெரிவதில்லை; எப்படிச் செலவழிக்கிறார் என்பது எனக்கும் சொல்வதில்லை.

அக்காவையளுக்கு சீதனமென பெரிதாய் ஒன்றும் கொடுக்கவில்லைதான். ஆனால், வானத்தைப் பந்தலாயப் போட்டு, நட்சத்திரங்களை தோரணங்களாயக் கட்டவேண்டுமென்ற ஐயாவின் வக்கில்லாத விலாசம.

''ஐயா எனக்குக் கல்யாணம் பேசுகிறார்; உனக்குத்தான் கஸ்டமண்ணை'' என மூத்த



படிப்பகம்

www.padippakam.com

தங்கச்சி கலாவின் கடிதம் அண்மையில் வந்த போதே, ஐயா கொழும்புக்கு வரப்போ கிறார் என்பது எனக்கு விளங்கிவிட்டது.

எனக்கு இப்போதும் நினைவிருக்கிறது. நான் ஊரில் இருக்கும் போது, எங்களோடு கிளித்தட்டு விளையாட வருகின்ற பாஸ்கர னுக்கு கலா மீது ஒரு காதல். கலாவுக்கும் அவனில் நல்ல விருப்பம். அவன் என்னைச் சந்திக்கும் சாட்டில் அடிக்கடி வீட்டிற்கு வந்து கலாவைப் பார்த்துச் சிரிப்பான். நல்ல நேர்மையான பெடியனும் கூட! இப்படித் தான் ஒருநாள், அவள் கிணற்றடியில் ஐயா வின் வேட்டியைத் தோய்த்துக் கொண்டிருக் கும் போது வேலி ஓட்டைக்குள்ளால் பாஸ்கரன் கேட்டபோது, ஐயாவிற்குப் பயந்து 'மாட்டேன்' என்று சொலலி விட்டாள். இப்போது முன்பின் தெரியாத ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டி... அவனும் எப்படியோ?

மற்றத் தங்கச்சி மாலா— அவள் இயக்கத் திற்குப போய் இப்போது ஒன்றரை வருட மிருக்கும். போகும்போது அம்மாவிடம் சொல்லிவிட்டு, கூடவே எனக்குமொரு கடித மெழுதிப் போட்டுவிட்டுப் போனவள் அநதக் கடிதத்தினை இப்போதும் நான் பவுத்திரமாய வைத்திருக்கிறேன். அவளு டைய நினைவு வருகுன்ற நேரமெல்லாம் அதையெடுதது வாசிப்பேன். அவளுடைய எழுத்துக்கள்ல் தெரிகின்ற நமபிக்கை... எல்லா அநீதிகளுக்குமெதிராய் போராட வேண்டுமென்ற ஆதம உறுதி... அதிலிருக் கின்ற சத்தய ஆவேசம்... எல்லாவறறினை யும் எபபடிச்சொல்ல...? அவளுடைய கடிதத் தில் இறுதியாகவிருந்த அநத வரிகள்... ''அண்ணை, இத்துடன் அமமா வடகம் செய்யவென்று காயவைத்த வேப்பம் பூவில் கொஞ்சம் அனுப்புகிறேன்; என்னுடைய நினைவாக மட்டுமலல; ஐயாவின் வக்கில் லாததனங்களால் உழைத்துழைதது‌க் காய்ந்துபோன அம்மாவின் நினைவாயும், மழையை வேணடி நிற்கின்ற எங்களுடைய வயல்களைப்போல சதநதிரத்தினை வேண்டி நிற்கின்ற எங்கள் மண்ணின் நினைவாகவும் இதை வைத்துக்கொள்''. அந்த வேப்பம் பூவினை விபூதி மாதிரி ஒரு பேபபரில் சுறறி, என்வலப்பொன்றில் போட்டு என் மேசை யில் வைத்திருக்கிறேன். அதைப் பார்க்கும் போது... அதைப் பார்க்கும் போது......

கடைக்குட்டி விஜி; என்னுடைய நெத்தலி. அவளை அப்படித்தான் நான் அழைப்பேன். ஏழாம் வகுப்புப் படிக்கிறாள். படிப்பில் நல்ல கெட்டிக்காரியும் கூட! அம்மாவைச் சுற்றிச் சுற்றி வருவாள். அம்மாவுக்கு ஆறுதலும் அவள்தான். பெட்டைக்குட்டி களுக்கு என்ன படிப்பென்று ஐயா ஒருத்த ரையும் ஒன்பது—பத்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க விடவில்லை. இவளாவது படித்து நல்லாய் வரட்டும். இல்லாவிட்டால் என்னை யாவது ஏதோ படிப்பித்தவரே... ''படித்து, இந்தக் குழப்பத்தில் என்ன செய்யப் போறாய்?'' எனக் கேட்டு இங்கே துரத்தி விட்டார். இப்போது கலாவின் அலுவல் முடிந்தால், விஜிக்கு இன்னும் காலமிருக் கிறது.

சுட்டுப்போட்டாலும், இந்தப் பிரச்சினை களையோ அல்லது என்னுடைய உணர்வு களையோ ஐயா விளங்கிக்கொள்ளப் போவ தில்லை. இவைகளெல்லாம் அவருக்கு சிதம்பர சக்கரத்தினைப் பேய் பார்த்த மாதிரி! அவரைப் பொறுத்து ''மகன் வெளி யில; அவனுட்ட அலாவுதின்ட அற்புத விளக்கிருக்கு''— அவ்வுளவுதான்.

எல்லாவற்றினையும் யோசிக்கும்போது எனக்கு ஐயாவின் போலித்தனத்தில் வெறுப் புத்தான் வரும்.

''இனி என்னால் முடியாது; ஊருக்கு வரப் போறன்'' எனக் கடிதமெழுதினால் ''படுவா ராஸ்கல், நீ போயிட்டு திரும்பி வாறதுக்கே கொம்மாட தாலியை வித்து உன்னை உங்க அனுப்பினனான்'' எனக் கேட்டு டெலிபோ னில் சத்தம் போடுவார். என்னுடைய போராட்டம்... என்னுடைய குற்றவுணர்வு கள் இவையெல்லாம் அந்த மனுஷனுக்கு எங்கே புரியப் போகிறது? இந்த சமூகத் தோடு ஒத்து வாழமுடியாமலும், என் குற்ற வுணர்வுகளிலிருந்து விடுபட முடியாமலும் இங்கே நான் படும் அவதி.

இப்படித்தான் ஒரு வெள்ளிக்கிழமை, பொழுது போகவில்லையென காந்தனின் அறைககுப் போயிருக்கும்போது, அங்கு வேறு சில பெடியள் நின்று பியர் குடித்துக் கொண்டிருந்தார்கள். காந்தன் என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

''என்னண்ணை, பார்த்துக் கொண்டிருக் கிறீயள்? எடுத்து அடியுங்கோ!''—அங்கே நின்ற அந்த ஒற்றைத் தோட்டுக்கார நபர்.

''இல்லை... நான் குடிக்கிறதில்லை''

''ஐ சே, குடியாமல் இந்தக் குளிரில எப்பிடிச் சமாளிக்கிறீர்? இதைவிட்டால் எங்களுக்கு வேறென்னயிருக்குது? ஆ... சொல்லும் பார்ப்பம்''—இது அந்த ஹிப்பித் தலைக் காரன். பதிலுக்கு நானொரு சிரிப்பு.



படிப்பகம்

www.padippakam.com

சற்று நேரத்தில் எல்லோருக்கும் கனகனக்க, டிஸ்கோவுக்குப் புறப்பட்டார்கள்.

''காந்தன்... அப்ப நான் வாறன்''— விடை பெற்றேன் நான்.

''ஏன் ஐசே, நீர் வரேல்லையோ?''—என்னை இடைமறித்து அந்த ஹிப்பித்தலைக்காரன்.
''இல்லையண்ணை... நான் வரேல்லை''

''அண்ணை, டிஸ்கோவுக்குப் போனா பெட்டை பிடிக்கலாம்''—இன்னொருவர்.

மீண்டும், பதிலுக்கு நானொரு சிரிப்பு.

''அவருக்கு தானொரு சாமியென்ட நினைப்பு; ரூமுக்குப் போய் குப்புறப் படுக்கப் போறாராம்''— அவரின் கதையைக் கேட்டு, பெரிய பகிடி மாதிரி மற்றவர்கள் சிரித்தார்கள். காந்தனின் முகத்தில் வழிந்த அசடு அவன் சங்கடப்படுவதைக் காட்டியது. இவர்களுக்காக பரிதாபப்படுவதைத் தவிர எனக்கு வேறொன்றும் தெரியவில்லை. நான் பேசாமல் என் அறைக்கு வந்து விட்டேன்.

இவைகளல்ல என்னுடைய பிரச்சினை. நான் ஊருக்குப் போக வேண்டும்; அதுவும் விரைவில்!—அதுதான் என் பிரச்சினை.

எத்தினை நாளைக்கென இந்தப் பனிப் புகார்களுக்கு ஊடாக என் தேசத்தினையும், என் அம்மாவினையும் நான் பார்ப்பது...?

தினமும் என் கண்களுக்கு முன்னால் வந்து பேசுகின்ற செத்துப் போன என் நேசத்துக் குரியவர்கள்; ஒன்றாய் சாப்பிட்டு, ஒன்றாய் படுத்தெழும்பி, ஒரே உடுப்பினை மாற்றிப் போட்டுத் திரிந்த என் இனிய நண்பர்கள... ஒன்றா... இரண்டா... எத்தினை பேரை விடுதலையின் பெயரால் காவு கொடுத்து விட்டேன். ரவி... தாஸ்... குகன்... விமல... நாதன்... உமா... ஸ்டீபன்... முகைதீன்... வேணுவின் அக்கா என்று எத்தினை பேர்... பார்க்குமிடமெல்லாம் இவர்களின் முகம்... இவர்களின் நேசம் ...இவர்களின் சிரிப்பு... இவர்களின் கண்ணாடி... இவர்களின் சேட்... இவர்களின் சைக்கிள்... இவர்களின் அறுந்து ஊசி குத்தித் திரிந்த செருப்பு... இவர்களுடனான விவாதங்களென எல்லாம் கண்ணுக்குள் நிற்கின்றன.

எல்லாவற்றிற்கும் நிகராக என்னுடைய அம்மா... பழைய சோற்றுக்கு கொஞ்ச ஊறுகாய் போட்டுக் குழைத்து சுட்ட கருவாட்டோடு சேர்த்து தருகின்ற அந்த ஒருபிடி கவளச் சோறு எனக்கு வேண்டும்... அதிலிருக்கின்ற அன்பு எனக்கு வேண்டும்!

இனி என்னால் முடியாது! எப்படியென்றாலும் நான் விரைவில் ஊருக்குப் போய் விட வேண்டும். இப்பொழுது தங்கை கலாவின் அலுவலை எப்படியென்றாலும் இரண்டு, மூன்று நாளில் முடித்து விட்டு, இன்னொரு ஏழு மணித்தியால வேலை எடுக்க வேண்டும். கழுவுகின்ற பியூரோவில் பொறுப்பாக விருக்கின்ற சுந்தரம் அண்ணனைக் கேட்டால், அங்கன பின்னேர வேலையாய் பார்த்துத் தருவார். அவருக்குஎன்மீது நல்ல நம்பிக்கை. இந்த இரண்டு வேலையையும் செய்து ஒரு நாலு ஐந்து மாதத்தில் கடன்களைக் கொடுத்து விட்டு நான் ஊருக்குப்போய் விட வேண்டும்.

ஓம்! நான் விரைவில் ஊருக்குப் போய் விடுவேன் அங்கே என் அம்மாவோடொன்றாய்... தங்கச்சி மாலா, என் நண்பர்களிலொன்றாய் நானும் வாழுவேன். எங்கள் தேசத்தின் காற்றினது கவிதைகளைக் கேட்டும், கடலலைகளின் வீரம் செறிந்த பாடல்களைக் கேட்டும் வாழ்வதிற்தான் எவ்வளவு சந்தோஷம்.

வானம் சிவந்திருந்தது. நம்பிக்கையோடும், உறுதியோடும் ஜன்னலினூடே வெளியிற் பார்த்த பொழுது, தூரத்து வானில் ஒரு நட்சத்திரம் மினுங்கிக் கொண்டிருந்தது! □

---

**ஈழம் குறித்து இலண்டனிலிருந்து வந்த மற்றொரு ஆங்கில சஞ்சிகை...**

ஈழத் தமிழர்களின் அரசியல், பண்பாட்டு, சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளை உலகளவில் எடுத்துச் சொல்வதற்கானதொரு சிறப்பான முயற்சியாக, இலண்டனில் வதியும் மகாலிங்கம் மகா உத்தமன் JOURNAL OF EELAM STUDIES என்ற ஆங்கில சஞ்சிகையை 1988—1989-ஆம் ஆண்டுகளில் நடத்தி வந்தார். அவர், அயர்லாந்திலுள்ள DEPARTMENT OF SOCIAL THEORY-யில் TUTOR ஆகப் பணியாற்றியவர். ஆழமான ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கி வந்த அந்த சஞ்சிகை நின்று போனது வருத்தத்துக்குரியது.

—மலர்க்குழு.



படிப்பகம்

www.padippakam.com

# பாபர் சலூன்*

—மாவை நித்தியானந்தன்
(அவுஸ்திரேலியா)

வெளிநாட்டுச் சலூனில் முதன்முதலாகத் தலைமயிர் வெட்டிக் கொண்டு வெளியே வந்த சந்திரசேகரம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'தலை மயிர் வெட்டுகிறதிலையே இவ்வளவு சிக்கல்' என அலுத்துக் கொண்டான்.

ஊரிலென்றால் சலூன் அவனுக்கு ஒரு இனிமையான பொழுது போக்குச் சாதனம். வீட்டுக்குப் பக்கத்திலேயே கதிரமலையின் சலூன். பத்திரிகைகள் படிக்கும் வாசகசாலையாகவும் அது தொழிற்பட்டது. பத்திரிகை படித்து முடித்தபின் பத்திரிகையில் வராத உள்ளூர்ப் புதினங்களும் அலசப்படும். தலைமயிர் வெட்டக் காத்திருப்பவர்களுடன் அரசியல் விவகாரங்களை விவாதித்ததன் மூலம் சந்திரசேகரத்தின் அரசியல் அறிவு கணிமான அளவு வளர்ச்சியடைந்ததும் உண்மை. வெளிநாட்டுக்குக் குடிபெயர்ந்ததால் அவன் இழந்துபோன சந்தோஷங்களில் கதிரமலையின் சலூனும் முக்கியமான ஒன்று.

வெளிநாட்டுக்கு வந்தபின்னர், சந்திரசேகரம் செய்த விலை ஆராய்ச்சிகளின்போது, தலைமயிர் வெட்ட ஊரைவிட இங்கே நாற்பத்தி மூன்று மடங்கு கூடுதலான செலவு என்று கண்டுபிடித்தான்.

உடனேயே போய் ஒரு கத்திரிக்கோலும் தேடிப் பிடித்து ஒருபல்லுக் கத்திரிக்கோலும் வாங்கி வந்தான. மனைவி அவன் மீது தலைமயிர் வெட்டிப் பழகலானாள். வெட்டி ஒரு கிழமை முடியும் வரை தலைமயிரைப் படிய வைப்பதென்பதோ பகீரதப் பிரயத்தனமாயிருக்கும். பிறகு படிப்படியாகச் சரியாகிவிடும். இதைவிட இந்தக் கடமையைச் செய்ய மனைவி பெரும் 'நடப்படிப்பது' துப்பரவாகப் பிடிக்கவில்லை. அவளைப் 'பிளீஸ்' பண்ணித்தான் அவ்வப்போது இதைச் செய்விக்க வேண்டியிருந்தது. இதனால் மயிர் வளர்ந்து கழுத்தையும் காதுகளையும் மூடத் தொடங்கிய பிறகுதான் அதை வெட்டுவது பற்றி யோசிக்கப்படும்.

பத்துப் பதினைந்து இன்ரவியூக்களுக்குப் போயும் ஒன்றும் சரிவராமற்போன பிறகு நடந்த ஆராய்ச்சியின்போது 'ஒழுங்காகத் தலைமயிர் வெட்டாததால்தான் உனக்கு லேலை தாறாங்களில்லை' என்று இந்த ஊரில் கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து வரும் மணியண்ணர் சொல்லிவிட்டுப் போனார்.

அடுத்த நாள் சனிக்கிழமை முற்பகல் பதினொரு மணிபோல் பாபர் சலூனைத் தேடிச் சந்திரசேகரம் நடக்கலானான்.

'ஷொப்பிங் சென்ரர்' வட்டாரத்தில் ஐந்து சலூன்களுக்கு மேல் இருந்தன. போகும் போதும் வரும் போதும் கண்ணாடிச் சுவர்களுக்கூடாக மேலோட்டமாகத்தான் அவற்றை இதுவரையில் அவன் நோட்டம் விட்டிருக்கிறான். அவற்றின் தோற்றம் அவனுக்கு ஒருநாளும் பிடித்ததில்லை. சிலவற்றுக்கு 'ஸ்ருடியோ' என்றும் பெயர் வைத்திருந்தது சிரிப்பாகவும் இருந்தது. ஊரிலே படம் எடுக்கும்இடம் தான் ஸ்ருடியோ'.

எதிர்ப்பட்ட முதலாவது சலூனுக்குள் கண்களைக் கூர்மையாகச் செலுத்திக் கொண்டு ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்தான் சந்திரசேகரம். நின்று நோட்டம் விட்டால், மற்றவர்கள கவனித்து விடுவார்கள் என்றும் பயம். 'ரேடியோக் கடையெண்டாலும் நிண்டு பார்க்கலாம்.'

ஊர்ச் சலூனைப் போலல்லாது இங்கே எல்லாம் பளபளப்பாக மினுமினுப்பாக இருந்தன. உள்ளே எல்லோரும் பெண்கள். ஒரு ஆணாவது கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. 'ஒரு பெட்டையிட்டைப் போய் மயிர் வெட்டக் கேக்கிறதே?' அவனால் இதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. அத்து

* ''புலம் பெயர்ந்தோர் கதைகள்' தொகுப்பிலிருந்து மறுபிரசுரமாகிறது. நன்றி: மகாஜன பழைய மாணவர் சங்கம், பாரிஸ்



படிப்பகம்

www.padippakam.com

டன் கறுப்பர்களுக்குத் தலைமயிர் வெட்டச் சம்மதிப்பார்களோ என்ற சந்தேகமும் வந்து வெருட்டியது. கூடப்பிறந்த கூச்சமும் பதட்டமும் சந்திரசேகரத்தை ஆட்கொண்டன. தான் நின்ற பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்து உள்ளே நடப்பவற்றை மீண்டும் நோட்டம் விட்டான். இப்படியே ஐந்தாறு தடவைகள் குறுக்கும் மறுக்குமாக நடந்தும் உள்ளே போக முடியவில்லை.

எல்லோரும் வெள்ளையர்கள். எல்லோரும் பெண்கள். நின்று கொஞ்ச நேரம் யோசித்தான். பெண்கள் சலூனோ என்று 'போட்'டைப் பார்த்த போது Ladies and Gents என்று தான் இருந்தது.

இந்த சலூனுக்குள் பிரவேசிப்பதை நினைக்கவே இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. எதற்கும் அடுத்தற்குப் போவதென்று தீர்மானித்தான்.

'பிள்ளையாரே' என்றபடி ஐந்தாவதுக்கு நடந்தான். அவனால் தன்கண்களையே நம்ப முடியவில்லை உள்ளே ஒரு கறுப்பனைக் கண்டபோது. யோசிக்க இடமில்லை. கண்களை மூடிக்கொண்டு நுழைந்தான். கறுப்பனுக்கு அருகே ஒரு ஆசனத்தில் அமர்ந்து மற்றவர்களைப் போல் அவனும் காத்திருந்தான்.

சிகையலங்காரம் செய்து கொண்டிருந்த ஐவரில் ஒருவர் ஆணாக இருந்தது தனக்காகத் தான் என்று சொல்லிக் கொண்டான். 'பிள்ளையார் என்னை ஒரு நாளும் கை விடார்'.

ஆனால் வரிசைக் கிரமத்தின்படி கறுப்பனுக்கே அந்த பாக்கியம் கிடைத்த பிறகு தன்மீதே அவனுக்கு வெறுப்பாயிருந்தது. அதிட்டம் கெட்டவன்.

வெளியே ஓடிப்போய் விட்டுக் கொஞ்சம் பொறுத்து வரலாமா என்று யோசித்த வேளையில் ஒருத்தி வந்து அழைத்தாள்.

'Would you like to come in ?

சந்திரசேகரம் எழுந்து கொலைக் களத்துக்குப் போகிறவன் போல அவள் பின்னால் நடந்தான். அவள் காட்டிய கதிரையில் மென்மையாக அமர்ந்து கொண்டான்.

மனம் 'திக் திக்'கென அடித்தது. முன்பின் தெரியாத ஒரு பெண் தன்னைத் தொட்டு முடி வெட்டப் போகிறாள்... ஆங்கிலத்தில் ஏதாவது கேட்டு விடுவாளோ என்ற பயம் வேறு. ஆங்கிலம் தெரிந்தாலும் இவர்களின் ஆங்கில உச்சரிப்புகளுக்கும் அவனுக்கும் வெகு தூரம். பத்தில் ஒன்றைக்கூட விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

எதையோ சொல்லிவிட்டு அவள் சிரித்தாள். விளங்காமலே அவனும் சேர்த்து சிரித்தான். ''ஒயில்'' என்ற சொல் மட்டும் தெளிவாகக் கேட்டதை வைத்து, தனது தலையில் தாராளமாகத் தேய்க்கப்பட்டிருந்த ஈழத்து நல்லெண்ணையைப் பற்றிய கதை என்பதை ஊகிக்க முடிந்தது. மீண்டும் அவள் எதையோ கேட்டதும், சந்திரசேகரம் விளங்காமலே தலை அசைத்ததும், அவள் இன்னொரு கதிரையைக் காட்டியதும்.

அவன் அதிலே போய் அமர்ந்து கொண்டதும், முன்னால் இருந்த wash basin இல் தலையை நீட்டச் சொன்னதும் எல்லாம் மின்னல் வேகத்தில் சில கணங்களுக்குள் நடந்து முடிந்து விட்டன.

தலையிலே அவள் தண்ணீரைப் பாய்ச்சிய போதுதான் சந்திரசேகரத்துக்கு என்ன நடக்கிறதென்று விளங்கியது.

கதிரமலையின் சலூனில் முடி வெட்டினால், ஆட்டிறைச்சியும் ரசமும் ''அடித்து'' விட்டுத்தான் முழுக்கு நடக்கும்.

அவள் ''ஷாம்பு'' தேய்த்து தண்ணீரால் கழுவி, Drier பிடித்தாள். தன் தலைவிதி தனது கைகளில் இல்லையென நொந்து கொண்டு ''பிள்ளையாரே'' என்றான். ''இதுக்கெல்லாம் எவ்வளவு காசு எடுக்கப் போகிறாளோ!''

மீண்டும் கதிரை மாறி, பழைய கதிரைக்குப் போய்ச் சேர்ந்ததும் முடி வெட்டும் படலம் ஆரம்பமாயிற்று. ''It's fine now, isn't it?'' என்றாள்.

''How would you like it?'' இந்தச் சொற்கள் போதியளவு தெளிவாகவே கேட்டன. ஆனால் என்னத்தைக் கேட்கிறாள் என்று தான் விளங்கவில்லை.

தயக்கத்தை அவதானித்தவள், மீண்டும் கேட்டாள். ''Do you want it short?''. Short என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே, அதை இறுகப் பற்றிக் கொண்டு ''yes yes'' என்று தலையைப் பலமாக ஆட்டினான் சந்திரசேகரம். அடிக்கடி இந்தப் பக்கம் வராமல் இருக்கவும் Short தான் மருந்தென்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிடரியைக் காட்டி எதையோ கேட்டாள். ''Sorry'' சொல்லி அவளை மூன்று தடவை



படிப்பகம்

www.padippakam.com

அடகுக் கடை வைத்து வாழ்பவன். இந்த வரிசைக் கடைக் கட்டிடங்கள் யாவும் அவனுக்கு சொந்தமானவை.

''காலைல பேஜாரு பண்ணாம போயிடு...'' மார்வாடி உறுமினான்.

''தயவு பண்ணுங்கய்யா...முக்கியமான பணத் தேவை...''

மார்வாடி புருவச்சுழிப்போடுஅவனை ஏறிட்டான்.

''நீ சிலோன்காரனா?''

மார்க்கண்டு மௌனமாய் நின்றான்.

''சுத்தமாத் தமிழ் பேசிறியே இன்னா?''

மார்க்கண்டு தலை அசைத்தான்.

மார்வாடி அவனை மேலும் கீழுமாகப் பார்த்தான். பிறகு கண்களைச் சிமிட்டிக் கொண்டான்.

''ஒண்ணு பண்ணிடு. நாலு சவரின்தானே... எதுக்கு அடமானம் வைக்கிற. வித்திடு, நாலாயிரம் குடுத்திடறேன்...''

''நாலரை சவரின் நகைகள்...''

குறுக்கிட்டான் மார்வாடி.

''பாரு நான் நல்ல மனுஷன், இல்லேன்னா சொல்லு போலிசுக்கு போன் பண்ணிடறேன். சிலோன் காரங்க எங்காவது நகையத் திருடி வந்தாங்கன்னு...வேணாய்யா...நீ எடுத்திடய்யா...போ... 'இடத்த காலி பண்ணு...''

மார்க்கண்டுவின் மனதில் நெருப்பாய் கோபம் தகித்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தீர்மானமான குரலில் கூறினான்:

''சரி குடுத்திடுங்க...''

''ஆனா ரஸீது தரமாட்டேம்பா...''

முருகேசனது பிணத்தை காரில் ஏற்றிய ஏற்றியபோது, அவனைக் கவனித்து வந்த மீனாட்சி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மார்க்கண்டு அந்த நர்ஸை நன்றி ததும்பப் பார்த்தான்.

''சொந்தத் தம்பியைப் பார்க்கிற மாதிரி பார்த்திங்கம்மா பெரிய உதவி...''

மீனாட்சி மௌனமாய் நின்றாள்.

அப்போது, அங்கு மருத்துவமனை நிர்வாகி அனந்நாக் வந்தான். முகத்தில் கோபமாக,

''போ...என்ன செய்கிறாய் இங்கே?'' என்று ஆங்கிலத்தில் அதட்டினான்.

அங்கிருந்து 'போஸ்ட் மார்ட்டம்' நடத்தப் புறப்பட்ட போது, பிரபல சினிமா நடிகர் சிவராமன் நாயரின் உடல் நிலை பற்றி அறிய வந்த பத்திரிகை நிருபர்கள், அவர் அங்கிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆன நிலையை அறிந்து ஏமாற்றத்துடன் மரத்தடியின் கீழ் நின்றனர். அப்போது அவ்வழியாக ஒரு நர்ஸ் மாதவிக்குட்டி வந்தாள். புன்னகையோடு அவர்களைப் பார்த்தாள்.

''ஏதேச்சும் விஷேசம் உண்டா?''

நிருபர் கேட்டார்.

''சிலோன்காரன் ஒருத்தன் மரிச்சுப் போயி...''

அந்த வார்த்தைகள் அவர்களைப் பரவசத்தில் ஆழ்த்தின. சந்தோஷம் பொங்கிய முகத்தோடு அவளைச் சுற்றிக் கொண்டனர்.

அவள் அவர்களுக்கு ஒரு கதை சொன்னாள். அந்த மரணம் பற்றி.

''ஒரு போட்டோ மட்டும் குடுத்திடுங்க. ஈவ்னிங் பேப்பர்ல ஹெட்லயினா இந்தச் செய்தியைத்தான் வைச்சிடனும். பரபரப்பான செய்தி.''

மார்க்கண்டு ஆத்திரமாக அவர்களைப் பார்த்தான்.

''இந்த நேரத்திலை இப்பிடிச் சொல்றீங்களே.''

''இல்லை பிரதர் செய்து அறிஞ்சிட்டோம். ஈவ்னிங் பேப்பர்ல வந்திடணும். எங்கிட்ட 'பைக்' இருக்கு. ஐஞ்சு நிமிஷம் மட்டும் போதும் வீட்டுக்கு வந்து போட்டோவை எடுத்துக் குடுத்திடுங்க, போட்டோ இல்லாத நியூசுக்கு வெயிட் இல்ல''

வேன்காரன் அவசரப்படுத்தினான். ''பொணம் நாறுது புறப்படுறியா இல்லே பொணத்தை நிலத்தில வீசிடவா..என்னய்யா உங்க ரோதனை?''

குள்ளமான நிருபர் கத்தினான்: ''அண்ணே, போட்டோ இல்லேன்னா என்ன? இந்தப் பொணத்தையே எடுத்து 'யூஸ்' பண்ணிடலாம்...''

முஷ்டியை ஓங்கிக்கொண்டே கனகசபை கத்தினான்: ''பாருங்க போட்டோ எடுத்திங்



படிப்பகம்

www.padippakam.com

களோ இங்கை இன்னொரு கொலை விழும்.''

எல்லாரும் அதிர்ந்து போயினர்.

''உங்க வீட்டிலை ஒரு மரணம் நடந்தா இப்படியெல்லாம் நீங்க செய்வீங்களா?'' என்றான் களைத்த குரலில் மார்க்கண்டு.

''தம்பி, ஆவேசமாகவா பேசநீங்க மாலைப் பேப்பரைப் பாருங்க.'' என்றான் குள்ள மானவன். ''வாருங்க போயிடுவம். தம்பிக்கு நல்ல மருந்து குடுக்கணும்.''

''ஐயர் வருவார்தானே தம்பி''

மார்க்கண்டு, 'வந்திட்டார்' என்றான்.

''தொடங்கிடலாமா?'' என்றார் ஐயர். ''பணம் கூட இன்னும் கொஞ்சம் அதிகமாத் தரணும். சிலோன்காரங்க விஷயம். யாரும் இப்போ சிலோன்காரங்க விஷயத்துக்கு வர்ரதில்லை. தம்பி கெஞ்சிக்கேட்டாரு''

மார்க்கண்டு ரூபாய் நோட்டுகளை நீட்டினான்.

''எங்கிருந்தோ வந்த ஆள். சின்ன வயசுக் காரன் அநியாயமா செத்திட்டாரு. எங்க ஊர்ல கூட இலங்கைக்காரங்க இருக்கிறாங்க சாது மனுஷங்க'' என்றார் சுடுகாட்டுக்குப் பொறுப்பான மாணிக்கவாசகர். திருநெல் வேலிக்காரர்.

கனகசபை, ஐயரின் பையை வாங்கினான். பேப்பரில் இருந்த மாலைத்தினசரி தலையை நீட்டிற்று. கொட்டை எழுத்துக்கள்:

''ஈழப் போராளிகள் பயங்கரமோதல், ஒருவர் கத்திக் குத்துக்கு பலி போலீசார் நபர்களைத் தேடுகின்றனர்...'' □


# தாமரைச் செல்வி பதிப்பக வெளியீடுகள்

- எரியும் வண்ணங்கள்—புகழேந்தியின் ஓவியங்கள் — ரூ 75—00
- தலித் இலக்கியம்—போக்கும் வரலாறும்
  மராட்டியில் : அர்ஜுன்டாங்ளே: தமிழில்; தி. சு. சதாசிவம் — ரூ 12. 00
- நோக்காடு—அபிமானி-(தமிழ் தலித் சிறுகதைகள்) — ரூ 14. 00
- சாதி பாத்தியம்—க. பா. அருகன் ,, — ரூ 20. 00
- வதைபடும் வாழ்வு—விழி. பா. இதயவேந்தன் சிறுகதைகள் — ரூ 18. 00
- நந்தனார் தெரு— ,, ,, — ரூ 12. 00
- வெள்ளை மாடு—ஒளிப்பதிவாளர் தங்கர் பச்சான் சிறுகதைகள் — ரூ 25. 00
- குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்—த. பழமலய்
  தொடர்நிலைக் கவிதைகள் — ரூ 15. 00
- இவர்கள் வாழ்ந்தது— ,, — ரூ 25-00
- எரிந்து கொண்டிருக்கும் நேரம்—சேரன் கவிதைகள் — ரூ 10-00
- மனசோட நிறம்— —கள்ளழகர் ,, — ரூ 10-00
- தமிழ் அழகியல்—கலை பற்றிய கட்டுரைகள்—இந்திரன் — ரூ 35-00
- ஜனநாயகத்திற்கு அப்பால்—பாப் அவேக்கியான்
  (கே. வேணுவுக்கு பதில்) தமிழாக்கம் : கலைச் செல்வன் — ரூ 17-00

**தாமரைச் செல்வி பதிப்பகம்**
31/48. இராணி அண்ணாநகர்
கே. கே. நகர்
சென்னை-600 078




படிப்பகம்

www.padippakam.com

# சுட்ட மண்

ந. முரளிதரன்

சுவிஸ்

என் வாழ்வும்
ஏதோவொன்று கழிவதாகக்
கழியும்

நாட்களை மாதம் தின்னுதலுமாக
மாதங்களை வருடம் தின்னுதலுமாக
என் வாழ்வை காலம் தின்னும்

புலம்பெயர் வாழ்வின்
அவலத்தை சொல்லி மாளாது

இங்கே மாறுதல்
இயற்கையை மேவி நடக்கும்.

பாலை மரத்தில் ஏறி
பழம் சாப்பிடுதலும்
காலை அழகை கண்ணில்
கனவுடன் ரசித்தலும்
சோலை மரங்களிடையே
சொகுசாகக் கதைத்தலும்
நாளை இங்கிருந்தால்
நிச்சயமாக கிடைக்காது.

அன்னை சோறூட்டக் காட்டிய
ஔவை கூனிய அழகு நிலா
என்னைப் போல இங்கு
ஏதிலியாக இருக்காது.
முன்னர் போன்ற அழகு
முக்காலில் ஒன்றும் இல்லை.
அண்ணர் அமெரிக்கன்
கால் பதிந்த விந்தையைக்
காட்டி விண்ணாணம் செய்கிறது

வல்லிபுரத்தார் கோவிலருகே
வாகாய்ச் சாய்ந்திருந்து
துள்ளிவரும் கடலலையைச்
சுகமாக உள்வாங்கி
வெள்ளை மணற்பரப்பில் மண்

வீடு கட்டி கலைந்ததும்
சொல்லிச் சொல்லியே
சோகம் எனைச் சோதிக்கும்.

ஓட்டிச்செல்ல ''ஒபெல் ஒமேகா''வும்
கூட்டிச்செல்ல பெண்ணவளும்
இங்கே எளிதாகக் கிடைக்கலாம்.

கைகட்டி வாய்பொத்தி
கண்ணீர் சொரிந்து
இட்ட வேலையைத் தலையாலே
செய்து முடிக்க நானொன்றும்
நட்டமரமல்ல.

செத்த பின்னர் சிறு
சிதை அடுக்கி
உற்றவர் உறவினர்
ஊருலகம் காவிச்சென்று
முத்தமிட்டுப் பெற்றவள்
பிரிவுத் துயரம் தாளாது
கத்திக் கத்தி அழும்
எனது சாவீடு
சத்தியமாய்ச் சாவகச்சேரியில்
சரிவர வேணுவென்று
எத்தனை தரம் எழுதியிருப்பேன்?

எல்லாம் நடப்பதாக
என் காலமும் ஏதோவொன்று
கழிவதாகக் கழியும்.

இதுவும் சுட்டமண்தானோ!
ஏனோ தெரியாது
இன்று வரை என்னோடு
ஒட்டவேயில்லை.

நன்றி : 'எரிமலை' (பாரிஸ்), ஐப்பசி 1994.



படிப்பகம்

www.padippakam.com

# புலம் பெயர்ந்தோர் குறித்துப் புரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள்

—அ. மார்க்ஸ்

பல்வேறு நெருக்கடிகள், அடக்குமுறைகள், அரசியல் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிற்கும் ஊடாக ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், போராடும் ஈழ மக்களுக்கும் பொதுவில் ஒரு ஆதரவான நிலை தொடர்ந்து தமிழகத்தில் நிலவி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அரசும் பத்திரிகைகளும் எத்தனை முயன்றும் இந்த நிலையை முற்றிலும் மாற்றியமைத்துவிட இயலவில்லை. இந்த உணர்வின் இன்னொரு பக்கமாக ஈழப் போராட்டத்தால் இடம் பெயர்ந்த தமிழ் அகதிகளுக்கு இயன்றவரை உதவிட வேண்டும் என்கிற மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் பொதுவில் நிலவி வருவதும் வரவேற்கத்தக்க ஒன்றுதான். மைய அரசும், தமிழக அரசும் பார்ப்பனப் பத்திரிகைகளும் ஈழத்தவர்கள் என்றாலே பயங்கரவாதிகள் ஆயுதம் தாங்கியவர்கள், கொள்ளையர்கள் என்றெல்லாம் செய்தியைப் பரப்பிக் கொண்டே இருந்தபோதிலும் ஈழ அகதிகளை அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தமிழ் மண்ணிலிருநது வெளியேற்ற வேண்டும் என்கிற நிலையைத் தமிழ் மக்கள் என்றுமே ஆதரித்ததில்லை. எனினும் ஒரு அய்யம், தயக்கம் தமிழ்மக்கள் மத்தியிலுண்டு போராட்டம் நடநது கொணடிருக்கும் போது இவர்கள் புலம்பெயர்ந்து வநது பாதுகாப்பாக இருத்தல் சுயநலமில்லையா? வெளிநாட்டிற்குச் சென்று சொகுசு வாழ்க்கை வாழ்வதை ஆதரிக்க முடியுமா? இந்தக் கேள்விகள் எழாமல் இல்லை.

எப்போதுமே களத்தில் நின்று போராடுகிறவர்கள் வணக்கத்துக்குரியவர்கள்தான். எனினும் போராட்டத்தின் விளைவாக இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்கள் எந்தக் காரணத்தினால் இடம் பெயர்ந்திருந்த போதிலும் அடிப்படையான உரிமைகளையும் பாதுகாப்பையும் அளித்திடல் மனித நேயக் கடப்பாடுகளில் ஒன்று. பாதிக்கப்பட்ட எந்த ஒரு மனிதனுக்கும் பிற நாட்டில் புலம் பெயர்வதற்கும் தஞ்சம் கோருவதற்கும் அந்த அடிப்படையிலான பிற உரிமைகளைப் பெறுவதற்கும் உரிமையுணடு என்பதை உலகளாவிய மனித உரிமைப் பிரகடனமே ஏற்றுக் கொள்கிறது. அந்த வகையில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் நிலை குறித்து கவனம் செலுதத வேண்டிய கடமை மனித உரிமைகளில் அக்கறையுள்ள நம் எல்லோருக்கும் உண்டு.

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் இந்தியாவில் பாதுகாப்பாகவும் வெளிநாடுகளில் சொகுசாகவும் வாழ்கிறார்கள் என்கிற கருதது சில தவறான தகவலகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நமது அகதி முகாமகளின் அவல நிலைகள், சிறப்பு முகாம்களில் இழைக்கப்படும் கொடுமைகள், அய்ரோப்பிய மறறும் வட அமெரிக்க அரசுகள் புலம் பெயர்ந்த தமிழர்களைக் கையாளும் நெறிமுறைகள் ஆகியவை குறித்த பல தகவலகள இங்கே மறைககப் பட்டுள்ளன. அவறறைத தமிழக மக்கள் மத்தியில் வெளிகொணாவது நமது கடமையாகிறது. இந்த நோக்கில் சில தகவல்கள்:

**அகதிகளின் உரிமைகளுக்கான சர்வதேச சட்டங்களின் ஓட்டைகள்.**

அகதிகள் பற்றிய சட்டங்களை அரசுகள் உருவாக்கிக் கொள்வதறகான வழிமுறைகளை வகுப்பதறகுப் பயன்படுகிற சர்வதேச் சட்டக்கருவிகள் இரண்டு. அவை:

1) **அகதிகள் நிலை தொடர்பான சர்வதேச நகல் உடன்பாடு (1951)**

2) **அகதிகள் நிலை தொடர்பான விருப்ப ஒப்பந்தம் (1967)**

இவை இரண்டுமே இரண்டாம் உலகப் போரை ஒட்டி இடம் பெயர்ந்த அய்ரோப்பிய அகதிகளைக் கணக்கில் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கப்பட்டவை. அகதிகள் பற்றிய தெளிவான வரையறைகளோ, அகதிகள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான கறாரான நெறி முறைகளோ இவற்றில் இல்லை. கடந்த இருபதாண்டுகளில் அய்ரோப்பாவிலிருந்து அல்லது அய்ரோப்பாவிற்குள்ளேயே புலம் பெயர்தல் என்பதைக் காட்டிலும் வெளியிலிருந்து குறிப்பாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து அய்ரோப்பாவை நோக்கிப் புலம் பெயர்தல் என்பதுதான் எதார்த்தமாக உள்ளது. மிகச் சமீபமான காலகட்டத்தில் கிழக்கு அய்ரோப்பாவிலிருந்து அகதிகள் வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இசுலாமியர்களும் கருப்பர்களும் (ஆசியர்களும் கருப்பர்கள்தான்) இன்று அதிக அளவில் அகதிகளாக இடம் பெயர்கிற நிலை உள்ளதால் அகதிகள் தொடர்பான சர்வதேசச் சட்டக் கருவிகளை உரிய முறையில் திருத்துவதற்கான முயற்சிகளை சர்வதேச நிறுவனங்கள் மேற்கொள்வதில்லை.

மேற்குறித்த இரு ஒப்பந்தங்களிலும் கூட எல்லா நாடுகளும் கையெழுத்திடவில்லை. ஏதேனும் ஒன்றிலோ இல்லை இரண்டிலுமோ கையெழுத்திட்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை 106 மட்டுமே. **இந்தியா உள்பட பல ஆசிய நாடுகள் இவற்றில் கையெழுத்திடவில்லை.** எனவே மேற்குறித்த பிரகடனங்கள் அளிக்கும் ஒரு சில உரிமைகளையும் கூட இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்துள்ள அகதி ஒருவர் சட்ட பூர்வமாக கோர இயலாது. 1951ம் ஆண்டு உடன்பாடு, அகதியைக் கீழ் கண்டவாறு வரையறுக்கிறது [பிரிவு 1A (2)].

> ''1951ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்கு முன்னதாக நடைபெற்ற சம்பவங்களின் விளைவாகவும் ஏதேனும் ஒரு மரபினம் அல்லது மதம் அல்லது தேசிய இனம் அல்லது ஒரு சமூகக்குழுவிலோ அரசியல் கருத்திலோ உறுப்பினராக உள்ளதன் விளைவாக துன்புறுத்தப்படுவார் என்பதற்கான வலுவான ஆதாரங்களின் அடிப்படையிலான அச்சத்தின் விளைவாகவும் அல்லது நாடு அல்லது தேசிய இனத்திற்கு அப்பால் இடம் பெயர்ந்துள்ள போதும் இத்தகைய அச்சத்தின் விளைவாக அந்த அரசின் பாதுகாப்பைப் பெற இயலாத போதும்''

அவர் அகதியாகக் கருதப்படுவார். இந்த வரையறையின் குறிப்பான ஓட்டைகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

1. 1951ம் ஆண்டுக்கு முந்திய சம்பவங்கள் என ஒரு கால எல்லை விதிக்கப்படுகிறது. எனவே 1951ம் ஆண்டுக்குப் பிந்திய சம்பவங்களின் விளைவாக பாதிக்கப்பட்ட ஒருவர் இந்த வரையறையில் அடங்காமல் போகலாம். எனினும் **பிரேசில், இத்தாலி, மடகாஸ்கர், மால்டா, மோனாகோ, பரகுவே, துருக்கி** ஆகிய ஏழு நாடுகள் தவிர கையெழுத்திட்ட பிற நாடுகள் எதுவும் இந்தக் கால எல்லையை வற்புறுத்துவதில்லை என்பது ஒரு ஆறுதலான அம்சம்.

2. மேற்கண்ட வரையறை உள்நாட்டுப் போர் மற்றும் பொதுப்படையான வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்குவதில்லை. இந்த அடிப்படையில் பல அய்ரோப்பிய நாடுகள் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களுக்கு 'அகதி' நிலை அளிப்பதில்லை. சர்வதேச ஒப்பந்தத்திலில்லாத இநத உரிமை வேறு சில பிராந்திய அளவிலான ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, ஆப்பிரிக்க அகதிகள் பிரச்சினைதொடர்பான ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பின் (OAU) நகல் உடன்படிக்கை உள்நாட்டுப் போராலும், பொதுப்படையான வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டவர்களையும் அகதிகளாக ஏற்றுக் கொள்கிறது.

3. மேற்கண்ட வரையறை தனிநபர் அடிப்படையில் அகதியை வரையறுக்கிறது. தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர், வரையறையில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு காரணத்திற்காக அகதி எனக் கருதப்படத்தக்கவர் என நிறுவ வேண்டும். பாதிக்கப்பட த்தக்க ஒரு பிரிவைச் சேர்ந்தவர் என்கிற முறையில் யாரொருவரும் அகதி நிலையைக் கோர முடியாது. **விளக்கம் :** இலங்கையில் இன்று தமிழராக உள்ள யாருக்குமே பாதுகாப்பற்ற நிலையுள்ளது. 30 வயதிற்கு உட்பட்ட தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் புலிகள்' எனக் கருதித் துன்புறுத்துவதற்கோ அல்லது ஒரு இயக்கத்தவர் எனக் கருதி இன்னொரு இயக்கத்தவர் துன்புறுத்துவதற்கோ வாய்ப்பிருக்கிறது. எனவே முப்பது வயதுக்கும் கீழான தமிழனாக உள்ளவன் என்பதனாலேயே இலங்கைக்குச் செல்ல இயலாது என அகதி உரிமை கோருவதன் நியாயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் பல அய்ரோப்பிய நாடுகள்—அமெரிக்காவும்



படிப்பகம்

www.padippakam.com

ஈழத் தமிழர் என்கிற பொதுவான அடிப்படையில் அகதி உரிமை கோருவதை மறுக்கின்றன. அய்க்கிய நாடுகள் அவையின் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) உள்நாட்டுப் போர், பொதுப்படையான வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் அகதிகள் எனக் கருத வேண்டும் என்கிற கருத்தை ஏற்றுக் கொள்கிறது.

4. ''வலுவான ஆதாரங்களினடிப்படையிலான'' துன்புறுத்தப்படுதல் பற்றிய அச்சம் என்பது சரியாக வரையறுக்கப் படவில்லை. எனவே 'வலுவான ஆதாரங்கள்' என எவற்றைக் கருதலாம் என்பதில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் உள்ளன. ரெஜினா மற்றும் ஆறு தமிழர்கள் வழக்கில் பிரிட்டிஷ் அரசு துன்புறுத்தப்படுதல் பற்றிய அச்சம் வலுவான ஆதாரங்களின் அடிப்படையில் இல்லை எனச் சொல்லி (1988) அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது. **சர்வதேச பொதுமன்னிப்பு அவை, அய்க்கிய நாடுகள் அவையின் அகதிகளுக்கான உயர் ஆணையம்** முதலியவற்றின் வேண்டுகோளையும் அரசு புறக்கணித்து அவர்களை திருப்பி அனுப்பியது.

5. ''துன்புறுத்தப்படுதல்'' (Persecution) என்பதும் சரியாக வரையறுக்கப்படவில்லை. துன்புறுத்துபவர்களுக்கும் துன்புறுத்தப்படுபவர்களுக்குமான ஏதோ சில வேறுபாடுகளின் விளைவாக ஒரு அரசு அல்லது ஒரு வலிமையான குழு ஒன்றினால் ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவின் மீது கடுமையான தொல்லை (Harm) ஏற்படும் வாய்ப்பு அல்லது அத்தகைய மிரட்டல் இருத்தலை 'துன்புறுத்தப்படுதல்' எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. உயிருக்கும் சுதந்திர இருப்பிற்குமான மிரட்டல் தவிர அடிப்படை மனித கண்ணியத்திற்கு ஊறு விளைவதென்பதையே 'துன்புறுத்தப்படுதலாகக்' கருத வேண்டிய அவசியத்தை வரையறை உள்ளடக்கவில்லை.

சட்டத்தில் தென்படும் மேற்குறித்த ஓட்டைகளின் அடிப்படையில் இன்று அய்ரோப்பிய நாடுகள் பலவும் அமெரிக்காவும் ஈழத் தமிழர்களுக்கு அகதிகள் நிலை அளிப்பதில்லை. 1983 ஜூலை வன்முறையை ஒட்டி ஈழத் தமிழர்கள் புலம் பெயரத் தொடங்கினர். அன்று தொடங்கி 1987 **இந்திய— இலங்கை ஒப்பந்தம்** வரையிலான காலகட்டத்தைப் புலப் பெயர்வின் முதல் கட்டமாகவும் அதற்குப்பிந்திய காலத்தை இரண்டாம் கட்டமாகவும் கொள்ளலாம். இந்தக் காலகட்டத்தில் ஒட்டு மொத்தமாக அய்ரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்தவர்களில் 8.5 சதத்தினர் (சுமார் 65, 553) மட்டுமே தமிழர்கள். 1983 லிருந்து 1986 வரை சுமார் 4243 தமிழர்கள் புகலிட அனுமதி கோரி **பிரிட்டிஷ் அரசிடம்** விண்ணப்பித்திருந்தனர். இதில் 25 பேர்களுக்கு மட்டுமே பிரிட்டிஷ் அரசு புகலிட அனுமதி வழங்கியது. இந்தக் காலகட்டத்தில் (1983-87) அமெரிக்க அரசுக்கு தமிழரிடமிருந்து வந்த விண்ணப்பங்கள் 185. இவற்றில் ஒன்றே ஒன்றை மட்டுமே **அமெரிக்க அரசு** ஏற்றுக் கொண்டது. 1983-84 கால கட்டத்தில் **மே.ஜெர்மன்** அரசுக்கு வந்த தமிழ் விண்ணப்பங்கள் 27324. ஏற்றுக் கொள்ளப்பட்டவை 4269. இந்தக் கால கட்டத்தில் கனடா அரசுக்கு வந்த விண்ணப்பங்கள் 2371. ஏற்றுக் கொள்ளப்பட்டவை 1007.

1985 வரை மே.ஜெர்மன் அரசு கிட்டத்தட்ட 20 சதம் பேருக்குப் புகலிட அனுமதி வழங்கியது. அன்று தனியாக இருந்த கிழக்கு ஜெர்மனியிலிருந்து அகதிகளை ஊக்குவிக்கும் கொள்கையை மே.ஜெர்மனி அரசு கொண்டிருந்ததன் விளைவாக இந்த வாய்ப்பு ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்தது. 1985க்குப் பிறகு மே. ஜெர்மனி தனது நடைமுறையை மாற்றிக் கொண்டது. உள்நாட்டுப் போர், பொதுப்படையான வன்முறை ஆகியவற்றை அகதி நிலையை அங்கீகரிப்பதற்கான ஒரு காரணமாகக் கொள்ள இயலாது என்பதையும் தமிழர்களை ஒரு குழுவாக பாதிக்கப் பட்டவர்கள் எனக் கருத முடியாது என்பதையும் கூறி மே.ஜெ. அரசு இந்நிலையை 1985-இல் எடுத்தது.

**கனடா அரசு** ஈழ அகதிகள் பிரச்சினையில் குறிப்பிட்ட காலம்வரை சற்றுத் தாராளமாக நடந்து வந்தது. மனுச் செய்த தமிழர்களில் 40 சதம் பேருக்கும் மேலானவர்களுக்கு புகலிட அனுமதி வழங்கப்பட்டது. அரசியல் காரணங்களுக்காக அகதியாதல் என்பதைச் சற்று தாராளமாகவே கனடா அரசு வரையறுத்தது: ''அரசியல் என்பதற்கு கனடா அதிகாரிகள் அல்லது அந்த அகதி என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பது பற்றி நமக்குக் கவலையில்லை. எந்த நாட்டிலிருந்து அவர் அகதியாக்கப்பட்டாரோ அந்த நாடு 'அரசியல்' என எதைக் கருதுகிறது என்பதே முக்கியம்'' இந்த வகையில் முற்றிலும் நடைமுறைச் செயல்பாடுகள் இல்லாதவர்களையும் கூட அரசியல் அகதி எனக்கருத முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

என கனடா அரசு வரையறுத்தது. அதாவது எந்த ஒரு இயக்கத்திலும் உறுப்பினராக இல்லாதபோதும் கூட ஈழத் தமிழன் என்ற ஒரு காரணத்திற்காகவே ஒருவரை அகதியாக ஏற்க முடியும். இலங்கையை B.I பட்டியலில் வைத்து கனடா அரசு BI பட்டியலிலுள்ள நாடுகளுக்கு அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை.

1951 உடன்படிக்கை, 1976 ஒப்பந்தம் ஆகியவற்றில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்குள்ளேயே அகதி அங்கீகரிப்பில் இத்தகைய வேறுபாடுகள் உள்ளதற்கு இவ்விரு ஒப்பந்தங்களிலுமுள்ள ஓட்டைகளே காரணம். எனினும் 1951 உடன்படிக்கையில் உள்ள ஒரு வரவேற்கத்தக்க பிரிவு அகதிகள் வெளியேற்றம் தொடர்பானது. "அகதி பற்றிய வரையறையிலுள்ள ஐந்து காரணங்களுக்காக ஒருவரின் உயிரும் சுதந்திரமும் பாதிக்கப்படக் கூடாது" என்கிறது 1951ஆம் ஆண்டு உடன்படிக்கையின் 33வது பிரிவு. ஒருவருக்கு அகதி நிலை வழங்கப்படாத போதும் இந்தப் பிரிவின் அடிப்படையில் உள்ளே நுழைந்த ஒருவரை வெளியேற்றக் கூடாது என அகதி உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் வாதிடுகின்றனர் எனினும் இதுவும் இறுக்கமாக வரையறுக்கப்படாததன் விளைவாகக் கையெழுத்திட்டுள்ள வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு மாதிரியாகக் கையாள வழி ஏற்பட்டு விடுகிறது. புலப்பெயர்வைத் தடுக்கும் படியான கொள்கைகளை மேலை நாடுகள் அதிக அளவில் நிறைவேற்றத் தொடங்கிய பின்பு இந்த "வெளியேற்றாக்" கொள்கையை ஏற்கெனவே உள்ளே நுழைந்தவர்களுக்கு மட்டும்தான் பிரயோகிக்க முடியும் என இந்நாடுகள் வாதிடுகின்றன. எனவே எல்லைக்குள் நுழையவே இயலாதவாறு கடும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, நுழைபவர்கள் விரட்டியடிக்கப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட 33ம் பிரிவு உள்ளே நுழைந்தவர்களுக்கு மட்டுமின்றி நுழைய முற்படுபவர்களுக்கும் பொருந்தும் என்கிற மனித உரிமை இயக்கத்தினரின் கருத்துக்கும் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் செவிசாய்ப்பதில்லை. உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் 14ம் பிரிவு,

> "துன்புறுத்தப்படுதலுக்கு எதிராக யாரொருவருக்கும் பக்கத்து நாடுகளில் புகலிடம் தேடவும் அனுபவிக்கவும் உரிமை உண்டு"

எனக் கூறுவதற்கு இவ்வாறு எல்லையிலேயே துரத்தி அடிப்பது எதிராக உள்ளதே என அவர்கள் கவலைப் படுவதில்லை. எல்லையில் தெரியாமல் நுழையும் முயற்சியில் உயிர் பறிகொடுத்த தமிழர்கள் எத்தனையோபேர். சமீபத்தில் கூட சென்ற ஆகஸ்டு 27ம் தேதி அன்று இவ்வாறு போலந்து— ஜெர்மனி எல்லையிலுள்ள 'நைசு' என்னும் நதியைக் கடந்து தெரியாமல் உள்ளே வர முயன்ற 27 தமிழர்களில் பலர் நதியில் அடித்துச் செல்லப்பட்டு இறந்துள்ளனர். பல நாட்களுக்குப் பிறகு எட்டு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஜெர்மனிக்கு புலம் பெயர்ந்து வரும் யாரொருவரும் இடையில் ஏதாவது ஒரு நாட்டில் 24 மணி நேரத்திற்கு அதிகமாக தங்க நேர்ந்திருந்தால் அவர்களைப் பிடித்து அந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பும் வழக்கமும் மேற்கொள்ளப்படுகிறது. 1987இல் பிரிட்டனின் ஹீத்ரு விமான நிலையத்தில் வந்திறங்கிய 58 தமிழர்களை சில நிமிட விசாரணைக்குப் பின்பு வங்க தேசத்தின் வழியாக வந்தவர்கள் என்பதால் அங்கே திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசு முயற்சித்தது. மனித உரிமை இயக்கத்தவர்கள் நீதிமன்றத்தை அணுகி தடைவாங்கி அவர்களில் சிலரைக் காப்பாற்றினர். இப்படி நிறைய எடுத்துக்காட்டுச் சொல்லலாம்.

1951 உடன்பாடு அகதிகள் பற்றிய வரையறையைச் செய்திருந்தபோதிலும் எவ்வாறு ஒருவரை அகதி என நிர்ணயிப்பது என்பதற்கான வழிமுறைகள் எதையும் சொல்லவில்லை. ஐக்கிய நாடுகளில் அகதிகள் உயர் ஆணையம் சில நெறி முறைகளை வகுத்திருந்தாலும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எதுவும் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்குக் கிடையாது. இவற்றையெல்லாம் மீறி உள்ளே நுழைந்தவர்களை வெளியேற்றாத போதும் அவர்களுக்கு அகதி அந்தஸ்தை இந்நாடுகள் வழங்குவதில்லை. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆரம்பத்திலிருந்தே இந்நிலையை எடுத்து வந்தன என்பதை முன்பே குறிப்பிட்டோம். பிற நாடுகள் தொடக்கத்தில் ஒரு சிலருக்கு அகதிகள் நிலை வழங்கியதென்றாலும் 1985க்குக் பிறகு அவையும் அமெரிக்கா— பிரிட்டன் போலச் செயல்படத் தொடங்கி விட்டன.

அகதிகள் நிலை ஏற்கப்பட்டால் அதன் மூலம் புலம் பெயர்ந்தவர்கள் கல்வி, வேலை வாய்ப்பு. நீதிமன்றங்களை அணுகும் உரிமை, பாஸ்போர்ட் பெறும் உரிமை போன்றவற்றைப் பெறுகின்றனர். இவற்றைத் தடுக்கும் நோக்குடன் மேலை அரசுகள் புலம் பெயர்ந்தவர்களுக்கு அகதிகள்



படிப்பகம்

www.padippakam.com

அந்தஸ்தை மறுக்கின்றன. அகதிகள் நிலை வழங்குவதற்குப் பதிலாக ''தங்குவதற்கான விதிவிலக்கான அனுமதி'' (Exceptional Leave to Remain) என பிரிட்டனிலும், நெதர்லாந்தில் 'பி—நிலை' பெற்றவர்கள் எனவும், ஸ்விட்சர்லாந்தில் தற்காலிக அனுமதி (Annual Resident) எனவும் பல வாறான பெயர்களில் இவர்கள் அகதிகளுக்கான உரிமைகளும் இல்லாமல் தங்க நேரிடுகிறது. அகதிகளாக அங்கீகாரம் பெற்று வாழ்வதென்பதே இரண்டாம்தர வாழ்க்கைதான். அகதிகளிலும் இரண்டாம் தரமான வாழ்க்கை என்பது இன்னும் கீழான ஓர் வாழ்க்கையை வாழ்வதுதான். அய்ரோப்பாவில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலோர் இத்தகைய கீழான நிலைகளில் வசிப்பவர்கள்தான்.

கையெழுத்திட்டுள்ள நாடுகளில் சில சர்வதேச உடன்பாடுகளும் பிரகடனங்களும் அளித்துள்ள பல நெறிமுறைகளுக்கும் எதிராகவே பல சட்டங்களை சமீபத்தில் இயற்றியுள்ளன. 1951ம் ஆண்டு உடன்பாட்டின்படி [பிரிவு 31 (1)] உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பில்லாமல் ஓடிவந்தவர்களை பாஸ்போர்ட் விசா முதலியவை இல்லையென தண்டிக்கக் கூடாது பொய்யான ஆவணங்களைக் கொண்டு வந்திருந்தால்கூட அதற்காக அவர்களைப் பொய் ஆவணங்கள் தயாரித்த குற்றத்தில்தான் தண்டிக்கலாமே யொழிய, அவர்களுக்கு அகதிகள் நிலையை மறக்க முடியாது என்பது சட்ட நிபுணர்களின் கருத்து. இந்த அடிப்படை நீதி நெறிமுறைகளுக்கு மாறாக 1985ம் ஆண்டு தொடங்கி பிரிட்டிஷ் அரசு ஈழத் தமிழர்கள் விசா கொண்டுவர வேண்டுமென வற்புறுத்தியது. அதனையும் மீறி அகதிகள் வரும் நிலையைத் தடுப்பதற்காக 1987ம் ஆண்டு **''அழைத்து வருவோர் கடப்பாட்டுச் சட்டத்தை''** (Carriers Liability Act) நிறைவேற்றியது சரியான ஆவணங்கள் இல்லாமல் பயணிகளை அழைத்துவருபவர்களை இச் சட்டத்தின் மூலம் கடுமையாகத் தண்டிக்க முடியும். அமெரிக்காவும் இதே போல சில தனித்துவமான சட்ட விதிகளை அகதிகளுக்கு எதிராக இயற்றியுள்ளது.

உள்ளே நுழைந்தவர்களை வெளியேற்றாமல் இரண்டாம் தரமாமகவாவது வைத்துக் கொள்வது என்கிற நிலையையும் கூட அய்ரோப்பிய நாடுகள் சமீப காலமாகக் கைவிடத்தொடங்கியுள்ளன. நெதர்லாந்தும் சுவிட்சர்லாந்தும் 1984ல் இலங்கையில் நிலைமையைக் கணித்து' வருவதற்காக குழுக்களை அனுப்பின. வடக்கில் நிலைமை மோசமென்றாலும் தெற்கில் அமைதி நிலவுகிறது என அக்குழுக்கள் அறிக்கை சமர்ப்பித்தன. எனவே **''நாட்டுக்குள்ளேயே மாற்றுத் தங்குமிடங்கள்''** (Internal Flight Alternative) உள்ளன என்கிற விவாதத்தை முன் வைத்து ஈழத்தமிழர்களை வெளியேற்ற இவ்விரு அரசுகளும் முனைந்தன. மனித உரிமை இயக்கத்தவர்களின் தலையீட்டின் விளைவாக இந்த முயற்சிக்கு தற்காலிகமாக முற்றுப்பள்ளி வைக்கப்பட்டது. எனினும் சமீபத்தில் ஸ்விட்சர்லாந்து அரசு ஆண்டிற்கு 2500 தமிழர்களை வெளியேற்றுவது என முடிவு செய்து முதற்கட்ட நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது.

மொத்தத்தில் அகதிகளாக நுழையக்கூடிய சாத்தியங்கள் முற்றாக மறுக்கப்பட்ட நிலை ஒரு புறம்; சட்டப்படி அகதி நிலை வழங்கப்படாததன் விளைவாக வரையறைப்படி அகதிகளாக இருப்பவர்களும் கூட அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லாடுதல் இன்னொரு புறம். அகதி உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதன் விளைவாக அய்ரோப்பாவில் வசிக்கும் தமிழர்கள்,

கல்வி உரிமை,

வேலை/தொழிற்சங்க உரிமைகள்,

சட்ட உரிமைகள்,

எதுவுமின்றி அல்லலுறுகின்றனர். சட்டவிரோதமாக முகாம்களில் அடைத்துவைக்கப்படுகின்றனர். சமூகப் பாதுகாப்புகள் மறுக்கப்படுகின்றன. பாசிஸ்டுகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். பேப்பர் போடுவது ரெஸ்டாரன்டுகளில் தட்டு கழுவுவது போன்ற வேலைகள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்படுகின்றன.

## இந்தியாவில் ஈழத் தமிழ் அகதிகள்

தமிழகத்தில் வசிப்பவர்களாயினும் இங்கேயுள்ள முகாம்களின் நிலை நம்மில் பலருக்குத் தெரியாது. இது குறித்து விபரமான கட்டுரைகள் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. **த. நா. கோபாலன்** எழுதி **இந்திய-இலங்கை நட்புறவுக் கழகம்** வெளியிட்டுள்ள 'இலங்கைத் தமிழ் அகதிகள்' என்னும் சிறு நூலிலும் நிலைமைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

அகதிகள் பிரச்சினையை அணுகுவதற்கான சரியான நெறிமுறை மனித உரிமைச் சட்டம்



படிப்பகம்

www.padippakam.com

தான். சொந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதன் விளைவாகவே மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். அப்படி வெளியேறி வந்தவர்களுக்கு புகலிட நாட்டில் இன்னும் மோசமாக மனித உரிமைகள் மறுக்கப்படுவது மிகப் பெரிய அவலம். தனி நபர்களது மனித உரிமை மீறல்களை எதிர்த்து நிற்பது எத்தனை அவசியமோ, அத்தனை அவசியம் ஒரு மனித குலப் பிரிவைச் சேர்ந்தவராக இருப்பதற்காகவே மனித உரிமை மீறப்படுகிற கொடுமையை எதிர்ப்பதும். ஈழத்தமிழராய் பிறந்த காரணத்தினாலேயே இன்று அவர்களைச் குற்றப் பரம்பரையினராக இந்திய அரசும் தமிழக அரசும் நடத்துவதை மனித உரிமைகளில் அக்கறை உள்ளவர்கள் என்கிற வகையில் எதிர்த்து நிற்பது நமது கடமையாகிறது. அகதிகள் பிரச்சினை உலகளாவிய ஒன்றாயினும் தமிழர்கள் என்கிற வகையில் நமது கரிசனம் ஈழத் தமிழர்களின் அவலங்களுக்கு எதிராகத் தொடங்குவது அவசியமாகிறது.

இதன் முதற் கட்டமாக ஈழத் தமிழ் அகதிகளின் உண்மை நிலைகுறித்த புரிதலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொள்ளும் வண்ணம் அழுத்தம் கொடுப்பதும் அவசியமாகிறது. உலக அளவில் பல்வேறு நாடுகளில் வதியும் ஈழ அகதிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கான உதவிகள் மேற்கொள்வதும், அவர்களது பிரச்சினைகளில் அக்கறைகாட்டுவதும், உலகளாவிய அளவில் பாசிச எதிர்ப்பு சக்திகளுடன் இணைந்து நின்று ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதும் இன்று நமது உடனடிக் கடமைகளாகின்றன.

---

## ஒரு நாடோடியின் பாடல்

—சுபா

பூக்கள் மலர்வதை
பட்சிகள் பாடுவதை
ஒரு சூரிய உதயத்தை
உயிர்ப்புள்ள தாய்மொழியின்
தெருப்பாடலை...
இந்த நாடோடிக்கு
இதெல்லாம் ஏது?

உலகமகா யுத்தங்களின் போதும்
தாக்குறாத
புறாக்கூடு போன்ற
வதிவிடத்துக்குள்
நிலவுக்கு முற்றமும் இல்லாமல்
நானும் அவளுமாய்
குழந்தைகள் பெற்றோம்
குழந்தைகள்
என்னைப் போலவும்
என்னவளைப் போலவும்.

அப்பாடி!
மின்னல் கீற்றென
கொள்ளை கொள்கிற
சிரிப்பைக் கொட்டுகிறார்கள்
இந்தச் சிரிப்பை
இந்த முகங்களை
இந்த மின்னல் கீற்றின் தெறிப்பை
யார் கொள்ளுவார்கள்?
அவர்கள்
பூவில் தோய்ந்து வரும் காற்றை
சிறகடித்துப் பறந்து வருகிற
பட்சியின் துடிப்பை இழந்து
தவிப்பதை
கச்சேரி நடுவில்
நாதமிழந்த முழவென
சுருதி பேதமுறுவதை
கறுப்புப் பன்றி என
அழைக்கப்படுவதை
அவர்களின்
கடிதங்கள் சேருகிற
முகவரியில்லாமல்
தேசாந்திரமாய்த் திரிவதை...

நிலமும் இல்லாது
வேலியும் இல்லாது
ஆழவேரோடவும்
முட்டறக் கிளைகள்
விட்டெறியவும்
கனவு காணும் வாழ்க்கை இது.

பூக்களைப் பிய்த்தும்
பட்சிகளை வேட்டையாடியும்
ஒரு சூரிய உதயத்தை தடுத்தும்
உயிர்ப்புள்ள தாய் மொழியின்
பாடலைக் கொன்றும்...

எங்களில் யார்?...
எங்களில் யார்??...
எப்போது எழுவார்கள்
எப்படி
எங்களுக்குள் ஒரு மானுட சங்கீதம்
எழும்,

விலங்கை உடைத்தெழுந்து
ஊற்றின் மூலத்தை
இருப்பின் உன்னதத்தைப்
பாடுவோம்!
அப்பொழுது எங்களுக்குள்
யாவும் மலரும்
அபபொழுது எங்களுக்குள்
யாவும் உயிர்க்கும்.

நன்றி : 'எரிமலை' (பாரிஸ்) ஐப்பசி 1994.



படிப்பகம்

www.padippakam.com

# விடியல் பதிப்பக வெளியீடுகள்
# மற்றும் இதர நூல்கள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| பஞ்சமர் | —கே.டேனியல் | 60.00 |
| தண்ணீர் | — ,, | 35.00 |
| டானியல் குறுநாவல்கள் | — ,, | 35.00 |
| போராளிகள் காத்திருக்கின்றனர் | — ,, | 25.00 |
| வேதங்கள்: ஓர் ஆய்வு | —சனல் இடமருகு | 20.00 |
| இந்திய விடுதலையின் இறுதிநாட்கள் | —தார்க்ஷியா | 50.00 |
| மார்க்சியத்தின் பெயரால் | —அ.மார்க்ஸ் | 25.00 |
| தலித் அரசியல் | — ,, | 05.00 |
| மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும் | — ,, | 35.00 |
| உடைபடும் மௌனங்கள் | — ,, | 30.00 |
| இல்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள் | — ,, | 03.00 |
| திராவிட இயக்கத்தில் பிளவுகள் | —கோ.கேசவன் | 20.00 |
| பாரதியும் அரசியலும் | — ,, | 25.00 |
| சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் | — ,, | 38.00 |
| இந்துயிசத்தின் தத்துவம் | —அம்பேத்கர் | 20.00 |
| சாதி ஒழிப்பு | — ,, | 20 00 |
| தீண்டத்தகாதோரும் இந்துக்களும் | — ,, | 25 00 |
| பார்ப்பனியத்தின் வெற்றி | — ,, | 16.00 |
| தொழிற்சங்கம் சில கருத்துக்கள் | — ,, | 05 00 |
| பண்பாடா பாதகமா | — ,, | 25.00 |
| தாழ்த்தப்பட்டோர் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? | — ,, | 10.00 |
| ஸ்டாலின் பேட்டிகள் | —ஸ்டாலின் | 20.00 |
| மாவோவிடம் கற்போம் | —எட்கர் ஸ்னோ | 20.00 |
| சாதிய சமூகஅமைப்பு ம்தமிழ் தேசிய இனச்சிக்கலும் | —கருணா மனோகரன் | 09.00 |
| வரலாற்றுப் போர் | — ,, | 05.00 |
| ஏழு கார்ட்டூன்களும் வண்ணஓவியமும் | —ரிஷிகேஷ்பண்டா | 30.00 |
| கிருஷ்ணப் பருந்து | —பி.வி தம்பி | 80.00 |
| சமுதாய வாழ்வில் குறளின் குரல் | —கே.முத்தையா | 15.00 |
| காஷ்மீர் மீதான பாரதத்தின் யுத்தம் | | 10.00 |
| தேசிய உணர்வும் மதவாதமும் | | 08.00 |
| குடும்பம் அரசு பெண்ணியம் | —நிறப்பிரிகை தொகுப்பு | அச்சில் |
| அர்த்த சாஸ்திரம் | —தமிழ்நாடன் | அச்சில் |

**தனஞ்சய்கீரின் 'ஜோதிராவ் புலே வரலாறு'**
**ஏப்ரலில் வெளிவரும்.**

**விடியல் பதிப்பகம்**
**3. மாரியம்மன், கோவில் வீதி,**
**உப்பிலிபாளையம்,**
**கோவை—641015.**



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர்கள் கவனத்திற்கு...

* ஒரு திங்கள், இரு திங்களெனக் கால வரையறை செய்து, ஆர அமற கட்டுரைகளையும் இலக்கியப் படைப்புகளையும் தெரிவு செய்து, அவற்றைத் தெளிவாகப் படியெடுத்துக் கொடுத்து, பிழைகளின்றி அச்சிட்டு, மேலதிகப் பொலிவோடு இம் மலரை உருவாக்கியிருக்க முடியும். ஆனால் எல்லாமே கடைசி நேர நெருக்குதல்கள்—உள்நாட்டு, வெளிநாட்டுப் படைப்புகள் வந்து சேர்வதிலிருந்து, அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தும் வரை. கூடவே எங்களுக்குப் பழக்கமதிகமில்லாத ஈழ வட்டார வழக்குகள்! இப்படி நேரக் குறைவிலும் வேறு சிக்கல்களிலும் சிக்கித் தவித்து எட்டு நாட்களில் மலரை அச்சடித்து முடித்துப் பெற வேண்டியதாயிற்று (இதற்காக அச்சக உரிமையாளர் தோழர் பெ. நா. சிவம் அவர்களுக்கு எங்கள் நன்றி) பிழைகள் கண்டவிடத்து அவற்றைத் திருத்திப் படிப்பது வாசகர்க் கெளிதன்றோ? ஆக்கங்களைத் தந்தோரும் பொறுத்தருள்வார்களன்றோ? (35-ஆம் பக்கத்தில் தொடங்கும் கட்டுரையின் ஆசிரியர் பெயரை **சி. சிவசேகரம்** என்றும் 39-ஆம் பக்கத்தில் தொடங்கும் கட்டுரையின் தலைப்பை **புகலிடத் தரிப்பிடம் – பாரீஸ்** என்றும் திருத்திக் கொள்க)

* புலம் பெயர்ந்த ஈழத் தமிழிலக்கியப் படைப்பாளிகளில் முக்கியமான பலரது ஆக்கங்கள் கிடைக்கப் பெறவோ அல்லது அவற்றை இம் மலரில் இடம் பெறச் செய்யவோ இயலாமற் போனது ஒரு பெருங்குறை. தமிழ் நாட்டில் வதியும் புலம் பெயர்ந்த எழுத்தாளர் செ. யோகநாதனின் சிறுகதை கடைசி நேரத்தில் கிடைத்தது. அதனை இம் மலரில் சேர்த்துள்ளோம். மிகச்சிறந்த நாவலாசிரியரும், சிறுகதை யாசிரியருமான க. ஆதவன், கவிஞர் இளவாலை விஜயேந்திரன், சேரன் போன்றோர் படைப்புகள் இம் மலரில் இடம்பெறாமற் போயின. மு. நித்தியானந்தன், சமுத்திரன் போன்றோரின் திறனாய்வுக் கட்டுரைகளையும் அரசியல்/சமூகவியல் கட்டுரைகளையும் எதிர்பார்த்தோம். வந்து சேரவில்லை. பேராசிரியர் ஸ்டான்லி தம்பையா, ஏ. சிவானந்தன், ஏ. ஜே. வில்சன் போன்ற அறிஞர்கள் உலகப் புகழ் பெற்றவர்கள். இத்தகையோர் தொடர்புகள் நமக்கு வேண்டும்.

—**மலர்க் குழு**

## மலர் வெளியீடு : நிறப்பிரிகை

கிடைக்குமிடம் :

**நிறப்பிரிகை**
அஞ்சற் பெட்டி எண் 192
பாண்டிச்சேரி 605001

**விடியல் பதிப்பகம்**
3, மாரியம்மன் கோயில் வீதி
உப்பிலிபாளையம்
கோயம்புத்தூர் 641015

அட்டைப் புகைப்படங்கள் : ஜான் கருணாகரன் ஐஸக்

அச்சிட்டோர் : அலைகள் அச்சகம், 36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

படிப்பகம்

www.padippakam.com

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

படிப்பகம்



வெளியீடு : நிறப்பிரிகை விலை : ரூ.40.00

www.padippakam.com
படிப்பகம்